# மதங்களும் மனிதநேயமும்

இரா.சிகாமணி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

# மதங்களும் மனிதநேயமும்

இரா. சிகாமணி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : உலகச் சமுதாய சேவா சங்கம்)
வரிசை எண் : 2

## BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Mataṅkaḷum ma<u>n</u>itanēyamum |
| Author | : | Mr. R. Sigamani<br>Payinkulam<br>Kanyakumari District |
| General Editor | : | Dr. P. Selvakumar<br>Associate Professor<br>Faculty of Tamil Language and Linguistics<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 723 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2011 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | vi + 194 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 90/- (Rupees Ninety Only) |
| Printed by | : | Abi Offset<br>Offset Print House<br>Old No. 26, New No. 57, Thayar Sahib Street<br>Mount Road, Chennai - 600 002. |
| Subject | : | Religions and Humanism |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

பைங்குளம் இரா. சிகாமணி எழுதியுள்ள மதங்களும் மனிதநேயமும் என்ற இந்நூல், தமிழகத்தில் நிலவி வரக்கூடிய பல்வேறு மதங்களும், அவற்றின் வரலாறு, புனிதம் மற்றும் அவை கொண்டுள்ள தத்துவ நெறிமுறைகள் போன்றவற்றை விளக்குமுகமாக அமைகிறது.

இந்துமதம் என்னும் தலைப்பின்கீழ் வேதங்கள், உபநிடதங்கள் என விளக்கி, அதன் தொடர்புடைய புராணங்கள், இதிகாசங்கள் என விரித்துரைக்கின்றார். சைவமும், வைணவமும் குறித்து நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் முறையே எடுத்துச் சொல்லி அவர் பணிகளை நூலாசிரியர் விளக்கியுள்ளார். சமண, பௌத்த மதங்கள் குறித்து எழுதியுள்ள இவர், இங்கு மதங்கள் இந்துமதத்திற்கு அடிகோலியவை என எடுத்துக்கூறுகிறார். இராசா ராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி சுவாமிகள், இராமகிருஷ்ண பரமகம்சர், வள்ளலார், நாராயண குரு எனப் பலரது பணிகள் குறித்த விளக்கங்களைத் தொகுத்துத் தந்துள்ளார்.

மகாபாகவதம் என்னும் தலைப்பில் இந்துமதம் 18 புராணங்களைக் கொண்டுள்ளது என முறையே அவற்றை விவரிக்கின்றார். தேவாரம், திருவாசகம் குறித்த விளக்கத்தோடு வழிபாட்டு முறையையும் அருவ—உருவ வழிபாடுகளையும் விளக்கியுள்ளார்.

இரண்டாவது தலைப்பின்கீழ்ச் சமணமதம் குறித்து விரிவாக எழுதியுள்ளார். தொடர்ந்து பௌத்தம், கிறித்துவம், சீக்கியம் என முறையே தலைப்புகள் பேசுகின்றன. மதங்களும் வரலாறும் அவை கொண்டுள்ள தத்துவநெறிகள் குறித்து விரிவாக இந்நூலாசிரியர் நூலின் பக்கங்கள்தோறும் விளக்கியுள்ளார். பௌத்தத்தில் பெண்கள் எனப் பேசுவதும், புத்தர் விவசாயிகளைச் சந்தித்ததும், புத்தர் சீடரை ஏற்றுக் கொண்டதும் என விளக்கியுள்ள முறைமையை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியுள்ளது. இந்த விளக்க முறைமையைப் பின்பற்றியே பிற மதங்களையும் அவற்றின் தத்துவமுறைகளையும் விளக்கியுள்ளார். மதங்கள் பற்றிய கூடுதல் தேடுதல் கொண்டோர் இந்நூலை அவசியம் வாசிக்க வேண்டும்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இந்து மதம் | 1 |
| 2. | சமண மதம் | 53 |
| 3. | பௌத்த மதம் | 74 |
| 4. | கிறித்துவ மதம் | 104 |
| 5. | இசுலாமிய மதம் | 136 |
| 6. | சீக்கிய மதம் | 166 |
| 7. | மதங்களில் மனிதநேயம் | 179 |
| 8. | மத நல்லிணக்கம் | 186 |
| | துணைநூல்கள் | 193 |

## ஆசிரியர் குறிப்பு . .



பெயர்: இரா. சிகாமணி

சிகாமணி அவர்களின் சொந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பைங்குளம் கிராமமாகும். இவர் துணை வட்டாட்சியராகப் பணிபுரிந்தார். 30–6–1999 அன்று பணிநிறைவு பெற்றார்.

இவர் தமிழ்மொழிப் பற்று மிக்கவர். இவருக்கு ஆன்மிகத்தில் அதிகமான ஈடுபாடு இருந்த போதிலும் அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்றபின்னரே நூல்கள் எழுதி வருகிறார். இவரது 'கீதை ஒளி' என்ற ஆன்மிக நூலின் முதற்பதிப்பு நாகர்கோவில் அன்பு நிலையத்தாரால் 2006ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அது பலருடைய பாராட்டுக்களைப் பெற்றது.

நூலாசிரியர் தற்பொழுது தமிழ்நாடு மூத்தகுடிமக்கள் மற்றும் ஓய்வூதியத்தினர் நல உரிமைச் சங்கத்தின் விளவங்கோடு வட்ட அமைப்பாளராக இருந்து முதியோர் நலனுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

மதங்கள் குறித்த ஒப்பீட்டுப் பார்வைக்கு இந்நூல் துணைசெய்யும். மதங்களிடையே காணக்கூடிய மனிதநேயக் கூறுகளை மதநூல்கள் வழியிலும் மதவாதிகள் வழியிலும் நின்று இவர் தொகுத்து விளக்கியிருப்பது இந்நூலின் சிறப்பாக அமைகிறது.

மதத்தை அறிமுகம் செய்து, அதன் வரலாற்றை விளக்கி, வழிபாட்டு முறைகளையும், புனித நூல் பற்றியும் விளக்கிப் பயன்படுத்திய துணை நூல் விவரங்களையும் ஆதாரங்களாகக் கொடுத்துச் சென்றுள்ளார். இந்து மதம், சமணம், பௌத்தம், கிறித்துவம், இசுலாம், சீக்கியம் என அனைத்து மதங்களிலும் பரவிக் கிடக்கிற மனித நேயங்களை இந்நூலின் மூலம் எடுத்துக்காட்டி மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் இந்நூல் தத்துவச் சிந்தனைக்கு மேலும் ஒரு தூண்டுகோலாக அமையும் என நம்புகிறேன். இந்நூலாசிரியருக்கு என் பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **இந்து சமய அறநிலையம் மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.பி. சண்முகநாதன்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. து.நா. இராமநாதன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்த அறக்கட்டளைப் பொறுப்பாளர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இணைப்பேராசிரியர் பெ. செல்வக்குமார் அவர்களுக்கும், இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் நிறுவனக் கணிப்பொறியாளர் திருமதி எ.ம லட்சுமி அவர்களுக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அபி ஆப்செட் அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# 1. இந்து மதம்

இந்து மதத்தின் வரலாறு, இந்து சமய நூல்கள், வழிபாட்டு முறைகள் ஆகியன இத்தலைப்பின்கீழ் இடம்பெறுகின்றன.

**வரலாறு**

இந்து மதம் இந்தியாவில் தோன்றிய மதம். இது எப்போது தோன்றியது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் இல்லை. சில ஆராய்ச்சியாளர்கள் இந்துமதம் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதென்று கூறுகின்றனர். ஆனால் இந்து மதத்தை ஆராய்ச்சி செய்த அறிவியல் மற்றும் ஆன்மிக ஆராய்ச்சியாளர் இராமகிருஷ்ண ஜெயந்தர், இந்து மதம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாகக் கூறுகிறார். மேலும் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்து மதமானது உலகம் முழுவதும் இருந்திருக்கிறது என்றும் கூறுகிறார். இதற்கு அவர் கீழ்க்காணும் ஆதாரத்தைத் தருகிறார்.

சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு வட அமெரிக்காவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் இடையிலுள்ள மெக்சிக்கோ, பெரு ஆகிய நாடுகளில் அகழ்வாராய்ச்சி செய்தபோது சிவன் கோவில்கள் காணப்பட்டதாகவும், அவற்றை ஆராய்ச்சி செய்த ஆராய்ச்சியாளர்கள் அவை பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உள்ளவை என்று கருத்துத் தெரிவித்ததாகவும், அக்கோவில்கள் மெருகு குலையாமல் இன்றும் பாதுகாக்கப் பெற்று வருவதாகவும் இராமகிருஷ்ண ஜெயந்தர் அவர்களது **உலகத்திற்குத் தெரியா உண்மையான இந்து மதம்** என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இந்து மதமானது இவ்வுலகில் முதலில் தோன்றிய மதம் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்க வாய்ப்பில்லை.

***சனாதன தர்மம்***

இந்து மதத்தினுடைய பழைய பெயர் "சனாதன தர்மம்." சனாதன தர்மம் என்றால் பரமாத்மாவை அறியக் கூடியது என்று பொருள்.

**சனாதன தர்மத்திற்கு இந்து மதம் என்ற பெயர் எப்படி வந்தது?**

இந்தியாவின் பழைய பெயர் பாரதம். பாரதத்தின் வடமேற்குப் பகுதி வழியாக வெளிநாட்டினர் பாரதத்திற்குள்ளே வந்தார்கள். அவர்கள் பாரதத்திற்குள்ளே வந்த இடம் சிந்துநதிக் கரை. சிந்து

நதியினுடைய அப்போதைய பெயர் ஹிந்து நதி. ஹிந்து நதிக்கரையில் வந்த வெளிநாட்டினர் ஹிந்து நதிக்குத் தெற்கே உள்ள நாட்டினை ஹிந்தியா என்றும், அங்குள்ள மக்களை ஹிந்துக்கள் என்றும் அம்மக்கள் பின்பற்றி வந்த மதத்தினை ஹிந்து மதம் என்றும் கூறினர். அது பிற்காலத்தில் மருவி ஹிந்தியா என்பது இந்தியா என்றும், ஹிந்துக்கள் என்பது இந்துக்கள் என்றும், ஹிந்து மதம் என்பது இந்து மதம் என்றும் மாறின.

## திராவிடர்களும் ஆரியர்களும்

வெளிநாட்டினர் இந்தியாவிற்குள் நுழையும் முன் நம்முடைய நாட்டில் வாழ்ந்த மக்கள் திராவிடர்கள். ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள். அவர்கள் வடஇந்தியாவில் ஆதிக்கம் செலுத்தியதால் அங்கிருந்த திராவிடர்கள் தென்னிந்தியாவிற்கு வந்தனர். நாளடைவில் வட இந்தியா முழுவதும் ஆரியர்கள் வசம் ஆயிற்று. ஆரியர்கள் சூரியன், சந்திரன் முதலியவற்றைக் கடவுள்களாக வழிபட்டனர். அவர்களுக்கு முன்பு வட இந்தியாவிலிருந்த திராவிடர்கள் சிவனைக் கடவுளாக வணங்கி வந்திருக்கின்றனர். அதற்கு ஆதாரங்களும் உள்ளன. வட இந்தியாவில் புதையுண்ட நகரங்களான மொகஞ்சதாரோ, அரப்பா ஆகிய இடங்களிலிருந்து சிவலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. மொகஞ்சதாரோவில் சிவன் யோக நிலையில் அமர்ந்திருப்பதாக உள்ள சிலையும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றது.

காலப்போக்கில் திராவிடர்கள் ஆரியர்கள் என்ற பாகுபாடு மாறி அனைவருமே இந்தியர்கள் என்ற நிலை ஏற்பட்டது.

## வேதங்களும் உபநிடத்துக்களும்

“உலகிலேயே வரலாறு பற்றிய முதல் ஆதாரம் ஒன்று உள்ளதெனில் அது வேதங்களே” என்று பூமிதான இயக்கத் தலைவராகயிருந்த ஆச்சாரிய வினோபா பாவே, அவர்களது **கீதைப் பேருரைகள்** என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார். வேதங்கள் அந்த அளவிற்குப் பழமை வாய்ந்தவைகளாகும். வேத வாக்கியங்கள் அனைத்தும் ஒரே காலத்தில் தோன்றியவையல்ல. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தோன்றியிருக்கின்றன. வேதத்தின் முதல் வாக்கியம் தோன்றிச் சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகளும், இறுதி வாக்கியம் தோன்றிச் சுமார் மூவாயிரம் ஆண்டுகளும் (கி.மு. 3000–1000) இருக்கலாமென்று கூறப்படுகின்றது.

வேத வாக்கியங்கள் தியானத்தின்மூலம் மாமுனிகளுக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றை அவர்கள் மனப்பாடம் செய்து

மற்றவர்களிடம் கூறி வந்திருக்கின்றனர். இவ்வாறு வேத வாக்கியங்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக வாய்மொழியாகவே இருந்து வந்திருக்கின்றன. லிபிகள் (எழுத்துக்கள்) தோன்றியபின் அவை வடமொழியில் ஆக்கப்பட்டு ஏடுகளாகவும் நூல்களாகவும் வெளி வந்திருக்கின்றன.

வேதங்கள் நான்காகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அவை:

1. ரிக் வேதம்
2. யசுர் வேதம்
3. சாம வேதம்
4. அதர்வண வேதம்

இந்நான்கு வேதங்களிலுமாக இருபதாயிரத்திற்கு மேற்பட்ட வேத வாக்கியங்கள் இருக்கின்றன. மொத்தம் 20,379 வேத வாக்கியங்கள் (வேத மந்திரங்கள்) உள்ளதாக டாக்டர் சி.கெ. சந்திரசேகரன் நாயர் அவர்களுடைய **இந்து மதத்தின்றே ராஜமார்க்கம்** என்ற மலையாள நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

வேதங்களை நான்காகத் தொகுத்ததால் வியாச முனிவருக்கு வேதவியாசர் என்ற பெயரும் உண்டு. இவரைப் பல மகான்களும் புகழ்ந்து கூறியிருக்கின்றனர். “இவர் ஓர் அவதார புருசர்; பகவானுடைய தத்துவங்களை முழுமையாக உணர்ந்தவர்; ஓர் இணையற்ற மகாகவி, இவருடைய ஞானம் எல்லையற்றது, இவர் ஆழம் காண முடியாத ஞானக்கடல்” என்றெல்லாம் **கீதா தத்துவ விவேசனீ** ஆசிரியர் ஜெயதயால் கோயந்தகா கூறியிருக்கிறார். மகாபாரதம், பிரம்மசூத்திரம், புராணங்கள் முதலான பல நூல்களும் வேதவியாசரால் எழுதப்பட்டிருக்கின்றன.

ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்று வேதங்கள் நான்காகப் பிரிக்கப்பட்டிருப்பதுபோல், ஒவ்வொரு வேதமும் நான்கு பகுதிகளாக வேதவியாசரால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவை:

1. சம்கிதை
2. பிராமணம்
3. ஆரண்யகம்
4. உபநிடதம்

சம்கிதை கடவுள் துதிப் பாடல்களைக் கொண்டது. பிராமணம் பிரார்த்தனைச் சடங்குகளைக் கொண்டது. ஆரண்யகம் கடவுள் வழிபாட்டு முறைகளைக் கொண்டது. உபநிடத்துக்கள் வேதங்களின் தத்துவ விளக்கங்களைக் கொண்டவை.

## உபநிடத்துக்கள்

உபநிடத்துக்கள் 108 உண்டென்று பொதுவாகக் கூறப்படுகிறது. ஆனால் உபநிடத்துக்கள் மொத்தம் 200 வரை இருக்கலாமென்றும் மும்பையிலுள்ள நிர்ணய சாகர் அச்சகத்தார் 112 உபநிடத்துக்கள் வெளியிட்டிருக்கிறார்கள் என்றும் கேரள சாகித்திய அக்காடமி விருது பெற்ற திரு.டி. முகம்மது அவர்களுடைய **பாரதீய சம்ஸ்காரத்தின்றே அடியொழுக்குகள்** என்ற மலையாள நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

## புராணங்கள்

வேதகாலம் முடிந்து உபநிடத்துக் காலம் தொடங்கும்போது புராணப் படைப்புகளும் ஆரம்பமாயிருக்கின்றன. புராணங்களும் வேதவியாசரால் எழுதப்பட்டிருக்கின்றன. புராணங்கள் கடவுள் வல்லமையைக் கதைகள் மூலம் எடுத்துரைக்கின்றன.

புராணங்கள் 18. அவற்றின் பெயர் விவரம்:

| | |
|---|---|
| 1. பிரம்மம் | 10. பிரம்ம வைவர்த்தம் |
| 2. பாத்மம் | 11. லைங்கிகம் |
| 3. விஷ்ணு புராணம் | 12. வாராஹம் |
| 4. வாயவ்யம் | 13. ஸ்காந்தம் |
| 5. மகா பாகவதம் | 14. வாமனம் |
| 6. நாரதீயம் | 15. கூர்மம் |
| 7. மார்க்கண்டேயம் | 16. மால்சியம் |
| 8. ஆக்னேயம் | 17. காருடம் |
| 9. பவிஷ்யம் | 18. பிரம்மாண்டம் |

## இதிகாசங்கள்

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள் கி.மு. 200லிருந்து கி.பி. 300 வரையுள்ள காலத்தில் தோன்றியதாகக் கூறப்படுகிறது.

இராமாயணத்தில் அயோத்தியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி நடத்திவந்த இராசவம்சத்தினருடையவும், குறிப்பாக இராமனுடையவும், மகாபாரதத்தில் அஸ்தினாபுரத்தைத் (தற்போதைய டெல்லி) தலைநகரமாகக் கொண்டு ஆட்சி நடத்தி வந்த கவுரவர் களுடைய வரலாறுகளும் உள்ளன. இராமாயணம் வால்மீகி முனிவராலும்,

மகாபாரதம் வியாசமுனிவராலும் இயற்றப்பட்டிருக்கின்றன. புகழ் பெற்ற 'பகவத் கீதை' மகாபாரதத்திலுள்ள ஒரு பகுதியாகும்.

## சைவமும் வைணவமும்

விஷ்ணுபுராணம், மகாபாகவதம் முதலிய புராணங்களும், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. இராமாயணத்தில் வருகின்ற இராமனும், மகாபாரதத்தில் வருகின்ற கிருஷ்ணனும் மகாவிஷ்ணுவின் அவதார புருசர்கள் என்றும், அவர்கள் அதர்மத்தை அழித்துவிட்டுத் தர்மத்தை நிலைநாட்ட வந்தார்கள் என்றும் மக்கள் நம்பினார்கள். மக்களின் ஒரு பிரிவினர் அவர்களுக்குக் கோவில்கள் கட்டி வழிபட்டனர். இன்னொரு பிரிவினர் ஏற்கெனவே வழிபட்டு வந்த சிவபெருமானையே வழிபட்டனர். சிவபெருமானை வழிபட்டவர்கள் 'சைவர்கள்' என்றும், மகாவிஷ்ணுவையும் அவருடைய அவதார புருசர்களையும் வழிபட்டவர்கள் 'வைணவர்கள்' என்றும் கூறப்பட்டனர். சைவர்கள் பின்பற்றிய சமயக் கொள்கைகளைச் 'சைவம்' என்றும், வைணவர்கள் பின்பற்றிய சமயக் கொள்கைகளை 'வைணவம்' என்றும் கூறினர்.

சைவமும் வைணவமும் வேதங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததால் இவற்றை வைதிக சமயம் என்றும் கூறுவர். சைவம் சிவபெருமானை முழுமுதற்கடவுளாகவும், வைணவம் மகாவிஷ்ணுவை முழுமுதற்கடவுளாகவும் கொண்டுள்ளன. சிலர் சைவர்களைச் சைவ சமயத்தினர் என்றும், வைணவர்களை வைணவ சமயத்தினர் என்றும் கூறுகின்றனர். ஆனால் இவை இரண்டும் இரண்டு சமயங்களல்ல. இவை இரண்டுமே இந்து சமயத்தினுடைய (இந்து மதத்தினுடைய) இரு பிரிவுகளேயாகும்.

## சமண, பௌத்த மதங்களினுடைய தோற்றமும் இந்து மத வளர்ச்சியில் பின்னடைவும்

இந்தியாவில் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் சமண மதமும், ஐந்தாம் நூற்றாண்டில் பௌத்த மதமும் தோன்றின. சமண மதம் வர்த்தமான மகாவீரராலும், பௌத்த மதம் கௌதம புத்தராலும் தோற்று விக்கப்பட்டன. சமண மதம் வர்த்தமான மகாவீரரால் தோற்றுவிக்கப் பட்டதாகக் கூறப்பட்டாலும், சமணக் கொள்கை அவர் காலத்திற்கு முன்பே இருந்திருக்கிறது. உயிரினங்களைக் கொல்லக்கூடாது என்பது சமணக் கொள்கை. இந்தக் கொள்கையை வர்த்தமான மகாவீரருக்கு முன்பே 23 ஞானிகள் மக்களிடையே பரப்பி வந்திருக்கின்றனர். அஞ்ஞானிகள் தீர்த்தங்கரர் என்று அழைக்கப்பட்டனர். வர்த்தமான மகாவீரர் 25ஆவது தீர்த்தங்கரர்.

அக்காலத்தில் இந்து மதத்தில் உயிரினங்களைக் கடவுளுக்காகப் பலியிடும் வழக்கம் சில இடங்களில் இருந்துவந்தது. இதனை விரும்பாத இந்துக்கள் சமண மதத்தில் சேர்ந்தனர். அதனால் இந்து மதத்தினுடைய வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டது. அப்படி இருக்கையில் சித்தார்த்த கௌதம புத்தர் அவரது கொள்கையையும் (பௌத்தக் கொள்கையையும்) பரப்பினார். அதனால் இந்து மதத்தினரில் பெருமளவு மக்கள் சமண மதத்திற்கும், பௌத்த மதத்திற்கும் சென்றனர். எனவே கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவிலுள்ள இந்துக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்ததாகக் கூறப்படுகிறது.

கி.மு. 273–லிருந்து 232 வரை ஆண்ட மயூரான் சக்கர வர்த்தியான அசோகன் புத்த மதத்தில் சேர்ந்து புத்த மதப் பிரச்சாரம் செய்தார். பிரச்சாரத்திற்காகப் பல நாடுகளுக்கு ஆட்களையும் அனுப்பி வைத்தார். மேலும் அவர் புத்தமதத்தை நாட்டு மதமாகப் பிரகடனம் செய்தார். அதனால் இந்து மதத்திலுள்ள பெரும்பாலான மக்கள் புத்த மதத்தில் சேர்ந்தார்கள். பௌத்த மதம் நல்ல வளர்ச்சியை அடைந்தது. எனவே இந்து மதத்தின் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டு வீழ்ச்சியடைந்தது.

இந்துமதம் வீழ்ச்சியடைந்ததைக் கண்ட இந்து மதாச்சாரியர்கள் விழித்தெழுந்தார்கள். அவர்கள் இந்து மத வளர்ச்சிக்கான செயல்பாடுகளில் இறங்கினார்கள்.

**இந்து மதாச்சாரியர்களின் இந்துமத வளர்ச்சிக்கான செயல்பாடுகள்**

இந்து மதாச்சாரியர்கள் வேதங்களுக்கான விளக்கவுரைகளைக் கொண்ட நூல்களையும், இந்து மத வழிமுறைகளைக் கொண்ட நூல்களையும் எழுதினார்கள். அவர்கள் இந்து மக்களைத் திரட்டினார்கள். நூல்களை மக்களிடம் கொடுத்து இந்துமதத் தத்துவங்களையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் விளக்கினார்கள். அதன் விளைவாகச் சமண, பௌத்த மதங்களைத் தழுவியிருந்த இந்துக்கள் மீண்டும் இந்து மதத்திற்குத் திரும்பினார்கள். அந்தக் காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரமூர்த்தி சுவாமிகள் போன்ற சமயப் பெரியோர்கள் தோன்றி இந்து மதத்தினுடைய பெருமைகளை மக்களுக்கு விளக்கினார்கள். அதனால் இந்துமதம் மீண்டும் வளரத் தொடங்கியது.

**நாயன்மார்களும் ஆழ்வார்களும்**

சிவபெருமானுடைய பெருமைகளைப் பாடியவர்கள் நாயன்மார்கள் என்றும், திருமாலின் (மகாவிஷ்ணுவின்)

பெருமைகளைப் பாடியவர்கள் ஆழ்வார்கள் என்றும் பெயர் பெற்றனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் கி.பி. 350லிருந்து கி.பி. 720 வரையுள்ள காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

நாயன்மார்கள் 63 பேர். அவர்களில் உயர்ந்த குலத்தினர் என்று கருதப்பட்டவர்கள் மட்டுமின்றித் தாழ்ந்த குலத்தினர் என்று கருதப்பட்டவர்களும் இருந்தனர். அவர்களின் பெயர், குலம், ஊர் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | பெயர் | குலம் | ஊர் |
|---|---|---|---|
| 1. | அதிபத்தர் | நுளையர் | நாகபட்டினம் |
| 2. | அப்பூதியடிகள் | அந்தணர் | திங்களூர் |
| 3. | அமர்நீதியார் | வணிகர் | பழையாறை |
| 4. | அரிவாட்டாயர் | வேளாளர் | கணமங்கலம் |
| 5. | ஆனாயர் | இடையர் | மங்கலவூர் |
| 6. | இசைஞானியார் | ஆதிசைவர் | திருநாவலூர் |
| 7. | இடங்கழியார் | அரசர் | கொடும்பாளூர் |
| 8. | இயற்பகையார் | வணிகர் | காவிரிப்பூம்பட்டினம் |
| 9. | இளையான்குடிமாறன் | வேளாளர் | இளையான்குடி |
| 10. | உருத்திரபசுபதியார் | அந்தணர் | திருத்தலையூர் |
| 11. | எறிபத்தர் | ------ | கருவூர் |
| 12. | ஏயர்கோன் கலிக்காமர் | வேளாளர் | திருப்பெருமங்கலம் |
| 13. | ஏனாதிநாதர் | சான்றார் | எயினனூர் |
| 14. | ஐயடிகள் காடவர்கோன் | அரசர் | காஞ்சிபுரம் |
| 15. | கணநாதர் | அந்தணர் | சீர்காழி |
| 16. | கணம் புல்லர் | ------ | இருக்குவேளூர் |
| 17. | கண்ணப்பர் | வேடர் | உடுப்பூர் |
| 18. | கலிக்கம்பர் | வணிகர் | திருப்பெண்ணாடம் |
| 19. | கலியர் | செக்கார் | திருவொற்றியூர் |
| 20. | கழற்றறிவார் | அரசர் | கொடும்பாளூர் |
| 21. | கழற்சிங்கர் | அரசர் | ------- |
| 22. | காரியார் | ------ | திருக்கடவூர் |
| 23. | காரைக்கால் அம்மையார் | வணிகர் | காரைக்கால் |

| வ.எண் | பெயர் | குலம் | ஊர் |
|---|---|---|---|
| 24. | குங்குலியக்கலயர் | அந்தணர் | திருக்கடவூர் |
| 25. | குலச்சிறையார் | -------- | மணமேற்குடி |
| 26. | கூற்றுவர் | அரசர் | களந்தை |
| 27. | கோச்செங்கட் சோழர் | அரசர் | உறையூர் |
| 28. | கோட்புலியூர் | வேளாளர் | நாட்டியத்தான்குடி |
| 29. | சடையனார் | ஆதிசைவர் | திருநாவலூர் |
| 30. | சண்டேசுவரர் | அந்தணர் | திருச்சேய்ஞலூர் |
| 31. | சத்தியார் | வேளாளர் | வரிஞ்சியூர் |
| 32. | சாக்கியார் | வேளாளர் | திருச்சங்க மங்கை |
| 33. | சிறப்புலியார் | அந்தணர் | திருஆக்கூர் |
| 34. | சிறுத்தொண்டர் | மாமாத்தியார் | திருச்செங்காட்டான்குடி |
| 35. | சுந்தரர் | ஆதிசைவர் | திருநாவலூர் |
| 36. | செருத்துணையார் | வேளாளர் | தஞ்சாவூர் |
| 37. | சோமாசிமாறர் | அந்தணர் | திருஅம்பர் |
| 38. | தண்டியடிகள் | ------ | திருவாரூர் |
| 39. | திருக்குறிப்புத்தொண்டர் | ஏகாலியர் | காஞ்சிபுரம் |
| 40. | திருஞானசம்பந்தர் | அந்தணர் | சீர்காழி |
| 41. | திருநாவுக்கரசர் | வேளாளர் | திருவாரூர் |
| 42. | திருநாளைப்போவார் | புலையர் | ஆதனூர் |
| 43. | திருநீலகண்டர் | குயவர் | சிதம்பரம் |
| 44. | திருநீலகண்டயாழ்ப்பாணர் | பாணர் | எருக்கத்தம்புலியூர் |
| 45. | திருநீலநக்கர் | அந்தணர் | சாத்தமங்கை |
| 46. | திருமூலர் | இடையர் | சாத்தனூர் |
| 47. | நமிநந்தியடிகள் | அந்தணர் | ஏமப்பேரூர் |
| 48. | நரசிங்க முனையரையர் | அரசர் | ------ |
| 49. | நின்றசீர்நெடுமாறர் | அரசர் | மதுரை |
| 50. | நேசர் | சாலியர் | காம்பீலி |
| 51. | புகழ்ச்சோழர் | அரசர் | உறையூர் |
| 52. | புகழ்த்துணையார் | ஆதிசைவர் | திருவில்லிபுத்தூர் |
| 53. | பூசலார் | அந்தணர் | திருநின்றவூர் |

| வ.எண் | பெயர் | குலம் | ஊர் |
|---|---|---|---|
| 54. | பெருமிழலைக்குறும்பர் | ------- | பெருமிழலை |
| 55. | மங்கையர்க்கரசியார் | அரசியர் | மதுரை |
| 56. | மானக்கஞ்சாரர் | வேளாளர் | கஞ்சானூர் |
| 57. | முருகர் | அந்தணர் | திருப்புகலூர் |
| 58. | முனையிடுவார் | வேளாளர் | திருநீடூர் |
| 59. | மூர்க்கர் | வேளாளர் | திருவேற்காடு |
| 60. | மூர்த்தி | வணிகர் | மதுரை |
| 61. | மெய்ப்பொருளாளர் | அரசர் | திருக்கோவலூர் |
| 62. | வாயிலார் | வேளாளர் | திருமயிலாப்பூர் |
| 63. | விறன்மிண்டர் | வேளாளர் | செங்குன்றூர் |

63 நாயன்மார்களுடைய பெயர்ப் பட்டியலில் சமயாச்சாரியர்களுள் நான்காமவராகிய மாணிக்கவாசகர் பெயர் இடம்பெறவில்லை. காரணம், 63 நாயன்மார்களுடைய வரலாற்றினைக் குறிக்கின்ற சேக்கிழாருடைய திருத்தொண்டர் புராணத்தில் (பெரிய புராணத்தில்) மாணிக்கவாசகர் வரலாறு சேர்க்கப்படவில்லை. அதற்குக் காரணம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் பாடிய திருத்தொண்டர் தொகையில் குறிப்பிட்டவர்களை மட்டுமே சேக்கிழார் பாடியுள்ளார் என்பதாகும். திருத்தொண்டர் தொகையில் மாணிக்கவாசகர் பற்றிய செய்திகள் இல்லை. பிற்காலத்தவர் மாணிக்கவாசகரை நான்காவது சமயாச்சாரியராகச் சேர்த்துக் கொண்டனர்.

பெரிய சிவன் கோவில்களின் இந்நாயன்மார்களுக்கும் திருவுருவம் அமைத்து வழிபாடு நடத்துகின்றனர்.

திருநாவுக்கரசர் (அப்பர்), திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவ சமயாச்சாரிகள் எனப்படுவர். இவர்கள் காட்டிய அன்பு நெறியையும், வாழ்வு முறையையும் பின்பற்றிச் சைவசித்தாந்தத்திற்கு அடிப்படையான நூல்கள் பன்னிரு திருமுறைகளேயாகும். இப்பன்னிரு திருமுறைகளையும் அருளிச் செய்தவர்கள் 27 ஆசிரியர்கள். அவர்களின் பெயர், அவர்கள் அருளிச் செய்த பாடல்களின் விவரம் ஆகியன வருமாறு:

## பன்னிரு திருமுறைகளின் விவரம்

| வ.எண் | திருமுறை ஆசிரியர்கள் | திருமுறை பெயர்கள் | திருமுறை எண் | பாசுரங்கள் | பாடல்கள் | செய்யுட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் | சம்பந்தர் தேவாரம் | 1,2,3 | 4181 | --- | --- |
| 2. | திருநாவுக்கரசர்(அப்பர்) | அப்பர் தேவாரம் | 4,5,6 | --- | 3066 | --- |
| 3. | சுந்தரமூர்த்தி சுவாமிகள் | சுந்தரர் தேவாரம் | 7 | --- | 1026 | --- |
| 4. | மாணிக்கவாசகர் | திருவாசகமும் | | --- | 659 | --- |
| 5. | திருமாளிகைத் தேவர் | திருக்கோவையும் | 8 | --- | 400 | --- |
| 6. | சேந்தனார் | | | | | |
| 7. | கருவூர்த்தேவர் | | | | | |
| 8. | பூந்துருத்தி நம்பிகாடநம்பி | | | | | |
| 9. | கண்டராதித்தர் | ஒன்பதாம் திருமுறை | 9 | --- | 288 | --- |
| 10. | வேணாட்டடிகள் | | | | | |
| 11. | திருவலாலியமுதனார் | | | | | |
| 12. | புருஷோத்தம நம்பி | | | | | |
| 13. | சேதிராயர் | | | | | |
| 14. | திருமூலர் | திருமந்திரம் | 10 | --- | 3047 | --- |
| 15. | திருஆலவாய் உடையார் | | | | | |
| 16. | காரைக்கால் அம்மையார் | | | | | |
| 17. | ஐயடிகள் காடவர்கோன் | | | | | |
| 18. | சேரமான் பெருமாள் நாயனார் | | | | | |
| 19. | நக்கீரதேவ நாயனார் | | | | | |
| 20. | கல்லாடதேவ நாயனார் | பதினோராம் திருமுறை | 11 | --- | 1416 | --- |
| 21. | கபிலதேவ நாயனார் | | | | | |
| 22. | பரணதேவ நாயனார் | | | | | |
| 23. | இளம்பெருமான் அடிகள் | | | | | |
| 24. | அதிரா அடிகள் | | | | | |
| 25. | பட்டினத்துப்பிள்ளையார் | | | | | |
| 26. | நம்பியாண்டார் நம்பி | | | | | |
| 27. | சேக்கிழார் சுவாமிகள் | திருத்தொண்டர் (பெரிய) புராணம் | 12 | --- | --- | 4286 |

ஆழ்வார்கள் 12 பேர். இவர்களில் மேல்குலத்தினர் என்று கருதப்பட்டவர்களும் உள்ளனர். அவர்களின் பெயர்கள், குலம் மற்றும் ஊர் விவரங்கள் பின்வருமாறு கொடுக்கப்படுகின்றன.

| வ. எண் | பெயர் | குலம் | ஊர் |
|---|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் | பாஞ்சஜன்யம் எனும் சங்கத்தின் அம்சமாக அவதரித்தார் | காஞ்சியிலுள்ள பொய்கை ஒன்றில் பிறந்தார் |
| 2. | பூதத்தாழ்வார் | கௌமோதகீ எனும் கதையின் அம்சமாக அவதரித்தார் | மாமல்லபுரத்தின் நீலோத்பல புட்பத்தினுள் |
| 3. | பேயாழ்வார் | நந்தகம் என்னும் வாளின் அம்சமாக அவதரித்தார் | மைலாப்பூரிலுள்ள ஒரு கிணற்றிலுள்ள செவ்—வல்லிப் பூவில் |
| 4. | திருமழிசையாழ்வார் | பெருமாள் திருவாழியின் அம்சமாக அவதரித்தார் | ---- |
| 5. | நம்மாழ்வார் | விஷ்வக்சேனரின் அம்சமாக அவதரித்தார் | தாம்பிரபரணி நதிக் கரையில் திருக்குருகூர் |
| 6. | மதுரகவியாழ்வார் | அந்தணர் குலத்தில் அவதரித்தார் | திருக்கோளூர் |
| 7. | குலசேகர ஆழ்வார் | இராசகுமாரராக அவதரித்தார் | திருவஞ்சிக்களம் |
| 8. | பெரியாழ்வார் | வேயர் குலத்தில் அவதரித்தார் | வில்லிபுத்தூர் |
| 9. | ஸ்ரீ ஆண்டாள் | பூமிதேவியின் அவதாரமாக அவதரித்தார் | வில்லிபுத்தூர் பெரியாழ்வாருடைய துளசித் தோட்டம் |
| 10. | தொண்டரடிப்பொடி யாழ்வார் | பூர்வசிக ஸ்ரீவைணவ குலத்தில் அவதரித்தார் | மண்டங்குடி |
| 11. | திருப்பாணாழ்வார் | பாணர் குலத்தில் அவதரித்தார் | உறையூர் |
| 12. | திருமங்கையாழ்வார் | கள்ளர்குடியில் அவதரித்தார் | திருக்குறையலூர் |

பெரிய விட்ணு கோவில்களில் இவர்களுடைய திருவுருவங்களை வைத்து வழிபடுகின்றனர்.

ஆழ்வார்கள் காட்டிய வாழ்வு முறையைப் பின்பற்றித் தமிழகத்தில் வைணவ நெறி வளர்ந்தோங்கியது. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே **நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்.**

'நாலாயிரத் திவ்வியப்பிரபந்த'ப் பாடல்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ஆழ்வார்கள் பெயர் | திவ்வியப்பிரபந்தத்தின் பெயர் | பாடல்கள் |
|---|---|---|---|
| 1. | பொய்கையாழ்வார் | முதல் திருவந்தாதி | 100 |
| 2. | பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி | 100 |
| 3. | பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி | 100 |
| 4. | திருமழிசைப்பிரான் | நான்காம் திருவந்தாதி | 96 |
| | (திருமழிசையாழ்வார்) | திருச்சந்தவிருத்தம் | 120 |
| 5. | நம்மாழ்வார் | ரிக்வேத சாரமான திருவிருத்தம் | 100 |
| | | யசுர்வேத சாரமான திருவாசிரியம் | 70 |
| | | அதர்வண வேதசாரமான பெரிய திருவந்தாதி | 87 |
| | | சாமவேத சாரமான திருவாய்மொழி | 1102 |
| 6. | மதுரகவியாழ்வார் | கண்ணிநுண் சிறுத்தாம்பு | 10 |
| 7. | குலசேகர ஆழ்வார் | பெருமாள் திருமொழி | 105 |
| 8. | பெரியாழ்வார் | பெரியாழ்வார் திருமொழி | 473 |
| 9. | ஆண்டாள் | திருப்பாவை | 30 |
| | | நாச்சியார் திருமொழி | 143 |
| | | திருமாலை | 45 |
| 10. | தொண்டரடிப்பொடி யாழ்வார் | திருப்பள்ளியெழுச்சி | 10 |
| 11. | திருப்பாணாழ்வார் | அமலாதிபிரான் | 10 |
| 12. | திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி | 1084 |
| | | திருக்குறுந்தாண்டகம் | 20 |
| | | திருநெடுந்தாண்டகம் | 30 |
| | | திருவெழுகூற்றிருக்கை | 1 |
| | | சிறிய திருமடல் | 1 |
| | | பெரிய திருமடல் | 1 |
| | | மொத்தம் | 3838 |

இந்த 3,838 பாடல்களுடன் இராமானுசர் நூற்றந்தாதியும் சேர்த்து ஏறக்குறைய நாலாயிரம் பாடல்கள் அமைவதால் 'நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்' எனப் பெயர் பெற்றது. இராமானுசர் நூற்றந்தாதி அவர் காலத்திற்குப் பின் வந்தமையால் அது இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளது. இப்பாடல்களின் விவரம் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. திருவாய்மொழி, இறைநிலை, உயிர்நிலை, இறையை அடையும் நெறி, ஊழ்வினை வாழ்வினை என்னும் ஐம்பெரும் பொருள்களை உணர்த்து கின்றது.

## இசுலாமியர்களின் வருகையும் இந்துமத வளர்ச்சியில் பின்னடைவும்

நாயன்மார்களுடையவும் ஆழ்வார்களுடையவும் காலத்தில் இந்தியாவில் இந்துமதம் வளர்ந்து கொண்டேயிருந்தது. அப்படிப்பட்ட காலக்கட்டத்தில் துருக்கியர்கள் இந்தியாமீது படையெடுத்தார்கள். அவர்களது படையெடுப்பிலிருந்து இந்தியாவில் முகம்மதிய ஆட்சிக் காலம் தொடங்கியது. அவர்களுடைய ஆதிக்கமும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. கஜினி முகம்மது என்பவர் பதினேழு முறை இந்தியா மீது படையெடுத்தார். அவரது தகாத செயல்பாடுகளால் இந்துக்களுடைய மன அமைதி பாதிக்கப்பட்டது.

இசுலாமியர்களின் ஆட்சியின்போது அவர்கள் தங்களுடைய மதத்தைப் பரப்புவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் இந்துக்களில் பலரையும் கட்டாயப்படுத்தித் தங்கள் மதத்தில் சேர்த்தனர். அதனால் இந்துமத வளர்ச்சி மிகவும் பாதித்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆதி சங்கரர், இராமானுசர், மத்துவாச்சாரியார் ஆகிய மகான்கள் தோன்றினர். அவர்கள் தங்களுடைய கொள்கைகளைப் பரப்பி இந்து மதத்தைச் சரிவிலிருந்து மீட்க முனைப்புடன் செயல்பட்டு, அதன்படி மீட்கவும் செய்தார்கள். அதனால் இந்துமதம் மீண்டும் வளரத் தொடங்கியது.

இனி ஆதிசங்கரர், இராமானுசர், மத்துவாச்சாரியர் ஆகியோரைப் பற்றியும், அவர்களது கொள்கைகளைப் பற்றியும் பார்ப்போம்.

## ஆதிசங்கரரும் அத்வைத சித்தாந்தமும் (கி.பி. 788–820)

ஆதிசங்கரருடைய இயற்பெயர் சங்கரன். ஆதிசங்கரர் என்ற பெயர் பிற்காலத்தில் வந்தது. இவர் கி.பி. 788ஆம் வருடம் கேரளாவிலுள்ள காலடி என்னும் கிராமத்தில் அவதரித்தார். இவர் கி.பி. 788 முதல் 820 வரையுள்ள 32 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார். உலகில் நன்னெறியை நிலைப்படுத்துவதற்காக ஸ்ரீ தட்சிணாமூர்த்தியே ஆதிசங்கரராக அவதரித்தார் என்று கூறப்படுகிறது. இவரது தந்தை பெயர் சிவகுரு. தாயார் பெயர்

ஆரியம்மாள். இவர் பிறந்த சில நாள்களிலேயே இவரது தந்தை காலமானார். எனவே இவர் தனது தாயாரின் பராமரிப்பில் வளர்ந்தார்.

இளம்வயதிலேயே எல்லாச் சாத்திரங்களிலும் நிறைந்த அறிவைப் பெற்றார். தமது எட்டாவது வயதில் தாயார் அனுமதியோடு துறவுநெறியை விரும்பி வீட்டிலிருந்து புறப்பட்டார். புறப்படும்போது தாயாரிடம் "அம்மாவின் கடைசிக் காலத்தில் நான் வருவேன்" என்று கூறிச் சென்றார். அதுபோல் வரவும் செய்தார். வீட்டிலிருந்து சென்றவர் நர்மதா நதிக்கரையில் வசித்து வந்த கோவிந்த பகவத் பாதர் என்பவரை வணங்கி அவரைக் குருவாகக் கொண்டார். குருவின் கட்டளைப்படி உபநிடத்துக்களுக்கும், பிரம்ம சூத்திரத்திற்கும், பகவத் கீதைக்கும் பாஷ்யம் (விளக்கவுரை) எழுதினார். அப்போது அவரது தாயார் மரணப்படுக்கையில் கிடக்கும் செய்தி வந்தது. உடனே சங்கரர் தாயாரிடம் சென்று அவரை மகிழ்வித்து ஆறுதல் வார்த்தைகளைக் கூறித் தேற்றினார். அந்நிலையில் தாயாரின் ஆத்மா அமைதியோடு உடலைவிட்டுப் பிரிந்தது. சங்கரர் தாயாருக்கான இறுதிச் சடங்குகளைச் செய்து மனஅமைதி பெற்றார். அதன்பின் வீட்டை விட்டுப் புறப்பட்டார்.

சங்கரர் இந்தியாவிற்குள் பல இடங்களுக்கும் சென்றார். தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே காஷ்மீர் வரையிலும், மேற்கே துவாரகா முதல் கிழக்கே காசி வரையிலும் சென்று தனது அத்வைத சித்தாந்தத்தை (அத்வைதக் கொள்கை) மக்களுக்கு எடுத்துரைத்தார். இந்தியாவின் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை நிறுவினார். காஷ்மீரம் சென்று 'சர்வக்ஞன பீடம்' ஏறினார். சர்வக்ஞன பீடம் என்பது எல்லாச் சாத்திரங்களிலும் தேர்ந்த பேரறிஞர் அமர்வதற்குரிய கௌரவமிக்க ஆசனம் ஆகும். சங்கரர் காஞ்சி காமகோடி பீடத்தை நிறுவினார். அதன் முதல் ஆச்சாரியராகவும் இருந்தார். தனது 32ஆவது வயதில் காஞ்சி காமாட்சி அம்மையுடன் இரண்டறக் கலந்தார். இக்கோவில் வளாகத்தில் இவருக்கு சன்னதி உண்டு. இதுவே இவர் சித்தியடைந்த தலம். இவரது காலத்திற்குப் பின் பல சங்கரர்கள் தோன்றினார்கள். எனவே இவர் ஆதிசங்கரர் என்று அழைக்கப்படுகிறார்.

அத்வைதம் ஆதிசங்கரருடைய சித்தாந்தம் (கொள்கை). "துவைதம்" என்றால் இரண்டு உண்டு என்று பொருள். "அத்துவைதம்" என்றால் இரண்டு இல்லை, ஒன்று மட்டும்தான் உண்டு என்று பொருள். அதாவது, கடவுள் ஒருவர் இருக்கிறார், அவருக்கு அடுத்து இரண்டாவதாக மனிதர்கள் இருக்கிறார்கள் என்று நினைப்பது துவைதம். அப்படி இரண்டு இல்லவே இல்லை, கடவுள் என்கிற சத்தியப்பொருளுக்கு (அழிவற்ற பொருள்) அடுத்ததாக வேறு எதுவுமே இல்லை என்ற கொள்கை அத்துவைதம்.

இந்தக் கொள்கையை ஏராளமான மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆதிசங்கரரிடம் ஏராளமான மாணவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களோடு அவர் இந்தியாவிலுள்ள பல பகுதிகளுக்கும் சென்று இந்துமதத்தின் பெயரால் நடந்து கொண்டிருந்த பல தீயபழக்க வழக்கங்களை மாற்றிப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அதனால் கடவுள் வழிபாட்டு முறைகள் தூய்மை பெற்று இந்துமதம் புத்துயிர் பெற்று வளர்ந்தது.

## இராமானுசரும் விசிட்டாத்வைதமும் (கி.பி. 1017–1137)

இராமானுசர் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஸ்ரீபெரும்புதூர் என்னுமிடத்தில் பிறந்தார். அவர் கி.பி. 1017 முதல் 1137 வரையுள்ள 120 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்தார். அவரது தந்தை பெயர் ஆசூரி கேசவப்பெருமாள். தாயார் பெயர் காந்திமதி அம்மையார். இராமானுசர் 16 வயதுவரை வேதங்களைக் கற்றார். அதன்பின் அவருக்குத் திருமணம் நடந்தது. பின்பு, வேதாந்தம் கற்கவேண்டு மென்று விரும்பிக் காஞ்சிக்கு வந்தார். யாதவப் பிரகாசர் என்பவரிடம் வேதாந்தப் பாடங்களைக் கற்றார். கற்கும்போது அவருடைய அறிவுத் திறனை யாதவப் பிரகாசர் மிகவும் பாராட்டினார். இராமானுசரின் புகழ் நாடெங்கும் பரவியது. இராமானுசர் துறவு பூண்டு "யதிராஜர்" என்ற பெயரோடு திருவரங்கத்தில் இருந்த "ஆச்சாரிய பீடத்தில்" அமர்த்தப்பட்டார்.

இராமானுசர் பிரம்மசூத்திரத்திற்குப் பாஷ்யம் (விளக்கவுரை) எழுதினார். அவர் "உபய வேதாந்தத்தையும்" வெளிப்படுத்தினார். சமஸ்கிருத மொழியிலிருந்த உபநிடத்துக்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகியவற்றிலுள்ள போதனைகளையும், தமிழ்மொழியில் ஆழ்வார்கள் பாடிய திவ்வியப்பிரபந்தப் போதனைகளையும் இணைத்துக் காட்டி முனிவர்களும் ஆழ்வார்களும் ஒரே உண்மையைத்தான் போதித்தார்கள் என்று இராமானுசர் உறுதிப்படுத்தினார். இதுவே "உபயவேதாந்தம்" எனப்படுகிறது. மக்களுக்குப் பல வருடங்கள் போதனைகள் வழங்கிய பின் தமது 120வது வயதில் அவர் திருமாலடி சேர்ந்தார்.

இராமானுசருடைய கொள்கை "விசிட்டாத்துவைதம்." விசிட்டாத்துவைதம் என்பது, பிரம்மம் திரமானது, அழிவற்றது. உலகில் அசையும் பொருள்களாக உள்ள உயிரினங்களும், அசையாத பொருள்களும் பிரம்மத்தின் (கடவுளின்) சரீரங்களாகிய பிரிக்க முடியாத விசேசணங்களாகும். இந்த விசேசணங்களோடு (சிறப்புகளோடு) கூடிய அத்துவைதமே விசிட்டாத்துவைதம்.

இராமானுசருடைய இந்தக் கொள்கையை ஏராளமான மக்கள் பின்பற்றினார்கள். இராமானுசர் மைசூர் சென்று அவரது

அன்பர்களுடன் 12 வருடங்கள் வைணவப் பிரசாரம் செய்தார். அதன்பின் இந்தியாவில் பல இடங்களுக்கும் சென்று வைணவப் பிரச்சாரம் செய்து, அறநெறி தவறாமல் நடக்கவேண்டுமென்று மக்களிடம் கேட்டுக்கொண்டார். இவருடைய பிரச்சாரம் இந்துமத வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.

**மத்துவாச்சாரியரும் துவைதக் கொள்கையும் (கி.பி. 1238–1317)**

மத்துவாச்சாரியருடைய இயற்பெயர் 'வாசுதேவன்'. மத்துவார் என்றால் வாயுபகவான் என்று பொருள். வாசுதேவன் வாயுபகவானுடைய அவதாரமாகக் கருதப்படுவதால் அவர் மத்துவாச்சாரியர் என்று அழைக்கப்படுகிறார். இவருக்கு ஆனந்த தீர்த்தர், அனுமான தீர்த்தர் ஆகிய பெயர்களும் உண்டு. இவர் தென் கன்னட மாவட்டத்தில் உடுப்பிக்கு அருகிலுள்ள பெல்லி என்னும் ஊரில் பிறந்தார். இவரது தந்தை பெயர் மத்திய சேகர பட்டர். தாயார் பெயர் வேதவதி அம்மையார். இவர் கி.பி. 1238 முதல் 1317 வரையுள்ள 79 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்தார்.

வாசுதேவன் இளம்வயதிலேயே வேத பாடசாலையில் சேர்ந்து படித்தார். இவரது குருவின் பெயர் புருசோத்தம தீர்த்தர். குரு வியக்கும் வண்ணம் வாசுதேவர் பாடங்களை நன்கு படித்தார். அதன் பின் அவர் அச்சுதப் பிரேட்சர் என்ற வைணவத் துறவியிடம் சென்று தொண்டு செய்து துறவு நிலையைப் பெற்றார்.

அந்தக் காலத்தில் ஆதிசங்கரருடைய அத்வைத சித்தாந்தமும், இராமானுசருடைய விசிட்டத்வைத சித்தாந்தமும் எங்கும் பரவி யிருந்தன. ஆனால் இந்த இரண்டு வகையான சித்தாந்தங்களையும் (கொள்கைகளையும்) ஏற்றுக் கொள்ளாதவர்களும் இருந்தார்கள். அவர்கள் மத்துவாச்சாரியருடைய துவைத சித்தாந்தத்தை (துவைதக் கொள்கையை) ஏற்றுக் கொண்டார்கள். மேலும் துவைதக் கொள்கைக்கு மக்களுடைய ஆதரவும் பெருகிக் கொண்டிருந்தது.

மத்துவாச்சாரியர் பிரம்ம சூத்திரத்திற்கு நான்கு பாஷ்யங்களும் (விளக்கவுரைகள்), பத்து உபநிடத்துக்களுக்குப் பாஷ்யங்களும், இராமாயணம், மகாபாரதம், பாகவதம் ஆகியவற்றிற்கு உரைகளும் எழுதியுள்ளார். அவர் இந்தியாவின் பல இடங்களுக்கும் சென்று தமது துவைதக் கொள்கையைப் பிரச்சாரம் செய்தார். உடுப்பியில் கிருஷ்ண விக்கிரகம் ஒன்றைப் பிரதிட்டை செய்தார். மீண்டும் இந்தியாவில் பல இடங்களுக்கும் சென்று பிரச்சாரம் செய்தார். முடிவில் உடுப்பிக்குத் திரும்பி வந்து அங்கேயே

நிலையாகயிருந்து தமது 79வது வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

துவைதம் என்பது, ஜீவாத்மா வேறு, பரமாத்மா வேறு என்பதாகும். பரமாத்மாவின் அருளால் ஜீவாத்மா இம்மையிலும் மறுமையிலும் மேன்மை அடைகிறது. ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றல்ல. அவை இரண்டும் வெவ்வேறு. இந்தத் துவைத சித்தாந்தத்தை (கொள்கையை)ப் பல மக்களும் ஏற்றுக் கொண்டார்கள்.

மத்துவாச்சாரியருடையவும் அவர்களது சீடர்களுடையவும் பிரச்சாரத்தினால் இந்துமதம் மேலும் வளர்ச்சியடைந்தது. இந்து மதம் வளர்ந்து வரவே இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி வந்தது.

## ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்து மதம்

கி.பி. 1600இல் ஆங்கிலேயர்கள் இந்தியாவுடன் வணிகம் செய்யத் தொடங்கினர். வணிகத்திற்கென்று வந்தவர்கள் காலப்போக்கில் இந்தியாவையே ஆளும் நிலைக்கு வந்தனர். அவர்களுடைய மொழியான ஆங்கிலத்தையும், அவர்களுடைய மதமான கிறித்துவ மதத்தையும் இந்தியாவில் பரப்பினார்கள். அன்றைய சூழ்நிலைகளும் மதமாற்றத்திற்கு ஏற்றவாறு இருந்தன. இந்தியாவிலுள்ள இந்துக்களில் மேல்சாதியினர் (ஸவர்ணர்கள்) என்றும் கீழ்ச்சாதியினர் (அவர்ணர்கள்) என்றும் இருபிரிவுகள் இருந்தன. கீழ்ச் சாதியினர் கோவில்களுக்குள் செல்ல மேல்சாதியினரால் அனுமதிக்கப் படவில்லை. இதனைப் பயன்படுத்தி ஆங்கிலேயர் கீழ்ச்சாதியினரில் பலரையும் கிறித்துவ மதத்தில் சேர்த்தனர். இதனால் இந்து மத வளர்ச்சிக்குப் பாதிப்பு ஏற்பட்டது.

அப்போது இந்து மதத்தை வளர்க்க வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பல மகான்களும், தோன்றினார்கள். அவர்களில் வடஇந்தியாவில் இராஜா ராம்மோகன் ராய், தயானந்த சரஸ்வதி சுவாமிகள், இராமகிருஷ்ண பரமகம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களும், தென் இந்தியாவில் வள்ளலார் சுவாமிகள், நாராயண குரு, அய்யா வைகுண்ட சுவாமி ஆகியோர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களைப் பற்றியும், அவர்கள் ஆற்றிய அரும்பணிகள் பற்றியும் இங்கே சுருக்கமாகக் கொடுக்கப்படுகின்றன.

## இராஜா ராம்மோகன் ராய் (கி.பி. 1772–1833)

இவர் கி.பி. 1772ஆம் வருடம் மேற்கு வங்கத்தில் உள்ள வர்த்தமான் மாவட்டத்தில் இராதா நகரம் என்ற சிற்றூரில் பிறந்தார். இவரது தந்தை பெயர் இராம் காந்த ராய், தாயார் பெயர் தாரிணிதேவி.

இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் 'மோகன்', 'இராஜா' என்பது. அவரது சேவைகளைப் பாராட்டி அவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பட்டமாகும். 'இராம்' என்பது அவரது தந்தை ராம்காந்த் பெயரைக் குறிக்கும். 'ராய்' என்பது பரம்பரையைக் குறிக்கும் பெயர். இவர் வங்கமொழி, அரபு மொழி, ஆங்கிலம், கிரேக்கம், ஹிப்ரு, பாரசிகம் ஆகிய மொழிகளைக் கற்றவர். இவர் இந்து மதத்தில் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வர அரும்பாடுபட்டார். பல சீர்திருத்தங்களைச் செய்துவிட்டுத் தனது 61வது வயதில், கி.பி. 1833இல் காலமானார்.

இராஜா ராம்மோகன் ராய் அவர்கள் இந்துமதத்தில் காணப்பட்ட பல குறைபாடுகளையும், மூடநம்பிக்கைகளையும் மாற்ற வேண்டும் என்று விரும்பினார். அதற்காக அவர் 1828ஆம் வருடம் 'பிரம்ம சபா' என்ற ஓர் இயக்கத்தை உருவாக்கி, அதன் துணையோடு சமய, சமூகச் சீர்திருத்தப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். "பிரம்ம சபா" பின்னர் 1845இல் 'பிரம்மசமாஜம்' என்ற பெயரில் மாற்றி அமைக்கப்பட்டது. பிரம்ம சமாஜம் படித்த மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றது.

இராஜா ராம்மோகன் ராய் அவர்கள் உருவ வழிபாட்டு முறையை எதிர்த்தார். கடவுளை அரூபியாகக் கருதி வழிபடும் முறையை மக்களிடையே பரப்பினார். இவர் விக்கிரகம் இல்லாத ஒரு கோவிலை நிறுவினார். கடவுள் ஒருவரே என்னும் உண்மையை மக்களுக்குப் போதித்தார். சாதி மத வேற்றுமையின்றி அனைவரும் சகோதரர்களாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினார். கடவுளை வணங்க ஆடம்பரங்கள் தேவையில்லை என்று போதித்தார். கணவன் இறந்த பின் மனைவி தீயில் விழுந்து உயிரை விடவேண்டுமென்ற பழக்கத்தை, அதாவது – 'சதி' அல்லது 'உடன்கட்டை ஏறும்' பழக்கத்தை ஒழித்தார். ஆணுக்குப் பெண் சமம் என்ற நீதியை நிலைநாட்டப் போராடினார். இராசபுத்திரப் பெண் குழந்தைகளைப் பலியிடுவதையும், 'எமரையா' என்ற நரபலி பழக்கத்தையும் ஒழித்தார். கணவனின் மறைவுக்குப்பின் மனைவி மறுமணம் செய்து கொள்வதற்கான வழிமுறைகளைக் கொண்டு வந்தார். கல்வி இல்லாதவர்களுக்குக் கல்வி அறிவு கிடைக்கப் பள்ளிக்கூடங்களை நிறுவ ஏற்பாடு செய்தார். இவ்வாறு இராஜா ராம்மோகன் ராய் இந்து மதத்தில் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

### தயானந்த சரஸ்வதி சுவாமிகள் (கி.பி. 1824 – 1883)

இவர் கி.பி. 1824இல் குஜராத் மாநிலத்திலுள்ள தங்கரா என்னும் ஊரில் பிறந்தார். இவரது இயற்பெயர் 'மூலசங்கரர்' 'தயானந்த சரஸ்வதி சுவாமிகள்' என்ற பெயர் இவர் துறவு பூண்ட

பின் வந்தது. இவர் தனது இளமைக் காலத்திலேயே குசராத்தி, சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றறிந்தார். இவருக்குத் திருமணம் நடத்த ஏற்பாடு நடந்தபோது, அதிலிருந்து தப்பிப்பதற்காகத் துறவு வாழ்க்கையில் ஈடுபட்டார். இவர் பல மதங்களை ஆராய்ந்து தமது கருத்துக்களை இவரது 'சத்தியார்த்த பிரகாஷ்' என்னும் நூலில் வெளிப்படுத்தினார். இவர் இந்து மதத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்த நிலையில் கி.பி. 1883ஆம் வருடம் தமது 59ஆவது வயதில் காலமானார்.

சாதி மத வேற்றுமைகள் இல்லாமல் எல்லா மக்களும் பரஸ்பரம் அன்புடனும், சகோதரத்துவத்துடனும் வாழவேண்டுமென்று தயானந்த சரஸ்வதி சுவாமிகள் மக்களை வலியுறுத்தினார். அவரது காலத்தில், உயர்ந்த சாதியினர் மட்டும் படித்து வந்த வேதங்களை அனைத்துச் சாதியினரும் படிக்க உதவினார். பால்ய விவாகத்தை (குழந்தைத் திருமணத்தை) எதிர்த்தார். தமது கொள்கைகளைப் பரப்பக் கி.பி. 1875ஆம் ஆண்டு 'ஆரிய சமாஜம்' என்ற ஓர் அமைப்பை நிறுவினார். இந்த அமைப்பின்கீழ்க் கல்வி நிலையங்களை ஏற்படுத்தினார். வட இந்தியாவில் இந்த இயக்கம் மிகவும் செல்வாக்குடன் செயல்பட்டது.

இவர் தீண்டாமையை ஒழிக்கத் தீவிரமாகப் பாடுபட்டார். பெண்களுக்கும் ஆண்களைப் போல் சமஉரிமை அளிக்க வேண்டு மென்று வாதாடினார். விதவைகளின் மறுமணத்திற்கு ஆதரவளிக்க வேண்டுமென்று மக்களிடம் கேட்டுப் போதித்து அவர்களை நல்வழிப்படுத்தினார். எப்போதும் மக்களுக்கு நல்லவற்றையே செய்ய வேண்டுமென்றும், ஒருவரது செயல்களே அவரது விதியை நிர்ண யிக்குமென்றும் போதித்து மக்களை நல்வழிப்படுத்தினார். இவரது உபதேசங்களும் செயல்பாடுகளும் இந்து மத வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

## இராமகிருஷ்ண பரமகம்சர் (கி.பி. 1836–1886)

இராமகிருஷ்ண பரமகம்சர் கி.பி. 1836ஆம் ஆண்டு மேற்கு வங்கத்திலுள்ள கமார்புகூர் எனும் கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை பெயர் குதிராம்; தாயார் பெயர் சந்திரமணி. இவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் கதாகர் சாட்டர்ஜி. இராமகிருஷ்ண பரமகம்சர் என்ற பெயர் பிற்காலத்தில் வந்தது. பள்ளிப்பருவத்திற்கு வளர்ந்தபின் அவர் பள்ளிக்கூடம் செல்ல மறுத்தார். இயற்கையை இரசிப்பதிலும், பக்திப் பாடல்கள் பாடுவதிலும், புராணக் கதைகள் கேட்பதிலும், நண்பர்களுடன் விளையாடுவதிலும் ஆர்வம் கொண்டார். சிறுவயதிலேயே ஆன்மிகத்தில் ஆழ்ந்த ஞானம் கொண்டவராக யிருந்தார். அவரது குடும்பத்தின் பொருளாதார நிலை மிகவும்

மோசமாயிருந்தது. அப்போது அவரது அண்ணன் ராம்குமார் கல்கத்தாவின் அருகாமையிலுள்ள தட்சிணேஸ்வரர் காளிகோவிலில் புரோகிதராக வேலை பார்த்து வந்தார். அவர் இறந்த பின்பு அந்தக் காளிகோவிலில் இராமகிருஷ்ணர் பூசாரியானார். அவர் அந்தக் கோவிலில் இருந்த கல்லினால் ஆன காளி விக்கிரகத்திற்குப் பூசை செய்து வரவே அவர் சிந்திக்கத் தொடங்கினார். தாம் கல்லைத்தான் பூசை செய்கிறோமா அல்லது உயிருள்ள இறைவனையா என்று சிந்தித்தார். தனக்குக் காட்சி அளிக்குமாறு காளியிடம் மனமுருகப் பிரார்த்தனை செய்தார். ஆனால் காட்சி கிடைக்கவில்லை. அவரது முயற்சிக்குப் பலனில்லை என்றுணர்ந்த அவர் ஒரு நாள் காளியின் கையிலிருந்த வாளை எடுத்துத் தம்மைத்தாமே கொல்ல முயற்சித்தார். அந்நிலையில் அவர் சுயநினைவு இழந்ததாகவும், ஒரு பேரானந்த ஒளி அவரை ஆட்கொண்டதாகவும் உணர்ந்தார். இந்நிகழ்வைப் பின்னர் அவரே கூறியிருக்கிறார்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு இராமகிருஷ்ணருடைய நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டது. அவருக்குப் பித்துப் பிடித்து விட்டது என்று எண்ணிய அவரது தாயார், அவருக்குத் திருமணம் நடத்தி வைக்கத் தீர்மானித்தார். அதன்படி அவர் சாரதாமணி என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். அனைத்துப் பெண்களையும் காளியின் வடிவங்களாகக் கண்டு கொண்டிருந்த இராமகிருஷ்ணருக்கு அவரது மனைவி சாரதாமணியும் காளியின் வடிவமாகவே தோன்றினாள். இவரைப் புரிந்துகொண்ட சாரதாமணி அம்மையார் இவரை உலக வாழ்க்கைக்கு இழுக்க விரும்பாமல், இவருக்குப் பணிவிடை செய்து இவருடைய முதல் சீடராக மாறினார். அவர் பின்னர் உலகறிய அன்னை சாரதாமணி தேவியாகத் திகழ்ந்தார்.

இராமகிருஷ்ணர் எல்லா மதங்களையும் மதித்தவர். இதற்கு எடுத்துக்காட்டாக அவர் கூறிய வார்த்தைகளில் சில இங்கே கொடுக்கப்படுகின்றன.

அவரவர் தத்தம் மதத்தின்படி கடவுளை உபாசித்தல் நலம். கிறித்தவ மக்கள் கிறித்தவ மார்க்கத்தையும், முகஸீம் மக்கள் முகம்மது நபி காட்டிய மார்க்கத்தையும், இந்துக்கள் முனிவர்களின் உபதேசங் களையும் அனுசரிப்பதே மேலானது. பக்தியோடு வழிபடும் மக்கள் எந்த மதத்தினராயினும் சரி, பிற மதத்தினரை மிக்க வினயத்துடன் கௌரவிப்பார்கள். எல்லாச் சமயங்களுமே நம்மைப் பரம்பொருளிடத்தில் சேர்ப்பிக்கும். எந்த மதத்தையும் எந்த முறையையும் தூய உள்ளத்துடனும் மாசற்ற பக்தியுடனும் பின்பற்றினால் போதும், ஆண்டவனை அடையலாம். எல்லாக் கொள்கைகளும் சிறந்தவையே. ஆகையால் அவற்றைக் குறை கூறாதீர்கள். ஆறுகள் வெவ்வேறு மலைகளில் தோன்றி வெவ்வேறு பாதைகளைப் பின்பற்றி வளைந்தோ,

நேராகவோ ஓடிக் கடைசியில் கடலில் கலக்கின்றன. அதேபோன்று வெவ்வேறு சமயக் கொள்கைகளைப் பின்பற்றி நடந்தாலும் இறுதியில் கடவுளை அடையலாம்.

சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ணர் பரமகம்சருடைய சீடர்களில் முக்கியமானவர். இவர்மூலம் இராமகிருஷ்ணருடைய கருத்துக்கள் உலகெங்கும் பரவின. இராமகிருஷ்ண பரமகம்சர் கி.பி. 1886ஆம் ஆண்டு தமது 50ஆவது வயதில் கடவுளிடம் சேர்ந்தார். இவருடைய பெயரில் "இராமகிருஷ்ண மிசன்" என்ற நிறுவனத்தைச் சுவாமி விவேகானந்தர் நிறுவினார். இது மக்களுக்குச் சேவை செய்து கொண்டிருக்கின்றது.

இராமகிருஷ்ண பரமகம்சர் சமயச்சொற்பொழிவுகள் நடத்த வில்லை. அவர் எந்நூலையும் எழுதவில்லை. சிறந்த சன்னியாசியாக வாழ்ந்து சீடர்களுக்குச் சீரிய உபதேசங்களை அருளினார். அவருடைய உபதேசங்களைச் சீடர்கள் எழுதிவைத்தனர். அவை நூல்களாக வந்து கொண்டிருக்கின்றன. இராமகிருஷ்ண பரமகம்சர் தமது உபதேசங்கள் வாயிலாகப் பலப் பல சீர்திருத்தக் கொள்கைகளை வெளிப்படுத்தினார். அவர் சமுதாயச் சமய சீர்திருத்தத்தில் புரட்சிகரமான மனப் பான்மையைக் கொண்டிருந்தார். சாதி வேறுபாடுகள் அறவே ஒழிய வேண்டுமென்று போதித்தார். கடவுள் ஒருவரே என்ற உண்மையை மக்கள் உணர வேண்டும். இந்து சமயத்தினரிடையே காணப்படும் எல்லா விதமான வேற்றுமைகளையும் அகற்றிச் சமத்துவம் நிலவும்படி செய்ய வேண்டும். பெண் அடிமை ஒழிந்து ஆணுக்குப் பெண் சமம் என்ற நிலையை ஏற்படுத்தவேண்டும். சர்வ சமயங்களிடையேயும் சமரசம் ஏற்படுத்திச் சமாதானமாக வாழப் பாடுபட வேண்டும் என்பன போன்ற உயர்ந்த எண்ணங்களைக் கொண்டிருந்தார் இராமகிருஷ்ண பரமகம்சர் அவர்கள். அவரது கொள்கைகள் இந்துக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தின. எனவே அவரது காலத்தில் இந்து மதம் மேலும் வளர்ந்தது.

## சுவாமி விவேகானந்தர் (கி.பி. 1863 – 1902)

சுவாமி விவேகானந்தர் கி.பி. 1863ஆம் வருடம் கல்கத்தாவிலுள்ள சிமுலியா என்னுமிடத்தில் பிறந்தார். இவரது தந்தை பெயர் விசுவநாத தத்தர்; தாயார் பெயர் புவனேசுவரி. இவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் நரேந்திரன். இராமகிருஷ்ண பரமகம்சரிடம் சென்று துறவியாகி விவேகானந்தர் என்ற நாமம் பூண்டார்.

நரேந்திரர் தமது ஆறாவது வயதில் ஈசுவர சந்திர வித்யாசாகர் கல்வி நிலையத்தில் சேர்ந்து ஆங்கில மொழியில் கல்வி கற்றார். அங்கு யாவரும் வியக்கும்வண்ணம் ஆங்கிலத்தில் புலமை பெற்றார்.

அதன்பின் ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. வரை படித்தார். கல்லூரியில் படிக்கும்போது தர்க்க சாத்திரம், தத்துவ சாத்திரம், சரித்திரப் பாடங்கள் முதலியவற்றைக் கற்றறிந்தார். வடமொழி மற்றும் ஆங்கிலத்தில் உள்ள பல வகை நூல்களை ஆராய்ந்து மெய்ப் பொருளை(கடவுளை)த் தேடினார். மெய்ப்பொருளை நேரில் கண்டவர்கள் உண்டா என்று அறிய அவர் பலரையும் தேடி அலைந்தார். இறுதியில் இராமகிருஷ்ண பரமகம்சரைச் சந்தித்தார். அவரிடம், நீங்கள் கடவுளைக் கண்டு இருக்கிறீர்களா? கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபிக்க இயலுமா? என்று கேட்டார். அதற்கு அவர் “கடவுளைத் தெள்ளத் தெளியக் காண்கிறேன், நான் உன்னைப் பார்ப்பதைவிட அவரை இன்னும் நன்றாகப் பார்க்கிறேன்” என்று பதில் கூறினார். இராமகிருஷ்ண பரமகம்சர் மீது அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டு அவருடன் ஆறு ஆண்டுகள் வாழ்ந்தார். அவருடைய உபதேசங்களைப் பெற்று அதன்வழி ‘ஞானம்’ பெற்றார். ஞானம் பெற்ற அவருக்கு இராமகிருஷ்ண பரமகம்சர் ‘விவேகானந்தர்’ என்ற பெயரைச் சூட்டினார். அதிலிருந்து அவர் ‘சுவாமி விவேகானந்தர்’ என்ற பெயரில் அறியப்படுகிறார்.

சுவாமி விவேகானந்தர் இமயம் முதல் கன்னியாகுமரி வரையுள்ள பல ஊர்களுக்குச் சென்று மக்களுக்கு உபதேசம் செய்தார். கன்னியாகுமரியில் அவர் கடலின் நடுவே உள்ள ஒரு பாறை மீது தியானத்தில் அமர்ந்தார். அந்தப் பாறை புனிதப் பாறையாகக் கருதப்பட்டு, அதன்மீது தற்போது சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த மண்டபத்திற்குத் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் சென்று, அங்கிருக்கின்ற சுவாமி விவேகானந்தர் சிலையை வணங்கி வருகின்றனர்.

சுவாமி விவேகானந்தர் ஓர் சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார். அவர் மத நல்லிணக்கத்தையும், மனிதநேயச் செயல் பாடுகளையும் மிகவும் விரும்பினார். அவர் 1873ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ நகரத்தில் நடைபெற்ற சர்வமத மகாசபைக் கூட்டத்தில் பேசும்போது மத நல்லிணக்கத்தை வலியுறுத்தினார். அப்போது அவர் பேசிய வார்த்தைகளில் சில இங்கே கொடுக்கப்படுகின்றன.

மத ஒருமைப்பாடு (மத நல்லிணக்கம்) ஏதாவது ஒரு மதத்தின் வெற்றியாலும், மற்ற மதங்களின் அழிவாலும் ஏற்படும் என்று இங்குள்ள யாரேனும் நம்பினால், அவரிடம் நான், சகோதரா, உனது நம்பிக்கை வீண் என்று சொல்லிக் கொள்கிறேன். கிறித்துவர் இந்துவாகிவிட வேண்டும் என்பது என் எண்ணமா? கடவுள் தடுப்பாராக! இல்லை, இந்துவோ பௌத்தரோ கிறித்துவராக வேண்டுமென எண்ணுகிறேன். கடவுள் தடுப்பார்ாக! விதை தரையில்

ஊன்றப்பட்டு மண்ணும் காற்றும் நீரும் அதைச் சுற்றிப் போடப் படுகின்றன. விதை மண்ணாகவோ; காற்றாகவோ; நீராகவோ ஆகிவிடுகிறதா இல்லை, அது செடியாகி, தனது வளர்ச்சி விதிக்கு ஏற்ப வளர்கிறது. காற்றையும் மண்ணையும், நீரையும் தனதாக்கிக் கொண்டு, தனக்கு வேண்டிய சத்துப்பொருளாக மாற்றி ஒரு செடியாக வளர்கிறது. மதத்தின் நிலையும் இதுவே. கிறித்துவர் இந்துவாகவோ பௌத்தராகவோ மாற வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் மற்ற மதங்களின் நல்ல அம்சங்களைத் தமதாக்கிக் கொண்டு தம் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொண்டு, தம் வளர்ச்சி விதியின்படி வளரவேண்டும். இந்தச் சர்வசமயப் பேரவை உலகத்திற்கு எதையாவது எடுத்துக்காட்டியுள்ளது என்றால், அது இது தான்: புனிதம், தூய்மை, கருணை இவை உலகின் எந்த ஒரு பிரிவிடையவும் தனிச் சொத்து அல்ல என்பதையும், மிகச் சிறந்த ஒவ்வொரு சமயப்பிரிவும் பண்புள்ள ஆண்களையும் பெண்களையும் தோற்றுவித்து இருக்கிறது என்பதையும் நிரூபித்துள்ளது. இந்தச் சாட்சியங்களுக்கு முன்பு தம் மதம் மட்டும்தான் தனித்து வாழும். மற்ற மதங்கள் அழிந்துவிடும் என்று யாராவது கனவு காணப் பார்ப்பார்களேயானால் அவர்களைக் குறித்து நான் என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பச்சாதாபப்படுவதுடன், இனி ஒவ்வொரு மதத்தின் கொடியிலும் உதவி செய், சண்டை போடாதே, ஒன்றுபடுத்து, அழிக்காதே, சமரசமும் சாந்தமும் வேண்டும், வேறுபாடு வேண்டும் என்று எழுதப்படும் என்று அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிக்காக்கோ சர்வமத மகாசபைக் கூட்டம் பதினேழு நாள்களாக நடைபெற்றது. உலகின் பல நாடுகளிலிருந்தும் பல மதங்களினுடைய பிரதிநிதிகள் அந்தக் கூட்டத்தில் உரையாற்ற வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் சுவாமி விவேகானந்தர் ஆறுமுறை உரை நிகழ்த்தினார். வந்திருந்த சொற்பொழிவாளர்களில் அவர் மட்டுமே ஆறுமுறை, அதாவது அதிக நேரம் சொற்பொழிவாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் உலகச் சகோதரத்துவத்தை மதிக்கும் வகையில் நாம் வளர வேண்டும் என்ற முறையில் சொற்பொழிவின் தொடக்கத்தில் “சகோதர சகோதரிகளே” என்று குறிப்பிட்டுப் பேசிய ஒரே சொற்பொழிவாளரும் சுவாமி விவேகானந்தர் மட்டும்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. விவேகானந்தரின் புகழ் உலகம் முழுதும் பரவியது.

சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தினுடைய பெருமைகளைச் சிக்காக்கோ சர்வமத மகாசபைக் கூட்டத்திலும், அதற்குப் பின் பல நாடுகளிலும் ஆற்றிய சொற்பொழிவுகள் மூலமும் எடுத்துரைத்தார். இவ்வாறு இந்து மதத்தினுடைய வளர்ச்சிக்கும், உலகச் சகோதரத் துவத்திற்கும், சமாதானத்திற்கும் பாடுபட்ட சுவாமி விவேகானந்தர் 1902ஆம் ஆண்டு தமது 40ஆவது வயதில் முக்தியடைந்தார்.

வறுமை, அறியாமை இந்த இரண்டின் பிடியில் சிக்கி இந்திய மக்கள் திணறிக் கொண்டிருந்தார்கள். எனவே இவற்றின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்காமல் வேதாந்த உண்மைகளைப் போதிப்பதில் எந்தப் பயனும் இல்லை என்பதை உணர்ந்தார் சுவாமி விவேகானந்தர். வறுமையை ஒழிக்கச் செல்வம் வேண்டும். அதற்காக அவர் செல்வம் ஈட்டப் பாடுபட்டார். நான்கு வருடங்கள் வெளிநாடுகளில் வேதாந்தம் என்னும் அருட்செல்வத்தை அளித்து, பொருட்செல்வம் பெற்று வந்து தமது இலட்சியத்தை நிறைவேற்றத் தமது குரு இராமகிருஷ்ண பரமகம்சருடைய பெயரில் “இராமகிருஷ்ண மிசன்” என்ற இயக்கத்தைத் தொடங்கினார். இந்த இயக்கமானது மக்களின் வறுமையைப் போக்கவும், அறியாமையை நீக்கவும், ஆன்மிக ஞானத்தை அளிக்கவும் சுவாமி விவேகானந்தர் பாதையில் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு இந்து மதத்தின் வளர்ச்சிக்காகச் சுவாமி விவேகானந்தர் அரும்பாடுபட்டார்.

### வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் (கி.பி. 1823–1874)

வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் கி.பி. 1823ஆம் ஆண்டு தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் தாலுகாவில் உள்ள மருதூர் கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை பெயர் இராமையா பிள்ளை. தாயார் பெயர் சின்னம்மாள். இவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் இராமலிங்கம். இவர் வளர்ந்த பின்பு இவரது செயல்பாடுகளைப் பாராட்டி மக்கள் இவரை வள்ளலார் சுவாமிகள் என்று அழைத்தனர். அதனால் இவர் வள்ளலார் சுவாமிகள் என்ற பெயரில் அறியப் படுகிறார்.

இராமலிங்கம் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடம் இலக்கிய இலக்கணங்களைப் பயின்றார். பின்பு அவர் ஓர் ஆசிரியராகப் பணியாற்றினார். அவர் திருஞானசம்பந்தரை மானசிகக் குருவாகக் கொண்டார். திருமூலரின் “திருமந்திரம்” என்னும் நூலின்மீது நல்ல ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் இல்லற வாழ்க்கையை விரும்பவில்லை. இருப்பினும் சுற்றத்தார் வற்புறுத்தித் தனம்மாள் என்பவரை மணம் செய்வித்தனர். திருமணம் நடந்தாலும் இராமலிங்கம் மனப்பூர்வமான இல்லற வாழ்க்கையில் ஈடுபடவில்லை.

வீட்டில் தன்னுடைய அறையில் ஒரு கண்ணாடி முன் அமர்ந்து தியானம் செய்து வந்தார். ஒரு நாள் தியானத்தில் இருக்கும் போது அந்தக் கண்ணாடியில் முருகப்பெருமான் காட்சி கொடுத்திருக்கிறார். அதன்பின் இராமலிங்க சுவாமிகளுடைய செய்கைகளில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. அவர் தூய வெள்ளைத்

துணியால் மறைத்துக் கொண்டார். தமது முப்பத்தி ஐந்தாம் வயதில் பல கோவில்களுக்குச் சென்று வழிபட்டுவிட்டுச் சிதம்பரமாகிய தில்லையைச் சென்றடைந்தார். இப்படி பல கோவில்களுக்கும் சென்று வழிபட்டு வந்த அவர் இறுதியில் "அருட்பெருஞ்ஜோதி" என்ற தாரக மந்திரத்தின்மூலம் கடவுளைச் சோதி வடிவில் கண்டார். கடவுளை அடைய அருள் வேண்டும். இவ்வருள் அன்பினாலல்லாது வேறு வகையால் வராது. அன்பு வர வேண்டுமானால் ஜீவகாருண்யம் வேண்டும். அந்நிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாமல் நடத்தலே ஜீவகாருண்யம். கடவுளின் அருளைப் பெறுவதற்கான வழிவகைகளை அவர் தொகுத்தார். அந்தத் தொகுப்புக்கு அவர் தந்த பெயர் "சமரச சுத்த சன்மார்க்கம்". உயிர்களுக்குச் செய்யும் தொண்டே மனிதனை மேலோங்கச் செய்யும். மற்றவை ஒன்றும் பலன் தரா என்று உபதேசித்தார். பசியினால் இளைத்தோரைக் கண்டு மனம் இரங்கினார். வாடிய பயிரைக் கண்டு வாடினார். இரக்கமே என் உயிர் என்றார். நோயினால் அவதியுறும் மக்களைக் கண்டு வருந்தினார். அவர்களுக்கெல்லாம் தன்னாலும், தன் நண்பர்களாலும் முடிந்த அளவு உதவிகளைச் செய்தார். அவர் வள்ளலார் சுவாமிகள் என்று அழைக்கப்பட்டார். 1867ஆம் ஆண்டு வடலூரில் ஏழைகளுக்கு உணவளிக்கச் "சத்திய தருமசாலையை" நிறுவினார். அந்தத் தருமசாலை அன்று முதல் இன்று வரை ஏழைகளுக்கு உணவு வழங்கிக் கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட மனிதநேயச் செம்மல், கருணைக்கடல் வள்ளலார் சுவாமிகள் தமது 51ஆவது வயதில் கி.பி. 1874ஆம் ஆண்டு சித்தி பெற்றார்.

கடவுளின் பெயரால் உயிர்ப் பலியிடும் பழக்கவழக்கங்களையும், மூடநம்பிக்கைகளையும் வள்ளலார் சுவாமிகள் அடியோடு ஒழித்தார். உயிர்கள் அனைத்தையும் சமமாகக் கருதி அவற்றிடம் காருண்யம் காட்டத்தக்க சீவகாருண்ய ஒழுக்கத்தை மக்களுக்குப் போதித்தார். கடவுளை விக்கிரக வடிவில் வழிபடாமல் சோதி வடிவில் வழிபடுவது சிறந்தது என்று மக்களிடம் கூறி அவர்களைச் சிந்திக்க வைத்தார். வள்ளலார் சுவாமிகளுடைய கொள்கைகளை ஏராளமான மக்கள் பின்பற்றினார்கள். அதனால் இந்துக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு, இந்துமதம் மேலும் வளர்ந்தது.

## நாராயணகுரு (கி.பி. 1854–1928)

நாராயணகுரு கேரள மாநிலம், திருவனந்தபுரத்திற்கு வடக்கேயுள்ள செம்பழுந்தி என்னும் ஊரில் கி.பி. 1854ஆம் ஆண்டு பிறந்தார். அவரது தந்தை பெயர் மாடன் ஆசான். தாயார் பெயர் குட்டி அம்மை. நாராயணகுருவின் இயற்பெயர் நாராயணன். அவர் ஓர் அவதாரபுருசனாகக் கருதப்பட்டு, "குருதேவர்" என்றும்

அழைக்கப்படுகிறார். குருதேவர் பெயரிலுள்ள 'குரு' அவரது பெயரின் கடைசியில் சேர்ந்து நாராயண குரு என்ற பெயரில் அறியப்படுகிறார்.

பெற்றோர் அவரைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தனர். அங்கு அவர் மலையாளம், சமஸ்கிருதம் ஆகியவற்றை நன்குக் கற்றறிந்தார். அவருக்குத் தமிழும் தெரியும். பள்ளிப்படிப்பிற்குபின் கல்லூரிக்குச் செல்லவில்லை. சிறுவயதிலிருந்தே அவர் ஆன்மிகப் பாதையில் சென்று கொண்டிருந்தார். எனவே அவருக்குத் திருமணத்தில் நாட்டம் செல்லவில்லை. இருப்பினும் பெற்றோர் அவருக்குத் திருமண ஏற்பாடுகளைச் செய்தனர். இதையறிந்த அவர் திருமண நிச்சயதார்த்த நாளுக்கு முந்தின நாள் இரவு யாருக்கும் தெரியாமல் ஊரைவிட்டுப் புறப்பட்டு அகத்தியகூடம் மலைக்குச் சென்றார். அங்கிருந்து அவர் நாகர்கூடம் மலைக்குச் சென்றார். அங்கிருந்து அவர் நாகர்கோவிலிலுள்ள கோட்டாறு வந்தார். அங்கே சில நாள்கள் தங்கினார். அதன்பின் நெய்யாற்றின் கரைக்குச் சென்றார். அப்போது தமது தாயார் நோய்வாய்ப்பட்டிருக்கும் விவரத்தை அறிந்தார். உடனே அவர் வீட்டிற்குச் சென்று தாயாரைப் பார்த்து ஆறுதல் கூறி அவருக்குப் பணிவிடை செய்தார். சிகிச்சை பயனின்றித் தாயார் இறந்துவிட்டதால் தாயாருக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளை செய்துவிட்டு ஊரைவிட்டுப் புறப்பட்டார். அதன்பின் அவர் வேனிமலைக்கு வந்தார். அதன்பின் முட்டக்காடு குன்னம்பாறைக் குகையிலும், அருவிப்புறத்திலும் தவநிட்டையில் இருந்தார். அப்போது அவர் தந்தை இறந்துவிட்ட செய்தி வந்தது.

கி.பி. 1882இல் நாராயணகுரு கன்னியாகுமரிக்கு வடக்கேயுள்ள மருத்துவா மலையில் பிள்ளைத்தடம் என்ற இடத்திலுள்ள குகையில் தவநிட்டையில் இருந்தார். அப்போது அவருக்குப் பல சித்திகள் கிடைத்தன. பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டுக் கேரளாவிற்கும் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் பிரயாணம் செய்தார். மக்களுக்குப் பல உபதேசங்களையும் கொடுத்தார். "ஒரே சாதி, ஒரே மதம், ஒரே தெய்வம்" என்பது அவரது கொள்கை. பல சமூகச் சேவைகளையும், சீர்திருத்தங்களையும் செய்த அவர் இறுதியில் 1928–ஆம் ஆண்டு, தமது 74ஆவது வயதில், கேரளாவிலுள்ள சிவகிரியில் சமாதி ஆனார்.

நாராயணகுரு இந்து மதத்தில் பல சீர்திருத்தங்களையும் செய்தார். அன்றைய காலத்தில் இந்துமதத்தைச் சார்ந்த மக்கள் அவர்ணர்கள் (கீழ்ச் சாதியினர்) எனவும், சவர்ணர்கள் (மேல் சாதியினர்) எனவும் இரண்டு பகுதிகளாகப் பிரிந்து வாழ்ந்தனர். அவர்ணர்கள் வேத சாத்திரங்களைப் பயிலக்கூடாது என்ற தடை இருந்தது. மேலும் அவர்கள் கோவில்கள் கட்டி வழிபடுதல் கூடாது எனவும் விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யக்கூடாது எனவும் பூசைகள்

செய்யக்கூடாது எனவும் தடைவிதிக்கப்பட்டிருந்தனர். இவற்றை யெல்லாம் சவர்ணர்கள் மட்டுமே செய்யக் கடமைப்பட்டவர்கள். சமூக வாழ்வில் நிலவுகின்ற இத்தகைய கொடூரமான நிலையை அகற்ற வேண்டுமென்று நாராயணகுரு உறுதிபூண்டார். எனவே அவர் தனிப்பட்டவர்களிடமும், சமூகத்தினரிடமும் கலந்துபேசி அவர்களைத் தம்பால் ஈர்த்தார். அவர் நினைத்ததுபோல் சவர்ண அடக்கு முறையைத் தகர்த்துத் தரைமட்டமாக்கும் திட்டத்தைத் தீட்டினார். அதன் முதல் கட்டமாகக் கோவில்கள் கட்டி அவற்றில் தேவபிரதிட்டை செய்யத் தீர்மானித்தார்.

திருவனந்தபுரத்திற்குக் கிழக்கிலுள்ள அருவிப்புறம் என்னும் இடத்தில் நாராயணகுரு முதன்முதலாகத் தமது நம்பிக்கைக்குரிய பக்தர்களின் துணையுடன் ஒரு கோவில் கட்டி அதில் மூலவராக ஈசுவரனை இலிங்க வடிவில் பிரதிட்டை செய்தார். அவர்ணர்கள் என்றும், கீழ்ச் சாதியினர் என்றும் கூறப்பட்டு வந்த அரிசனங்கள் (கடவுளின் பிள்ளைகள் என்று காந்தியடிகளால் பெயர் சூட்டப்பட்டவர்கள்) அந்தக் கோவிலுக்குச் சென்று மனமாறக் கடவுளை வணங்கினார்கள். கோவிலின் முன்புற வாசலில் "சாதி வேற்றுமை, மத துவேசமின்றி அனைவரும் சகோதரர்களாக வாழும் முன்மாதிரி ஸ்தாபனம் இதுவாகும்" என்று மலையாள மொழியில் எழுதி வைத்தார் நாராயண குரு. இது அவரது முதல் வெற்றியாகும். அதன்பிறகு கேரளாவின் தெற்கு முதல் வடக்கு வரை ஏராளமான கோவில்கள் பக்த பெருமக்களால் கட்டப்பட்டு அவற்றில் அவர்களின் விருப்பத்திற்கேற்பத் தேவபிரதிட்டைகள் நாராயணகுரு அவர்களால் செய்யப்பட்டன. மேலும், சமூக அமைப்பில் பெரும்மாற்றங்களைச் செய்தார் நாராயணகுரு.

சவர்ணர்கள் உயர்ந்தவர் என்று கருதப்பட்டதால் அவர்ணர்கள் அவர்களோடு பள்ளியில் சென்று படிக்கத் தடை இருந்தது. எனவே அவர்ணர்களுக்காகப் பல கல்விக்கூடங்களை நிறுவினார் நாராயணகுரு. அங்கே அவர்ணர்கள் சுதந்திர உரிமையோடு கல்வி அறிவு பெற்றார்கள்.

நாராயணகுரு மக்களிடம் நீங்கள் அனைவரும் தியாக உணர்வுடையவர்களாகயிருக்க வேண்டுமென்றும், ஒவ்வொருவரும் சகோதர உணர்வோடும் பழக வேண்டுமென்றும், அன்பும் பற்றும் கொண்டு வாழவேண்டுமென்றும், ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டுமென்றும், ஆன்மிக விழிப்புணர்வு பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நாராயணகுரு பல போராட்டங்களை நடத்தினார். அவற்றில் ஒன்று "வைக்கம்

போராட்டம்". வைக்கம் போராட்டம் குறித்துச் சுருக்கமாக இங்குத் தரப்படுகின்றது.

கேரளாவில் வைக்கம் என்னுமிடத்தில் உள்ள சிவன் கோவிலைச் சுற்றியுள்ள சாலையில் செல்வதற்கு ஈழவ சமுதாயத்தினர் சவர்ணர்களால் (மேல்சாதியினரால்) அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்ட காலம் அது. சவர்ணர்களுடன் சேர்ந்து அரசாங்கமும் அந்தச் சாலை வழியாக ஈழவர்கள் செல்லத் தடை விதித்திருந்தது. இந்தத் தடையை நீக்கியாக வேண்டுமென்று நாராயணகுரு உறுதிபூண்டார். அதன்படி அவர் தடையை நீக்கக்கேட்டுப் போராட்டத்தில் இறங்கினார். பொது மக்களிடமிருந்து வசூல் செய்த வரிப்பணத்தினால் உருவாக்கப்பட்ட சாலைகளில் நடந்து செல்வதற்கு எல்லாப் பிரிவு மக்களுக்கும் உரிமை உண்டு என்ற நியாயத்தின் அடிப்படையில் போராட்ட வீரர்கள் தீவிரமாகப் போராடினர். இந்தப் போராட்டத்தின்போது நம்முடைய தேசபிதா மகாத்மா காந்தி அவர்களும், பகுத்தறிவுத் தந்தை ஈ.வெ.ரா. பெரியார் அவர்களும், பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் அவர்களும் அங்குச் சென்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இறுதியில் போராட்டம் பெரும் வெற்றியைப் பெற்றது. அரசாங்கம் தடையைத் திரும்பப் பெற்றது.

நாராயணகுருவினுடைய நல்லாசியும், மகாத்மா காந்தியினுடைய முன்னிலையும், ஈ.வெ.ரா. பெரியார், தோழர் ப. ஜீவானந்தம் ஆகியோர்களுடைய ஒத்துழைப்பும் இந்த வைக்கம் போராட்டத்தை (இத்தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தை) வெற்றி பெறச் செய்தன.

தமக்கென்று எதுவுமே இல்லாமல் மக்களின் நன்மைக் காகவே, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மைக்காகவே வாழ்ந்த உத்தமர் நாராயணகுருவின் சீர்திருத்தப்பணிகளால் இந்துமதம் மேலும் வளர்ந்துள்ளது.

## அய்யா வைகுண்டர் சுவாமி (கி.பி. 1809–1851)

இந்துக்களில் ஒரு பிரிவினர் "அய்யாவழி" எனும் ஒரு தனி மார்க்கத்தைப் பின்பற்றிக் கடவுளை வழிபடுகின்றனர். இந்த மார்க்கத்தின் தலைமையிடம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அகத்தீசுவரம் தாலுகாவிலுள்ள சுவாமித்தோப்பு என்னும் இடமாகும். இன்று கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமின்றி, வெளிமாவட்டங்களிலும், வெளி மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் அய்யா வழியினர் இருக்கின்றனர். இன்று பலர் அய்யா வழியைப் பின்பற்றி வருகின்றனர். அய்யா வழியைத் தோற்றுவித்தவர் அய்யா வைகுண்டர் சுவாமி ஆவார்.

அய்யா வைகுண்டர் கி.பி. 1809ஆம் ஆண்டு தென் திருவிதாங்கூரில் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பூவண்டர் தோப்பில் (இன்றைய சுவாமித் தோப்பில்) பிறந்தார். இவரது தந்தை பெயர் பொன்னு; தாயார் பெயர் வெயிலாள். இவர் நாராயணருடைய (மகாவிஷ்ணுவினுடைய) அவதார புருசன் என்று கூறப்படுகிறது.

அய்யா வைகுண்டர் காலத்தில் தென்திருவிதாங்கூர் மக்களில் தாழ்த்தப்பட்டவர்களின் நிலைமை மிகவும் மோசமாகவே இருந்தது. அப்போது மன்னராட்சி நடந்து கொண்டிருந்தது. சாதிக் கொடுமையையும், தீண்டாமையும் இங்கு இருந்ததுபோல் வேறு எங்குமே இருந்ததில்லையென்று கூறப்படுகிறது. தாழ்த்தப்பட்ட சமூகத்திலுள்ள பெண்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருந்திருக்கிறது. மேலாடை அணியக்கூட அப்போது அவர்களுக்கு உரிமை இல்லை. அன்றைய தாழ்த்தப்பட்ட சமுதாயங்களில் நாடார் சமுதாயமும் ஒன்று. தாங்களை மேல் சாதியினர் என்று கூறிக் கொண்ட சில நாடார் சமுதாயத்தில் அய்யா வைகுண்டர் சுவாமி அவதரித்தார்.

அய்யா வைகுண்டர் பிறந்தபோது, மிகவும் பொலிவுள்ள ஒரு குழந்தையாகக் காட்சியளித்தார். அவருக்குப் பெற்றோர்களும் ஊர்மக்களும் சேர்ந்து "முடிசூடும் பெருமாள்" என்று பெயர் சூட்டினர். முடிசூடும் பெருமாள் என்ற பெயர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலுள்ள ஒருவருக்குச் சூட்டப்பட்டிருக்கும் விவரம் அன்றைய திருவிதாங்கூர் அரசர் காதுகளுக்கு எட்டியது. அரசர், அந்தக் குழந்தைக்கு முடிசூடும் பெருமாள் என்று பெயர் வைக்கக் கூடாதென்றும், அதற்குப் பதிலாக 'முத்துக்குட்டி' என்று பெயர் வைத்துக் கொள்ளவேண்டுமென்றும் கட்டளையிட்டார். அவ்வாறு அய்யா வைகுண்டரின் பால்யப் பெயர் முத்துக்குட்டி என்றாயிற்று.

முத்துக்குட்டி அன்றைய திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குச் (குருவின் வீட்டுத் திண்ணையிலுள்ள பள்ளி) சென்று பல சாத்திரங் களையும் கற்றார். அதன்பின் அவரது அறிவுக்கூர்மையால் சிந்திக்கத் தொடங்கினார். மனித சமுதாயம் என்பது ஒன்றுதானே. இதில் சாதியின் பெயரால் ஏற்றத்தாழ்வுகள் உருவாகக் காரணம் என்ன? ஆண் பெண் என்று இருசாதியினர் மட்டுமே உள்ளனர். இங்குப் பல சாதிகளாக மக்களைப் பாகுபடுத்தும் நிலை உருவாகக் காரணம் என்ன? வலியவர் எளியவரைத் துன்புறுத்தும்போது எளியவர்கள் நிலைதடுமாறுகிறார்களே. இவர்களுக்கு உதவ ஒருவருமில்லையே. பெண்கள் தெய்வமாகப் போற்றப்படுவதை விட்டுவிட்டுச் சிறுமைப் படுத்தப்படுகிறார்களே என்று பலவாறான மனிதநேயச் சிந்தனைகள்

மனத்தில் உதித்தன. இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று எண்ணினார்.

இந்நிலையில் அவர் ஒருவிதக் கொடிய நோயால் பாதிக்கப்பட்டார். அவரது தாயார் கண்ட ஒரு கனவில் மகாவிஷ்ணு சோதி வடிவமாய்த் தோன்றி "மாசி மாதம் நடக்கும் திருச்செந்தூர் திருவிழாவிற்கு உன் மகனை அழைத்து வா, நோய் தீரும்" என்று கூறிவிட்டு மறைந்தார். அதன்படி உற்றார் உறவினர்களின் உதவியுடன் முத்துக்குட்டியை ஒரு பெரிய தொட்டிலில் இருக்க வைத்துப் பூவண்டர் தோப்பிலிருந்து திருச்செந்தூருக்குச் சுமந்து சென்றார்கள். இடைவழியில் சிறிது நேரம் ஓய்வெடுத்தனர். அப்போது மகனின் துன்பத்தைக் கண்டு பொறுக்காதவராக வெயிலாள் அழுதுகொண்டிருந்தார். அப்போது முத்துக்குட்டி தாமாகவே எழுந்து நடக்கத் தொடங்கினார். எல்லோருக்கும் முன்னே அவர் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தார். மற்றவர்களெல்லாம் அவரைப் பின் தொடர்ந்தனர். வேகமாக நடந்து திருச்செந்தூர் கடற்கரையில் சென்று சேர்ந்தனர். அவர்கள் அவசர அவசரமாகக் கடலில் குளித்துவிட்டுக் கோவிலில் தரிசனத்திற்குச் சென்றனர். ஆனால் குளிக்கச் சென்ற முத்துக்குட்டி கரைக்கு வரவில்லை.

கடலுக்குள் சென்ற தன் மகன் முத்துக்குட்டியைக் காணாததால் தாய் கதறி அழுதுகொண்டிருந்தார். இதற்கிடையில் கோவிலில் தரிசனத்திற்குச் சென்ற உற்றார் உறவினர் அங்கு முத்துக்குட்டியையும் தாயாரையும் காணாததால் அங்கிருந்து அவசர அவசரமாகக் கடற்கரைக்கு வந்தார்கள். அவர்கள் முத்துக் குட்டியின் தாயாரிடம் கேட்டு விவரத்தைத் தெரிந்து கொண்டனர். முத்துக்குட்டியைத் தேடினர். ஆனால் முத்துக்குட்டியைக் காணவில்லை. இரண்டு நாள்கள் கடற்கரையிலேயே காத்திருந்தனர். முத்துக்குட்டியின் தாயார் வெயிலாளையும் அழைத்துக்கொண்டு ஊர் திரும்பத் தீர்மானித்தனர். ஆனால் வெயிலாள் தன் மகன் கடலிலிருந்து வருவான் என்ற நம்பிக்கையில் இருந்தார். ஊருக்குச் செல்லவில்லை. மற்றவர் களெல்லாம் ஊருக்குத் திரும்பினர். இந்நிலையில் மூன்று நாள்கள் கழித்து 4-3-1832 அன்று காலையில் முத்துக்குட்டி நாராயணரிடமிருந்து (மகாவிஷ்ணுவிடமிருந்து) தீட்சை பெற்று "அய்யா வைகுண்ட சுவாமி"யாகக் கரைக்கு வந்தார். நரேந்திரர் இராமகிருஷ்ண பரமகம்சரிடமிருந்து தீட்சை பெற்றபின் "சுவாமி விவேகானந்தர்" என்ற பெயரில் அறியப்பட்டதுபோல் முத்துக்குட்டி நாராயணரிடமிருந்து தீட்சை பெற்றபின் "அய்யா வைகுண்டர் சுவாமி" என்ற பெயரில் அறியப்பட்டார். முத்துக்குட்டி "அய்யா வைகுண்டர் சுவாமி" ஆன நாளான மார்ச்சு மாதம் 4ஆம் தேதியை அய்யா வைகுண்டர் சுவாமியுடைய அவதார தினமாக அய்யா வழியினர் கொண்டாடி வருகின்றனர்.

அய்யா வைகுண்டர் சுவாமியும் தாயாரும் திருச்செந்தூரிலிருந்து பூவண்டர்தோப்புக்குத் திரும்பினார்கள். பூவண்டர்தோப்புக்கு வந்த அய்யா வைகுண்டர் சுவாமி அங்கு ஒரு தவச்சாலை அமைத்துத் தவமிருந்தார். பூவண்டர் தோப்பு என்ற ஊர்ப்பெயர், சுவாமி தவமிருந்ததால் "சுவாமித் தோப்பு" எனப் பெயர் பெற்றது. சுவாமித் தோப்பில் இருந்த அய்யா வைகுண்டர் சுவாமி நோயால் வருந்திய மக்களுக்கும், வறுமையில் வாடிய மக்களுக்கும், தீண்டாமை எனும் இனவெறியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அருள்பாலித்தார். அவர்களெல்லாம் மனநிம்மதியுடன் வாழ்ந்தனர். அய்யா வைகுண்டர் சுவாமி அவர்களுடைய அருள்பாலிப்புச் செய்தி எங்கும் பரவியது. சாதி சமயப் பேதங்களைக் கடந்து ஏராளமான மக்கள் சுவாமித் தோப்புக்கு வந்து அய்யா வைகுண்டர் சுவாமிக்குப் பணிவிடை செய்தார்கள். இந்தச் செய்தி திருவிதாங்கூர் மன்னருக்கு எட்டியது. மேலும் நாராயணருடைய அவதாரபுருசன் என்று மக்கள் முத்துக் குட்டியைக் கூறுகின்றனர் என்றும், மக்கள் அவரை அய்யா வைகுண்டர் சுவாமி என்று அழைக்கின்றனர் என்றும் மன்னரிடம் மேல்சாதியினர் தெரிவித்தனர். இதைக் கேட்ட மன்னர் சினம் கொண்டார். "தாழ்ந்த குலமான சாணார் குலத்திலா கடவுள் அவதரிப்பார், எல்லாமே பொய்" என்று கூறி மன்னர் சாடினார். பிறகு அய்யா வைகுண்டர் சுவாமி அவர்களைச் சிறைப்பிடிக்க மன்னர் கட்டளையிட்டார்.

மன்னரின் கட்டளைப்படி படைகள் சுவாமித்தோப்பிற்கு விரைந்தன. அய்யா வைகுண்டர் சுவாமி கைது செய்யப்பட்டார். திருவிதாங்கூர் தலைநகரான அனந்தபுரத்திற்குக் (தற்போதைய திருவனந்தபுரம்) கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரைப் பல வகையிலும் கொடுமைப்படுத்தினர். அவருக்குச் சாராயத்தில் நஞ்சைக் கலந்து விருந்தெனக் கொடுத்தனர். அவரைச் சுண்ணாம்புக் காளவாயில் நிற்க வைத்து உடம்பைச் சுற்றிச் சுண்ணாம்பு நிரப்பி நீற்றினார்கள். விறகுகளை அடுக்கித் தீயிட்டு நெருப்பாக்கி அந்த நெருப்பிலேயே நடந்து வரச் செய்தார்கள். இவற்றால் அய்யா வைகுண்டர் சுவாமி அவர்களுக்கு எவ்விதத் தீங்கோ மாற்றமோ ஏற்படவில்லை. இறுதியாக ஒரு நாட்டுப்புலியைக் கூண்டில் பிடித்து வந்து, மூன்று நாள்கள் அதைப் பட்டினி போட்டு, அந்தப் புலிக் கூண்டிற்குள் புலிக்கு இரையாக்க அய்யாவைத் தள்ளினார்கள். ஆனால் அந்தப் புலியோ அய்யா முன்வந்து அவரை வணங்கி நின்றது. அதன்பின் அய்யா அவர்களின் கால்களை அந்தப் புலி நக்கியது. இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மன்னனும், மன்னனின் படை வீரர்களும் இவர் சாதாரண மனிதன் அன்று, இவர் ஓர் அவதாரபுருசன்தாம் என்பதை உணர்ந்தனர். உடனே அவரை விடுதலை செய்தனர்.

அய்யா வைகுண்டர் சுவாமி அனந்தபுரத்திலிருந்து சாமித் தோப்பிற்குத் திரும்பினார். சாமித்தோப்பில் மக்களுக்குத் தவப் பயிற்சியை அளித்தார். அத்துடன் மக்களுக்கு நல்ல உபதேசங்களையும் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர்கள் தமது 42ஆவது வயதில், 1851ஆம் வருடம் மண்ணுலக வாழ்வில் பூரண நிலையை எய்தினார்.

அய்யா வைகுண்டர் சுவாமி பல சீர்திருத்தங்களைச் செய்தார். கடவுளுக்கென்று ஆடு, கோழி முதலானவற்றைப் பலியிடும் வழக்கத்தைத் தடுத்து நிறுத்தினார். பூவண்டர் தோப்பிற்குப் பக்கத்து ஊரான தாமரைக் குளத்தில் இருந்த அம்மன்கோவில் கொடை விழாவில் ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிட்டு வந்ததை அறிந்த அய்யா வைகுண்டர் சுவாமி அங்குச் சென்று அங்குள்ள ஊர்த் தலைவர் இராமகிருஷ்ணன் நாடார் என்பவரைச் சந்தித்து அவருடைய உதவியுடன் அந்தக் கோவிலில் உயிர்ப் பலியிடும் வழக்கத்தை நிறுத்தினார். அதன் பின் மற்ற பல ஊர்களிலும் சென்று கோவில்களின் கடவுளர்க்கென்று உயிர்ப் பலியிடுவதை நிறுத்தினார். இவற்றைக் கேள்விப்பட்ட பல ஊர்களிலும் கடவுளுக்கென்று உயிர்ப் பலியிடும் பழக்கம் நின்றுவிட்டது.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலுள்ள ஆண்கள் முழுங்காலுக்குக் கீழ் வேட்டி கட்டக்கூடாது, அங்கவஸ்திரம் அணியக் கூடாது என்ற நிலை இருந்துவந்த அந்தக் காலத்தில் தலைப்பாகை அணிந்துதான் இறைவழிபாடு செய்ய வேண்டுமென்றும் பெண்கள் தோள் சீலை அச்சமின்றி அணியவேண்டும் என்றும் கூறி அதுபோல் செய்வித்தார். சாதிக்கொரு கிணறு என்றிருந்த அக்காலத்தில் எல்லோரும் ஒரே கிணற்று நீரைக் குடிக்கவும், குளிக்கவும் ஏற்பாடு செய்தார். "தர்மம் கொடுக்கிற பேர்கள் உண்டு. வாங்குகிற பேர்கள் இல்லை என்ற காலத்தை நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஏற்படுத்தினால் அதுவே தர்மயுகம் ஆகும்" என்று மக்களுக்கு உபதேசித்தார்.

அய்யா வைகுண்டர் சுவாமி அவர்கள் "உங்களுக்குத் தெரிந்த மொழியில் கடவுளைப் போற்றி நீங்களே கடவுளுக்குப் பணிவிடை செய்யுங்கள்" என்று கூறினார். அவருடைய உபதேசங்களாலும், அருள் பாலிப்புகளாலும், வழிபாட்டு வழிகாட்டல்களாலும், இந்து மதத்தில் 'அய்யாவழி' என்ற ஒரு புதிய மார்க்கம் தோன்றி வளர்ந்து கொண்டே இருக்கிறது. இதனால் இந்துமதம் வளர்ச்சியடைந்துள்ளது.

## இந்துமதத்தில் கடவுள் பற்றிய கருத்து

கடவுள் சத், சித், ஆனந்தமயமாக உள்ளார். சத் என்றால் அழிவற்றவர், அதாவது நிலையாக என்றும் உள்ளவர். சித் என்றால் பேரறிவு, அதாவது பேரறிவுடையவர். ஆனந்தம் என்றால் பேரின்பம்,

அதாவது பேரின்பமயமாயிருப்பவர். இதனைச் சைவ சித்தாந்தத்தில் 'சச்சிதானந்தம்' என்று கூறப்படுகிறது. சச்சிதானந்தம் என்றால் சந்து (அழியாத நிலையிலுள்ள பொருள்) + சித்து (பேரறிவு) + ஆனந்தம் (பேரின்பம்). அவர் எல்லாப் பொருள்களிலும் இருக்கிறார். அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர். கடவுள் ஒருவரே. அவர் அருள்மயமானவர், இரக்கமுடையவர், ஒளிமயமானவர்.

## இந்துமதக் கொள்கை

உயிர்கள் வினைப் பயனில் பற்றிக் கொண்டு செயலாற்று கின்றன. அதனால் அவ்வினைப்பயனை அனுபவித்துத் தீர்ப்பதற்காக மீண்டும் பிறக்கின்றன. வினைப் பயன்களின் இயல்புக்கேற்பத் தாவரம், விலங்கு, பறவை, மனிதன் என்று பல பிறவிகள் அமைகின்றன. இதனை மறுபிறப்பு என்று கூறுகின்றனர். மனிதன் செய்கின்ற கர்மத்திற்கு ஏற்றாற்போல் பலன் கிடைக்கும். நல்லது செய்தால் நன்மை கிடைக்கும். தீயது செய்தால் தீமை கிடைக்கும். இந்தப் பலன் ஒரு ஜென்மத்தில் முடியாவிட்டால் அடுத்த ஜென்மத்திலும் தொடரும். எனவே வாழ்நாளில் நல்லவற்றை மட்டுமே செய்து அனைவரிடமும் அன்புடன் வாழவேண்டும். தீயவற்றை ஒருபோதும் செய்யக்கூடாது. தீயவை (அதர்மம்) அழியக்கூடியவை. நல்லவை (தர்மம்) வெல்லக்கூடியவை. "தர்மம் வெல்லும். அதர்மம் அழியும்" என்பது இந்துமதத்தின் பொன்மொழி. கடவுள் அன்பின் வடிவமாகயிருக்கிறார் (அன்பே சிவம்). எனவே நாம் எல்லோரும் பரஸ்பரம் அன்புடன் வாழவேண்டும். அதன்மூலம் மனிதநேயம் வளரவேண்டும்.

## புனித நூல்கள்

இந்துக்கள் ஒரே கடவுளுக்குப் பல பெயர்கள் கொடுத்து, பல வடிவங்களில் வழிபடுவது போல், ஒரே இறையாண்மை குறித்துப் பலரும் பல பெயர்களில் எழுதிய பல நூல்களைப் புனித நூல்களாக வணங்கி வருகின்றனர். அவற்றுள் முக்கியமானவை:

1. வேதங்களும் உபநிடதங்களும்
2. மகாபாகவதம்
3. இராமாயணம்
4. மகாபாரதம்
5. பகவத்கீதை
6. தேவாரம்
7. திருவாசகம்
8. அகிலத்திரட்டு அம்மானை

இவற்றில் முதலில் தோன்றியது வேதங்களும் உபநிடதங்களும் ஆகும். அவற்றில் அடங்கியிருக்கின்ற தத்துவங்களின் பெரும்பகுதி தான் அவற்றிற்குப் பின்பு வந்த இந்து சமய நூல்களில் இடம்பெற்றுள்ளன. எனவே இங்கு வேதங்களைப் பற்றியும் உபநிடதங்களைப் பற்றியும் சற்று விரிவாகவும் மற்றும் நூல்களைப் பற்றிச் சுருக்கமாகவும் கொடுக்கப்படுகின்றன.

## வேதங்களும் உபநிடதங்களும்

வேதம் என்ற சொல்லுக்குச் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் "இம்மை என்று சொல்லப்படும் இவ்வுலக வாழ்க்கையைப் பற்றியும், மறுமை என்று சொல்லப்படும் சொர்க்கம் முதலிய மறுஉலக வாழ்க்கையைப் பற்றியும் பகர்வது வேதம்" என்று விளக்கம் தந்திருக்கிறார். வேதங்கள் நான்கு.

இந்நான்கு வேதங்களிலுமாக மொத்தம் 20,379 வேத வாக்கியங்கள் உள்ளன. இவற்றை வேத மந்திரங்கள் என்றும் கூறுவர். அவற்றின் விவரம்:

ரிக்வேதத்திலுள்ள 64 அத்தியாயங்களிலுமாக
மொத்தம் உள்ள வாக்கியங்கள் 10,552

யசுர்வேதத்திலுள்ள 40 அத்தியாயங்களிலுமாக
மொத்தம் உள்ள வாக்கியங்கள் 1,975

சாமவேதத்திலுள்ள 27 அத்தியாயங்களிலுமாக
மொத்தம் உள்ள வாக்கியங்கள் 1,875

அதர்வணவேதத்திலுள்ள 20 காண்டங்களிலுமாக
மொத்தம் உள்ள வாக்கியங்கள் 5,977

## மகாவாக்கியங்கள்

நான்கு வேதங்களிலுமுள்ள மொத்தம் 20,379 வாக்கியங்களில் 4 வாக்கியங்கள் "மகாவாக்கியங்கள்" என்று அறியப்படுகின்றன. மகாவாக்கியங்கள் பரமாத்மாவுக்கும் சீவாத்மாவுக்கும் உள்ள சம்பந்தத்தைக் கூறுபவையாகும். பரமாத்மாவைப் பரம்பொருள், பிரம்மம், சிவம் என்றெல்லாம் கூறுகின்றனர். இது இந்தப் பிரபஞ்சத்தையே இயக்கிக் கொண்டிருக்கிறது. சீவாத்மாவை ஆத்மா என்று கூறுகின்றனர். இது ஒவ்வொரு சீவராசியிலும் இருக்கின்றது. இது அந்தந்தச் சீவராசிகளை இயக்கிக் கொண்டிருக்கின்றது. சீவாத்மா என்பது பரமாத்மாவினுடைய ஓர் அம்சம் என்று கருதப்படுகின்றது.

நான்கு மகாவாக்கியங்களும் நான்கு வேதங்களிலுமாக இருக்கின்றன.

'பிரஞ்ஞானம் பிரம்ம'

என்ற மகாவாக்கியம் ரிக்வேதத்திலும்,

'அகம் பிரம்மாஸ்மி'

என்ற மகாவாக்கியம் யசுர்வேதத்திலும்,

'தத்துவமசி'

என்ற மகாவாக்கியம் சாமவேதத்திலும்,

'அயம் ஆத்மா பிரம்ம'

என்ற மகாவாக்கியம் அதர்வண வேதத்திலும் இருக்கின்றன.

'பிரஞ்ஞானம் பிரம்ம' என்றால் 'பிரஞ்ஞானமானது' பிரம்மம்;

'அகம் பிரம்மாஸ்மி' என்றால் 'பிரம்மமாக இருக்கிறேன்';

'தத்துவமசி' என்றால் 'பிரம்மம் நீதான்';

'அயம் ஆத்மா பிரம்ம' என்றால் 'இந்த ஆத்மா பிரம்மமாகும்' என்று பொருள்படும்.

ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட நான்கு மடங்களிலும் இந்த நான்கு மகாவாக்கியங்களில் ஒவ்வொன்று பொறிக்கப்பட்டுள்ளன.

பூரியிலுள்ள கோவர்த்தன மடத்தில் 'பிரஞ்ஞானம் பிரம்ம' என்ற மகாவாக்கியமும், சிருங்கேரி மடத்தில் 'அகம் பிரம்மாஸ்மி' என்ற மகாவாக்கியமும், துவாரகை சாரதா மடத்தில் 'தத்துவமஸி' என்ற மகாவாக்கியமும், பத்ரி ஜோதிர்மடத்தில் 'அயம் ஆத்ம பிரம்ம' என்ற மகாவாக்கியமும் பொறிக்கப்பட்டுள்ளன.

'தத்துவமஸி' என்ற மகாவாக்கியம் பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவில் பதினெட்டாம் படிக்கு மேலேயும் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

வேதவாக்கிய தத்துவங்களையும், சாரத்தையும் உபநிடதங்கள் விளக்குகின்றன.

'பிரஞ்ஞானம் பிரம்ம' என்ற மகாவாக்கியம் 'ஐதரேயம்' என்ற உபநிடதத்தாலும், 'அகம் பிரம்மாஸ்மி' என்ற மகாவாக்கியம், 'பிரகதாரண்யகம்' என்ற உபநிடதத்தாலும், 'தத்துவமஸி' என்ற மகாவாக்கியம் 'சாந்தோக்கியம்' என்ற உபநிடதத்தாலும், 'அயம்

ஆத்மா பிரம்ம' என்ற மகாவாக்கியம் 'மாண்டூக்கியம்' என்ற உபநிடதத்தாலும் விளக்கப்பட்டிருக்கின்றன.

## ஐதரேயோபநிடத்து

இந்த உபநிடத்தின் கர்த்தா முனிவர் மகிதாச ஐதரேயர் ஆவார். இதில் ரிக் வேதத்திலுள்ள 'பிரம்மஞானம் பிரம்ம' எனும் மகாவாக்கியம் விளக்கப்பட்டிருக்கிறது.

## இதன் சுருக்கம்

உலகம் படைக்கப்படுவதற்கு முன்பு 'பிரம்மம்' மட்டும் இருந்தது. அந்தப் பிரம்மம் சொர்க்கத்தையும், பூமியையும், கடலையும், பாதாளத்தையும் படைத்தது. இவற்றையெல்லாம் படைத்த பிரம்மம் எல்லா வல்லமையும் கொண்டது, அழிவற்றது. அதாவது இந்த உலகம் பிரஞ்ஞானத்தாலேயே (கடவுளாலேயே) நடத்தப்படுகிறது. பிரஞ்ஞானத்திலேயே நிலை பெறுகிறது. பிரஞ்ஞானமே பிரம்மம் (கடவுள்). அப்படிப் பட்ட பிரம்மத்தை ஆத்மா அடைய வேண்டுமென்றால், அதற்கு மனப்பக்குவம் வேண்டும். அந்தப் பக்குவம் ஆத்மாவைப் பிரம்மத்திடம் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது. இதை முனிவர் வாமதேவருடைய கதையைக் கொண்டு இந்த உபநிடத்து விளக்குகிறது. முனிவர் வாமதேவர் மனிதப் பிறப்பின் இரகசியத்தையும், கடவுளை (பிரம்மத்தை) அடைவதற்கான வழிமுறைகளையும் அறிந்தபிறகு அவருடைய ஆத்மா பிறவி என்னும் கூண்டிலிருந்து விடுபட்டுப் பிறவியில்லாப் பெரும்நிலைக்கு உயர்ந்து பிரம்மத்திடம் சேர்ந்தது.

## பிருகதாரண்யகோபநிடத்து

இந்த உபநிடத்தின் கர்த்தா யாஞ்ன வல்கியர். இந்த உபநிடத்தில் யசுர் வேதத்திலுள்ள 'அகம் பிரம்மாஸ்மி' என்ற மகாவாக்கியம் விளக்கப்பட்டிருக்கிறது.

## இதன் சுருக்கம்

யாஞ்னவல்கியர் ஓர் இல்லறவாசி. அவருக்கு இரண்டு மனைவிகள்: ஒருவர் பெயர் காத்யாயினி, மற்றவர் பெயர் மைத்ரேயி. தம்முடைய சொத்துக்களையெல்லாம் தமது இரு மனைவிமார்களுக்கும் கொடுத்துவிட்டுக் குடும்பத்திலிருந்து வெளியேறி ஆரண்யகத்திற்குச் (காட்டிற்கு) சென்று தவம் செய்து மோட்ச வழியைத் தேட யாஞ்ன வல்சியர் தீர்மானித்தார். அதன்படி அவருடைய சொத்துக்களை எல்லாம் இரு பங்காகப் பிரித்து இரு மனைவிமார்களுக்கும் கொடுத்து, அந்தச் சொத்துக்களைக் கொண்டு (செல்வத்தைக் கொண்டு) எஞ்சிய நாள்களில் நிம்மதியாக வாழும்படி வேண்டினார். அப்போது, இந்தச் செல்வங்களால் மனதிற்கு அமைதி கிடைக்குமா

என்று மைத்ரேயி கேட்டாள். அப்போது இந்தச் செல்வத்தால் சுகம் கிடைக்கும். அதை அனுபவித்தால் நிம்மதி ஏற்படலாம் என்று தெரிவித்தார். அதற்கு மைத்ரேயி, இந்தச் செல்வங்களால் நான் அழிவற்ற நிலையை அடைய முடியுமா என்று கேட்டாள். அப்போது யாஞ்னவல்கியர் முடியாது என்று பதில் சொன்னார். அப்படியானால் அழிவற்ற நிலையை எது வழங்குமோ அதை அளியுங்கள் என்றாள் மைத்ரேயி. அதற்கு யாஞ்னவல்கியர் பிரம்மத்தைப் பற்றி மைத்ரேயிக்கு உபதேசித்தார்.

யாஞ்ன வல்கியர் பிரம்மஞானம் பற்றிய விளக்கத்தைக் கூறுவதற்கு முன் ஆத்மாவுக்கும் பிரம்மத்திற்குமுள்ள உறவு பற்றி விவரித்தார். பிரம்மத்தை அடைவதற்கான பாதை எது என்று கூறிய பின் பிரம்மம் எது என்று விளக்கினார். ஆன்மா பிரம்மத்தினுடைய (கடவுளினுடைய) ஓர் அம்சம். அந்த அம்சம் நாம் எல்லோரிடமும் இருக்கிறது. இதுதான் அகம் பிரம்மாம்சி (நாம் பிரம்மமாக யிருக்கிறோம்) என்பது.

## சாந்தோக்கியோபநிடத்து

சாந்தோக்கியோபநிடத்து பல முனிவர்களின் உபதேசங்களின் தொகுப்பாகும். இதில் சாமவேதத்திலுள்ள 'தத்துவமசி' எனும் மகாவாக்கியம் விளக்கப்பட்டிருக்கிறது.

## இதன் சுருக்கம்

'தத்துவமசி' எனும் மகாவாக்கியம் மூன்று சொற்களைக் கொண்டது. அவை: – தத், த்வம், அஸி. 'தத்' என்றால் 'அதுவாக', 'த்வம்' என்றால் 'நீ', 'அசி' என்றால் 'இருக்கிறாய்'. அதுவாக நீ இருக்கிறாய் என்பது இதன் பொருள். அதாவது சீவாத்மாவாகிய நீ பரமாத்மாவினுடைய ஓர் அம்சம் என்று அதற்கு விளக்கம் வருகிறது. இதனை இந்த உபநிடத்து ஒரு கதைமூலம் விவரிக்கிறது.

உத்தாலகர் தம் மகன் சுவேதகேதுவைக் குருகுலத்திற்குக் கல்வி கற்றுவர அனுப்பினார். சுவேத கேது பன்னிரண்டு வயது முதல் இருபத்தி நான்கு வயது வரை குருகுலவாசம் செய்து விட்டு வித்யா கர்வத்துடன் வீட்டிற்கு வந்தான். அவன் தன் தந்தையிடம் எல்லாம் கற்று அறிந்துவிட்டதாகக் கூறினான். அப்போது தந்தை மகனிடம் "பரம்பொருளை எப்படி உணர்வது" என்பது பற்றிக் கூறச் சொன்னார். அதற்கு மகன் "எனது குருமார்கள் இதை அறியமாட்டார் போலும்; அறிந்திருந்தால் அவர்கள் சொல்லியிருக்க மாட்டார்களா? நீங்களே இதை உபதேசியுங்கள்" என்றான். தந்தை மகனுக்கு உபதேசித்தார். எது அணு மாத்திரமான சூக்குமப் பொருளோ, அதுவே நீயாக இருக்கிறாய். உன் கண்ணுக்குத் தெரியாமல் ஒரு சிறு ஆலமர

விதைக்குள் நுட்பமான இலைகளும், கிளைகளும், விழுதுகளும் கொண்ட ஆலமரம் எப்படி அடங்கியிருக்கிறதோ, அவ்வாறே உலகம் முழுவதும் பரமாத்மாவில் அடங்கியிருக்கிறது. தண்ணீரில் போட்ட உப்பு தண்ணீரில் கரைந்து கண்ணுக்குத் தெரியாமல் போனாலும் எப்படி தண்ணீர் முழுவதிலும் வியாபித்திருக்கிறதோ அதுபோல் இவ்வுலகில் பரம்பொருள் (பரமாத்மா) மறைந்து நிற்கிறது. அதுவே ஸத்து (அழிவற்றது). அதுவே பரமாத்மா. நீயும் அதனுடைய ஓர் அம்சமே, நீயும் அதுவாக இருக்கிறாய்; என்று தந்தை மகனுக்கு உபதேசித்தார்.

## மாண்டுக்கியோபநிடத்து

யோகியினுடைய மனம் மூன்று அவத்தைகளையும் (ஜாக்கிரம், சொப்பனம், சுசுப்தி), தவளை (மண்டுகம்) போல் தாவிச் சென்று நாலாவதாக, துரீயத்தை (முக்தி) அடைவதால், இந்த அனுபவத்தைக் கூறும் இவ்வுபநிடத்து 'மாண்டுக்கியோபநிடத்து' என்று பெயர் பெற்றது என்றும்; இதன் கர்த்தா முனிவர் மண்டுகரூபியாதலால் அவர் பெயரில் அறியப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. இதில் அதர்வண வேதத்திலுள்ள 'அயம் ஆத்மா பிரம்ம' என்ற மகாவாக்கியம் விளக்கப்பட்டிருக்கிறது.

## இதன் சுருக்கம்

மனிதனுக்கு மேற்பட்ட ஒரு சக்தி இருக்கிறது. அந்தச் சக்தியைக் கண்ணால் பார்க்க முடியவில்லை. ஆனால் அது எங்கும் நிறைந்திருக்கிறது. அந்தச் சக்திதான் பிரம்மம் (கடவுள்). அந்தப் பிரம்மத்தினுடைய அம்சம் நம் ஒவ்வொருவரிலும் இருக்கிறது. அதுதான் சீவாத்மா அல்லது ஆத்மா அல்லது சீவன் இந்திரியங்கள் வழியாக வெளிவிசயங்களை அறிகிறது. கனவில் விசய வாசனைகளின் வடிவங்களை மனதால் அறிகிறது. சுசுப்தியில் விசயங்களுமில்லை. விசய வாசனைகளின் வடிவங்களுமில்லை. எனவே எப்படியென்று விளக்கமுடியாது. துரீயத்தில் சீவன் தன்னுடைய உருவத்தை அடைகிறது. அதாவது சீவாத்மா பரமாத்மாவிடம் சேருகிறது (சீவன் பிரம்மத்திடம் சேருகிறது). இந்த மூன்று அவத்தைகளையும், நான்காவது நிலையையும் கொண்டது 'ஓம்' என்ற பிரணவ மந்திரம். பிரணவ மந்திரம் என்றால் மகாமந்திரம் என்று பொருள். ஓம் என்ற பிரணவ மந்திரம் 'அ', 'உ', 'ம்' என்ற மூன்றின் சேர்க்கையாகும். இதில் 'அ'காரம் ஜாக்கிரத்தையும், 'உ' காரம் சொப்பனத்தையும், 'ம்'காரம் சுசுப்தியையும், இவற்றின் (அ, உ, ம்) பூரணமான 'ஓம்' துரீயத்தையும் குறிக்கின்றன. 'ஓம்'

என்ற இந்த உபநிடத்து உருவான காலத்தில் 'ஓம்' என்பது பிரம்மத்தின் வடிவம் என்ற கருத்து நிலைத்துவிட்டது. எனவே மந்திரங்களுள் இதுவே மகாமந்திரம். இதை உறுதிப்படுத்த இதற்குப் 'பிரணவ மந்திரம்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

## இதர உபநிடத்துக்கள்

உபநிடத்துக்கள் மொத்தம் எத்தனை என்பது குறித்துத் திட்ட வட்டமான கணக்குகள் எதுவுமில்லை. இருப்பினும் உபநிடத்துக்கள் மொத்தம் 200 வரை இருக்கலாமென்றும், மும்பையிலுள்ள நிர்ணய சாகர் அச்சகத்தார் 112 உபநிடத்துக்கள் வெளியிட்டிருக்கிறார்கள் என்றும் கேரள சாகித்திய அக்காடமி விருது பெற்ற எழுத்தாளர் திரு. டி. முகம்மது, தம்முடைய **பாரதீய சம்ஸ்காரத்தின்றே அடியொழுக்குகள்** என்ற மலையாள நூலில் குறிப்பிட்டிருக்கிறார். உபநிடத்துக்களில் மிக முக்கியமானவைகளாகக் கருதப்படுபவை 12 உபநிடத்துக்களாகும். அவற்றில் நான்கு உபநிடதங்கள் – ஐதரேயோபநிடத்து, பிரகதாரண்யகோபநிடத்து, சாந்தோக்கியோப நிடத்து, மாண்டுக்கியோபநிடத்து பற்றிய விவரங்கள் சுருக்கமாக மேலே கொடுக்கப்பட்டுள்ளன. எட்டு உபநிடதத்துக்கள் பற்றிய விவரங்கள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்படுகின்றன.

ரிக் வேதத்தில் கௌசிதிக உபநிடத்து தைத்திரியோபநிடத்து

யசுர் வேதத்தில் கடோபநிடத்து, சுவேதாச்வதர உபநிடத்து ஈசோபநிடத்து

சாமவேதத்தில் கேனோபநிடத்து

அதர்வண வேதத்தில் முண்டகோபநிடத்து, பிரச்னோபநிடத்து

## கௌசிதிக உபநிடத்து

இந்த உபநிடத்து பிரம்மத்தினிடம் சீவாத்மா கலப்பது பற்றிக் கூறுகிறது. உயிருடன் இருக்கும்போது புலன்களை அடக்கி நல்லமுறையில் வாழ்ந்து உயர்ந்த நிலையை அடைந்தவர்களின் சீவாத்மா மரணத்திற்குப் பின் பிரம்மத்தினிடம் (கடவுளிடம்) கலக்கின்றது. புலனடக்கம் இல்லாமல் தவறான பாதைகளில் நடந்து தீய செயல்களில் ஈடுபட்டவர்களின் சீவாத்மா மரணத்திற்குப் பின் தண்டனை பெற மீண்டும் இவ்வுலகில் பிறக்கின்றது. எனவே வாழ்நாளில் புலனடக்கத்துடன் நல்ல செயல்களை மட்டுமே செய்ய வேண்டுமென்று மனிதனுக்கு இந்த உபநிடத்து கூறுகிறது.

## தைத்திரியோபநிடத்து

இந்த உபநிடத்து பிரம்மம் என்றால் என்ன என்ற கேள்விக்குப் பதிலளிப்பதுபோல் அமைந்துள்ளது. இது பிரம்மம் பற்றி இவ்வாறு கூறுகிறது:

எதிலிருந்து எல்லாப் பொருள்களும் வெளியேறுமோ –

எதனால் எல்லாம் காக்கப்படுகின்றதோ –

எதில் கடைசியில் எல்லாம் திரும்பி விடுகின்றதோ –

அதுவே பிரம்மம்.

## கடோபநிடத்து

இந்த உபநிடத்து பிரம்மத்தை அடையப் புலனடக்கம் இன்றியமையாதது என்பது பற்றிக் கூறுகிறது.

கடோபநிடத்தில் உடல், ஆன்மா, புத்தி, மனம், இந்திரியங்கள் (புலன்கள்) ஆகியவற்றை முறையே தேர், தேருக்கு உடையவன், தேரோட்டி, குதிரைகளின் கடிவாளம், குதிரைகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு, மனதை ஆசைகளிலிருந்து விடுவித்துக் கட்டுப்படுத்தி மனிதன் பரமபதத்தை அடைவது குறித்துக் கூறப்பட்டுள்ளது.

உடல்தான் தேர், ஆன்மா தேருக்கு உடையவன், புத்திதான் தேரோட்டி, மனம்தான் கடிவாளம், புலன்கள்தாம் குதிரைகள், ஒலி முதலிய நுகர்பொருள் ஐந்தும் குதிரைகள் போகும் வழி. புத்தியாகிய தேரோட்டி விவேகத்துடன் மனம் என்ற கடிவாளத்தை உறுதியுடன் இழுத்துப் பிடித்தால் அவனுடைய புலன்களாகிய குதிரைகள் நல்ல குதிரைகளைப் போல் வசப்பட்டுவிடும். அப்படியே புத்தி, மனம், புலன்களோடு கூடிய பரிசுத்தமான ஆன்மாவான மனிதன் பரமபதத்தை (பிரம்மத்தை) அடைகிறான் என்று இந்த உபநிடத்து கூறுகிறது.

## சுவேதாச்வதர உபநிடத்து

இந்த உபநிடத்து பிரம்மத்தைப் பற்றியும், பிரம்மத்தை எப்படி காண்பது என்பது பற்றியும் கூறுகின்றது.

மண்ணும், மண்ணை ஆதாரமாகக் கொண்டு இயங்கும் உயிர்களும் நிலையானவை அல்ல. எல்லாம் அழியக்கூடியவையே. இப்படி சிறிது காலம் வாழ்ந்து அழியக்கூடிய பொருள்கள் அனைத்தையும் படைத்தது 'பிரம்மம்' எனும் மூலப்பொருள்.

யோக நெறியால் பண்பட்டவனின் ஆத்மா தூசி துடைக்கப்பட்ட கண்ணாடிபோல் ஒளிமயமாய் இருக்குமென்றும், தெளிவான கண்ணாடியைப் பார்க்கும்போது அதில் தென்படும் உருவம் ஒளிமயமாய் இருக்குமென்றும், அதைப்போல் பிரம்மத்தைப் பற்றிய அறிவும், ஞானமும் வளர்ந்தால் பிரம்மத்தையும் பார்க்க முடியுமென்னும் இவ்வுபநிடத்து கூறுகிறது.

**ஈசோபநிடத்து**

இந்த உபநிடத்து பிரம்மம் எங்குமிருப்பது பற்றிக் கூறுகிறது. இதில் 'பிரம்மம்' என்பதற்கு 'ஈசன்' என்ற பெயரும் வருகிறது.

கடவுள் எல்லா இடங்களிலும் வியாபித்து இருக்கிறார். அவர் இல்லாத இடம் எதுவுமே இல்லை. அசையும் பொருள்களில் மட்டுமல்ல, அசையாப் பொருள்களிலும் ஈசன் (பிரம்மம்) இருப்பதாக இந்த உபநிடத்து கூறுகிறது. இப்படி எல்லா இடங்களிலும் பரந்திருக்கும் கடவுளை அடையவேண்டுமானால், பொய்யை (உடலை அனுபவிக்கும் சுகங்களை) உதற வேண்டுமென்று கூறுகிறது. உலகத்தில் கிட்டும் சுகங்களை அனுபவிப்பதற்குத் தேவையாக இருப்பது செல்வம். அந்தச் செல்வத்தின்மீது பற்று வைத்திருப்போரால் உண்மையை (கடவுளை) நெருங்க முடியாது. பாவச் செயல்கள் செய்தால் கிட்டும் சுகம்தான் பெரிதென்று நினைக்கும் தீய கருத்தை ஒழிதல் விட்டால் ஆன்மா புனிதம் பெறுமென்றும் இவ்வுபநிடத்து கூறுகிறது.

**கேனோபநிடத்து**

இந்த உபநிடத்து பிரம்மத்தின் வடிவம் பற்றியும் அதை அடைய என்ன செய்யவேண்டும் என்பது பற்றியும் கூறுகிறது.

பிரம்மம் எப்படி இருக்குமென்று எவராலும் விளக்க முடியாது. ஏனென்றால் பிரம்மத்தின் வடிவம் பெரிது என்றால் அந்தப் பெரிதுக்கும் பெரிதாக அது மாறிவிடும். பிரம்மத்தின் வடிவம் சிறிது என்றால் அந்தச் சிறிதுக்கும் சிறிதாக அதனால் சுருங்க முடியும்.

பிரம்மத்தை அடைய மனத்தைக் கட்டுப்படுத்திச் சீரான பாதையில் விடவேண்டும். வேதங்களையும் அவற்றின் உறுப்புகளான உபநிடத்துக்களையும் படித்து, அவற்றின் வழிகாட்டுதலின்படி கருமங்களைச் செய்ய வேண்டும். எந்தச் சமயத்திலும் உண்மையைக் கைவிடக் கூடாது. இந்த அடிப்படையில் வாழ்ந்தவன் பாவத்தை வெல்வான் என்றும், பிரம்மத்தை அடைவான் என்றும் இந்த உபநிடத்து கூறுகிறது.

## முண்டகோபநிடத்து

இந்த உபநிடத்து பிரம்மத்தை உணர்வது பற்றிக் கூறுகிறது. எல்லா நதிகளும் இறுதியில் கடலில் கலக்கின்றன. கடலில் கலந்த பிறகு அந்நதிகள் அதன் பெயர்களை இழந்துவிடுகின்றன. ஆன்மாக்களும் அதற்கு ஒப்பானவை. பிரம்மம் எங்கும் பரந்து கிடக்கின்றது. பிரம்மத்துடன் கலந்த ஆன்மா பெயரை இழந்து விடுகிறது. அதாவது, பெயருக்குக் காரணமான பிறப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கிறது. இதை உணர்ந்தவன் என்று முண்டகோபநிடத்து கூறுகிறது.

## பிரச்னோபநிடத்து

இவ்வுபநிடத்து பிரம்மம் பற்றியும் சீவன் பற்றியும் கூறுகிறது. இவ்வுபநிடதத்தில் ஆறு பிரச்சினைகள், அதாவது ஆறு கேள்விகள் எழுவதால் இதற்குப் பிரச்னோபநிடத்து என்று பெயர் அமைந்ததாகக் கூறப்படுகிறது. இவ்ஆறு கேள்விகளில் முக்கியமானது 'எங்கிருந்து சீவன் வந்தது என்ற கேள்வியாகும். இதற்கு, பிரசாபதியாகிய பிரம்மத்திலிருந்து சீவன்கள் அனைத்தும் தோன்றின என்று இந்த உபநிடத்து பதில் கூறுகிறது.

இந்துக்களின் புனித நூல்களான வேதங்களையும் உபநிடத்துக்களையும் பற்றிப் பார்த்தோம். இனி முக்கியமான மற்ற நூல்களைப் பற்றிப் பார்ப்போம்.

## மகாபாகவதம்

இந்து மதத்தில் 18 புராணங்கள் உள்ளன. அவை:

1. சைவம் (Saiva)
2. காந்தம் (Skanda)
3. இலிங்கம் (Linga)
4. கூர்மம் (Kurma)
5. வாமனம் (Vamana)
6. வராகம் (Varaka)
7. பௌடிகம் (Pavishiyam)
8. மச்சியம் (Matsya)
9. மார்க்கண்டேயம் (Markandeya)
10. பிரம்மாண்டம் (Brahmanda)
11. நாரதீயம் (Naradiya)
12. மகாபாகவதம் (Mahabhagavata)
13. காருடம் (Garuda)
14. வைணவம் (Vaishnava)
15. பிரம்ம (Brahma)
16. பதுமம் (Patma)
17. பிரமகைவர்த்தம் (Brahma Kaivartha)
18. ஆக்கினேயம் (Agneya)

இவற்றில் ஒன்று மகாபாகவதம். சுருக்கமாக இதனைப் பாகவதம் என்றும் கூறுவர். பாகவதம் பகவான் மகாவிஷ்ணுவின் (திருமால்) அவதாரங்கள், பகவான் கிருஷ்ணருடைய பெருமைகள் முதலியவற்றைக் கூறுகின்றது. இதனை இயற்றியவர் வியாசமுனிவர். பாகவதம் பத்துப் பாகங்களைக் கொண்டது. ஒவ்வொரு பாகத்திற்கும் காந்தம் என்று பெயர். காந்தங்கள் பல கதைகளைக் கொண்டவை. அவற்றின் விவரம்:

| காந்தம் | கதைகள் |
|---|---|
| முதல் காந்தம் | சூதமுனிவரும் பரிட்சித்து மன்னரும் |
| இரண்டாம் காந்தம் | சுகமுனிவரும் பரிட்சித்து மன்னரும் |
| மூன்றாம் காந்தம் | வராகாவதாரம், கபிலர் |
| நான்காம் காந்தம் | துருவ சரித்திரம் |
| ஐந்தாம் காந்தம் | சட பரதர் |
| ஆறாம் காந்தம் | அசாமிளன் |
| ஏழாம் காந்தம் | நரசிம்மமும் பிரகலாதனும் |
| எட்டாம் காந்தம் | கசேந்திர மோட்சம், கூர்மாவதாரம், வாமனாவதாரம், மச்சாவதாரம் |
| ஒன்பதாம் காந்தம் | பரசுராமாவதாரம் |
| பத்தாம் காந்தம் | கம்சன், கண்ணன் பிறப்பு, கண்ணன் திருவிளையாடல், காளியமர்த்தனம், வேணுகோபாலன் குன்றெடுத்த மாயன், அக்குரூரர், கம்சவதம், ருக்மணி திருமணம், கல்கியவதாரம், பரிட்சித்து மோட்சம் |

கடவுள் எங்கும் இருக்கிறார், அவர் மிகவும் வல்லவர், உருவமற்றவர், அழிவற்றவர், உண்மைப்பொருள் (மெய்ப்பொருள்) என்பவற்றை மகாபாகவதம் விளக்குகிறது. மானிட இனத்தைத் திருத்தவும், அழிவிலிருந்து காக்கவும் கடவுள் பல அவதாரங்களை எடுத்திருக்கிறார். அவை:

1. மல்சியம் (மீன்)
2. கூர்மம் (ஆமை)
3. வராகம் (பன்றி)
4. நரசிம்மம்
5. வாமனன்
6. பரசுராமன்
7. இராமன்
8. பலராமன்
9. கண்ணன்
10. கல்கி

இவ்அவதாரங்கள் பற்றிய கதைகளும் மகாபாகவதத்தில் இடம் பெற்றுள்ளன. இந்தக் கதைகளில் பல தத்துவங்களும் வாழ்க்கை நெறிமுறைகளும் அடங்கியிருக்கின்றன.

## இராமாயணம்

கடவுளினுடைய அவதார புருசனான இராமனுடைய சரிதம் மற்றும் இராவணவதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நூல் இராமாயணம். இது ஒரு பேரிதிகாசம் (மகாகாவியம்). இதில் கிட்டத்தட்ட 24,000 (இருபத்து நான்காயிரம்) சுலோகங்கள் உள்ளன. இது ஆறு *காண்டங்களை* (பாகங்களை)க் கொண்டது. அவை:

1. பாலகாண்டம்
2. அயோத்தியா காண்டம்
3. ஆரண்ய காண்டம்
4. கிட்கிந்தா காண்டம்
5. சுந்தரகாண்டம்
6. யுத்தகாண்டம்

இராமாயணம் முதலில் வால்மீகி முனிவரால் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டது. அதன் பின் பல மொழிகளில் பலராலும் எழுதப்பட்டது. இந்தி மொழியில் துளசிதாசர் என்பவரால் "துளசி *இராமாயணமும்*", *தமிழில் கம்பரால் 'கம்பராமாயணமும்'* எழுதப்பட்டுள்ளன. இவை பிரசித்தி பெற்ற நூல்களாகும்.

பண்புகள் மேலோங்கிய இக்காவியத்தின் குணச்சித்திரப் பாத்திரங்கள் நம்மைத் தீய நெறியினின்று விலக்கி, நாம் சீரும் சிறப்பும் மிக்க வாழ்வைப் பெற வழிகாட்டிகளாக உள்ளனர்.

அநீதி, அக்கிரமம், கொடுமை ஆகியவற்றையொழித்து அறமும், நலமும், இன்பமும் பெருகக் கடவுள் அருள்பாலிப்பார் என்ற தத்துவத்தை இராமாயணம் விளக்குகிறது.

## மகாபாரதம்

உலகத்திலேயே அதிகமான சுலோகங்களைக் கொண்ட பேரிதிகாசம் (மகாகாவியம்) மகாபாரதம். இதில் கிட்டத்தட்ட 1,00,000 (இலட்சம்) சுலோகங்கள் உள்ளன. இந்த நூல் முதலில் வியாச முனிவரால் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டது. அதன்பின் பலராலும் பல மொழிகளில் எழுதப்பட்டது.

மகாபாரதம் 18 பர்வங்களை (பாகங்களை)க் கொண்டது. அவற்றின் பெயர் விவரம்:

1. ஆதிபர்வம்
2. சபா பர்வம்
3. வனபர்வம்
4. விராட பர்வம்

5. உத்யோக பர்வம்
6. பீஷ்ம பர்வம்
7. துரோண பர்வம்
8. கர்ண பர்வம்
9. சல்ய பர்வம்
10. ஸௌப்திக பர்வம்
11. ஸ்திரீ பர்வம்
12. சாந்தி பர்வம்
13. அனுசாஸன பர்வம்
14. அசுவமேத பர்வம்
15. ஆஸ்ரம வாஸிக பர்வம்
16. மௌசல பர்வம்
17. மகாப்ரஸ்தானிக பர்வம்
18. சுவர்க்காரோஹண பர்வம்

இந்தியாவின் பழைய பெயர் பாரதம். பாரதத்தில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே நடந்த பெரிய போரை அடிப்படையாகக் கொண்டது மகாபாரதக் கதை. தர்மத்திற்கு வெற்றியும், அதர்மத்திற்குத் தோல்வியும் ஏற்படும் என்பதை இந்தக் கதை நிரூபித்துக் காட்டுகிறது.

## பகவத் கீதை

வியாசமுனிவரால் இயற்றப்பட்ட மகாபாரதத்திலுள்ள பீஷ்ம பர்வத்தில் 25 முதல் 42 வரையுள்ள 18 அத்தியாயங்களைக் கொண்ட தனி நூல் 'பகவத் கீதை'. இதனை மக்கள் சுருக்கமாக 'கீதை' என்று கூறுகின்றனர். இதில் அமைந்துள்ள சுலோகங்களின் எண்ணிக்கை 700 (எழுநூறு). இதில் 18 அத்தியாயங்கள் உள்ளன. அவற்றின் பெயர் விவரம்:

1. அர்ச்சுன விசாத யோகம்
2. சாங்கிய யோகம்
3. கர்ம யோகம்
4. ஞானகர்ம சந்நியாச யோகம்
5. சந்நியாச யோகம் (கர்ம சந்நியாச யோகம்)
6. தியான யோகம் (ஆத்ம சம்யம யோகம்)
7. ஞான விக்ஞான யோகம்
8. அட்சர பிரம்ம யோகம்
9. இராசவித்யாஇராஜருஹ்ய யோகம்
10. விபூதி யோகம்
11. விசுவரூப தர்சன யோகம்
12. பக்தி யோகம்
13. சேத்திரக்ஞ விபாகயோகம்
14. குணத்ரய விபாக யோகம்
15. புருஷோத்தம யோகம்
16. தெய்வாசுர சம்பத் விபாக யோகம்
17. சிரத்தாத்திரய விபாக யோகம்
18. மோட்ச சந்நியாச யோகம்

இந்த 18 யோகங்களையும் தொகுத்து நான்கு யோகங்களாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் விவரம்:

1. கர்மயோகம் 2. இராசயோகம் (தியானயோகம்)
3. பக்தியோகம் 4. ஞானயோகம்

பகவத் கீதையில் 'யோகம்' என்ற சொல் பல இடங்களிலும் வருகின்றது. கீதையின் பதினெட்டு அத்தியாயங்களின் பெயர்களின் கடைசியிலும் 'யோகம்' என்ற சொல் இருக்கிறது. ஒவ்வொரு இடத்திற்கும் ஏற்றாற்போல் 'யோகம்' என்ற சொல்லின் அர்த்தம் மாறுகிறது.

இந்தியாவிலுள்ள மக்களில் பெரும்பகுதி மக்கள் கீதையைப் பக்தி நூலாக வைத்திருக்கின்றனர். இந்தப் பக்தி நூலின் சிறப்புப் பற்றி ஆச்சாரியா வினோபா பாவே இவ்வாறு கூறுகிறார்.

> வேதங்களின் வித்தினுருவிலிருந்து தர்மம் முளைத்து வளர்ந்து மர்மாகி அதில் கீதை என்ற இனிய பழம் தோன்றிற்று. வேத தர்மத்தின் வடிவெடுத்த சாரமாகும் கீதை. கீதை உபநிடதங்களுக்கு எல்லாம் உபநிடதமாகும். ஏனெனின் உபநிடதங்கள் அனைத்தையும் கறந்து கீதையாம் பாலைப் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனைக் காரணமாய்க் கொண்டு உலகிற்கு வழங்கியிருக்கிறார். வாழ்வில் மலர்ச்சிக்குத் தேவையான எல்லாக் கருத்துகளும் கீதையில் இடம்பெற்றுள்ளன. இதனாலேயே கீதையைத் தரும ஞானக் கருவூலமென உண்மையான அனுபவசாலிகள் சொல்லியுள்ளார்கள். மகாபாரதம் முழுவதையும் கடைந்தெடுத்த வெண்ணெய்யை வியாசர் பகவத்கீதையில் திரட்டி வைத்திருக்கிறார்.

ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட பல தத்துவங்கள்; சத்துவ குணம், இரசோகுணம், தமோகுணம் பற்றிய விளக்கங்கள்; மறுபிறவி பற்றிய விளக்கங்கள்; காமம், குரோதம், உலோபம் இவற்றைத் துறத்தல்; பயனை எதிர்பாராமல் கடமையைச் செய்தல், ஜீவாத்மா, பரமாத்மா பற்றிய விளக்கங்கள்; மன அமைதிக்கான மார்க்கங்கள்; தியானத்தில் நிலைபெற்றிருப்பதற்கான வழிமுறைகள்; அகங்காரத்தை அகற்றும் விதம்; அடங்காத மனதை அடக்குவதற்கான வழிமுறைகள்; பகவானை அடைவதற்கான வழிமுறைகள் முதலான பல அரிய விளக்கங்களைக் கொண்டது பகவத் கீதை.

அதர்மத்தின் ஆதிக்கத்தால் தர்மம் அழிந்துவிடக் கூடாது, தர்மம் வெல்ல வேண்டும் என்பது பகவத்கீதையின் உட்கருத்து.

சத்தியம், அன்பு, அமைதி, அகிம்சை ஆகிய இவற்றைக் கொண்டது தர்மம். இதற்கு எதிரானவை அதர்மம்.

**தேவாரம்**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூன்று சிறப்பு மிக்க நாயன்மார்களால் பாடப்பட்ட பாடல்களே 'தேவாரம்'. இவற்றைத் தேவாரப் பாடல்கள் என்றும் கூறுவர். தேவாரம் 4,181 பாசுரங்களையும், 4,092 பாடல்களையும் கொண்டது. இவை பாடுவோரையும், கேட்போரையும் இறையுணர்வில் ஆழ்த்திவிடும்.

இந்துமத வேதங்களினுடைய சாரங்களைக் கொண்ட சமஸ்கிருத நூல் பகவத் கீதை. அதுபோல் வேதங்களினுடைய சாரங்களைக் கொண்ட தமிழ் நூல் தேவாரம். வேத வாக்கியங் களையும் தேவாரங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்த பேரறிஞர் காலஞ் சென்ற காசிவாசி செந்திநாதையர் அவர்கள் தக்க ஆதாரங்களைக் காட்ட வேதசாரமே தேவாரம் என்று அறுதியிட்டு, "தேவாரம் வேதசாரம்" என்ற பெயரில் நூலொன்றை எழுதி வெளியிட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேவாரம் ஆழ்ந்த கருத்துகளையும், இனிய பக்தி இரசத்தையும் கொண்ட ஓர் சிறப்பு வாய்ந்த நூலாகும்.

**திருவாசகம்**

சைவ சமயாச்சாரியர்கள் (சமயக்குரவர்கள்) நால்வர். அவர்கள்:

1. திருஞானசம்பந்தர்
2. திருநாவுக்கரசர் (அப்பர்)
3. சுந்தரமூர்த்தி சுவாமிகள்
4. மாணிக்கவாசகர்

அவர்களில் மாணிக்கவாசகர் எனப்படும் வாதவூரடிகள் அன்பு நெறியில் மூழ்கிச் சிவபெருமானுடைய அருளைப் பெற்ற பெரியவராவார். அவரால் இயற்றப்பட்டது 'திருவாசகம்'. திருவாசகம் இறையன்புப் பெருக்கால் படிப்போர் நெஞ்சத்தை உருக்கும். "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கு உருகார்" என்பர். திருவாசகம் 659 பாடல்களைக் கொண்டது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரங்களை வேதசாரமாகக் கொள்வதுபோல்,

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தை உபநிடத்துக்களின் சாரமாகக் கொள்ளும் மரபு உண்டு என்றும், உபநிடத வாக்கியங் களிலுள்ள கருத்துக்களைக் கொண்ட பாசுரங்கள் பலவற்றைத் திருவாசகத்தில் காணலாமென்றும் திரு. கி. இலட்சுமணனுடைய 'இந்தியத் தத்துவஞானம்' என்ற நூல் கூறுகிறது. உபநிடத்துக்களைப் போன்று ஆழ்ந்த கருத்துக்களையும் பக்தி இரசத்தையும் கொண்டது திருவாசகம்.

## அகிலத்திரட்டு அம்மானை

இந்துக்களில் 'அய்யாவழி' எனும் ஒரு தனி மார்க்கத்தை இன்று பலர் பின்பற்றி வருகின்றனர். அய்யா வழியினரின் பக்திநூல் **அகிலத்திரட்டு அம்மானை.**

ஆணவம் (கர்வம்), கன்மம் (தீவினை), மாயை (பொய்) ஆகியவற்றால் கட்டுண்டு கிடக்கும் சீவகோடிகளை அவற்றிலிருந்து விடுவித்துப் பரம்பொருளில் சேர்க்கும் சித்தாந்த தத்துவத்தைக் கதைபோல் கூறும் அமர காவியம் இது என்று **அகிலத்திரட்டு அம்மானையின்** சிறப்புப் பற்றி மகான்கள் கூறுகின்றனர்.

சத்தியமார்க்கம் எனும் நேர்வழியை **அகிலத்திரட்டு அம்மானை** விளக்குகிறது. சாதி, மதம், இனம், மொழி, நாடு என்னும் அனைத்துப் பேதங்களையும் கடந்து, மனிதநேயம் தழைத்து வளரவேண்டுமென்பது இந்நூலின் உட்கருத்து.

## இந்துமத நூல்களிலுள்ள மிக முக்கியமான செய்திகள்

இந்துமத நூல்களிலுள்ள மிக முக்கியமான செய்திகள் இரண்டு.

1. இந்த உலகைக் காப்பது தர்மம். தர்மம் என்பது சத்தியம், தயை, அமைதி, அகிம்சை ஆகியவற்றைக் கொண்டது. தர்மம் மனிதநேயத்தை வளர்க்கக் கூடியது. தர்மத்தின் எதிரானது அதர்மம். அதர்மம் மனிதநேயத்தை அழிக்கக்கூடியது. எனவே அதர்மத்தை அழித்துத் தர்மத்தைக் காக்கவேண்டும்.

2. மனத்தையும் சினத்தையும் அடக்கி மனிதனாக வாழ்ந்து கடவுளை அடைய வேண்டும்.

## வழிபாட்டு முறை

இந்து மதத்தில் முக்கியமாக மூன்று வழிபாட்டு முறைகள் இருக்கின்றன.

அவை: 1. பிரபஞ்ச வழிபாடு
2. உருவ வழிபாடு
3. அருவ வழிபாடு

## பிரபஞ்ச வழிபாடு

இந்துக்களில் சிலர் இந்தப் பிரபஞ்சத்தையே கடவுளாக வழிபடுகின்றனர். இந்தப் பிரபஞ்சம் நிலம் (மண்), நீர் (தண்ணீர்), நெருப்பு (தீ), காற்று (வாயு) மற்றும் ஆகாயம் (பரந்த வெளி) ஆகிய பஞ்ச பூதங்களால் ஆனது. ஆதிகால மக்கள் இந்தப் பஞ்ச பூதங்களைக் கடவுளாக வழிபட்டு வந்தனர். தற்போது இந்த வழிபாட்டு முறை இருந்து வருகிறது. காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் ஆலயத்தில் மண்ணை மூலமாக வைத்து வழிபாடு நடக்கிறது. திருவானைக்காவல் சிவன்கோவிலில் தண்ணீர் மூலத்தானத்தில் வைத்து வழிபாடு நடக்கிறது. திருவண்ணாமலையில் மலைமேல் தீபம் ஏற்றி அக்கினி (தீ) வழிபாடு நடக்கிறது. தென் கைலாயம் எனப் போற்றப்படும் சிவத்தலமான காளகஸ்தி வாயுலிங்கேஸ்வரர் கோவிலில் காற்றை (வாயு) மூலமாக வைத்து வழிபாடு நடக்கிறது. சிதம்பரம் நடராசர் கோவிலில் பரந்த வெளியை (ஆகாயம்) நோக்கித் தீபாராதனை செய்து வழிபாடு நடக்கிறது.

## உருவ வழிபாடு

ஒரே கடவுளுக்குப் பல பெயர்கள் கொடுத்து, அவற்றிற்குப் பல வடிவங்கள் கற்பித்து, அவ்வடிவங்களில் உருவங்கள் செய்து இந்துக்களில் பலரும் வழிபட்டு வருகின்றனர். கடவுளை வழிபட ஆண் பெண் வடிவங்களில் உருவங்கள் செய்யப்படுகின்றன. ஆண் வடிவத்தில் சிவன், விஷ்ணு, கணபதி, முருகன் முதலான பெயர் களிலும் உருவங்கள் வடிவமைக்கப்படுகின்றன. உருவங்கள் பெரும்பாலும் கற்சிலைகளாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான சிலைகள் கருங்கல்லில் (கறுப்பு நிறக் கல்லில்) செய்யப்படுகின்றன.

கருங்கல்லில் சிலைகள் செய்யப்படுவதற்குச் சில காரணங்கள் இருப்பதாக இந்துசமய அறிஞர்கள் கூறுகின்றனர். இந்தப் பிரபஞ்சம் பஞ்சபூதங்களால் ஆனது. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் பஞ்சபூதங்களினுடைய அம்சம். கல்லில் நிலத்தினுடைய அம்சம் (மண்தரிகள்) இருக்கின்றன. கல்பொடிந்து மண் உண்டாகின்றது. கல்லில் நீர், காற்று ஆகியவற்றின் அம்சங்கள் உள்ளன. இவை இருப்பதால்தான்

கல்லினுள் தேரை வாழ்கின்றது. கல்லில் நெருப்பின் அம்சம் இருக்கின்றது. எனவேதான் இரண்டு கற்கள் உரசும்போது தீ (நெருப்பு) உண்டாகின்றது. பூமிக்கு மேலேயிருக்கின்ற கற்கள் ஆகாயத்தை நோக்கியிருக்கின்றன. எனவே ஆகாயத்தின் அம்சமும் கல்லில் இருக்கின்றது. எனவே கருங்கல்லில் விக்கிரகங்கள் செய்து அவற்றைக் கோவில்களில் பிரதிட்டை செய்து கடவுளை வழிபடுகின்றனர்.

சில கோவில்களில் கல் விக்கிரகங்களுக்குப் பதிலாகப் பஞ்ச உலோக விக்கிரகங்கள், வெள்ளி, தங்கம் முதலானவற்றால் செய்யப்பட்ட விக்கிரகங்கள் ஆகியவற்றை வைத்தும் கடவுளை வழிபடுகின்றனர்.

உருவ வழிபாட்டில் வெளிப்புற வழிபாடு, உட்புற வழிபாடு என்று இரண்டு வகைகள் இருக்கின்றன.

உருவத்திற்கு நீரால் சுத்தம் செய்வது, பூக்களால் அர்ச்சனை செய்வது, அலங்காரம் செய்வது, நைவேத்தியம் வைப்பது, ஆரத்தி எடுப்பது முதலான ஆசாரங்களால் கடவுளை வழிபடுவது வெளிப்புற வழிபாடு எனப்படுகிறது. வெளிப்புற வழிபாட்டில் முக்கியமாக 16 உபசாரங்கள் இருப்பதாக ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் கூறுகிறார். அவற்றின் விவரம்:

1. மூர்த்தியில் கடவுளைத் தியானிப்பது.
2. மூர்த்தியில் கடவுளை ஆவாகிப்பது.
3. ஆவாகித்த கடவுளுக்கு இருக்க ஆசனமளிப்பது.
4. ஆசனத்தில் அமர்ந்த கடவுளுக்கு அர்க்கியம் அளிப்பது.
5. ஆசனத்தில் அமர்ந்த கடவுளுக்கு ஆசமனம் அளிப்பது.
6. கடவுளுக்கு பால், தயிர் முதலியவற்றால் அபிஷேகம்.
7. கடவுளுக்கு ஆடை அணிவித்தல்.
8. கடவுளுக்குச் சந்தனம் அணிவித்தல்.
9. பூக்களால் அலங்காரம், அர்ச்சனை முதலியன செய்தல்.
10. தூபம் காட்டுதல்.
11. தீபம் காட்டுதல்.
12. நிவேதனம் செய்தல்.
13. அனேக விதமான ஆரத்திகள் (கற்பூரம்) காண்பித்தல்.
14. பிரதட்சணம் செய்தல்.
15. பூக்களாலபிசேகம் செய்தல்.
16. வணங்குதல்.

மேலே கூறப்பட்டுள்ள உபசாரங்களை மானசீகமாகப் பொருள் செலவில்லாமல் ஆராதனை செய்வது உட்புற வழிபாடு எனப்படுகிறது. இதனை மானசீகப் பூசை என்றும் சொல்வர்.

உருவ வழிபாடு குறித்து, சுவாமி விவேகானந்தர் "உயர்ந்த ஆன்மிக உண்மைகளைப் புரிந்துகொள்வதற்குப் பக்குவப்படாதவர்களின் முயற்சிதான் உருவவழிபாடு" என்று கூறியிருக்கிறார். அதுபோல், இராமகிருஷ்ண பரமகம்சர் "ஆரம்பக் காலத்தில் உருவ ஆராதனை அவசியம். இறை ஆனந்தம் அடைந்த பிறகு அவசியமில்லை" என்று கூறியிருக்கிறார்.

## அருவ வழிபாடு

உருவம் இல்லாமல் கடவுளை வழிபடுவது அருவவழிபாடு. அருவ வழிபாட்டில் பல வகைகள் இருக்கின்றன. அவற்றுள் தியான வழிபாடு, சோதி வழிபாடு, நிழல் வழிபாடு ஆகியவை முக்கியமானவையாகும்.

மனத்தில் கடவுளை நிறுத்தி வழிபடுவது தியான வழிபாடு. தியானம் எப்படி செய்யவேண்டும் என்பது குறித்துக் கீதாத் தத்துவ விவேசனீ ஆசிரியர் ஜெயதயால் கோயந்தகா சில அறிவுரைகளைத் தந்திருக்கிறார். அவை:

> தியானம் செய்யும்போது உள்ளத்தில் இராக—துவேசம், மகிழ்ச்சி—துயரம், காம—குரோதம், தீய விளைவுகள், உலகியல் சங்கல்ப—விகல்பங்கள் இவை முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும்.
>
> வைராக்கியத்தால் மனத்தை முற்றிலும் தூய்மையாக்கி, அமைதியடையச் செய்து தியானம் செய்யவேண்டும்.
>
> தியானம் செய்யும்போது தூக்கம், சோம்பல், கவனமின்மை முதலிய இடையூறுகளிலிருந்து தப்பித்து, நன்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
>
> தியானிக்கப்படும் பொருளை நோக்கிச் சித்தம் ஒருங்கே முழுமையாக இருக்க வேண்டும்.
>
> தியானிக்கப்பட வேண்டிய பொருள் கடவுள். கடவுளினுடைய எந்த உருவத்தில் எளிதாக மனம் இலயிக்குமோ அந்த உருவத்தைத் தியானம் செய்யலாம்.

கடவுள் ஒளிமயமாக இருக்கிறார். உயிர்கள் அனைத்துக்கும் கடவுள் ஒருவரே. கடவுளைச் சோதி வடிவில் உண்மை அன்பால் வழிபடுதல் சிறந்தது என்பது வள்ளலாரின் கொள்கை. வள்ளலார் ஒரு கண்ணாடி முன் விளக்கை ஏற்றி வைத்து அதன் முன்பிருந்து மனத்தூய்மையுடன் மனத்தை ஒருமுகப்படுத்திக் கடவுளைச் சோதி வடிவில் வழிபட்டு வந்தார். அவர் "அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணையாக"க் கடவுளைக் கண்டு உலகிற்கு உணர்த்திப் பெருமை பெற்றார். வள்ளலாரின் சன்மார்க்க சங்கத்தினரும், மற்றும் பலரும் இந்தச் சோதி வழிபாட்டு முறையைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம், சுவாமித்தோப்பில் அவதரித்த அய்யா வைகுண்டர் சுவாமி அவர்களின் வழியைப் பின்பற்றி வருகின்ற 'அய்யா வழியினர்', அவர்களுடைய வழிபாட்டுத் தலங்களான 'பதிகள்' மற்றும் 'நிழல் தாங்கல்'களில் வைக்கப்பட்டுள்ள கண்ணாடியில் பார்த்துத் தெரிகின்ற தங்கள் நிழலைக் கடவுளாக வழிபடுகின்றனர். இதில் இரண்டு தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. அவை:

1. இந்து மதத்திலுள்ள நான்கு வேதங்களில் ஒன்றான சாம வேதத்திலுள்ள மகாவாக்கியம் 'தத்துவமசி'. சீவாத்மாவாகிய நீ பரமாத்மாவாகிய கடவுளினுடைய ஓர் அம்சமாக இருக்கிறாய் என்பது அதன் பொருள். அதாவது, கடவுள் நம் ஒவ்வொருவரிடமும் இருக்கிறார் என்று பொருள். ஒருவர் தமது நிழலைக் கண்ணாடியில் காணும்போது பரமாத்வாகிய கடவுள் தன்னிடமும் இருக்கிறார் என்ற உணர்வு ஏற்படுகிறது. எனவே தம்மிடம் இருக்கின்ற கடவுளை தம்முடைய வடிவில் கண்ணாடிமூலம் நிழலாகக் கண்டு அதனை வழிபடுகின்றனர்.

2. கண்ணாடியானது அழுக்குபடாமல் சுத்தமாகயிருந்தால் பார்ப்பவருடைய நிழல் அதில் நன்றாகத் தெரியும். கண்ணாடியில் அழுக்கு படிந்தால் அதில் பார்ப்பவருடைய நிழல் மங்கலாகத்தான் தெரியும். அழுக்கு மிகவும் கூடுதலாகப் படிந்திருந்தால் பார்ப்பவருடைய நிழல் அதில் தெரியாது. நம்முடைய மனதானது கண்ணாடி போன்றது. ஒருவரது கண்ணாடி போன்ற மனத்தில் தீய எண்ணங்களாகிய அழுக்கு படிந்துவிட்டால் அம்மனத்தால் கடவுளை அறிய முடியாது; அவருக்குக் கடவுளினுடைய அருளும் கிடைக்காது.

# 2. சமண மதம்

சமண மதத்தினுடைய வரலாறு, சமண சமய நூல்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியன இங்கு இடம்பெறுகின்றன.

**வரலாறு**

சமண மதம் இந்தியாவில் தோன்றிய மதம். சமண மதத்தின் அடிப்படைக் கொள்கை அகிம்சை, அதாவது உயிரினங்களுக்குத் துன்பம் கொடுக்காமலிருப்பது. முற்காலத்தில் கடவுளின் பெயரால் உயிர்ப் பலியிடும் வழக்கம் இந்துமதத்தில் இருந்து வந்தது. அந்த வழக்கத்திற்கு எதிராகத் தோன்றிய மதம் சமண மதம். இந்த மதம் கி.மு. 6ஆம் நூற்றாண்டில் வர்த்தமான மகாவீரரால் தோற்றுவிக்கப் பட்டது. சமண மதம் வர்த்தமான மகாவீரரால் தோற்றுவிக்கப் பட்டாலும், அவரது காலத்திற்கு முன்பே சமணக் கொள்கை இருந்து வந்திருக்கிறது. அந்தக் கொள்கையை வளர்த்தவர்கள் தீர்த்தங்கரர்கள், தீர்த்தங்கரர் என்றால் தீர்க்கதரிசி என்று பொருள்.

வர்த்தமான மகாவீரருக்கு முன்பு ஆதிநாதர் முதற்கொண்டு பார்சுவநாதர் வரை 23 தீர்த்தங்கரர்கள் இருந்திருக்கின்றனர். வர்த்தமான மகாவீரர் 24ஆவது தீர்த்தங்கரர். தீர்த்தங்கரர்கள் ஜினர்கள் என்று பெயர் பெற்றனர். ஜினர்கள் என்றால் தீய உணர்வுகளை அழித்தவர்கள் என்று பொருள். ஜினர்களைப் பின்பற்றியவர்கள் ஜைனர்கள் ஆயினர். ஜைனர்கள் தமிழில் சமணர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். வர்த்தமான மகாவீரருக்கு முன்பிருந்த தீர்த்தங்கரர்கள் கூறிச் சென்ற கருத்துக்களையும், கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு வர்த்தமான மகாவீரர் ஜைன மதத்தை (சமண மதத்தை)த் தோற்றுவித்தார்.

வர்த்தமான மகாவீரர் உட்படவுள்ள 24 தீர்த்தங்கரர்களின் பெயர் விவரங்கள் இங்கே கொடுக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. ஆதி நாதர் (ரிசபதேவர்) | 2. அஜித நாதர் |
| 3. சம்பவ நாதர் | 4. அபிநந்தனர் |
| 5. சுமதிநாதர் | 6. பத்மப்பிரபர் |
| 7. சுவார்சுவநாதர் | 8. சந்திரபிரபர் |
| 9. புஷ்பதந்தர் (சுவிதிநாதர்) | 10. சீதளநாதர் |
| 11. சிரேயேம்சநாதர் | 12. வாசுபூஜ்யர் |
| 13. விமலநாதர் | 14. அநந்தநாதர் |
| 15. தர்மநாதர் | 16. சாந்திநாதர் |
| 17. குந்துநாதர் | 18. அரநாதர் |

19. மல்லிநாதர் 20. முனிசுவரதர்
21. நமி நாதர் 22. நேமிநாதர்
23. பார்சுவநாதர் 24. மகாவீரர் (வர்த்தமானர்)

முதல் தீர்த்தங்கரராகிய ரிசபதேவர் (விருசபதேவர்) ஆதிநாதர் எனும் பெயர் பெற்றவர். ஆதிநாதராகிய அவரையே சமண சமய நிறுவனர் எனலாம் என்றும் கூறப்பட்டு வருகிறது. 23ஆவது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதர் கி.மு. 8ஆம் நூற்றாண்டினர். மகாவீரருக்கு ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டவர். 24வது தீர்த்தங்கரராகிய மகாவீரர் கி.மு. 599இல் பிறந்தார். அவர் 72 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார். கி.மு. 527இல் முக்தி பெற்றார்.

**வர்த்தமான மகாவீரருடைய வாழ்க்கை வரலாறு (கி.மு.599–527)**

வர்த்தமான மகாவீரர் வடஇந்தியாவில், பீகார் மாநிலத்தில், குண்டலபுரம் என்னும் நகரில், அரசகுடும்பத்தில் கி.மு. 599இல் பிறந்தார். அவரது இயற்பெயர் ‘வர்த்தமானர்’. மகாவீரர் என்பது பெயருடன் பிற்பாடு சேர்க்கப்பட்டதாகும். மகாவீரரின் தந்தை வைசாலி இராச்சியத்தின் மன்னர் சித்தார்த்தன். தாயார் மகாராணி திருசலாதேவி.

**இளமைப்பருவம்**

வர்த்தமானரைச் சீராட்டி வளர்க்க ஐந்து தாதியர்களைத் திரிசலை நியமித்தாள். அவர்களில் தேவானந்தை என்பவர் வர்த்தமானரின் செவிலித்தாயாக இருந்து கவனித்து வந்தாள். பெற்ற தாயினும் மேலாக அக்குழந்தை மீது அன்பையும் பாசத்தையும் தேவானந்தை வர்த்தமானன் மீது எல்லையற்ற பாசத்துடனிருந்தாள். தேவானந்தை வைத்திருந்ததைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப் பட்டனர். வர்த்தமானரும் தன்னுடைய பெற்ற தாயைப் போலவே தேவானந்தை மீது அன்பும் மதிப்பும் வைத்திருந்தார்.

குழந்தைப் பருவத்திலேயே வர்த்தமானர் அழகும், கவர்ச்சியுமாக அதிசுந்தரனாகக் காணப்பட்டார். சிறுகுழந்தையாக இருக்கும்போதே தனிமையில் சிந்தனையில் மூழ்கியிருப்பதைக் கண்ட தந்தை சித்தார்த்தனின் மனம் பேதலித்தது. க்ஷத்திரிய குலத்தில் பிறந்த தன் மகன் வலிமையும் வீரமும் மிக்க இராஜகுல வாலிபனாகத் திகழவேண்டுமென்று சித்தார்த்தன் விரும்பினார். எனவே சித்தார்த்தன் தன்னுடைய மூத்தமகனான நந்திவர்த்தனுக்கு அளித்து வந்த வில்வித்தை, குதிரை ஏற்றம், யானை ஏற்றம், தேர் ஓட்டுதல் போன்ற பயிற்சிகளை வர்த்தமானருக்கும் அளித்தார். வர்த்தமானரும் அனைத்துப் பயிற்சிகளிலும் தேர்ந்து விளங்கினார்.

## மதம் பிடித்த யானையை அடக்கியது

வர்த்தமானருக்குப் பன்னிரண்டு வயதானபோது ஒருநாள் நண்பர்களுடனும், அண்ணன் நந்திவர்மனுடனும் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது மதம் பிடித்த யானையொன்று அங்கு வந்தது. உடனே எல்லோரும் அலறியடித்து நாலாபக்கமும் ஓடினர். ஆனால் வர்த்தமானர் எங்கும் ஓடாமல் அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தார். யானை அவரிடம் வந்ததும், அந்த மதம் பிடித்த யானைமீது ஏறி அமர்ந்து அதை அடக்கிச் சாந்தப்படுத்தினார். அதைப் பார்த்து அனைவரும் வியப்படைந்தனர்.

## ஆடம்பர வாழ்க்கையை விரும்பாதவர்

வர்த்தமானர் ஆடம்பர வாழ்க்கையை விரும்பாமல் எளிய வாழ்க்கையில் விருப்பம் காட்டினார். எளிய உணவையே விரும்பி உண்டார். பஞ்சணைக் கட்டிலில் படுத்து உறங்காமல் வெறும் தரையிலேயே படுத்து உறங்கினார். வர்த்தமானரின் நடவடிக்கைகளை உற்றுக் கவனித்து வந்த தாயார் திரிசலைக்குக் கவலை ஏற்பட்டது. வர்த்தமானருடைய தத்துவப் பேச்சுகளும் உலகத்தோடு ஒட்டாத செயல்களும் அவன் துறவியாகிவிடுவானோ என்ற அச்சத்தைத் திரிசலைக்கு ஏற்படுத்தியது.

## மணவாழ்க்கை

திரிசலை ஒருநாள் தன் மகன் வர்த்தமானரிடம் சென்று “மகனே உன் செயல்பாடுகளைக் கண்டு நான் அச்சப்படுகிறேன்” என்றாள். “எதைக் கண்டு அச்சப்படுகிறாய் அம்மா” என்று வர்த்தமானர் கேட்டார். “நீ என்னை விட்டுவிட்டுத் துறவியாகப் போய்விடுவாயோ என்று நான் கவலைப்படுகிறேன்” என்றாள் தாய். “துறவைக் கண்டு நீங்கள் ஏன் அச்சப்படவேண்டும். அது எல்லாவற்றையும் விட மேலான நிலைதானே” என்றார் வர்த்தமானர். “மேன்மையான நிலைதான், என்றாலும் அது உனக்கு வேண்டாம் மகனே” என்றாள் தாய். இப்படியே மாறிமாறித் தாயும் மகனும் பேசிக் கொண்டேயிருந்தனர். பிறகு தாய் திரிசலை ஒரு முடிவிற்கு வந்தார். வர்த்தமானருக்குத் திருமணம் செய்துவைத்தால் துறவு பற்றிய சிந்தனை மறந்துபோகும் என்று தீர்மானித்தார். தன் கணவர் சித்தார்த்தருடையவும் விருப்பப்படி வர்த்தமானருக்குத் திருமணம் நடத்தி வைப்பதற்கான ஏற்பாடுகள் ஆயின. யசோதை என்ற அண்டைநாட்டு இராசகுமாரியை வர்த்தமானருக்கு மணம் செய்து வைத்தனர். அவர்கள் இல்லற வாழ்க்கை நடத்தினர். அவர்களுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குப் பிரியதர்சினி என்று பெயர் சூட்டினர். வர்த்தமானர் இல்லற வாழ்க்கை நடத்திவரவே

அவருக்குத் துறவறத்தில் நாட்டம் சென்றது. அவர் துறவறம் செல்லத் தீர்மானித்தார்.

## துறவறத்துக்குச் செல்லுதல்

துறவறத்திற்குச் செல்லும் வர்த்தமானர் தம்முடைய ஆடை ஆபரணங்களை ஏழை எளிய மக்களுக்குத் தானமாகக் கொடுத்தார். ஒரே ஓர் ஆடையை மட்டும் உடுத்துக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டார். ஷாண்டவனத்திலுள் ஓர் அசோக மரத்தடியில் இருந்து தவம் செய்யத் தொடங்கினார். அப்போது ஒரு நாள் சோமதத்தன் எனும் பிராமணன் வர்த்தமானரிடம் வந்து தான் பரம ஏழை என்றும், தனக்கு ஏதாவது தானமாக வேண்டுமென்றும் கேட்டான். வர்த்தமானர் சோமதத்தனை ஒரு கணம் பார்த்துவிட்டு, தான் உடுத்தியிருந்த ஆடையில் பாதியைக் கிழித்து அவருக்குக் கொடுத்தார். மீதியுள்ள பாதியை மட்டும் உடுத்திக்கொண்டு தவத்தில் நின்றார். சிறிது நேரத்தில் அந்தப் பாதி ஆடையும் அவிழ்ந்து இடுப்பிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது.

வர்த்தமானரிடமிருந்து தனக்குக் கிடைத்த பாதி ஆடையை விற்றுப் பணம் பெறச் சோமதத்தன் ஒரு வியாபாரியிடம் சென்றான். வியாபாரி ஆடையைப் பார்த்தான். அது மிகவும் விலை உயர்ந்த ஆடை. அவ்வாடைக்கு 100 தங்கக்காசுகள் தருவதாகவும், மீதியுள்ள பாதி ஆடையைக் கூடக் கொண்டு வந்தால் அதற்கு 300 தங்கக்காசுகள் தருவதாகவும் வியாபாரி சோமதத்தனிடம் கூறினான். சோமதத்தனுக்குப் பேராசை வந்துவிட்டது. வர்த்தமானிரிடமிருந்து பாதி ஆடையையும் கூட எப்படியாவது பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு அவன் மீண்டும் வர்த்தமானர் தவம் செய்து கொண்டிருந்த இடத்திற்கு வந்தான். அங்கே வர்த்தமானர் ஆழ்ந்த தவத்தில் நின்றுகொண்டிருப்பதையும் அவரது இடுப்பிலிருந்து நழுவிக் கீழே விழுந்து கிடக்கின்ற பாதி ஆடையையும் பார்த்தான். உடனே சத்தமின்றி மெதுவாகச் சென்று அந்த ஆடையை எடுத்தான். அதை வியாபாரியிடம் கொடுத்து அவரிடம் தங்கக்காசுகளைப் பெற்றுச் சென்றான்.

தவத்திலிருந்து விழித்த வர்த்தமானர் தான் உடுத்தியிருந்த ஆடையைப் பார்த்தார். ஆடையைக் காணவில்லை. தனது ஆடையைச் சோமதத்தன் திருடியதை வர்த்தமானர் ஊகித்தறிந்தார். தன்னுடைய ஆடைதானே சோமதத்தனுடைய பேராசைக்குக் காரணம் என்பதை உணர்ந்த வர்த்தமானர், அப்பொழுது முதலே திகம்பரரானார். (எந்த ஆடையுமே அணியாத துறவி). 'திகம்பரர்' என்ற வார்த்தை சமண மதத்தில் உள்ள வார்த்தையாகும்.

வர்த்தமானர் எங்கும் திகம்பரராகவே அலைந்தார். யாராவது சோறு போட்டால் அதைக் கையிலேயே வாங்கி உண்டார். அவர் பிச்சையெடுக்கும் திருவோடு கையில் வைத்திருக்கவில்லை. அவர் மற்ற துறவிகளைப் போல் திருநீரோ ருத்திராட்சமோ அணியவும் இல்லை. அவர் வெற்று நிலத்தில் ஆங்காங்கே படுத்து உறங்கினார். அவரது உடலில் பூச்சிகள் ஊர்ந்தால் அவற்றிற்கு எவ்விதக் கெடுதியும் ஏற்படாதவாறு அவற்றை எடுத்து வெளியே விடுவார். திகம்பரராய் அவர் திரிவதைக் கண்ட மக்கள் அவரிடம் நீ யார்? என்று கேட்டாலும் அவர் பதில் எதுவும் கூறுவதில்லை. அவர் எவ்விதப் பதிலும் சொல்லாமல் போவதைக் கண்ட சிலர் அவரைப் பலவாறாகத் துன்புறுத்தினர். ஆனால் அவர் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு அவர்களிடம் பதில் எதுவும் கூறாமல் சென்றார்.

### மனைவி யசோதை வர்த்தமானரைச் சந்தித்தது

வர்த்தமானர் ஷாண்ட வனத்திலிருந்து குந்தபுரத்திற்குச் சென்றார். குந்தபுரத்திலுள்ள கும்மாரம் என்ற இடத்தில் அவர் தங்கினார். அங்கே அவர்தம் மனைவி யசோதை வந்தாள். யசோதை வர்த்தமானருக்குப் பல ஆறுதல் வார்த்தைகள் கூறி அவரைத் திரும்பவும் அரண்மனைக்குக் கொண்டு செல்ல முயற்சித்தாள். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. யசோதை திரும்பிச் சென்றாள்.

### பாஹுலன் வர்த்தமானரைச் சந்தித்தது

கும்மாரம் என்ற இடத்திலிருந்து வர்த்தமானர் நாலந்தாவுக்கு அருகில் உள்ள கொல்லகம் என்ற இடத்திற்கு வந்தார். அங்கே பாஹுலன் என்ற பிராமண ஜமீன்தார் வர்த்தமானரிடம் அங்கேயே ஓர் ஆசிரமம் அமைத்து மெய்ஞ்ஞானத்தைப் பலருக்கும் போதிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு வர்த்தமானர் மெய்ஞ்ஞானத்தை நானே அறிந்தபாடில்லை, அப்படியிருக்கும்போது மற்றவர்களுக்கு எப்படி போதிப்பது, என்று பாஹுலனிடம் கூறினார். மேலும் மெய்ஞ்ஞானம் கிடைக்கும் வரை நான் அலைந்து திரியத்தான் வேண்டும். அது கிடைத்தபின், எனக்குத் தெரிந்ததை நிச்சயமாக மற்றவர்களுக்கும் கூறுவேன் என்று கூறிவிட்டுக் கொல்லகத்தை விட்டுக் காட்டிற்குப் புறப்பட்டார்.

### காட்டில் தவம்

காட்டில் இலந்தைப் பழத்தை மட்டும் உண்டு தவம் செய்து வந்தார். வர்த்தமானர் ஒரு நாள் தியானத்தில் இருக்கும்போது ஒரு புலி அங்கே வந்தது. ஆனால் அந்தப் புலி அவரைப் பார்த்துவிட்டு அப்படியே சென்று விட்டது. வர்த்தமான முனிவர் தியானத்தில்

இருக்கும்போது ஒரு நாள் கண்டகௌசிகன் எனும் கொடிய பாம்பு ஒன்று சீறிப் பாய்ந்து வந்தது. அது அவரது கால் கட்டைவிரலைக் கடித்தது. அதனால் வர்த்தமானருக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்பட வில்லை. ஒருநாள் வர்த்தமானர் ஒரு புதரின் பக்கத்தில் அமர்ந்திருந்து தியானத்தில் ஈடுபட்டார். அப்போது அவ்வழியே வந்த வியாபாரிகள் அந்தப் புதரின் பக்கத்தில் தங்கினர். அவர்கள் வர்த்தமானர் தியானத்தில் இருப்பதைக் கவனிக்கவில்லை. அவர்கள் அந்தப் புதர் அருகே நெருப்புக் கூட்டினார்கள். அந்நெருப்பு புதருக்கு வந்தது. புதரிலிருந்து அதன் பக்கத்தில் தியானத்தில் இருந்த வர்த்தமான முனிவருடைய கால்களைப் பற்றியது. தியானத்திலிருந்த வர்த்தமானர் இதை அறியவில்லை. அந்த வியாபாரிகள் நெருப்பு வர்த்தமான ருடைய காலில் பிடித்ததைப் பார்த்தனர். உடனே அவர்கள் ஓடிவந்து நெருப்பை அணைத்தனர். அப்போது வர்த்தமானர் தியானத்திலிருந்து விழித்துக்கொண்டார். அவர்களும் வர்த்தமானரிடம் நடந்ததைக் கூறினர். வர்த்தமானர் அப்போதுதான் தன் கால்களைப் பார்த்தார். அது கருகி இருந்தது. அதன்பின் அவர் அங்கிருந்து எழுந்து சென்றார்.

ஒருநாள் வர்த்தமானர் மரத்தடியில் அமர்ந்து தவம் செய்ய இருக்கும்போது அங்கே மாடு மேய்த்துக் கொண்டிருந்த ஒருவன் அவரிடம் வந்து தன்னுடைய மாடுகளைச் சிறிது நேரம் கவனித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டு வீட்டிற்குச் சாப்பிடச் சென்றான். அவன் சென்றபின் தவம் செய்ய இருந்த வர்த்தமானர் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கிப் போனார். அப்போது வீட்டிற்குச் சாப்பிடச் சென்ற மாடு மேய்ப்பவன் சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டான். அவன் தனது மாடுகளைத் தேடினான். அவற்றைக் காணவில்லை. நேராக வர்த்தமானரிடம் வந்தான். தன்னுடைய மாடுகளைக் காணாதது பற்றி அவரிடம் கேட்டான். அவர் தியானத்தில் மூழ்கியிருந்ததால் பதில் எதுவும் கூறவில்லை. ஆத்திரமடைந்த அந்த மாடு மேய்ப்பவன் தன் கையிலிருந்த கம்பால் வர்த்தமானரை அடித்தான். அவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்ததால் அவரது உடம்பில் அடிபட்டதைப் பற்றி அறிந்துகொள்ளவில்லை. மாடுமேய்ப்பவன் வர்த்தமானரை அடிப்பதைத் தூரத்தில் சிலர் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஓடி வந்து அந்த மாடு மேய்ப்பவனை அடிக்கத் துணிந்தனர். அப்போது வர்த்தமானர் தியானத்திலிருந்து விழித்தார். பக்கத்தில் நின்றவர் களிடம் அவனை அடிக்காதீர்கள், பழிக்குப் பழி வாங்குவது தவறு, ஹிம்சையினால் அழிவுதான் நேரும், மோட்சம் கிடைக்காது என்று கூறினார். வர்த்தமானர் அவ்வாறு கூறியதைக்கேட்டு அவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

## காட்டிலிருந்து அவருக்கு வரும் உபதேசம்

காட்டில் ஆறு மாதக் காலம் தவம் செய்த பின்பு அங்கிருந்து வர்த்தமானர் அஸ்திக்கிராமம் என்னும் ஊருக்குப் புறப்பட்டார். அஸ்திக்கிராமத்திற்கு அவர் போகும் வழியில் மக்களுக்கு உபதேசங்களை அருளினார். ஒரு சில துறவிகளும், ஒரு சில சாதாரண மக்களும் அவருடைய உபதேசங்களைக் கேட்டு அவர்மீது பகை கொண்டனர். அதன்மூலம் வர்த்தமானர் பல துன்பங்களுக்கு ஆளானார். அவரது உபதேசங்களில் சில இங்கே குறிப்பிடப்படு கின்றன.

> வேதமே எல்லாவற்றுக்கும் பிரமாணம் ஆகிவிடாது. அதில் குற்றங்குறைகளும் உண்டு. ஏதோ பெரிய ஜாதியில் பிறந்து விடுவதாலேயே சூத்திரர், பஞ்சமர் இவர்களைவிட மற்ற சாதியர் உயர்ந்தவர்கள் என்பதை ஒப்புக் கொள்வதற்கில்லை. தெய்வத்தை வேண்டிக் கொள்வதால் பலனுமில்லை. கடவுள்தான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்பதை நம்பமுடியாது. யாக யக்ஞங்கள் என்ற பெயரால் பிராணி களைப் பலியிடுவது தவறு, மகாபாவம். மெய்ஞ்ஞானத்தை நாடுவதாகச் சொல்லித் துறவிகள் என்று பெயர் வைத்துக் கொண்டு சிலபேர் சுகபோகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். தவத்தை மறந்து மெய்ஞ்ஞானத்தை நாடாமல் இப்படி அதை ஒரு தொழிலாகக் கொண்டு திரிவது இழிவு.

வர்த்தமானருடைய இது போன்ற உபதேசங்களைக் கேட்ட பலரும் ஆத்திரம் அடைந்தனர். அவர்கள் அவரை ஏசினர். கல்லால் அடித்தனர். அவரைக் கேவலப்படுத்தினர். ஆனால், வர்த்தமானர் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு "நாம் முன் பிறவியில் செய்த வினையின் பயனை, கர்ம பலனை, அனுபவித்துத்தானே ஆக வேண்டும்" என்று கூறிப் பொறுமையுடன் இருந்தார்.

வர்த்தமான முனிவர் அஸ்திக்கிராமத்திற்கு வரும் வழியில் பாழடைந்து கிடந்த சூலபாணியின் கோவில் ஒன்றில் இரவு தங்கினார். அங்கேயே வர்த்தமானர் தியானத்தில் அமர்ந்திருந்தார். அப்போது சிவபக்தர்கள் சிலர், சூலபாணியையும், வேதநாயகி அம்மையையும், வேதத்தையும் வர்த்தமானர் கேலி செய்தார் என்று கூறி அவரைத் தாக்கினார்கள். ஆனால் வர்த்தமானர் அத்தனை துன்பத்தையும் பொறுத்துக் கொண்டார். அப்போது, அவ்வழியே வந்த வழிப்போக்கன்

> சுவாமி, அவர்கள் இப்படி உங்களை மூர்க்கத்தனமாக அடித்த போதும் பதிலுக்கு அடிக்காமல் ஏன் சும்மா இருக்கிறீர்கள்

என்று கேட்டான். அதற்கு வர்த்தமானர்

> அப்பனே! ஆன்மிக வளர்ச்சிக்குக் கோபத்தை அடக்க வேண்டியது மிகவும் அவசியம். அன்பினால் பகையையும் அஹிம்சையினால் ஹிம்சையையும், பொருளைத் தானமாகக் கொடுப்பதால் அவாவையும் (ஆசையையும்), சத்தியத்தால் அசத்தியத்தையும் வெல்ல வேண்டும்.

என்றார். இவற்றைக் கேட்டதும் அவரை அடித்துத் துன்புறுத்தியவர்கள் திகைத்துப்போய் நின்றனர். அவர்கள் "சுவாமி எங்களை மன்னித்தருள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டே அவரது காலில் விழுந்தனர். வர்த்தமானரும் அவர்களை மன்னித்தருளினார். அதன்பின் வர்த்தமானர் அங்கிருந்து புறப்பட்டு அஸ்திக்கிராமம் போய்ச் சேர்ந்தார்.

## வர்த்தமானரும் கோசாலனும்

அஸ்திக்கிராமத்தில் மழைக்காலம் முழுவதும் தங்கியிருந்து மக்களுக்கு நல்லுபதேசங்களை அருளினார். அதன்பின் அங்கிருந்த நாலந்தாவிற்குச் சென்றார். நாலந்தா அப்போது மகத நாட்டின் தலைநகரான இராஜகிருதத்தின் ஒரு பகுதியாகயிருந்தது. வர்த்தமானர் நாலந்தாவில் கோசாலன் என்ற ஒரு நெசவுத் தொழிலாளியின் குடிசையில் தங்கினார். நாலந்தாவிலுள்ள செல்வச்சீமந்தர் விஜயன் என்பவர் கோசாலனின் குடிசைக்கு வந்த வர்த்தமான முனிவரை உபசரித்தார். இதைப்பார்த்த நெசவுத் தொழிலாளி கோசாலனுக்கு முனிவர் மீது அபரிமிதமான மரியாதை ஏற்பட்டது. உடனே அவர் வர்த்தமானரைப் பணிந்து அவரிடம் "சுவாமி, எனக்கு மெய்ஞ்ஞானம் சித்திக்கும்படி அருள்புரியுங்கள், என்னையும் தங்களோடு இருக்க அனுமதியுங்கள்" என்று வேண்டினான். ஆனால் வர்த்தமானர் அதற்கு உடன்படாமல் அங்கிருந்து சென்றுவிட்டார். இதைக்கண்ட கோசாலன் எப்படியாவது வர்த்தமானருடன் இருக்கவேண்டுமென்று உறுதிபூண்டான். அவன் தன்னுடைய சொத்துக்கள் யாவற்றையும் ஒருவருக்குத் தானம் கொடுத்துவிட்டு, தலைமுடி, தாடி, மீசை இவற்றையெல்லாம் மழித்து விட்டு வர்த்தமானரைத் தேடிப் புறப்பட்டான். அப்போது வர்த்தமானர் இலாடதேசத்தில் இருந்தார். கோசாலன் அவரை அங்கே சந்தித்தான். தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி மீண்டும் வேண்டினான். வரத்தமானர் கோசாலனின் வேண்டுகோளை ஏற்றார். அதன்பின் வர்த்தமான முனிவரும் கோசாலனும் ஆறு ஆண்டுகள் ஒருமித்தே இருந்தனர்.

வர்த்தமானரும் கோசாலனும் இலாடதேசத்திலுள்ள வஜ்ரபூமி எனும் இடத்திற்கு வந்தனர். அங்கே கொடிய காட்டுவிலங்குகளோடு காட்டுமிராண்டிகளும் இருந்தனர். காட்டுமிராண்டிகள் இரத்த வெறி பிடித்த வேட்டைநாய்களை வைத்துக்கொண்டு கொள்ளையும் கொலையும் செய்துவந்தனர். அக்காட்டுமிராண்டிகளிடம் வர்த்தமானர் அகிம்சை தத்துவத்தைப் போதித்தார். அவர்களுக்கு மிகுந்த ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டன. அவர்கள் வர்த்தமானர் மீது வேட்டை நாயை ஏவிவிட்டனர். ஆனால் வர்த்தமானர் எதுவுமே கூறாமல் அமைதியாயிருந்து எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டார். அப்போது அவரது சொந்த ஊரான குந்தபுரத்திலுள்ள மல்லர்கள் அங்கு வந்தனர். அவர்கள் தங்கள் ஊருக்கு வர்த்தமானர் எழுந்தருள வேண்டுமென்று வேண்டினர். அவர்களின் அழைப்பை ஏற்று வர்த்தமானர் இலாடதேசத்தை விட்டுக் குந்தபுரத்திற்குச் சென்றார். அதன்பின் இராஜகிருகத்தில் வந்து தங்கினார். அங்கே அவர் வேறு சமயத்தைச் சேர்ந்த சில துறவிகளைச் சந்தித்தார். வர்த்தமானர் அவர்களிடமும் பேச்சு கொடுத்தார். பேச்சு வாதத்தில் முடிந்தது. அப்போது வேறு சமயத்தைச் சோர்ந்த துறவிகள் வர்த்தமானரைப் பார்த்து இலாடதேசத்திலுள்ள காட்டுமிருகங் களையும், காட்டுமிராண்டிகளையும், வேட்டை நாய்களையும் கண்டு பயந்து அங்கிருந்து ஓடி வந்ததாக ஏளனம் செய்தனர். அதைக்கேட்ட வர்த்தமானர் திரும்பவும் இலாடதேசத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

இலாடதேசத்திற்குத் திரும்பவும் சென்ற வர்த்தமானர் மீது வேட்டை நாய்களைக் காட்டுமிராண்டிகள் ஏவிவிட்டார்கள். ஆனால் வர்த்தமானர் பயப்படாமல் அசையாமல் அமைதியுடன் நின்று கொண்டேயிருந்தார். காட்டுமிராண்டிகள் வர்த்தமானரையும், வேட்டை நாய்களையும் பார்த்துக் கொண்டே நின்றனர். தம்முடைய வேட்டை நாய்கள் பாய்ந்துவருவதைக் கண்டும், கண்டுகொள்ளாமல் தைரியமாக நின்றுகொண்டிருந்த வர்த்தமானரின் துணிவைக்கண்டு வியந்து நின்ற காட்டுமிராண்டிகள் "இவர் உண்மையிலேயே மகாவீரர் தான், சந்தேகமில்லை" என்று கூறிக்கொண்டே வர்த்தமானருடைய கால்களில் வீழ்ந்து வணங்கினர். வேட்டை நாய்களும் அப்படியே நின்றுவிட்டன. இதைக்கண்ட கோசாலன் இப்போது வர்த்தமானர் மீது பன்மடங்கு மதிப்பும் பக்தியும் கொண்டான். அக்காட்டுமிராண்டி களுடைய வாயிலிருந்து வந்த 'மகாவீரர்' என்ற வார்த்தை பிற்காலத்தில் வர்த்தமானருடைய பெயருடன் சேர்ந்து வர்த்தமான மகாவீரர் என்று அழைக்கப்படுவதாயிற்று.

வர்த்தமானரும் அவரது சீடரான கோசாலனும் இலாடதேசத் திலிருந்து புறப்பட்டுச் சித்தார்த்தகம் என்ற கிராமத்திற்குச் சென்றார்கள். அங்கே வேசாயனர் என்ற மகாமுனிவர் கைகளை

உயரத் தூக்கியபடி அசையாமலும் கண்கொட்டாமலும் சூரியனைப் பார்த்தபடி தியானத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டனர். அந்த மகாமுனிவரின் உடல் முழுவதும் பேன்கள் அடையாக அப்பிக் கொண்டிருந்தன. கோசாலன் அவரைப் பார்த்துவிட்டு "இதென்ன ரிஷியா பேன் அடையா?" என்று கேட்டான். அதனைக் கேட்டு வேசாயனருக்குக் கோபம் வந்துவிட்டது. தன் யோக சக்தியால் அவர் கோசாலனை எரிந்துபோகும்படி செய்ய முயன்றார். அதற்குள் மகாவீரர் அவரைத் தம்முடைய ஆற்றலால் தடுத்துக் கோசாலனைக் காப்பாற்றினார். மகாவீரர் அந்த முனிவரிடம் "முனிவர் பெருமானே! கோபம் பொல்லாதது என்பது உங்களுக்குத் தெரியாததா? எதிராளியை மட்டுமின்றிக் கோபமானது தன்னையும் அழித்துவிடும் என்பது தெரியாதா?" என்று கேட்டார். அதன்பின் "குணால தேசத்து ரிஷிகளின் கதையைச் சொல்கிறேன் கேளுங்கள்" என்று சொல்லி வர்த்தமானர் கதையைத் தொடங்கினார்.

குணால நாட்டில் கடும்பஞ்சம் நிலவிக் கொண்டிருந்தது. கடும் வறட்சியால் புல் பூண்டுகளெல்லாம் அழிந்துவிட்டன. குணால தேசத்து ரிஷிகள் இருவர் காட்டில் கடுந்தவம் செய்துகொண்டிருந்தனர். அவர்கள் அந்த ரிஷிகளின் காதுகளில் கேட்கும்படியாக "இவர்கள் எதற்காக இப்படி உடலை வருத்தித் தவம் செய்து கொண்டிருக் கிறார்கள். இவர்கள் நினைத்தால் மழை கொட்டிவிடுமா என்ன? என்று கேலி செய்துபேசினர். இதனைக் கேட்ட ரிஷிகள் கடுங்கோபம் கொண்டனர். அவர்கள் "விடாது பதினைந்து நாள்கள் அடை மழை கொட்டோ கொட்டென்று கொட்டட்டும்" என்று கத்தினர். அவ்வளவுதான். மழை கொட்டத் தொடங்கியது. காட்டாற்று வெள்ளம் போலக் கரைபுரள 15 நாள்கள் மழை கொட்டியது. குணால தேசத்திலிருந்தவற்றையெல்லாம் வெள்ளம் அடித்துச் சென்றது. அவற்றோடு சேர்ந்து அந்த இரண்டு ரிஷிகளையும் வெள்ளம் அடித்துச் சென்றதாம். மகாவீரர் இவ்வாறு கூறியதைக் கேட்டு வேசாயன முனிவர் கோபம் தணிந்தார். அவருக்கு மகாவீரர் மீது மிகுந்த அன்பும் பற்றுதலும் ஏற்பட்டன. அவர் மகாவீரருக்கு நன்றி தெரிவித்தார்.

மகாவீரர் சகல சித்திகளும் கைவரப் பெற்றிருந்தும் அவற்றை வெளிக்காட்டவில்லை. கோசாலனுக்கு மகாவீரரிடமிருந்து ஹடயோகம் எனும் அட்டமாசித்திகளை எப்படியும் கற்றுச் செல்வாக்குப் பெற வேண்டுமென்ற பேராவல் தோன்றியது. தன்னை அணுவைப் போல் சூட்சுமமாக்கிக் கொள்ளல், தன்னைப் பிரம்மாண்டமாக்கிக் கொள்ளல், கூடுவிட்டுக் கூடு பாய்தல் முதலான அட்டமாசித்திகளையெல்லாம் மகாவீரரிடமிருந்து கற்றுக்கொள்ளக் கோசாலன் அவரிடம் தொடர்ந்து வற்புறுத்தி வந்தான். அப்போது மகாவீரர்

> கோசலா! இந்த அட்டமாசித்தியெல்லாம் மனிதனை நிலையற்ற உலகத்தோடு இன்னும் பிணைத்து வைக்கும் விளையாட்டுக் கருவிகள் மாதிரியான பந்தங்கள் முக்திக்குத் தடையாக இருப்பவை. முக்தி நெறிக்குத் தடையாகயிருக்கும் இந்த மாதிரி விஷயங்களை யாருக்கும் கற்பிக்கவே கூடாது. ஆகவே நான் உனக்கு இதைச் சொல்லித்தர மாட்டேன்

என்று உறுதிபடக் கூறினார். கோசாலன் மகாவீரரின் மீது கோபம் கொண்டு மனதுக்குள் குமுறிக் கொண்டேயிருந்தான். அதன்பின் கோசாலன் ஹடயோக சாதனையில் தேர்ச்சி பெற்ற ஒரு குருவிடம் சென்று அட்டமாசித்திகள் யாவற்றையும் கைவரப் பெற்றான். அட்டமாசித்தி கைவரப் பெற்றதும் கோசாலனுக்கு ஆணவம் தலை தூக்கியது. தானும் ஒரு தீர்த்தங்கரர் என்று தானே சொல்லிக் கொண்டு கர்வப்பட்டான். 'ஆஜீவகம்' எனும் சம்பிரதாயத்தின் தலைவனாகி, வர்த்தமான மகாவீரருக்கும் அவரது கொள்கை களுக்கும் பரம எதிரியாகக் கோசாலன் செயல்பட்டான்.

கோசாலனின் பிரதான சீடன் சித்தலபுத்திரன். சித்தலபுத்திரன் வர்த்தமான மாகவீரருடைய கொள்கைகளில் நம்பிக்கை கொண்டவன். எனவே அவன் வர்த்தமான மகாவீரர் முன்னிலையில் சமணானான். இதையறிந்த கோசாலன் சினம் கொண்டான். அவன் மகாவீரரிடம் வந்து வாதம் நடத்தினான். அதில் அவன் தோற்றுப் போனான். அதன்பின் அவன் கடும் காய்ச்சலால் இறந்துவிட்டான்.

### மகாவீரருக்குக் கேவல்ய ஞானம் கிடைத்தது

கேவல்யஞானம் என்பது சகல தேவர், யூதர், மனிதர் ஆகியோர்களின் செயல்களை அறியும் ஞானம்.

வர்த்தமான மகாவீரர் மெய்ஞ்ஞானத்தை நாடிப் புறப்பட்ட பதின்மூன்றாம் ஆண்டில் ஜ்ரும்பிகாக் கிராமம் என்ற ஊருக்கு வந்து சேர்ந்தார். அந்தக் கிராமம் வழியாகப் பாய்கின்ற இரஜுபாலிகா என்ற ஆற்றின் வடகரையில் சியாமகன் என்ற ஒருவருக்குச் சொந்தமான நிலத்தில் ஓர் ஆலமரம் நின்றது. அந்த ஆலமரத்தின் மூட்டில் வர்த்தமானர் தியானத்தில் அமர்ந்தார். அந்தத் தியானத்தின்போது அவர் நீண்ட காலமாக எண்ணிக் கொண்டிருந்த எண்ணம் சித்தமாயிற்று. **அங்கே அவருக்கு ஞான வெளிச்சம் கிடைத்தது. அதுதான் கேவல்ய ஞானம்.** தாம் உள்பட எல்லோருடைய முக்காலப் பிறவி வரலாறும், எண்ணும் எண்ணங்களும், அந்தரங்கமான சொல்லும், செயலும் அவருக்குத் தெளிவாகத் தெரிந்தன. வர்த்தமான மகாவீரர் 'அர்ஹத் பரமேஷ்டி' அல்லது ஜீவன் முக்தராகிவிட்டார். அவருக்கே எல்லையற்ற ஆச்சரியத்தைத் தந்தது அந்த ஞான

வெளிச்சம். அவர் துன்புறும் ஜீவ கோடிகளுக்கு மனம் இரங்கினார். அவர் இருபத்தி நான்காவது தீர்த்தங்கரரானார்.

**கேவல்யஞானம் அடைந்தபின் செய்த முதல் உபதேசம்**

சம்சாரம் அல்லது இந்த உலக வாழ்வு துன்பம் நிறைந்தது. கேவல்ஞானம் எய்தினவருக்கே பேரின்பம் சித்திக்கும். நல்லெண்ணம் நற்செயல் இவையே மேலான நிலைமையை அளிக்கும்.

தீய எண்ணம், தீய செயல் இவை இழிநிலைக்குக் கொண்டு விடும். தன்னடக்கம் அல்லது சம்வரம் வாழ்வில் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதியாகும். அப்போதுதான் அரசனோ தெய்வமோ முந்தியவினையோ நம்மைப் பாதிக்க முடியாது. சம்சார பந்தத்தைப் போக்க இந்தச் சம்வரந்தான் மிகவும் அவசியமானது.

நற்கொள்கை, நல்லறிவு, நற்செயல் இவையே நிர்வாண நிலையை (மோட்சம்) அடைய உதவும். அது எல்லோர் கண்ணுக்கும் தெரிந்த ஒரு நிலையாகத் தோன்றினாலும் எளிதில் அடைய முடியாத, நிரந்தர நிலையாகும். அந்நிலை எய்தினவருக்கு மூப்பு, பிணி, சாவு எதுவும் இல்லை. என்னதான் முடிவின்றிப் பிரார்த்தித்தாலும் சரி, சடங்குகளும் அர்த்தமற்ற யாக யக்ஞங்களும் செய்தாலும் சரி, இன்பத்தில் மூழ்கித் திளைத்தாலும் சரி, அந்த நிலையை அடைய முடியாது.

அகிம்சை, சத்தியம், அங்நேயம், பிரம்மச்சரியம், அபரிக்கிரகம் இவையே நிர்வாணம் (மோட்சம்) எய்துவதற்குரிய சாதனங்கள்.

**உயிர்க் கொலையை எதிர்த்து வாதம் நடத்தியது**

கேவல்ய ஞானம் பெற்றபின் மகாவீரர் ஜ்ரும்பிகாக் கிராமத்திலிருந்து பக்கத்து ஊருக்குச் சென்றார். அங்கே சோமலாச்சாரியன் என்ற பணக்காரன் ஒருவன் ஒரு பெரிய யாகத்தை நடத்திக் கொண்டிருந்தான். அந்த யாகத்தில் ஏராளமான ஆடுகளைப் பலியிடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தான். சோமலாச்சாரியனின் வீட்டுக்கு அருகில் உள்ள ஒரு தோட்டத்தில் மகாவீரர் அகிம்சை, சத்தியம் பற்றி மக்களுக்குப் போதித்தார். "எல்லோரும் அகிம்சா மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அகிம்சையே சிறந்த அறம். அதற்கு அடுத்தபடியாகக் கடைப்பிடிக்க வேண்டியது வாய்மை (சத்தியம்)" என்று கூறி உபதேசம் செய்து கொண்டிருந்தார். மகாவீரரின் ஞானோபதேசங்களைக் கேட்ட சிலர் சோமலாச்சாரியனின் வீட்டுக்குச் சென்று மகாவீரரைப் பாராட்டிப் பேசினர். இதைக் கேட்ட சோமலாச்சாரியனும், யாகம் நடத்த வந்திருந்த பதினொன்று கணாதரர்களும் ஆத்திரம் அடைந்தனர்.

கணாதரர்களின் தலைவன் இந்திரபூதி. அவன் அவனுடன் வந்த பத்துக் கணாதரர்களையும் அழைத்துக்கொண்டு வர்த்தமான மகாவீரரிடம் சென்றான். இந்திரபூதி மகாவீரரைப் பார்த்து "அகிம்சை பற்றிப் போதிக்கிறீர்களாமே? இதுபற்றி வேதங்களில் பகவானே கூறியிருக்கும்போது யாகத்தில் ஆடுகளைப் பலியிடுவது எப்படி இம்சையாகும் என்று கேட்டான். அதற்கு மகாவீரர் "நீங்கள் தவறாகச் சொல்கிறீர்கள், பிராணிகளை பலியிடும்படி கடவுள் ஒருபோதும் கூறவில்லை, அறிவில்லாத மனிதன்தான் அவ்வாறு கூறியுள்ளான்" என்றார். அடுத்ததாக இந்திரபூதி கேட்டான் "வர்த்தமானரே, இந்த உலகத்தைக் கடவுள்தான் படைத்தார் என்பதையாவது நம்புகிறீரா, இல்லையா?" இதற்கு மகாவீரர் "ஒருபோதும் நான் நம்பவில்லை, கடவுள் ஏழை பணக்காரன், சுகம் அனுபவிப்பவன், துன்பம் அனுபவிப்பவன் என்பன போன்ற பாகுபாடுகளுடனா படைப்பார்?" என்று கேட்டார். அப்போது இந்திரபூதி அப்படியானால் அதற்கு காரணம் என்ன? என்று கேட்டார். அதற்குக் காரணம் முந்தைய வினைதான், முன் ஜென்மத்தில் நல்லது செய்திருந்தால் இந்த ஜென்மத்தில் நல்லது கிடைக்கும், முன்ஜென்மத்தில் தீயது செய்திருந்தால் இந்த ஜென்மத்தில் தீயதுதான் கிடைக்கும், என்று மகாவீரர் கூறினார். இந்திரபூபதி விடவில்லை. திரும்பத் திரும்ப மகாவீரரிடம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டேயிருந்தான். இந்திரபூதி கேட்டான், "நீங்கள் ஏன் சாதி வித்தியாசம் பாராமல் எல்லோருக்கும் உபதேசம் செய்கிறீர்கள்?" இதற்கு மகாவீரர், "உலகத்தின் சிருஷ்டி"யில் இரண்டே இரண்டு சாதிப்பிரிவுகள்தாம் உண்டு; ஒன்று ஜீவன் உள்ளது, அதாவது உயிர் உள்ளது; இனியொன்று உயிரற்றது". என்றார். மேலும் பல கேள்விகளை இந்திரபூதியும் மற்றும் கணாதரர்களும் அடுக்கடுக்காகக் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். எல்லாக் கேள்விகளுக்கும் மகாவீரர் தக்க பதில்களைக் கொடுத்துக் கொண்டேயிருந்தார். மகாவீரருடைய விளக்கம் அவர்களை மனம் திரும்ப வைத்தது. அவர்கள் மகாவீரரின் கால்களில் விழுந்து வணங்கினர். அவர்கள், "சுவாமி எங்களுக்கு மேலும் பல உபதேசங்களைத் தாருங்கள்" என்று கேட்டார்கள். அதன்படி வர்த்தமான மகாவீரர் அவர்களுக்குப் பல உபதேசங்களைக் கொடுத்தார். அவர்களெல்லாம் நல்லவர்கள் ஆனார்கள். அவர்கள் உயிர்ப் பலியிடுவதை நிறுத்தினர்.

**ஜைன சங்கம் தோன்றியது**

மேலே கூறப்பட்டுள்ள இந்திரபூதி உள்படவுள்ள பதினோரு கணாதரர்களும் அவர்களுடைய சீடர்கள் 4,200 பேர்களும் மகாவீரருடைய உபதேசங்களைக் கேட்டு அவரை வணங்கிப்

புகழ்ந்தார்கள். அவர்கள் "எங்களையும் சிரமணர்களாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று மகாவீரரிடம் வேண்டினர். மகாவீரர் அவர்களைப் பார்த்து "இனிமேல் நீங்கள் அகிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மச்சரியம், அபரிக்கிரகம் என்ற ஐந்து கொள்கை களையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறினார். அவர்களும் அப்படியே செய்தனர். அவர்கள் எல்லோரும் சிரமணர்கள் (சமணத் துறவிகள்) ஆயினர். அவர்களை மகாவீரர் ஏற்றுக் கொண்டார். பதினொரு கணாதரர்களுடனும் 4,200 சீடர்களுடனும் 'ஜைனசங்கம்' என்ற பெயரில் சமணர்களுடைய ஒரு சங்கம் உருவாயிற்று.

## வர்த்தமானரின் செவிலித்தாய் தேவானந்தை துறவியானது

இராசகிருகத்திலிருந்து மகாவீரர் தாம் பிறந்த ஊரான குண்டலபுரத்துக்குப் புறப்பட்டார். அந்நகரில் சத்திரிய குண்டம், பிராமண குண்டம் என்ற இரண்டு பகுதிகள் இருந்தன. மகாவீரர் பிராமண குண்டத்துக்குச் சென்றார். அங்கே தம்முடைய செவிலித் தாயான தேவானந்தையையும் அவளுடைய கணவர் விருசபதத் தனையும் கண்டார். வர்த்தமான மகாவீரரைப் பார்த்ததும் அந்தச் செவிலித்தாய் தேவானந்தை ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அப்போது இந்திரபூதி வர்த்தமான மகாவீரரிடம் "என் தாய்" என்று பதில் கூறினார். அதன்பின் மக்கள் கூட்டத்தைப் பார்த்து உபதேசித்தார். அவரது உபதேசங்களைக் கேட்ட தேவானந்தையும் அவளது கணவன் விருசபதத்தனும் சமணர்கள் ஆக விரும்புவதாக வர்த்தமான மகாவீரரிடம் கூறினார்கள். அவர்களின் விருப்பப்படி வர்த்தமான மகாவீரர் அவர்களைச் சமணர்களாக ஏற்றுக் கொண்டார். மகாவீரர் தொடர்ந்து மக்களுக்கு உபதேசங்களைக் கொடுத்துக் கொண்டேயிருந்தார்.

## மகாவீரரின் உபதேசங்களில் சில

நற்கொள்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இவற்றைப் பற்றியெல்லாம் விளக்கமாக மக்களுக்கு எடுத்துக்கூறி உபதேசித்தார். அவருடைய உபதேசங்களை மக்கள் மெய் மறந்து கேட்டனர். அவருடைய உபதேசங்களைக் கேட்க மக்கள் பெருந்திரளாகக் கூடினர். அவருடைய ஞானமொழிகளைக் கேட்டவர்கள் முக்தியடைய விரும்பினர். அவருடைய போதனைகளில் சில இங்கே குறிப்பிடப்படுகின்றன.

இந்த உலகத்தைப் பிரம்மா படைக்கவில்லை. எல்லாவற்றிற்கும் முந்தைய வினைதான் காரணம். தலைமயிரைப் பிடுங்கி எடுத்தால் துறவியாகவும் முடியாது, பூணூல் போட்டுக் கொள்வதால் பிராமணன்

ஆகிவிடவும் முடியாது. மௌனியாக இருந்தால் முனிவர் ஆகிவிட முடியாது. மாவுரி தரித்துக்கொண்டு காட்டில் வாழ்ந்தாலும் தவசி ஆக முடியாது. எல்லா உயிர்களையும் ஒரே மாதிரியாகக் கருதி அவற்றிடம் அன்பு செலுத்துவதனாலேயே சிரமணனாகவும் (சமண னாகவும்) சத்தியம், அகிம்சை, கல்வி, பிரம்மச்சரியம் ஆகியவற்றைக் கடைப்பிடித்தாலேயே பிராமணனாகவும், ஞானம், கருணை இவற்றாலேயே முனிவராகவும், எதன்மீதும் பற்றில்லாமல் வாழ்ந்து துறவு பூண்டால் மட்டுமே தவசியாகவும் முடியும். ஒவ்வொருவரும் அவரவர் செய்கை காரணமாகவே பிராமணனாகவும், சத்திரியனாகவும், வைசியனாகவும், சூத்திரனாகவும் ஆகிறார்களே தவிரப் பிறப்புதான் காரணம் என்பதற்கில்லை. இவ்இலட்சியங்களை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாவிட்டாலும் ஒழுக்கந்தவறாமல் நடப்பவர்களாக இருந்தால் அவர்கள் சொர்க்கம் செல்வர். தீய செயல்களைச் செய்தவர்கள் விலங்கு, புழு, பூச்சிகளாகப் பிறப்பர். இவர்களில் சிலர் சிறிதுகாலம் நரகத்தில் இருந்த பிறகு மறுபடியும் பிறப்பதுண்டு என்றும் உபதேசம் செய்தார் மகாவீரர்.

## மகாவீரரின் கடைசிக் காலம்

மகாவீரரின் கடைசிக் காலத்தில் சமண மதத்தில் ஒரு பிளவு ஏற்பட்டது. மகாவீரருடைய மருமகன் ஜாமாலி என்பவன் சமண மதத்தைத்தான் தலைமையேற்று நடத்திச் செல்லவேண்டுமென்று ஆசைப்பட்டான். அவன் மகாவீரரிடம் வந்து தானும் மற்றும் சில சமணர்களும் சேர்ந்து ஊர்ஊராகச் சென்று சமணக் கொள்கை களைப் பற்றிப் பிரச்சாரம் செய்யவிரும்புவதாகவும் எனவே அதற்கு அனுமதி தரவேண்டுமென்றும் கேட்டான். ஜாமாலியின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்ட மகாவீரர் அதற்கு அனுமதி வழங்கவில்லை. அதனால் ஆத்திரமுற்ற ஜாமாலி சில சமணர்களையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். பல இடங்களுக்கும், தன்னுடைய விருப்பப்படி சுற்றியலைந்துவிட்டு, சிரவஸ்தி நகரில் திண்டுகவனம் என்ற பூங்காவில் தங்கினான். அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு, சில ஆண்டுகள் ஊர் சுற்றித் திரிந்துவிட்டு, சம்பா நகருக்கு வந்து சேர்ந்தான். அங்கே மகாவீரர் இருந்தார். மகாவீரரைப் பார்த்து ஜாமாலி தனக்குக் "கேவல்யஞானம்" கிடைத்துவிட்டதாகக் கூறினான். அதை மகாவீரர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஜாமாலி அதன்பிறகு தன்னுடைய சீடர்களுடன் அங்கிருந்து சென்றுவிட்டான்.

தம்முடைய அந்திமக்காலம் (கடைசிக் காலம்) நெருங்கி விட்டதை ஞானதிருட்டியால் உணர்ந்த மகாவீரர், தன்னுடைய சீடர் இந்திர பூதியிடம் "என்னுடைய அந்திமக்காலம் நெருங்கிவிட்டது.

நீ என்னுடைய குந்திக் கிராமம் (குண்டலபுரம்) சென்று எல்லோரிடமும் சொல். அவர்கள் என்னைப் பார்க்க ஆவலாய் இருப்பார்கள்" என்று கூறினார். இந்திரபூதி சென்றபின்பு மகாவீரர் தம் சீடர்களுக்கு நல்லறிவு, நற்கொள்கை, நல்லொழுக்கம், நல்ல தவம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து வாழ உபதேசம் செய்து கொண்டிருந்தார். உபதேசம் செய்துகொண்டிருக்கும் நிலையில் வர்த்தமான மகாவீரர் அப்படியே பூரண சமாதியில் ஆழ்ந்தார். வர்த்தமான மகாவீரர் சமாதியடைந்த செய்தி கேட்டு, மக்கள்கூட்டம் அலைமோதியது. இந்திரபூதியும் குண்டலபுரம் சென்றுவிட்டு வந்து சேர்ந்தார். பதினெட்டு நாட்டு மன்னர்களும் தலைவர்களும் அஞ்சலி செலுத்தினர். கி.மு. 527ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் அமாவாசையன்று மகாவீரரின் சடலத்தைச் சந்தனக்கட்டையால் எரித்தார்கள். இத்துடன் மகாவீரருடைய வாழ்க்கை வரலாறு நிறைவு பெறுகின்றது.

### சமணத்தில் ஒழுக்க நெறிமுறைகள்

சமணத்தின் இல்லறத்தார்களும், துறவிகளும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிமுறைகள் பல இருக்கின்றன. அவற்றின் விவரம்:

### இல்லறத்தார் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிமுறைகள்

1. கொல்லாமை (உயிரினங்களைக் கொல்லாமலிருப்பது)
2. பொய்யாமை (பொய் சொல்லாமலிருப்பது)
3. கள்ளாமை (திருடாமல் இருப்பது)
4. பிறனில்விழையாமை (பிறர் மனைவிமீது ஆசை வைக்காமலிருப்பது)
5. மிகுபொருள் விரும்பாமை (அதிகம் பொருள்சேர்க்க ஆசைப்படாமை)
6. கள்ளுண்ணாமை (கள் குடிக்காமலிருப்பது)
7. தேன் உண்ணாமை (தேன் குடிக்காமலிருப்பது)
8. ஊன் உண்ணாமை (மாமிசம் சாப்பிடமாலிருப்பது)
9. இரவு உண்ணாமை (இரவு சாப்பிடாமலிருப்பது)

### துறவிகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிமுறைகள்

1. அகிம்சை (உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை)
2. வாய்மை (தீமை இல்லாத சொல்)
3. கள்ளாமை (திருடாமலிருப்பது)
4. துறவு (ஆசையைத் துறப்பது)
5. அவா அறுத்தல் (பிறப்பை அறுப்பது)
6. ஐம்புலன் அடக்கம் (ஞானேந்திரியங்களை அடக்குதல்)
7. சாமாயிகம் (இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருதும் மனநிலை)

8. லோசம் (மயிர் களைதல்)
9. திகம்பரம் (ஆடையின்றி நிர்வாணமாக இருப்பது)
10. தீராடாமை (உடம்பைத் தண்ணீரினால் கழுவாதிருப்பது)
11. பல் துலக்காமை (பற்களைச் சுத்தம் செய்யாமலிருப்பது)
12. தரையில் படுத்தல் (படுக்கை சுகத்தைத் துறந்து தரையில் படுத்தல்)
13. நின்றுண்ணல் (நின்று கொண்டே சாப்பிடுதல்)
14. ஏகபுக்தம் (ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் சாப்பிடுதல்)

## சமணத்தின் உட்பிரிவுகள்

தொடக்கத்தில் ஒன்றாகயிருந்த சமணம் கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியில் 'திகம்பரம்' என்றும் "சுவேதாம்பரம்" (சுதம்பரம்) என்றும் இரண்டாகப் பிரிந்தது.

| | |
|---|---|
| **திகம்பரர்கள்** | ஆடை அணியாதவர்கள் |
| **சுவேதாம்பரர்கள்** | வெள்ளாடை அணிபவர்கள் |

சுவேதாம்பரப் பிரிவில் ஸ்தானகவாசி, தேராபந்தி என்று மேலும் இரு பிரிவுகள் உள்ளன. திகம்பரம், சுவேதாம்பரம் ஆகிய இரு பிரிவினருக்கும் உருவ வழிபாடு உண்டு. ஆனால் சுவேதாம்பரரில் ஸ்தானகவாசிகளுக்கும், தேராபந்திகளுக்கும் உருவ வழிபாடு இல்லை.

## சமணம் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு வந்தது

மகாவீரரின் காலத்திற்குப் பின் அவரது சீடர் பரம்பரையினர்களால் சமண மதம் வளர்ந்தது. சீடர் பரம்பரையில் முக்கியமானவர்கள்:

1. இந்திரபூதி
2. சுதர்மன்
3. சம்புசுவாமி
4. விஷ்ணுநந்தி
5. அபராசிதர்
6. கோவர்த்தனர்
7. பத்திரபாகு

பத்திரபாகு முனிவரின் காலத்தில் சமணம் தென்னாட்டுக்கு வந்தது. வடநாட்டில் பஞ்சம் வரப்போவதை அறிந்த பத்திரபாகு முனிவர் பன்னிரண்டாயிரம் சீடர்களுடன் தென்னாட்டிற்கு வந்தார். மகத நாட்டு மன்னர் சந்திரகுப்தனும் பத்திரபாகு முனிவரின் சீடனாகி அவருடன் வந்தான். அவர்கள் எல்லோரும் தென்னாட்டிலுள்ள கர்நாடக மாநிலத்துக்கு வந்தனர். அவர்கள் தங்கியிருந்த இடத்தின் பெயர் 'சிரவண பெலகோலா' (சமணர் வெள்ளைக்குளம் என்று பொருள்படும் இடம்). பத்திரபாகு முனிவர், அவரது சீடர்களில் ஒருவரான விசாகமுனிவரையும், அவருடன் மற்றும் சீடர்களையும், பக்கத்து நாடுகளில் சமண மதப் பிரச்சாரத்திற்காக அனுப்பி

வைத்தார். அவர்கள் சேர, பாண்டிய நாடுகளுக்கு வந்து சமண மதத்தைப் பரப்பினார்கள். அவர்கள் வந்த காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்று கூறப்படுகிறது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சேர, பாண்டிய நாடுகளில் சமணமதம் பரவியுள்ளது.

சேர நாட்டினுடைய தெற்குப் பகுதியிலுள்ள (தற்போதுள்ள கன்னியாகுமரி மாவட்டம்) இடங்களான நாகர்கோவில், கோட்டாறு, குரண்டி, திருநந்திக்கரை, திருச்சாரணத்து மலை (சிதறால்) ஆகிய இடங்களில் சமணர்கள் வாழ்ந்ததற்கான கல்வெட்டு ஆதாரங்கள் இருக்கின்றன. நாகர்கோவிலில் இருக்கின்ற நாகராசா கோவில் முன்காலத்தில் சமணக் கோவிலாகயிருந்தது என்றும், அது பிற்காலத்தில் 'நாகராஜா கோவில்' என்ற பெயரில் இந்துக் கோவிலாக மாற்றப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. மேலும் விளவங்கோடு தாலுகா, வெள்ளாங்கோடு கிராமத்தில் சிதறால் என்னுமிடத்தில் இருக்கின்ற திருச்சாரணத்து மலையில் இப்போதும் முற்காலத்துச் சமணக் கோயில் ஒன்று இருக்கிறது. இந்தக் கோவிலின் உள்ளே மகாவீரர், பார்சுவநாதர் ஆகியோரின் சன்னதிகள் உள்ளன. இந்த இடம் இப்போது ஒரு சுற்றுலாத் தலமாகவும் இருக்கிறது.

பாண்டிய நாட்டில் முற்காலத்தில் பல சமணக் கோயில்களும், சமணப் பள்ளிகளும் இருந்ததற்கான கல்வெட்டு ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றில் பதினான்கு மதுரையைச் சுற்றியுள்ள ஊர்களிலேயே இருந்திருக்கின்றன.

அவற்றின் பெயர் விவரம்:

1. திருப்பரங்குன்றம்
2. சமண மலை
3. கொங்கர் புளியங்குளம்
4. விக்கிரமங்கலம்
5. அணைப்பட்டி
6. ஆனைமலை
7. மீனாட்சிபுரம் (மாங்குளம்)
8. அரிட்டாபட்டி
9. அழகர் மலை
10. கருங்காலக்குடி
11. கீழவளவு
12. திருவாதவூர்
13. குன்னத்தூர் (வரிச்சியூர்)
14. திருமலை

மேலும் பாண்டிய நாட்டில் எண்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் சமணப் பள்ளிகள் இருந்துள்ளன என்றும், அவற்றில் பெரும்பாலானவை அழிந்து போயின என்றும், அவ்விடங்களில் இன்று சிதைந்துபோன கல்வெட்டுகளும், வழிபாடற்ற நிலையில் கிடக்கும் தீர்த்தங்கரர் சிற்பங்களும் காணப்படுகின்றன என்றும், சில சிற்பங்கள் முனியாண்டியாய் மாற்றப்பட்டுள்ளன என்றும், வெ. வேதாசலம்

அவர்களுடைய 'எண் பெருங்குன்றம்' என்ற நூலில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

**சமண மதத்தின் தனிச் சிறப்பு**

உலக மதங்களுள் சமண மதம் (ஜைன மதம்) மட்டுமே புலால் மறுத்தலை மதக்கொள்கையாகக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும். சமணர்கள் அனைவரும் புலால் மறுத்த தாவர உணவினரே. இந்நூல் சமண மதம் தவிர வேறு எந்த மதத்திலும் இல்லை. இது சமண மதத்தின் தனிச் சிறப்பு ஆகும்.

**சமண மதத்தில் கடவுள் பற்றிய கருத்து**

கடவுள் என்று ஒருவரும் இல்லை. இந்த உலகமானது யாராலும் உருவாக்கப்படவோ, இயக்கப்படவோ இல்லை; அதன் பாட்டிற்கு இயங்கிக் கொண்டிருக்கிறது.

**சமண மதக் கொள்கை**

மனம், வாக்கு, காயம் (உடம்பு) இவற்றால் செய்யப்படும் நற்செயல்கள் 'புண்ணியம்'; தீய செயல்கள் 'பாவம்'. சமணத்தில் அடிப்படைக் கொள்கை அகிம்சை (உயிரினங்களுக்குத் துன்பம் செய்யாமலிருப்பது), சகிப்புத் தன்மை, சத்தியத்தைப் பேணுதல், திருடாமல் இருத்தல், சைவ உணவை மட்டும் உட்கொள்ளுதல், எல்லோரும் அன்புடன் வாழவேண்டும், அதன்மூலம் மனிதநேயம் தழைத்து வளர வேண்டும் என்பவைகளாகும்.

**புனித நூல்**

வர்த்தமான மகாவீரர் இவ்வுலகில் வாழ்ந்த காலம் கி.மு. 599லிருந்து கி.மு. 527 வரையுள்ள 72 வருடங்கள். அந்தக் காலத்தில் வரைமொழி (எழுத்து மொழி) பிரபலமாகவில்லை. எனவே மகாவீரரின் போதனைகளை வாய்மொழியாகப் போற்றி அவற்றைப் புனித இலக்கியங்களாகச் சமணர்கள் கருதினர்.

கி.மு. 3ஆம் நூற்றாண்டில் மதுரா வாலாபியிலிருந்து சுவேதாம்பர மாக்கத்தினர் (வெள்ளாடை அணிபவர்கள்) சமண சமயத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டிருப்பதாகவும். அதில் 45 ஆகமங்கள், 11 அங்கங்கள், 12 உபஅங்கங்கள், 4 மூலசூத்திரங்கள், 6 சேத சூத்திரங்கள், 2 சூளுக்கிய சூத்திரங்கள், 10 கலவைச் சூத்திரங்கள் ஆகியன இருப்பதாகவும் தெரிகிறது. திகம்பர மார்க்கத்தினர் (ஆடை அணியாதவர்கள்) மகாவீரரின் போதனைகள் அடங்கிய இரண்டு எழுத்து வடிவங்களை வெளியிட்டிருப்பதாகவும், அவை புஷ்பானந்தா

மற்றும் புத்தபாலின் எழுதிய 'கர்மன்' என்ற வடிவமும், குணதாரர் எழுதிய 'கசயாஸ்' என்ற வடிவமுமாகும்.

கி.பி 4ஆம் நூற்றாண்டின் கடைசியில் பாடலிபுத்திரத்தில் இருந்த சமண சங்கம் சமண நூல் ஒன்றினை வெளியிட்டது என்றும், அதுவே முதன்முதலாக எழுதப்பட்ட சமணர்களின் புனிதநூல் என்றும் கூறப்படுகிறது.

சமண மதத் தத்துவங்களும், தோத்திரங்களும் தமிழ் நூல்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. அந்நூல்களின் விவரம்:

1. மேரு மந்தர புராணம்
2. ஸ்ரீ புராணம்
3. அருங்கலச்செப்பு
4. நரிவிருத்தம்
5. திருக்கலம்பகம்
6. திருநூற்றந்தாதி
7. திருவெம்பாவை
8. ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்
9. திருமேற்றிசை அந்தாதி
10. திருநாதர்குன்றத்துப் பதிகம்
11. ஜீவசம்போதனை
12. சினேந்திர மாலை

**சமணமத நூல்களிலுள்ள மிக முக்கியமான செய்திகள்**

அகிம்சை, வாய்மை, கள்ளாமை, புலால் மறுத்தல் ஆகியவற்றைச் சமணர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்பது சமண மத நூல்கள் வழங்கும் மிக முக்கியச் செய்திகளாகும்.

## வழிபாட்டு முறை

சமண மதத்தில் இரு வகையான வழிபாட்டு முறைகள் இருக்கின்றன. அவை 1. உருவ வழிபாடு, 2. அருவ வழிபாடு.

**உருவ வழிபாடு**

சமண மதத்திலுள்ள திகம்பரர்களும், சுவேதாம்பரர்களில் ஸ்தானக வாசிகள் மற்றும் தேசாபந்திகள் நீங்கலாக உள்ள சுவேதாம்பரர்களும் உருவ வழிபாடு செய்கின்றார்.

இந்து மதத்தில் கடவுள் ஒருவர் இருப்பதுபோலச் சமண மதத்தில் தனியாகக் கடவுள் என்று ஒருவரும் இல்லை. ஆனால் சமணர்கள் தீர்த்தங்கரர்களைக் கடவுள் நிலையில் வைத்து வழிபடுகின்றனர். அவர்கள் இந்துக்களைப் போன்று கோவில்கள் கட்டி அவற்றினுள்ளே தீர்த்தங்கரர்களுடைய உருவங்களை வைத்து வழிபடுகின்றனர். ஒவ்வொரு கோவில்களிலும் அவர்களுக்கு விருப்பமான தீர்த்தங்கரரின் அல்லது தீர்த்தங்கரர்களின் உருவங்களை

வைக்கின்றனர். உருவங்கள் கல்லாலும், பளிங்குக் கற்களாலும் செய்யப்படுகின்றன. தீர்த்தங்கரர்கள் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவர்களுக்குத் தொண்டு செய்து வந்தவர்கள் 'இயக்கன்', 'இயக்கிகள்' ஆவர். இவர்களைத் தீர்த்தங்கரர்களின் வலப்பக்கமும், இடப்பக்கமும் அமைத்துச் சிலைகள் வடிவமைக்கப்பட்டு சமணக் கோயில்கள் பலவற்றிலும் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்துக்கள்போல உருவத்துக்கு ஆடை அணிவித்து மலர் அலங்காரம் செய்யப்படுகின்றன. அதன்பின் விளக்கேற்றி வழிபடுகின்றனர். பொதுவாகச் சமணர்கள் விளக்கு ஏற்றுதல், பூ சாற்றுதல், சந்தனம் பூசுதல், பழங்களைக் காணிக்கையாகச் செலுத்துதல் போன்ற சடங்குகளை விரும்புவதில்லையென்றும், இந்து வழிபாடுகளில் அப்படி செய்யப்படுவதால் சில நேரங்களில் அவர்களும் அவற்றைச் செய்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

சமணர்கள் தங்களது வீடுகளிலும் தீர்த்தங்கரர்களின் படிமங்கள் வைத்துப் பூசை செய்து வழிபடுகின்றனர்.

கோவில்களில் பொதுவாகப் பிரசாதம் என்று எதுவும் வழங்கப்படுவதில்லை. படிமங்களுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட சந்தனம் சிரசில் தெளித்துக் கொள்ளப்படுகின்றது. அருகனுக்கு (தீர்த்தங்கரருக்கு) அர்ப்பணிக்கப்பட்ட மலரினைச் 'சேடப்பூ' என்பர். இதுவும் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

அருகர் (தீர்த்தங்கரர்), சித்தர், ஆச்சாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் ஆகிய ஐவகையினரையும் 'பஞ்சபரமேட்டிகள்' என்று சமணர்கள் கூறுகின்றனர். பஞ்சபரமேட்டிகளையும் சமணர்கள் வழிபடுவதுண்டு. இந்த ஐவரையும் வழிபடுவதற்கான மந்திரத்தை பஞ்சநமஸ்கார மந்திரம் என்று கூறுவர்.

### பஞ்ச நமஸ்கார மந்திரம்

ணமோ அரஹந்தாணம்
ணமோ ஸித்தாணம்
ணமோ ஆரீயாணம்
ணமோ உவஜ்ஜாயாணம்
ணமோ ளோ ஏஸவ்வ ஸாஹூணம்

### அருவ வழிவாடு

சமணர்களில் ஸ்தானக வாசிகளும், தேரபந்திகளும் உருவவழிபாடு செய்வதில்லை. அவர்கள் சமண மதப் புனித நூல்களையும், சாதுக்களையும் வணங்குகின்றனர்.

# 3. பௌத்த மதம்

இந்தப் பகுதியில் பௌத்த மதத்தினுடைய வரலாறு, பௌத்த சமய நூல்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியன இடம்பெறுகின்றன.

## வரலாறு

பௌத்த மதம் இந்தியாவில் தோன்றிய மதம். இந்த மதம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் சித்தார்த்த கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பட்டது. பௌத்த மதம் துன்பத்தினின்றும் பிறவிச் சுழற்சியினின்றும் விடுதலையடைதலையும் நிர்வாண நிலையை (மோட்ச நிலையை) அடைதலையும் இலக்காகக் கொண்டது. இது தியானத்தையும் அறநெறிகளைக் கடைப்பிடிப்பதையும் வலியுறுத்து கிறது. இந்த மதத்தைத் தோற்றுவித்த சித்தார்த்த கௌதம புத்தர் கி.மு. 566இலிருந்து 486 வரையுள்ள 80 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார். இனி அவருடைய வாழ்க்கை வரலாற்றினைப் பார்ப்போம்.

## சித்தார்த்த கௌதம புத்தருடைய வாழ்க்கை வரலாறு (கி.மு. 566–486)*

சித்தார்த்த கௌதம புத்தர் வடஇந்தியாவிலுள்ள நேபாளத்தில் கபிலவஸ்து நாட்டில் அரசகுடும்பத்தில் கி.மு. 566இல் பிறந்தார். அவரது தாயார் மாயா என்ற மாயாதேவி. தகப்பனார் பெயர் சுத்தோதனர். சுத்தோதனர் கபிலவஸ்து நாட்டினுடைய அரசர். சித்தார்த்த கௌதம புத்தருக்குப் பெற்றோர் வைத்த பெயர் சித்தார்த்த கௌதமன். கௌதமன் என்பது கோத்திரப் பெயர். புத்தர் என்பது பிற்காலத்தில் வந்த பெயர். புத்தர் என்றால் ஞானோதயம் பெற்றவர் என்று பொருள்.

### இளமைப் பருவம்

சித்தார்த்தர் பிறந்த ஏழாம் நாளில் தாயார் மாயாதேவி காலமானார். அதன்பின் மாயாதேவியின் சகோதரி கௌதமியின் அரவணைப்பில் சித்தார்த்தர் வளர்ந்தார். வளர்ந்தபின் அவரை அரசராக்க வேண்டுமென்று சுத்தோதனர் விரும்பினார். ஆனால்

---

* கௌதம புத்தர் வாழ்ந்த காலம் கி.மு. 563–483 என்று சில நூல்களில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. ஆனால் மிக்கேல் டி. கூகன் அவர்களுடைய Reference Classics - World Religious என்ற நூலில் கி.மு. 566–486 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் ஒரு தரவு நூல் (Reference book) என்பதால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள கி.மு. 566–486 என்ற குறிப்பே இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சித்தார்த்தர் துறவுபூண்டு புத்தராவார் என்று அசிதமுனிவர் சொன்னதும், ஜாதகப்படி சித்தார்த்தர் எல்லாவற்றையும் துறந்து வனத்திற்குச் செல்லக்கூடும் என்று சோதிடர் சொன்னதும் சுத்தோதனருடைய மனத்தை அலட்டிக்கொண்டேயிருந்தன. இருப்பினும் எப்படியும் தம் மகனைத் துறவுக்குவிடாமல் அரசனாக்க வேண்டும் என்பதில் சுத்தோதனர் உறுதியாகயிருந்தார்.

சித்தார்த்தருக்கு எட்டு வயதானபோது அவர் கல்வி கற்பதற்காக அவரது தந்தை அவரைக் குருவிடம் சேர்த்தார். சித்தார்த்தருடைய அறிவுத் திறனைக் கண்டு குரு வியந்தார். குருவிடம் கல்வி கற்க வந்திருந்த மற்ற மாணவர்களுக்கும் சித்தார்த்தர் கல்வி கற்பித்தார். சித்தார்த்தருடைய திறமையை அவருடைய குரு பெரிதும் பாராட்டினார். சித்தார்த்தர் சாத்திரக் கல்வியைக் கற்று முடித்தபின், அவரது தந்தை சுத்தோதனர் அவரைப் படைக்கலப் பயிற்சி பெற அனுப்பினார். குரு அவருடைய சீடர்களுக்கு வில்வித்தை, வாள்வித்தை, வேல்வித்தை, யானை யேற்றம், குதிரையேற்றம், தேர் ஓட்டுதல் போன்றவற்றைக் கற்பித்தார். ஆனால் சித்தார்த்தர் மட்டும் குரு கற்பிக்காமலேயே எல்லாவற்றையும் கற்றுக் கொண்டார். சித்தார்த்தருடைய திறமையைக் கண்ட குரு அவரைப் புகழ்ந்தார். சித்தார்த்தர் சாத்திரக் கல்வியையும், படைக்கலக் கல்வியையும் பன்னிரண்டு வயதில் முடித்தார். அதன்பின் மற்ற இளைஞர்களுடன் சேர்ந்து சவாரி செய்தல், வேட்டையாடுதல் போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டார்.

## சித்தார்த்தர் அன்னப்பறவையைக் காப்பாற்றியது

ஒரு நாள் சித்தார்த்தர் அரண்மனைத் தோட்டத்தில் அமர்ந்திருந்தார். அப்போது அவர் மேலே பார்த்தார். அங்கே அன்னப் பறவைகள் பறந்து போய்க் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று திடீரெனக் கீழே வந்து விழுந்தது. சித்தார்த்தர் ஓடிச்சென்று அதை எடுத்தார். அதன் சிறகில் ஓர் அம்பு தைத்திருந்தது. சித்தார்த்தர் அந்த அம்பை அன்னப்பறவையின் சிறகிலிருந்து மெதுவாக உருவி வெளியே எடுத்தார். அதன்பின் அதைத் தன் மடியில் வைத்துத் தடவி, அம்பு பட்ட இடத்தில் பச்சிலை மருந்தை வைத்துக் கட்டிப் பாதுகாத்தார். அந்தப் பறவை சித்தார்த்தருடைய அரண்மனைத் தோட்டத்தில் விழுவதை அம்பு எய்த தேவதத்தன் கண்டான். அதைச் சித்தார்த்தரிடமிருந்து பெற்றுவர அவன் ஓர் ஆளை அனுப்பினான். அந்த ஆள் சித்தார்த்தரிடம் வந்து தேவதத்தன் தன்னை அனுப்பி யிருக்கும் விவரத்தைக் கூறி அன்னப்பறவையைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி கேட்டான். அப்போது சித்தார்த்தர் அன்னப்பறவை

தனக்குத்தான் சொந்தமென்றும், தேவதத்தனுக்கல்லயென்றும் கூறி வந்தவனைத் திருப்பி அனுப்பினார். அவன் தேவதத்தனிடம் சென்று விவரத்தைக் கூறினான். உடனே தேவதத்தன் நேரடியாகச் சித்தார்த்தரிடம் வந்து அன்னப்பறவையைக் கொடுக்கும்படி கேட்டான். அதற்குச் சித்தார்த்தர் அன்னப்பறவையின் உயிரைக் காப்பாற்றிய தனக்கே அது சொந்தமென்று கூறினார். அந்த அன்னப் பறவை யாருக்குச் சொந்தம் என்பது பற்றி இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பிறகு இருவரும் சேர்ந்து ஒரு பெரியவரிடம் சென்றனர். நடந்தவற்றையெல்லாம் பெரியவரிடம் கூறினர். எல்லாவற்றையும் கேட்ட பின்பு பெரியவர் தீர்ப்புக் கூறினார். "உயிரைக் காப்பவனே உயிருக்கு உடையவன்" எனவே அன்னப்பறவை சித்தார்த்தருக்குத் தான் சொந்தம் என்று கூறினார். இதைக் கேட்ட தேவதத்தன் அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டான். அன்னப்பறவை குணமடைந்த பின்பு அதனைச் சித்தார்த்தர் ஆகாயத்தில் பறக்க விட்டார். அது ஆகாயத்தில் பறந்துசென்று தன் இனத்தோடு சேர்ந்து இன்பமுடன் வாழ்ந்தது.

### சித்தார்த்தருக்கு இளவரசர் பட்டம் சூட்டப்பட்டது

சித்தார்த்தருடைய பதினைந்தாம் வயதில் அவருக்கு மன்னர் சுத்தோதனன் இளவரசர் பட்டம் சூட்டினார். அவருக்குச் சுத்தோதனன் இராமவம், சுராமம், சுபதம் என்ற மூன்று பெரிய மாளிகைகளைக் கட்டிக் கொடுத்தார். மழைக் காலத்தில் வசிப்பதற்கு இரம்மிய மாளிகையும் (இராமவம்), கோடைக்காலத்தில் வசிப்பதற்குச் சுரம்மிய மாளிகையும் (சுராமம்), பனிக்காலத்தில் வசிப்பதற்கு சுப மாளிகையும் (சுபதம்) பயன்படுத்தக்கூடிய வகையில் கட்டப்பட்டவைகளாகும். இரம்மிய மாளிகை ஒன்பது மாடிகளைக் கொண்டது. மழைக் காலத்தில் வாடைக் காற்று மாளிகைக்குள் புகாதபடி கட்டப்பட்டது. சுரம்மிய மாளிகை ஐந்து மாடிகளைக் கொண்டது. கோடைக் காலத்தில் தென்றல் காற்று வீசுவதற்குத் தக்கவாறு கட்டப்பட்டது. சுபத மாளிகை ஏழு மாடிகளைக் கொண்டது. இது பனிக்காலத்தில் குளிர் உள்ளே புகாதபடி கட்டப்பட்டதுமாகும். இவ்வாறு மழைக்காலம், கோடைக்காலம், குளிர்காலம் ஆகிய மூன்று காலங்களையும் இன்பமாகக் கழிப்பதற்கு ஏற்றவாறு மூன்று மாளிகைகளின் சுத்தோதன அரசன் தமது இளவரசரான சித்தார்த்தருக்குக் கட்டிக் கொடுத்தார்.

### இல்லற வாழ்க்கை

சுத்தோதன மன்னர் தம் மகன் சித்தார்த்தனுக்குத் திருமணம் செய்து வைக்க எண்ணினார். திருமணம் குறித்துத் தம் மகனிடம்

கேட்டால் அவன் அதற்கு இணங்குவானா? என்ற ஐயப்பாடு சுத்தோதனர் மனதில் எழுந்தது? எனவே திருமணம் குறித்து அவனிடம் கூறும் முன், அவனது பிறந்த நாளன்று நகரிலுள்ள பேரழகிகளை அரண்மனையில் கூட்டி வைத்து அவர்களிடையே அழகிப்போட்டி நடத்தி வெற்றி பெறும் பெண்களுக்குச் சித்தார்த்தன் கையாலேயே பரிசுகள் வழங்கலாமென்றும், அப்பெண்களில் யாரையாவது சித்தார்த்தன் விரும்புவதாகயிருந்தால் அந்தப் பெண்ணையே அவருக்குத் திருமணம் செய்து வைக்கலாம் என்றும் சுத்தோதனர் தமக்குள்ளேயே முடிவெடுத்தார்.

சித்தார்த்தருடைய பிறந்தநாள் நெருங்கி வந்து கொண்டிருந்தது. ஒருநாள் சித்தார்த்தரை அழைத்துச் சுத்தோதனர் தம்முடைய எண்ணத்தை அவரிடம் கூறினார். அதன்பின் அவர் சித்தார்த்தருடைய விருப்பத்தைக் கேட்டார். சித்தார்த்தர் திருமணத்திற்குச் சம்மதித்தார். சுத்தோதனர் மகிழ்ச்சியடைந்தார். சித்தார்த்தருடைய பிறந்த நாள் வந்தது. சித்தார்த்தர் அரண்மனை மண்டபத்தில் உரிய ஆசனத்தில் அமர்ந்தார். அழகிகளுக்குப் பரிசுகளை வழங்கினார். அவர்கள் பரிசுப் பொருட்களைப் பெற்றுச் சென்றனர். கடைசியாகச் சாக்கிய குலத்து மகாநாமர் என்பவரின் மகளான யசோதரை என்னும் கன்னிகை சித்தார்த்தரிடம் வந்தாள். மிகவும் அழகுடைய அவளைப் பார்த்ததும் சித்தார்த்தரின் மனம் மாறியது. அவள் சித்தார்த்தரிடம் "எனக்கு ஏதாவது பரிசு உண்டா?" என்று கேட்டாள். "பரிசுகள் தீர்ந்துவிட்டன. ஆயினும் எனது மரகத மாலையைத் தருகிறேன், நீ ஏற்றுக்கொள்" என்று கூறிக்கொண்டே சித்தார்த்தர் தம் கழுத்திலிருந்த மரகத மாலையைக் கழற்றி அவளிடம் கொடுத்தார். அதை அவள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள். இருவரும் பிரிந்தனர். சித்தார்த்தர் யசோதரையை மணம் செய்ய விரும்பினார்.

சுத்தோதனர் யசோதரையின் தந்தை மகாநாமரிடம் தூதுவரை அனுப்பித் தம் மகன் சித்தார்த்தருக்கு அவருடைய மகள் யசோதரையை மணம் செய்து கொடுக்கும்படி கேட்டார். அதற்கு மகாநாமர் கூறினார். சாக்கிய குல வழக்கப்படி படைக்கலப் பயிற்சியில் யார் ஒருவர் சிறந்த வீரராயிருக்கிறாரோ அவருக்குத்தான் மணமகள் உரிமையானவள். எனவே படைக்கலப் பயிற்சி பெறாத ஒருவனுக்கு என் மகளை எப்படி மணம் செய்து கொடுக்க முடியும் என்று தூதுவரிடம் மகாநாமர் கேட்டார். தூதுவர் அங்கிருந்து சுத்தோதனரிடம் வந்து மகாநாமர் கூறியவற்றைச் சொன்னார். இந்த விவரங்களைச் சித்தார்த்தர் அறிந்தார். அவர் தந்தையிடம் வந்து படைக்கலப்

போட்டியில் நான் வெற்றி பெறுவேன் என்று கூறினார். அதற்கு ஏற்பாடு செய்யுமாறும் கேட்டார். அதன்படி போட்டிகள் நடந்தன. சித்தார்த்தர் வெற்றி பெற்றார். யசோதரையைச் மணந்தார். சித்தார்த்தரும் யசோதரையும் நல்ல தம்பதிகளாக வாழ்க்கை நடத்தினர்.

சித்தார்த்தரும் அவரது துணைவியாரும் தங்கியிருந்த அரண்மனைக்கு வெளியே வெகு தூரத்திற்கு அப்பால் சுத்தோதனர் ஒரு பெரிய கோட்டையைக் கட்டி, அதன் நடுவே உள்வாயில், நடுவாயில், வெளிவாயில் என்று மூன்று வாயில்களை அமைத்தார். அவ்வாயில்களின் காவலுக்காக வீரர்களை நிறுத்தினார். வீரர்களுக்குத் தெரியாமல் யாரும் அந்த வாயில்களைக் கடந்து செல்ல முடியாது. இளவரசரான சித்தார்த்தரைக்கூட அந்த வாயில்கள் வழி வெளியே செல்ல அனுமதிக்கக்கூடாது என்று காவலர்களுக்குச் சுத்தோதனர் கட்டளையிட்டார். வெளி உலகிலுள்ள துயரம், சோகம் எதுவுமே சித்தார்த்தர் காணமுடியாத வகையிலும், வாழ்க்கை என்பது சுகபோகங்களுடன் வாழ்வதற்குரியது என்று தோன்றும் விதத்திலுமுள்ள ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருந்தது. சித்தார்த்தர் சுமார் பத்து ஆண்டுகள் வரை வெளியே செல்லாமல் அரண்மனை வளாகத்திலேயே வாழ்க்கை நடத்தினார். அவர் அரண்மனையில் இன்ப சுகங்களை அனுபவித்துக் கொண்டு கவலையற்ற வாழ்க்கை வாழ்ந்த போதிலும் நாளடைவில் அவருக்கு இல்லற வாழ்க்கையில் வெறுப்பு தோன்றியது.

## சித்தார்த்தர் பூஞ்சோலைக்குச் சென்றபோது கண்ட காட்சிகள்

சித்தார்த்தர் ஒருநாள் அரண்மனைக்கு வெளியே உள்ள பூஞ்சோலைக்குச் செல்ல விரும்பினார். அவரது விருப்பத்தைக் காவலர்கள் சுத்தோதனரிடம் கூறினர். சுத்தோதனர் அதற்கு இணங்கினார். காவலர்களுடனும் சேவகர்களுடனும் சித்தார்த்தர் பூஞ்சோலைக்குத் தேரில் புறப்பட்டார். தேரைச் சந்தகன் என்ற சன்னன் என்பவன் ஓட்டினான். போகும் வழியில் ஒரு கிழவர் கூனிக்குனிந்து தடியூன்றி இருமி இருமித் தள்ளாடித் தள்ளாடி நடந்துவருவதைச் சித்தார்த்தர் பார்த்தார். அதற்கு முன்பு அப்படி ஒருவரைச் சித்தார்த்தர் பார்த்ததில்லை. அந்த முதியவர் ஏன் அந்த நிலைக்கு ஆளானார் என்பது பற்றிச் சித்தார்த்தர் சன்னனிடம் கேட்டார். அதற்கு அவர் விளக்கமளித்தார். சிறிது தூரம் சென்றபிறகு ஒரு நோயாளி நோயினால் பாதிக்கப்பட்டு மலமூத்திரம் கழித்து அவற்றின் மீது விழுந்து எழும்ப முடியாமலிருந்தபோது அவரைச் சிலர் தூக்கி நிறுத்திய காட்சியைக் கண்டார். அதற்கு முன்பு

சித்தார்த்தர் இப்படியொரு காட்சியைப் பார்த்ததில்லை. அந்த நோயாளி அப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாவதற்கான காரணம் குறித்தும் சித்தார்த்தர் சன்னனிடம் கேட்டார். அதற்கும் சன்னன் விளக்கமளித்தார். மேலும் சிறிது தூரம் சென்றபோது, இறந்துபோன ஒருவருடைய பிணத்தை அவருடைய உறவினர்கள் சுமந்துகொண்டு சுடுகாட்டிற்குப் போவதைப் பார்த்தார். இதுபோன்ற காட்சியையும் இதற்கு முன்பு சித்தார்த்தர் பார்த்ததில்லை. இது பற்றியும் சித்தார்த்தர் சன்னனிடம் கேட்டறிந்தார். சித்தார்த்தருடைய மனம் அவர் கண்ட காட்சிகளையே மீண்டும் மீண்டும் கண்டுகொண்டிருந்தது. மேலும் சிறிது தூரம் சென்றபோது ஒருவர் தன் தலையை மொட்டை அடித்துக் காவி உடை அணிந்து தியானத்தில் இருப்பதைக் கண்டார். இதற்கு முன்பு சித்தார்த்தர் இதுபோன்ற ஒருவரைப் பார்த்ததில்லை. அக்கோலத்தில் அவர் இருப்பதற்கான காரணம் பற்றியும் சித்தார்த்தர் சன்னனிடம் கேட்டார். அதற்குச் சன்னன், முதுமை, நோய், மரணம் என்ற மூன்று விதமான பிறவித் துன்பங்களை நீக்குவதற்காக அவர் துறவியாகித் தியானம் செய்து கொண்டிருப்பதாகக் கூறினார். சுத்தோதன அரசர் எந்தெந்தக் காட்சிகள் சித்தார்த்தருடைய கண்களில் படக்கூடா என்று நினைத்தாரோ, அவற்றையெல்லாம் சித்தார்த்தர் பார்க்க நேர்ந்தது. அவற்றையெல்லாம் அவர் மனதில் திரும்பத்திரும்பக் கண்டு கொண்டுமிருந்தார்.

### சித்தார்த்தருடைய கருணை உள்ளம்

அவர் கண்ட முதுமை, நோய், மரணம், துறவுக் காட்சிகள் அவரது கருணை உள்ளத்தில் பதிந்துவிட்டன. அந்தக் காட்சிகள் அவரது மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தின. எனவே அவர் இல்லற வாழ்க்கையை விட்டுவிட்டுத் துறவறத்திற்குச் செல்ல விரும்பினார். சித்தார்த்தர் பூஞ்சோலைக்குச் சென்றுவிட்டு அரண்மனைக்குத் திரும்பினார்.

### சித்தார்த்தருக்கு ஆண்குழந்தை

பூஞ்சோலையிலிருந்து சித்தார்த்தர் அரண்மனைக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கும்போது சுத்தோதன அரசரிடமிருந்து ஒரு நற்செய்தியைத் தூதுவன் ஒருவன் கொண்டு வந்தான். சித்தார்த்தரின் துணைவியார் யசோதரை ஆண்குழந்தை பெற்றெடுத்தாள் என்பதுதான் அந்தச் செய்தி. அந்தச் செய்தி சித்தார்த்தருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. மாறாக அவர் வேதனைப்பட்டார். வேதனையுடைய சித்தார்த்தர் தனக்கு 'ராகுலன்' பிறந்திருக்கிறான் என்று சொன்னார். இராகுலன் என்ற பெயருக்குத்

தளை அல்லது விலங்கு போன்றவன் என்று சிலர் பொருள் கூறுவர். சித்தார்த்தர் கூறியதைத் தூதுவன் சுத்தோதன அரசரிடம் வந்து சொன்னான். சித்தார்த்தர் சொன்ன அதே பெயரைச் சுத்தோதன அரசன் தனது பேரக்குழந்தைக்குச் சூட்டினான்.

## சித்தார்த்தர் பூஞ்சோலையிலிருந்து அரண்மனைக்கு வந்தது

சித்தார்த்தர் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். அவர் ஆசனத்தில் அமர்ந்தார். அப்போது மங்கைகள் இசை வாசித்தும் நடனமாடியும் சித்தார்த்தருக்கு மகிழ்ச்சியூட்ட நினைத்து அப்படியே செய்தனர். ஆனால் மக்களின் துன்பங்களைக் கண்ட சித்தார்த்தர் அவற்றைப் பற்றியே திரும்பத்திரும்ப மனத்தில் நினைத்துக் கொண்டிருந்தாரே தவிர, ஆடல் பாடல்களில் அவரது மனம் செல்ல வில்லை. எனவே அவர் அங்கிருந்து எழும்பிக் கட்டிலில் சென்று படுத்தார். அவர் சென்றபின் மங்கையர் நடனம் ஆடுவதை நிறுத்தினர். படுத்த சித்தார்த்தருக்குத் தூக்கம் வரவில்லை. அவர் கண்ட சோகக் காட்சிகள் அவரது மனத்தை வாட்டிக் கொண்டே யிருந்தன. அவர் துறவறம் கொள்ள முடிவெடுத்தார். அவர் கட்டிலிலிருந்து எழுந்து வெளியே வந்தார். பணியாட்களைக் கூப்பிட்டார். அப்போது சன்னன் அவர்முன் வந்து நின்றான். அவர் சன்னனிடம் அரண்மனையைவிட்டு உடனே வெளியே செல்ல வேண்டுமென்று கூறிக் குதிரையை உடனே கொண்டு வரச் சொன்னார். சன்னன் குதிரையைக் கொண்டுவருவதற்காகக் குதிரைப் பந்திக்குச் சென்றான். சன்னன் போனபின்பு சித்தார்த்தர் தனது குழந்தையைப் பார்க்க யசோதரையின் அறையை நோக்கி வந்தார். அறைக்குப் பக்கத்தில் வந்தபோது அவரது மனதில் திடீரென்று ஒரு தயக்கம் வந்தது. உள்ளே சென்று மனைவியையும் குழந்தையையும் பார்த்தால் தன்னுடைய துறவுக்குத் தடை ஏற்படக்கூடும், எனவே துறவு பூண்ட பின்பு அவர்களை வந்து பார்க்கலாம் என்று நினைத்து அப்படியே நின்றுவிட்டார். பிறகு அந்த அறைக்குள் செல்லாமல் சித்தார்த்தர் திரும்பி விட்டார்.

## சித்தார்த்தர் அரண்மனையைவிட்டு வெளியேறித் துறவறம் பூண்டது

சித்தார்த்தருடைய கட்டளைப்படி சன்னன் சித்தார்த்தருடைய கந்தகன் (கண்டகம் என்றும் கூறுவர்) என்ற குதிரையைக் கொண்டு வந்தான். குதிரைமேல் சித்தார்த்தர் ஏறி அமர்ந்தார். சன்னனிடம் குதிரையின் பின்னால் அதன் வாலைப் பிடித்துக்கொண்டே வரும்படி கூறினார். அவர்கள் அரண்மனையை விட்டு வெளியே சென்றார்கள்.

அப்போது நள்ளிரவு நேரம். அவர்களது பிரயாணம் தொடர்ந்து கொண்டே இருந்தது. விடியற்காலையில் அனோம என்னும் ஆற்றின் கரைக்கு வந்தனர். சித்தார்த்தர் குதிரையிலிருந்து கீழே இறங்கி ஆற்றுமணலில் அமர்ந்தார். சன்னன் அவர் அருகில் வந்து நின்றான். சித்தார்த்தர் அவனிடம் தான் துறவியாகப் போகும் விவரத்தைக் கூறினார். சன்னன் அழுதான். அழுதுகொண்டே "அரசே! தாங்கள் துறவியாக வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டான். அதற்குச் சித்தார்த்தர் பதில் எதுவும் கூறாமல், தான் அணிந்திருந்த ஆடைகளையும் அணிகலன்களையும் கழற்றிவிட்டுக் காவி உடை அணிந்தார். அப்போது சன்னன் "அரசே! தாங்கள் துறவியாக வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டான். சித்தார்த்தர் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

சித்தார்த்தர் தம் வாளால் தலைமுடிகளை மழித்தார். பிறகு, சன்னனிடம் தன்னுடைய ஆடைகளையும், அணிகலன்களையும், குதிரையையும் அரண்மனையில் கொண்டு சேர்க்கும்படி கூறினார். மேலும், தான் துறவு கொண்ட விவரத்தையும் அரண்மனையில் தெரிவிக்கும்படி கூறினார். சித்தார்த்தர் துறவுக்கோலம் பூண்டார். சன்னன் அவரைப் பார்த்து அழுதான். குதிரை சித்தார்த்தருடைய அருகில் சென்று அவருடைய பாதங்களை அதன் நாக்கால் நக்கியது. சித்தார்த்தர் அந்தக் குதிரையைத் தடவினார். சன்னன் அழுது கொண்டே சித்தார்த்தருடைய ஆடை அணிகலன்களைக் கையில் எடுத்துக்கொண்டு குதிரையின் கடிவாளத்தைக் கையில் பிடித்தான். அவன் அரண்மனைக்குத் திரும்பக் குதிரையை நகர்த்தினான். ஆனால் குதிரை நகரவில்லை. அது சித்தார்த்தரைப் பார்த்துக் கொண்டே நின்றது. சித்தார்த்தர் சன்னனையும் குதிரையையும் பார்த்து "நீங்கள் அரண்மனைக்குச் செல்லுங்கள்" என்று கூறிக் கொண்டே அந்த இடத்தைவிட்டு வேறு திசை நோக்கி நடந்தார். அவர் போவதைப் பார்த்துச் சன்னன் தேம்பித்தேம்பி அழுதான். அந்தக் குதிரை சித்தார்த்தர் அகன்று போய்க் கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டே நின்றது. இடையிடையே சன்னனையும் பார்த்தது. அந்த வாய் இல்லாப் பிராணியின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டே யிருந்தது. சித்தார்த்தர் வெகுதூரம் சென்று மறைந்தார்.

சன்னன் குதிரையை அணைத்து அழைத்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினான். சித்தார்த்தருடைய ஆடை அணிகலன்களுடனும், குதிரையுடனும் சன்னன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். அவன் நடந்த விஷயத்தை, சுத்தோதனரிடமும், யசோதரையிடமும், அரண்மனையிலுள்ள மற்றவர்களிடமும் கூறினான்.

சித்தார்த்தர் துறவு பூண்ட விவரமறிந்து சுத்தோதனனும், யசோதரையும் மற்றும் பலரும் அழுதனர். அப்போது சுத்தோதன அரசருடைய குலகுருவும், மந்திரியும் அவரிடம் வந்து, "அரசே! அசித முனிவரின் வாக்கு பலித்துவிட்டது. நடக்க வேண்டியது நடந்தே தீரும், விதியை யாராலும் வெல்லமுடியாது" என்று கூறினர். மேலும் அவரிடம் பல ஆறுதல் வார்த்தைகளையும் கூறினர். ஆனால் அவர்களுடைய ஆறுதல் வார்த்தைகளால் சுத்தோதனருடைய மனம் ஆறுதல் அடையவில்லை. சுத்தோதனர், குலகுருவிடமும், மந்திரியிடமும் தம்முடைய அருமை மகனை அரண்மனைக்கு அழைத்து வரும்படி கூறினார். அவர்கள் சித்தார்த்தரைத் தேடிப் புறப்பட்டனர்.

இதற்கிடையில், சித்தார்த்தர் பார்க்கவன் என்பவரது ஆசிரமத்திற்குச் சென்றார். அங்கிருந்த தவ முனிவர்களை வணங்கினார். அவர்களிடமிருந்து தவத்தைப் பற்றிய விவரங்களையும், தவமுறைகளையும் கேட்டறிந்தார். அவர்களுடைய தவ முறைகள் சித்தார்த்தருக்குத் திருப்தி அளிக்கவில்லை. எனவே அவர் அங்கிருந்து மகத நாட்டிற்குப் புறப்பட்டார். நடந்துநடந்து களைப்புற்றார். ஓய்வெடுப்பதற்காக ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்தார். கபில வஸ்துவிலிருந்து புறப்பட்டு வந்திருந்த சுத்தோதன அரசருடைய குலகுருவும், மந்திரியும் சித்தார்த்தரை அந்த இடத்தில் சந்தித்தனர். அவர்கள் சித்தார்த்தரை வணங்கி அவர் அருகே சென்று அமர்ந்தனர்.

குருதேவரும் அமைச்சரும் சுத்தோதனர் துயரத்தில் இருப்பதையும் யசோதரை அழுது கொண்டே இருப்பதையும், நாட்டு மக்கள் சோகத்திலிருப்பதையும் எடுத்துக் கூறினர். மேலும் தங்களுக்குத் தெரிந்த பல கதைகளையும் சொல்லிச் சித்தார்த்தருடைய மனத்தை மாற்றி அரண்மனைக்கு அழைத்து வர முயற்சித்தனர். அவர்கள் கூறியவற்றையெல்லாம் சித்தார்த்தர் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அதன்பின் தனது இலட்சியத்தை அவர்களிடம் கூறினார். "மெய்ப்பொருளை அறியாமல், வெளிப்பொருள்களில் நாட்டம் செல்லும் புலன்களோடு நான் மாளிகைக்குத் திரும்பப் போவதில்லை" என்று அவர்களிடம் கூறிவிட்டு, சித்தார்த்தர் அங்கிருந்து எழுந்து நடந்தார். குலகுருவும் அமைச்சரும் அரண்மனைக்குத் திரும்பினர். அவர்கள் அரண்மனைக்கு வந்து சுத்தோதனனிடமும் யசோதரையிடமும் சித்தார்த்தர் கூறியவற்றைக் கூறினர். எல்லோரும் ஆழ்ந்த வருத்தத்துடன் இருந்தனர்.

சித்தார்த்தர் மகத நாட்டில் தங்கியிருந்தபோது, ஒரு நாள் ஓர் ஆட்டு மந்தையை இரண்டு பேர் ஓட்டிக்கொண்டு வருவதைக் கண்டார். அவர்களிடம் இந்த ஆடுகளை எங்குக் கொண்டு செல்கிறீர்கள் என்று கேட்டார் சித்தார்த்தர். அதற்கு அவர்கள் பிம்பிசார அரசன் ஒரு யாகம் நடத்துவதாகவும், அந்த யாகத்திற்காக ஆடுகளைக் கொண்டு செல்வதாகவும் கூறினர். அதைக் கேட்ட சித்தார்த்தர் அப்பிராணிகளைப் பார்த்து மிகவும் மனம் வருந்தினார். ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தோரிடம் தானும் யாகசாலைக்கு வருவதாகக் கூறினார். அவர் திரும்பவும் ஆடுகளைப் பார்த்தார். அவை பாதைகளின் இருபாகங்களிலும் நின்று செடிகளையும் தழைகளையும் தின்று பசியாறச் செல்லும்போது அதற்கு விடாமல் அவற்றை அந்த ஆட்டு இடையர்கள் கம்புகளால் அடித்து ஓட்டிக்கொண்டிருந்தனர். இக்காட்சிகள் சித்தார்த்தருடைய மனத்தை மேலும் வருந்தச் செய்தன. அந்த ஆட்டு மந்தையில் பின்னால் ஓர் ஆடு தனது குட்டி ஆடுகளுடன் மெல்ல மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தது. அதனுடைய ஒரு குட்டி கால் நொண்டி நொண்டி வெயிலில் நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்தது. தாய் ஆடு, அதனைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்து வந்து கொண்டிருந்தது. அதைக்கண்ட சித்தார்த்தர் ஓடிச் சென்று அந்த ஆட்டுக்குட்டியைத் தூக்கித் தனது தோளில் வைத்து அதனைத் தடவிக் கொண்டே நடந்தார். ஆடுகளுடனும் ஆட்டு இடையர்களுடனும் சித்தார்த்தர் யாகம் நடக்கும் இடத்திற்கு வந்துசேர்ந்தார்.

யாகசாலையின் நடுவே பிம்பிசார அரசன் நின்று கொண்டிருந்தான். அக்கினி வளர்ந்து கொண்டிருந்தது. ஏற்கெனவே வெட்டப்பட்டிருந்த ஆடுகளின் இரத்தம் தரையில் கிடந்தது. யாகத் தறியில் ஒரு வெள்ளாடு கட்டப்பட்டிருந்தது. அதை வெட்டுவதற்காகத் தீட்சி தன் வாளை எடுத்தான். உடனே சித்தார்த்தர் ஓடிச்சென்று அவனைத் தடுத்து நிறுத்தினார். ஆட்டைக் கட்டியிருந்த கயிற்றினைத் தறியிலிருந்து அவிழ்த்தார். பிம்பிசாரன் சித்தார்த்தருடைய முகத்தைப் பார்த்தான். அவரது முகம் அந்த நேரத்திலும் ஒளிமயமாக இருந்தது. வந்திருப்பது சித்தார்த்தன்தான் என்பதைப் பிம்பிசாரன் தெரிந்து கொண்டான். பிம்பிசாரன் சித்தார்த்தரிடம் பாவத்தைத் தீர்ப்பதற்காக நடத்துகின்ற இந்த யாகத்தைத் தடுக்கக்கூடாதென்று சொன்னான். சித்தார்த்தர் பிம்பிசாரனிடம் பாவத்தைத் தீர்ப்பதற்கென்று ஆடுகளை வெட்டிக் கொலை செய்தால் பாவம் மேலும் மேலும் சேர்ந்து கொண்டுதான் இருக்குமே தவிர, பாவம் தீர்ந்துவிடாது என்று கூறினார். அதைப்

பிம்பிசாரன் ஒத்துக் கொள்ளவில்லை. அவன், யாகங்களால் மன்னர்களுக்குப் பெருமை சேருமென்றும், பலியிடப்படும் உயிர் களுக்குச் சொர்க்கம் கிடைக்குமென்றும் சொன்னான். அதைக்கேட்ட சித்தார்த்தர், பலியிடப்படும் பிராணியின் உயிர் சொர்க்கம் செல்வதானால் ஒருவன் முதலில் தன் தந்தையையே பலியிட்டு அந்த உயிரைச் சொர்க்கத்திற்கு அனுப்பலாமே என்றார். அதைக் கேட்ட மன்னன் அப்படியே அசந்துபோய் நின்றுவிட்டான். சித்தார்த்தர் மேலும் உயிர்ப்பலி வேண்டாமென்றும், கண்டிப்பாக உயிர்ப் பலி வேண்டுமென்று நீங்கள் நினைப்பதானால் என்னையே பலியிடுங்கள். வாய் இல்லாப் பிராணியான இந்த ஆட்டைப் பலியிட வேண்டா மென்றும் கேட்டுக்கொண்டார். அவற்றையெல்லாம் கேட்ட மகத மன்னன் பிம்பிசாரன் சிறிது நேரம் யோசனையில் நின்றான். அதன்பின் உண்மை அவனுக்குப் புரிந்தது. அவன் சித்தார்த்தரை வணங்கி, தான் செய்த தவறைப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டான். மேலும் அவன், இதுபோன்ற உயிர்ப்பலிகள் தனது நாட்டில் நடக்கக்கூடாதென்று கட்டளையிடுகிறேன் என்று கூறினான். அதற்குச் சித்தார்த்தர் மகிழ்ச்சி தெரிவித்தார். தாம் வந்த காரியம் முடிந்துவிட்டது என்று சொல்லிக்கொண்டு சித்தார்த்தர் அந்த இடத்தைவிட்டு அவர் வசித்துவந்த குகைக்குச் சென்றார்.

மறுநாள் காலையில் மந்திரியையும் அழைத்துக் கொண்டு பிம்பிசாரன் சித்தார்த்தரைக் காண வனத்திற்கு வந்தான். அவன் சித்தார்த்தரைச் சந்தித்தான். சித்தார்த்தரிடம் துறவறத்தை விட்டுவிட்டு அரசராகித் தனது மகத நாட்டின் பாதியை ஆளும்படி அன்புடன் வேண்டினான். மகத நாட்டு மன்னனின் அன்பு சித்தார்த்தரின் உள்ளத்தைக் கவர்ந்தது. ஆயினும் அவனுடைய விருப்பம் தமது கொள்கைக்கு உடன்பட்டதல்ல என்பதால் அதனை நிராகரித்தார். அதன்பின் பிம்பிசாரன் சித்தார்த்தரிடம் தாங்கள் விரும்பிய சித்தியெல்லாம் கிடைத்தபின்பு ஒரு முறை எனது அரண்மனைக்கு வரவேண்டுமென்று கேட்டார். அதற்குச் சித்தார்த்தர் ஒப்புக்கொண்டார். வருவதாகவும் உறுதியளித்தார். பிம்பிசாரன் சித்தார்த்தரிடம் விடைபெற்றுச் சென்றான்.

### சித்தார்த்தர் புத்தர் ஆனது

சித்தார்த்தர் மகத நாட்டில் நொஞ்சரை நதியின் கரையிலுள்ள உருவேலா என்னும் வனத்தில் ஆறு வருடங்கள் தவம் செய்தார். முடிவில் அவர் மெய்யறிவு பெற்றுப் புத்தரானது இந்த வனத்தில்தான். எனவே இந்த வனம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. சித்தார்த்தர் இந்த வனத்தில் தவம் செய்து கொண்டிருக்கும்போது மெய்யறிவில் நாட்டம் கொண்ட ஐந்துபேர் அங்கு வந்தனர். அவர்களின் பெயர் விவரம்:

1. கௌண்டிந்ய குலபுத்திரர் (கொண்டஞ்ஞர்)
2. தசபால காசியபர்
3. பாஷ்பர்
4. அசுவஜித்
5. பத்திரகர்

இவர்கள் சித்தார்த்தருடன் தங்கினர். சித்தார்த்தர் தவத்தில் காணும் உண்மைகளைத் தங்களுக்குக் கூறுவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் சித்தார்த்தர் எதுவுமே கூறவில்லை. எனவே அவரிடம் வெறுப்புக்கொண்டு அவரை விட்டுவிட்டு வேறிடத்திற்குச் சென்றுவிட்டனர்.

சித்தார்த்தர் உருவெலா வனத்தில் நின்ற ஒரு பெரிய அரச மரத்தை நோக்கி நடந்தார். அவர் போகும் வழியில் சுவஸ்திகன் என்னும் அந்தணர் தர்ப்பைப் புல் அறுத்துக் கொண்டிருந்தார். அவர் சித்தார்த்தருக்கு எட்டுப் பிடி தர்ப்பைப் புல் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு சித்தார்த்தர் அந்த அரச மரத்தின் மூட்டிற்கு வந்தார். அந்தப் புல்லை அரசமரத்தின் மூட்டில் பரப்பி வைத்து அதன்மீது அமர்ந்தார். அவர் தியானத்தில் ஆழ்ந்தார். அப்போது அங்கே வசவர்த்தி மாறன் வந்தான். தவம் செய்பவர்களைத் தவத்திலிருந்து கலைக்கும் சக்தி மாறனுக்கு உண்டு. சித்தார்த்தருடைய தவத்தைக் கலைக்க அவன் தன்னால் முடிந்த எல்லாமுயற்சிகளையும் மேற்கொண்டான். ஆனால் ஆழ்ந்த தியானத்திலிருந்த சித்தார்த்தரை அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை.

சித்தார்த்தர் நான்கு வகையான தியானங்களையும் முறையே கடைப்பிடித்தார். நான்கு வகை தியானங்கள்:

1. ஏகாந்தமாக இருந்து, ஆராய்ச்சி செய்து, சிந்தித்து இன்ப நிலையில் இருப்பது
2. ஆராய்ச்சியோ, சிந்தனையோயின்றி, அமைதிபெற்றிருப்பது
3. மன விகாரங்களையெல்லாம் அடக்கியிருப்பது
4. துக்கத்தை அறவே ஒழித்துச் சமநிலையான மனதுடன் இன்ப நிலை பெறுதல்

சித்தார்த்தர் முதல் இரண்டு தியானங்களுக்குப்பின் மூன்றாவது தியானத்தில் அமர்ந்திருக்கும்போது அவருக்குப் பேரானந்த உணர்ச்சி ஏற்பட்டது. அதன்பின் அவர் நான்காவது தியானத்தை அடைந்தார். அப்போது அவர் தனது முற்பிறப்புகளைப்

பற்றி அறிந்தார். ஒவ்வொரு பிறவியிலும் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் எல்லாம் தெளிவாகத் தெரிந்தன. அந்நிலையில் அஞ்ஞானம் தொலைந்து அறிவு துலங்கியது. அதன்பின் உயிர்கள் தோன்றி மறைவதைப் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டார். நல்வினை, தீவினைகளுக்குத் தக்கபடி உயிர்கள் பின்னால் நன்மையையும் தீமையையும் அடைவதை அவர் கண்டார். ஞானதிருஷ்டியால் எல்லாம் அவருக்கு விளக்கமாகத் தெரிந்தது. அவர் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பிய எல்லா விஷயங்களையும் தெரிந்துகொண்டார். இனி அவர் தெரிந்துகொள்ள வேண்டியது எதுவுமேயில்லை. அவர் முகம் ஒளிமயமானது. அவர் ஞானோதயம் பெற்றுப் 'புத்தர்' ஆகிவிட்டார்.

புத்தர் ஞானோதயம் பெற்ற பின்பும் நான்கு வாரங்கள் அந்த அரசமரத்தின் அருகிலேயே இருந்தார். அரச மரத்தின் மூட்டிலிருந்து புத்தர் ஞானம் (போதம்) பெற்றதால் அரச மரத்தைப் 'போதி மரம்' என்றும் கூறுவர். ஐந்தாவது வாரம் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு 'அஜபாலன்' என்று பெயருள்ள ஆலமரத்தை அடைந்து, ஆலமரத்தின் மூட்டில் ஒரு வாரக்காலம் யோகத்தில் இருந்தார். அப்போது அவர் உண்ணாவிரதத்தினால் உடம்பை வாட்டிக் கடும் தபசு செய்வதை விட மத்திம வழியில் தவம் செய்து ஞானோதயம் பெற்றது எவ்வளவு மேன்மையானது என்று தமக்குள் எண்ணினார். ஆறாவது வாரத்தில் அம்மரத்தை விட்டு அகன்று போய் முதலிலிருந்த மரத்தடிக்குச் சென்றார். அங்கு அந்த வாரம் முழுவதும் தியானத்தில் இருந்தார். ஏழாவது வாரத்தில் முதலிலிருந்த மரத்தைவிட்டு அகன்று இராஜர்யதன மரத்தடிக்குச் சென்றார். அம்மரத்தின்கீழ் ஏழு நாட்கள் அவர் தியானத்தில் இருந்தார். அப்போது அவ்வழியாகச் சென்று கொண்டிருந்த திரிபுஷன், பல்லிகன் என்ற இரு வர்த்தகர்களும் புத்தரைக் கண்டனர். அவர்கள் அவருக்குத் தேனும் சர்க்கரையும் நெய்யும் கொடுத்து வணங்கினர். புத்தர் அவற்றை அன்போடு ஏற்றுக் கொண்டார். போதியடைந்த பின்பு அவர் உட்கொண்ட முதல் உணவு அவைதாம்.

## புத்தர் உபதேசிக்கத் தொடங்கியது

சித்தார்த்தர் புத்தரான பின்பு தமக்கு முதன்முதலில் உணவு வழங்கிய திரிபுஷன் மற்றும் பல்லிகன் ஆகிய இருவருக்கும் அதன்பின் யாருக்கு உபதேசம் செய்யலாம் என்று புத்தர் தமக்குள்ளே கேட்டுக் கொண்டார். அப்போது முன்பு தம்முடன் சீடராக இருந்த தொண்டருக்கும் முதலிய ஐந்து பேர்களும் போதிக்கத் தக்கவர்கள் என்று எண்ணினார். எனவே அவர்கள் அப்போதிருந்த இடமான

வாரணாசிக்கு (காசிக்கு) புறப்பட்டார். அங்கு அவர்களைச் சந்தித்தார். புத்தரை அவர்கள் வரவேற்றனர். தான் 'புத்தர்'ஆன விவரத்தை அவர்களிடம் கூறினார். அதன்பின் அவர்களிடம் நான்கு வாய்மைகளைப் பற்றியும் அஷ்டாங்க மார்க்கம் பற்றியும் உபதேசித்தார்.

## நான்கு வாய்மைகள்

1. **துக்கத்தை பற்றிய உண்மை :** பிறப்பில் வேதனை, தளர்ச்சி வேதனை, பிணி வேதனை, மரண வேதனை, இன்பகரமாய் இல்லாதவற்றின் சேர்க்கையான வேதனை, ஆசை நிறைவேறா மையால் வேதனை – சுருங்கச் சொன்னால் பற்றுக் காரணமாக எழும் வேதனைகள்.
2. **துக்க உற்பத்தி பற்றிய வாய்மை :** புலன்கள் இன்பத்தோடு அங்கும் இங்குமாக அலைந்து இன்பத் தேட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தூண்டும் வேட்கை. அதாவது காமம் முதலிய உணர்ச்சிகளைத் திருப்தி செய்யவோ, எதிர்கால வாழ்வில் ஆசை கொள்ளவோ அல்லது இந்த வாழ்வில் வெற்றியடையவோ கொள்ளும் பேராவல்.
3. **துக்க நீக்கத்தைப் பற்றிய வாய்மை :** வேட்கை சம்பந்தமான காம உணர்ச்சி எதுவும் எஞ்சியிராமல் அழித்து விடுதலே இது (துக்க நீக்கம்). இந்த வேட்கையை ஒதுக்கி உதறித் தள்ளிவிட்டு, இதிலிருந்து அறவே விடுதலையாகி, உள்ளத்தில் இது தங்குவதற்கு இடமே இல்லாமல் செய்தலாகும்.
4. **துக்க நீக்கத்திற்குரிய மார்க்கம் பற்றிய வாய்மை :** அஷ்டாங்க மார்க்கமே.

### அஞ்சடாங்க மார்க்கங்கள்

| | |
|---|---|
| 1. நற்புரிதல் | (Right understanding) |
| 2. நற்சிந்தனை | (Right thought) |
| 3. நற்பேச்சு | (Right speech) |
| 4. நற்செய்கை | (Right action) |
| 5. நல்வாழ்க்கை | (Right living) |
| 6. நன்முயற்சி | (Right effort) |
| 7. நல் அறிவுடை நிலை | (Right awareness) |
| 8. நல் மன ஒருமை | (Right concentration) |

புத்தருடைய உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த ஐந்து சீடர்களும் துறவறத்தில் நிலைத்திருந்தனர். அவர்களுடைய உள்ளங்கள் தெளிவடைந்தன. அவர்கள் புத்தரிடம் 'பிக்கு' ஆனார்கள். 'பிக்கு' என்றால் 'புத்த துறவி' என்று பொருள். அதன்பின் புத்தருடைய உபதேசங்களைப் பின்பற்றிய பலரும் 'பிக்கு' ஆனார்கள்.

## புத்தரின் சங்கம்

கொண்டஞ்ஞர் முதலான ஐந்து சீடர்களையும் கொண்ட ஒரு சங்கத்தைப் புத்தர் அமைத்தார். புத்தர், சங்கம் பற்றி அவர்களிடம் இவ்வாறு கூறினார்.

> சத்திய மார்க்கத்திலே செல்லத் தீர்மானிக்கும் ஒரு மனிதன் தனித்து நின்றால், அவன் வலிமை குன்றித் தன் பழைய பழக்கங்களுக்கே திரும்பி விடக்கூடும். எனவே நீங்கள் ஒன்று சேர்ந்திடுங்கள். ஒருவருக் கொருவர் உதவி செய்யுங்கள். ஒருவர் முயற்சிகளை மற்றவர்கள் பண்படுத்துங்கள். சகோதரர்களைப் போலிருங்கள். அன்பில் ஒன்றாகவும், துறவறத்தில் ஒன்றாகவும், சத்தியத்தை நாடும் ஆர்வத்தில் ஒன்றாகவும் இருங்கள். உலகின் திசைகளிலெல்லாம் சத்தியத்தையும் தருமத்தையும் பரப்புங்கள். முடிவில் எல்லா ஜீவன்களும் தரும ராஜ்யத்தின் குடிகளாக யிருக்கும்படி செய்யுங்கள். இதுவே புனிதமான சங்கம். இதுவே புத்தரின் சங்கம். புத்தரைச் சரணம் அடைந்துள்ள அனைவருக்கும் ஒருமைப்பாட்டை அமைக்கும் சங்கம் இதுவே.

காலப்போக்கில் இவர் சங்கத்தில் பலரும் சேர்ந்தனர்.

## புத்தர் பிம்பிசார மன்னரைச் சந்திக்கச் சென்றது

புத்தர் ஏற்கெனவே உறுதியளித்திருந்தபடி பிம்பிசார மன்னரைச் சந்திக்கச் சென்றார். அவருடன் ஏராளமான புத்த பிக்குகளும் சென்றனர். புத்தரும் பிக்குகளும் தன்னைப் பார்க்க வருவதை அறிந்த மகத மன்னர் பிம்பிசாரன் அவரது மந்திரிகள் சேனாதிபதிகளுடன் சென்று அவர்களை வரவேற்றார். புத்தர் அங்குக் கூடி நின்றவர்களுக்கு உபதேசித்தார். உபதேசங்களைக் கேட்ட மன்னருடைய மனதிற்குத் தெளிவு ஏற்பட்டது. அவர் புத்த மதத்தில் சேர்ந்தார். அதன்பின் அரசரும், புத்தரும், பிக்குகளும்

அரண்மனைக்கு வந்தார்கள். அவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது. புத்தர் அருகில் இருந்த பிம்பிசாரர் எதையோ நினைத்து ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதைப் புத்தர் கண்டார். அவர் பிம்பிசாரரிடம், எதை நினைத்துச் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார். அப்போது அரசர், "தாங்கள் இங்கு எப்போது வந்தாலும் தங்கியிருந்து தருமம் போதிப்பதற்கு ஏற்ற தவப்பள்ளி ஒன்றை இந்த நகருக்கு வெளியே இருக்கின்ற வேணு வனத்தில் அமைக்கலாம் என்று நினைக்கின்றேன் இதனைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்றார். அரசரின் வேண்டுகோளைப் புத்தர் அன்புடன் ஏற்றுக்கொண்டார். பிறகு இருவரும் உணவு அருந்தினர். அதன்பின் பிம்பிசார அரசருக்கு ஆசி வழங்கிவிட்டுப் பிக்குகளுடன் வேணு வனத்திற்குச் சென்றார். அங்கு 'விகாரை' (தவப்பள்ளி) அமைக்கப்பட்டது. புத்தர் இந்த விகாரையில் தங்கித் தர்மோபதேசம் செய்தார்.

### சுத்தோதன மன்னர் தூதுவர்களை அனுப்பியது

புத்தர் பிம்பிசார அரசரின் மகத நாட்டிலுள்ள வேணுவனத்தில் தங்கியிருந்து தர்மோபதேசம் செய்வதைச் சுத்தோதன மன்னன் கேள்விப்பட்டான். அவரைத் தமது நாட்டிற்கு (கபிலவஸ்துவுக்கு) அழைத்து வரும்படி அமைச்சர் ஒருவரை ஆயிரம் பரிவாரங்களுடன் அனுப்பினார். அவர்கள் வனத்திற்கு (வேணுவனம்) வந்தனர். அவர்கள் எல்லோரும் புத்தருடைய உபதேசங்களைக் கேட்டுச் சன்னியாசம் பெற்றுத் துறவு பூண்டார்களே தவிர, அவர்கள் எதற்காக வந்தார்களோ, அந்தக் காரியத்தை மறந்துவிட்டார்கள். இதை அறிந்த சுத்தோதனர் மீண்டும் ஓர் அமைச்சரை ஆயிரம் பரிவாரங்களுடன் அனுப்பினார். அவர்களும் முதலில் வந்தவர்களைப் போலவே புத்தருடைய உபதேசங்களைக் கேட்டுச் சன்னியாசம் பெற்றுத் துறவு பூண்டார்கள். அவர்களும் திரும்பி வரவில்லை. இப்படி ஒன்பது முறை நடந்தது. பத்தாவது தடவையாகச் சுத்தோதனர் புத்தரை எப்படியாவது அழைத்து வரவேண்டுமென்று கூறிச் சித்தார்த்த கௌதம புத்தருடைய பால்ய கால நண்பர் 'உதாயி'யை அனுப்பினார். உதாயி பரிவாரங்களுடன் சென்று புத்தரைச் சந்தித்தார். அவரும் புத்தரின் உபதேசங்களைக் கேட்டுச் சன்னியாசம் பெற்றுத் துறவு பூண்டார்.

உதாயி துறவு பூண்டு ஒரு வாரக்காலம் ஆன பின்பு புத்தரைக் கபிலவஸ்து நகருக்கு அழைத்துச் செல்ல வந்த காரியம் ஞாபகத்திற்கு வந்தது. அவர் புத்தர் அருகில் சென்று தன்னைச் சுத்தோதனர் எதற்காக அனுப்பினார் என்ற விவரத்தைக் கூறினார். மேலும் சுத்தோதன அரசரும், யசோதரையும், நாட்டு மக்களும் புத்தரைக்

காண விரும்புகின்ற விவரத்தை எடுத்துரைத்து, புத்தரைக் கபிலவஸ்துவுக்கு வரும்படி வேண்டினார். அவரது வேண்டுகோளைப் புத்தர் ஏற்றார். அவர் கபிலவஸ்து நகருக்குப் புறப்பட்டார்.

## புத்தர் கபிலவஸ்து நகருக்கு வந்தது

புத்தர் கபிலவஸ்து நகருக்குப் புறப்பட்ட விவரத்தை உதாயி கூடவே சென்று சுத்தோதன அரசரிடம் தெரிவித்தார். சுத்தோதனர் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தார். புத்தர் கபிலவஸ்துவுக்கு வந்தால் அவர் தங்குவதற்கான வசதிகளை நிக்ரோத ஆராமம் என்னும் தோட்டத்தில் சுத்தோதனர் செய்தார்.

புத்தர் கபிலவஸ்துவுக்கு நடந்து வந்துகொண்டிருக்கும்போது இடைவழியில் கூடுகின்ற மக்களுக்குத் தர்மோபதேசம் செய்து கொண்டே வந்தார். இவ்வாறு இரண்டு வாரங்கள் நடைப்பயணம் செய்து புத்தர் கபிலவஸ்து நகருக்குள் வந்து சேர்ந்தார். அவருடன் ஏராளமான புத்த பிக்குகளும் வந்திருந்தார்கள். அவர்களைச் சுத்தோதன மன்னரும், நாட்டு மக்களும் வரவேற்றார்கள். புத்தரும் அவருடன் வந்திருந்தவர்களும் நிக்ரோத ஆராமத்திற்குச் சென்று தங்கினர். அங்கு வந்திருந்த மக்களுக்குப் புத்தர் தர்மோபதேசம் செய்தார். எல்லோரும் கேட்டு இன்பம் அடைந்தார்கள். புத்தரும் பிக்குகளும் நிக்ரோத ஆராமத்தில் தங்கிவிட்டு மறுநாள் பிச்சை எடுப்பதற்காகக் கபிலவஸ்து நகரத்திலுள்ள வீடுகளுக்குச் சென்றனர். இதைக்கண்ட மக்கள் ஆச்சரியப்பட்டனர்.

புத்தர் பிச்சைக்குப் போவதைக் கேள்விப்பட்ட யசோதரை அரண்மனையிலிருந்து கொண்டே தன் கணவரைப் பார்த்துவிட்டு ஆழ்ந்த சிந்தனையுடன் அமர்ந்தாள். அவளது மனதில் நினைவுகள் பல வந்துகொண்டேயிருந்தன. முன்பு அரண்மனையில் தன் கணவர் அறுசுவை உணவுகளை உண்டது, வீதிகளில் உலாவச் சென்றபோது விலை உயர்ந்த ஆடைகள், கிரீடம், முத்துமாலைகள் முதலானவற்றை அணிந்து இந்திரனைப் போல் காட்சியளித்தது, தற்போது தலைமுடியையும் தாடி மீசையையும் மழித்துவிட்டு இடுப்பிலும் தோளிலும் காவியாடையணிந்து, ஒரு பாத்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பிச்சைக்காக வருவது முதலானவற்றையெல்லாம் குறித்துச் சிந்தித்துக் கொண்டேயிருந்தாள்.

யசோதரை எழுந்து சென்று தன் மாமனார் சுத்தோதனரிடம் புத்தர் பிச்சையெடுப்பதைக் கூறினார். இதைக் கேட்ட மன்னர் விரைந்து சென்று புத்தர் முன்னிலையில் நின்றார். அவர் புத்தர் கையிலிருந்த பிச்சைப் பாத்திரத்தை வாங்கினார். புத்தரையும்

பிக்குகளையும் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அரண்மனையில் எல்லோருக்கும் உணவு அளிக்கப்பட்டது. உணவு சாப்பிட்டபின் புத்தர் சுத்தோதன மன்னருக்கு உபதேசம் செய்தார். யசோதரை புத்தரைப் பார்க்க வரவில்லை.

புத்தர் யசோதரை அம்மையாரைப் பார்க்கச் சென்றார். சுத்தோதன அரசரும் புத்தருமாகத் தன்னைப் பார்க்க வரும் விவரம் அறிந்து யசோதரை புத்தரை எதிர்கொண்டு அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி, இருபாதங்களையும் பிடித்துக்கொண்டு அழுதாள். அதன்பின் எழுந்து மௌனமாக இருந்தார். யசோதரை கூந்தலை இழந்து காவி உடை அணிந்திருந்ததைப் பார்த்துப் புத்தர் அதுபற்றி சுத்தோதனரிடம் கேட்டார். அப்போது சுத்தோதனர் "சுவாமி, தாங்கள் ஆடையணிகளை நீக்கிவிட்டுக் காவி உடை தரித்ததைக் கேட்டு என் மருமகளும் ஆடை அணிகலன்களைக் கழற்றிவிட்டுக் காவி ஆடையைத் தரித்தாள். ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே உணவு உண்டாள். தாங்கள் விலையுயர்ந்த ஆசனங்களை விட்டுவிட்டு, சாதாரணமாக அமர்வதைக் கேட்டு இவளும் அப்படியே செய்தாள். அரச போகங்களையெல்லாம் நீக்கி ஒரு துறவியைப் போலவே வசித்து வருகிறாள்" என்று கூறினார். இவற்றைக் கேட்ட புத்தர் அவர்களுக்கு உபதேசம் செய்தார். யசோதரை தானும் பிக்குவாக விரும்பினாள். ஆனால் புத்தர் அதற்கு இணங்கவில்லை.

புத்தர் கபிலவஸ்துவுக்கு வரும்பொழுது அவரது மகன் இராகுலனுக்கு வயது ஏழு. புத்தர் கபிலவஸ்துவுக்கு வந்த ஏழாம் நாள் யசோதரை இராகுலனை இளவரசனைப் போல் அலங்கரித்து, அவனுக்குப் புத்தரைக்காட்டி, இவர்தான் உன் தந்தை, நீ இவரிடம் சென்று நீ யுவராஜா என்றும், நீ வருங்கால அரசர் என்றும் கூறி, அவருடைய செல்வத்தை உனக்கு அளிக்கும்படி கேள் என்று சொல்லி அனுப்பினாள். இராகுலன் புத்தரிடம் சென்றான். தாயார் கூறியனுப்பியவாறு புத்தரிடம் தனக்குரிய செல்வத்தைத் தந்தருளுமாறு கேட்டான். புத்தர் அப்போது எதுவுமே கூறவில்லை. போதி மரத்தில் அடியில் தான் பெற்ற அழியாத செல்வத்தையே அவனுக்கு அளிக்க வேண்டுமென்று புத்தர் கருதினார். பிறகு இராகுலனைப் பார்த்து "பொன்னும், வெள்ளியும், நகைகளும் என்னிடம் இல்லை. உயர்ந்த வாழ்வுக்குரிய செல்வங்களை நீ பெற விரும்பினால் அதற்காக நான் உனக்கு நான்கு வாய்மைகளைக் கற்பிக்கிறேன்" என்றார். மேலும் "நீ அவற்றை உணர்ந்துகொண்டு அட்டாங்க மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும்" என்றும் கூறினார். அப்போது இராகுலன் உயர்ந்த வாழ்வுக்குரிய செல்வங்களை நான்

விரும்புகிறேன் என்று கூறினான். புத்தர் இராகுலனுக்கு உபதேசம் செய்து அவனைப் புத்தர் சங்கத்தில் சேர்த்தார். இவ்வாறு இராகுலன் தனது ஏழு வயது பிராயத்திலேயே தனது துறவி வாழ்க்கையை மேற்கொண்டான்.

## இருநாடுகளுக்கிடையே ஏற்பட்ட பாசனப் பிரச்சினையைப் புத்தர் தீர்த்து வைத்தது

கபிலவஸ்துவிலுள்ள சாக்கியர்களுக்கும், பக்கத்து நாட்டிலுள்ள கோலியர்களுக்குமிடையே சண்டை ஏற்பட்டது. இரு நாடுகளுக்குமிடையே பாய்ந்து கொண்டிருந்த உரோகிணி ஆற்றில் கோடைக்காலத்தில் தண்ணீர் குறைந்து கொண்டே வந்ததால் சாக்கியர்கள் அந்த ஆற்றின் குறுக்கே ஓர் அணையைக் கட்டி அந்த நீரைத் தங்கள் நிலங்களுக்குக் கொண்டு செல்ல ஆரம்பித்தனர். இதனால் ஆத்திரமடைந்த கோலியர்கள் அதைத் தடுத்தனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே தகராறு மூண்டது. அவர்கள் ஆயுதங்களுடன் ஆற்றின் கரையில் கூடிப் போருக்குத் தயாராயினர். இதை அறிந்த இரு நாட்டினுடைய அரசர்களும் அங்குச் சென்றனர். அவர்கள் சமாதானம் பேசிப் போரை நிறுத்த முயன்றனர். ஆனால் அவர்களுடைய முயற்சிகள் அனைத்தும் வீணாகி, போர் நடந்தே தீரும் என்ற சூழ்நிலை உருவாயிற்று. விவரமறிந்து புத்தர் அந்த இடத்திற்குச் சென்றார். அவர் இரு தரப்பினரிடையேயும் சமாதானம் பேசி நடக்கவிருந்த போரை நிறுத்தினார். அங்கு அமைதி நிலவியது. புத்தருடைய பெருமையையும், அவருடைய கொள்கைகளையும் உணர்ந்த சாக்கியர்களில் பலரும், கோலியர்களில் பலரும் பௌத்த தர்மத்தைப் பின்பற்றினர்.

## புத்தர்மீது சுமத்தப்பட்ட இரண்டு அவதூறுகள்

புத்தருடைய உபதேசங்கள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. இதனால் புத்தரிடம் பொறாமை கொண்ட சிலர் புத்தருக்கு எப்படியாவது கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணினர். அதற்காக அவர்கள் சில திட்டங்களையும் தீட்டினர்.

புத்தரிடம் பொறாமை கொண்ட சிலரின் சூழ்ச்சியால் சிஞ்சை என்பவள் புத்தருக்கு அவதூறு ஏற்படுத்தத் திட்டமிட்டாள். ஒரு நாள் மாலை நேரத்தில் புத்தர் மக்களுக்கும், சீடர்களுக்கும் உபதேசங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது சிஞ்சை திடீரென்று அங்கே சென்று புத்தரைப் பார்த்து, உம்மால் எனக்குக் கர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது, எனவே எனக்குப் பேறுகால உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டாள். அப்போது அங்கிருந்தவர்கள்

சிஞ்சையை உற்றுப் பார்த்தனர். சிஞ்சையின் வயிறும் பெரிதாக இருந்தது. அவள் கர்ப்பவதி போல் காட்சியளித்தாள். புத்தர் சிறிது நேரம் எதுவுமே பேசாமல் இருந்துவிட்டார். அதன்பின் அவளைப் பார்த்து நீ கூறுவது பொய் என்று நிதானமாகவே சொன்னார். அதற்கு, அவர் நீங்கள் மக்களின் மனத்தைக் குழப்ப வேண்டாம், முதலில் எனக்குப் பிரசவத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டாள். அதைக் கேட்ட மக்கள் மனம் கலங்கினர். அப்படியிருக்கும்போது சிஞ்சை தனது வயிற்றின் பின்பக்கம் கட்டியிருந்த துணியின் முடிச்சுகள் அவிழ்ந்து, அவள் வயிற்றோடு சேர்த்துக் கட்டி வைத்திருந்த மரக்கட்டைகள் கீழே விழுந்தன. அதைக்கண்ட மக்கள் வியப்படைந்தனர். சிஞ்சை அங்கிருந்து ஓடிவிட்டாள். புத்தருடைய புகழுக்குக் களங்கம் ஏற்படுத்த வந்த சிஞ்சையின் அச்செயலால் புத்தரின் புகழ் மேலும் அதிகரித்தது.

சுந்தரி என்பவள் தினமும் மாலை நேரத்தில் புத்தருடைய விகாரை (துவப்பள்ளி) நோக்கி நடந்து செல்வதும் மறுநாள் காலையில் அங்கிருந்து புறப்பட்டுப் பக்கத்திலுள்ள நகரை நோக்கி நடந்து வருவதும் வழக்கமாகயிருந்தாள். ஆனால் அவள் விகாரைக்குள் செல்வதில்லை. பார்ப்பவர்களுக்கு அவள் விகாரைக்குள் இரவு தங்கிவிட்டுக் காலையில் அங்கிருந்து புறப்படுவதுபோல் உள்ள ஒரு தோற்றத்தை உருவாக்கினாள். சுந்தரி, பல மாதங்களாக இவ்வாறு செய்து, மக்கள் அவளையும் புத்தரையும் இணைத்துப் பேசும் ஒரு சூழ்நிலையை உருவாக்கினாள். கேட்பவர்களிடம் அவள் தினமும் விகாரையில் புத்தருடன் சேர்ந்து படுத்துவிட்டுக் காலையில் எழுந்து வருவதாகக் கூறினாள். அதைக் கேட்ட மக்கள் முகம் சுளிக்கத் தொடங்கினார்கள்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருநாள் சுந்தரி கொலை செய்யப்பட்டு விகாரைக்கு வெளியே உள்ள குப்பை மேட்டில் போடப்பட்டிருந்தாள். புத்தருக்கும் சுந்தரிக்குமுள்ள இரகசிய உறவை மறைப்பதற்காகப் பௌத்த பிக்குகளே அவளைக் கொலை செய்து விட்டதாகப் புத்தரின் எதிரிகள் பொய்ப்புரளியைக் கிளப்பினர். அவர்கள் இவ்வாறு மன்னரிடம் சென்று கூறவும் செய்தனர். மன்னர் விசாரணைக்கு உத்தரவிட்டார். விசாரணையில் புத்தர்மீது பொறாமை கொண்டவர்களில் சிலர் சுந்தரியைக் கொலை செய்துவிட்டுப் பழியைப் புத்தர்மீது போட இரண்டு பேரை ஏற்பாடு செய்ததாகவும், அந்த இருவரும்தாம் சுந்தரியைக் கொலை செய்தனர் என்றும் தெரிய வந்தது. அதன்பின் அவர்களுக்குத் தண்டனை வழங்கப் பட்டது. இந்தச் சம்பவத்திற்குப் பின்பும் புத்தருடைய புகழ் மேலும் அதிகரித்தது.

## பௌத்தத்தில் பெண்கள்

புத்தருடைய போதனைகளைப் பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் ஒரே கூட்டமாக இருந்து கேட்டு வந்தனர். ஆயினும் பெண்களைப் பௌத்த சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப் புத்தர் தயங்கினார். பெண்களைப் பௌத்த சங்கத்தில் சேர்த்தால் சமணத்தைச் சேர்ந்தவர்கள் பௌத்தர்கள் மீது வீண் பழிகளைப் போடுவார்கள் என்று நினைத்துத்தான் புத்தர் அவ்வாறு தயங்கினார். ஆண்களும் பெண்களும் மாசுமறுவில்லாமல் மிகத் தூய்மையுடன் வாழவேண்டும் என்பதும் அத்தகைய வாழ்க்கைக்கு இடைவிடாத பயிற்சி தேவை என்பதும் புத்தருடைய கொள்கை.

புத்தர் பௌத்த சங்கத்தில் பெண்களைச் சேர்க்க, விரும்பாத போதிலும், அவருடைய வளர்ப்புத் தாயாகிய கௌதமியைச் சேர்த்துக் கொண்டார். அதன்பின் கட்டுப்பாடுடைய பல பெண்களும் பௌத்த சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

## சுத்தோதனரின் மரணம்

சுத்தோதன மன்னர் நோயால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்ப தாகவும், அவருடைய கடைசிக் காலம் நெருங்கிக் கொண்டிருப்ப தாகவும் அறிந்த புத்தர் அவருடைய முக்கியமான சீடர்களுடன் கபிலவஸ்துவுக்கு வந்தார். அவர் தந்தையைச் சந்தித்தார். அவருக்கு அற உபதேசம் கொடுத்தார்.

புத்தரின் உபதேசங்களைப் பெற்ற சுத்தோதனர் மெய்ஞ்ஞானம் பெற்றார். ஏழு நாள்களுக்குப் பிறகு அவரது ஆவி பிரியும் என்று புத்தர் கூறினார். அவ்வாறே அவரது ஆவி பிரிந்தது. அப்போது அவருக்கு வயது தொண்ணூற்றுயேழு. புத்தர் தனது தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளைச் செய்தார்.

## புத்தர் விவசாயியைச் சந்தித்தது

புத்தர் ஒருநாள் ஒரு கிராமம் வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அந்தக் கிராமத்தில் ஏராளமான விளை நிலங்கள் இருந்தன. அந்த நிலங்களில் மக்கள் விவசாயம் செய்து கொண்டிருந்தனர். தங்கள் வியர்வையைச் சிந்தி மக்கள் உழைத்துக் கொண்டிருப்பதையும், அவர்கள் விவசாயத்தின்மீது கொண்டுள்ள அக்கறையையும் புத்தர் கண்டார். புத்தர் அவர்கள் மீது பரிவும், மதிப்பும் கொண்டார். புத்தர் அங்குள்ள விவசாய நிலங்களையும், விவசாயிகளையும் பார்த்துக் கொண்டே சென்று கொண்டிருந்தார். இப்போது பரத்வாஜன் என்னும் விவசாயி புத்தரைக் கண்டான்.

உடனே அவன் ஓடிவந்து புத்தரை வணங்கினான். அவன் புத்தரிடம், தான் ஒரு விவசாயி என்றும், நிலத்தை உழுது தண்ணீர் பாய்ச்சி, களையெடுத்து, விவசாயம் செய்து உயிர் வாழ்கிறேன் என்றும், தாங்களும் ஏன் என்னைப்போல் விவசாயம் செய்து வாழக்கூடாது என்றும் கேட்டான். புத்தர் அவனிடம் தானும் உழுது, விதைத்து, பயிர் செய்து, உண்டு வாழ்கிறேன் என்று பதில் சொன்னார். பரத்வாஜனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் புத்தரிடம் தாங்கள் விவசாயியே இல்லையே அப்படியிருக்க எப்படி பயிர் செய்கிறீர்கள் என்று கேட்டான். அதற்குப் புத்தர், “உண்மை தத்துவம் என்பன விதைகள், ஆர்வம் என்பது மழைநீர், அடக்கம் என்ப்து கலப்பை, ஊக்கமும் முயற்சியும் எருதுகள், துக்கமற்ற இன்நிலையே அறுவடை” என்று பதில் சொன்னார். இதைக் கேட்ட பரத்வாஜன் மகிழ்ச்சியுடன் புத்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அதன்பின் அவனும் பௌத்தத்தில் சேர்ந்தான்.

## புத்தர் ஆனந்ததேரரைப் பிரதம சீடராக ஏற்றுக் கொண்டது

புத்தருக்குப் பல சீடர்கள் இருந்தனர். அவர்களுள் ஒருவரைப் பிரதம சீடராக்கப் புத்தர் விரும்பினார். ஒருநாள் அவர் தம் சீடர்களை யெல்லாம் அழைத்தார். அவர்களிடம் தமக்கு வயது ஐம்பத்தி ஐந்து ஆகிவிட்டது என்றும், எனவே தனக்கென்று ஒரு பிரதம சீடரை வைத்துக்கொள்ள விரும்புவதாகவும் கூறினார். பிறகு அவர்களிடம் உங்களில் யாருக்கு விருப்பமோ அவர் எழுந்து நின்று சம்மதத்தைத் தெரிவியுங்கள் என்று கூறினார். அப்போது ஆனந்ததேரரைத் தவிர மற்ற எல்லோரும் எழுந்து நின்று தங்களது விருப்பத்தைத் தெரிவித்தார்கள். ஆனந்ததேரர் மட்டும் இருந்த இருப்பிலேயே இருந்துவிட்டார். அப்போது மற்றவர்கள் அவரைப் பார்த்து நீங்களும் உங்கள் விருப்பத்தைக் கூறுங்கள் என்று கேட்டனர். அப்போது புத்தர் அவரைப் பார்த்து ஆனந்தருக்கு விருப்பமிருந்தால் அவரே தமது விருப்பத்தைக் கூறுவார். நீங்கள் கட்டாயப்படுத்த வேண்டாம் என்று சொன்னார். அப்போது ஆனந்ததேரர் எழுந்து நின்று தான் பிரதமசீடராக இருக்கவேண்டுமானால் தன்னுடைய சில வேண்டுகோள்களை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தன்னுடைய வேண்டு கோள்களைக் கூறினார். அவற்றையெல்லாம் புத்தர் ஏற்றுக்கொண்டு ஆனந்ததேரரையே பிரதம சீடராக்கினார். புத்தர் பரிநிர்வாணம் (மோட்சம்) அடைவது வரை ஆனந்த தேரரே பிரதம சீடராகயிருந்தார்.

## புத்தரைத் தேவதத்தன் கொலைசெய்யத் திட்டமிட்டது

பௌத்த சங்கத்தை மக்கள் பெரிதும் மதித்தார்கள். புத்தருடைய புகழ் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வந்தது. அப்போது, புத்தருடைய உறவினரும், புத்தரிடம் துறவுபூண்டு பிக்கு ஆனவருமாகிய தேவதத்தனுக்குப் பதவி ஆசை ஏற்பட்டது. புத்தருக்குப் பதிலாகத் தானே பௌத்த சங்கத்தின் தலைவராகயிருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். ஒரு நாள் புத்தர் உபதேசம் செய்து கொண்டிருந்தார். அப்போது தேவதத்தன் அவரிடம் சென்று, தங்களுக்கு வயதாகிவிட்டபடியால் சங்கத்தின் தலைமைப் பொறுப்பைத் தன்னிடம் ஒப்படைக்கக் கேட்டான். ஆனால் புத்தர் அவனது வேண்டுகோளை ஏற்கவில்லை. அதனால் தேவதத்தனுக்குப் புத்தர்மீது பகைமை ஏற்பட்டது. அவன் புத்தரை எப்படியாவது தீர்த்துக் கட்ட வேண்டுமென்று தீர்மானித்தான்.

தனது எண்ணத்தைத் தன்னுடைய நண்பரான பிம்பிசார அரசரின் மகனும் இளவரசனுமான அஜாதசத்ருவிடம் தேவதத்தன் சொன்னான். இருவரும் சேர்ந்து திட்டங்களைத் தீட்டினர். புத்தரைக் கொல்ல வேண்டுமானால் அதற்குமுன் பிம்பிசாரனைக் கொல்ல வேண்டும். ஏனென்றால் பிம்பிசாரன் இருக்கும்வரை புத்தருக்குத் தீங்கு செய்ய இயலாது என்று தேவதத்தன் எண்ணினான். எனவே பிம்பிசாரனின் மகனான அஜாத சத்ருவை வைத்து முதலில் பிம்பிசாரனைத் தீர்த்துக்கட்ட தேவதத்தன் திட்டமிட்டான். அவன் அஜாதசத்ருவுக்கு நல்லது செய்வதுபோல் பலதும் கூறி அவனது மனதை மாற்றிப் பிம்பிசாரனைக் கொலை செய்யத் தூண்டினான். அதற்கு அஜாதசத்ருவும் உடன்பட்டான். இந்த விவரத்தை எப்படியோ அறிந்த பிம்பிசாரன் தனது மகன் அஜாதசத்குருவை அழைத்து அரசர் பதவியை அவனிடம் ஒப்படைத்து அவனுக்குப் பட்டம் சூட்டினான். தனது எண்ணம் நிறைவேறாமல் போனதால் தேவதத்தன் அஜாதசத்ருவிடம் திரும்பவும் சென்றான். பிம்பிசாரன் உயிருடன் இருக்கும்வரை அஜாதசத்ருவால் அவனது விருப்பப்படி நாட்டை ஆள முடியாதென்று கூறி அவனைத் தேவதத்தன் திரும்பவும் தன் வசப்படுத்திவிட்டு பிம்பிசாரனைக் கொன்றுவிடும்படி தூண்டினான். அஜாதசத்ரு பிம்பிசாரனைச் சிறையில் அடைத்தான். அவருக்கு உணவு கொடுக்காமல் கொடுமைப்படுத்தினான். பிம்பிசாரன் மனம் வருந்திச் சிறைச்சாலையிலேயே இறந்துவிட்டான்.

அதன்பின் தேவதத்தன் அஜாதசத்ருவின் உதவியுடன் புத்தரைக் கொலை செய்யப் பதினாறு வில் வீரர்களை ஏற்படுத்தினான். அவர்கள் அம்பு வில்லுடனும் புத்தரைக் கொல்லக் காத்திருந்தனர். அப்போது புத்தர் அவ்வழியே வந்துகொண்டிருந்தார். புத்தரை கண்டதும் அவர்களது மனம் மாறிவிட்டது. அவர்கள் ஓடிச்சென்று புத்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். இதை அறிந்த தேவதத்தன் புத்தரைக் கொல்ல வேறுவழியைக் கையாள நினைத்தான்.

ஒருநாள் புத்தர் மலையடிவாரத்தில் உலாவிக் கொண்டிருந்த போது தேவதத்தன் அந்த மலையுச்சிக்குச் சென்று ஒரு பெரிய கல்லைப் புத்தரின்மீது விழும்படி உருட்டிவிட்டான். ஆனால் அது மேலிருந்து உருண்டு வந்து இரண்டு பாறைகளுக்கிடையில் தடுத்து நின்றது. அதனால் புத்தருடைய உயிருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை.

அதன்பின் தேவதத்தன் ஒரு மதயானையை ஏவிவிட்டான். அந்த மதயானை புத்தரைக் கண்டவுடன் சமாதானமடைந்து சாந்த மாகித் திரும்பிப் போய்விட்டது. அப்படியிருந்தும் தேவதத்தனுடைய மனது மாறவில்லை. அவன் பௌத்த சங்கத்தில் பிளவை ஏற்படுத்தி அதன்மூலம் தன் எண்ணத்தை நிறைவேற்றலாம் என்று எண்ணினான். அவன் ஐந்நூறு புதிய பிக்குகளை அழைத்துக் கொண்டு அவர்களுக்குத் தலைமையேற்றுத் தலைவன் ஆனான்.

அப்பிக்குகளின் கூட்டத்தில் புத்தருக்கு வேண்டப்பட்ட சாரிபுத்திர மகாதேரரும், மொக்கலான மகாதேரரும் இருந்தனர். அவர்களைக் கண்ட தேவதத்தன், அவர்களும் தன்னை ஒரு தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று தவறாக நினைத்துக் கொண்டு சாரிபுத்திர மகாதேரரை அழைத்துப் பிக்குகளுக்கு உபதேசம் கொடுக்கும்படி கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான். சாரிபுத்திரதேரரும், மொக்கலான தேரரும் அங்கிருந்த பிக்குகளுக்கு உபதேசம் செய்து அவர்களைப் புத்தரிடம் திரும்பி வரும்படி கூறினர். உண்மையை உணர்ந்த பிக்குகள் தங்கள் அறியாமைக்கு வருந்திப் புத்தரிடம் சென்றனர். அதனையறிந்த தேவதத்தன் ஆத்திரத்தாலும், கோபத்தினாலும் இரத்தம் கக்கி இறந்துவிட்டான்.

தனது தந்தை பிம்பிசாரனைக் கொன்றதை நினைத்து நினைத்து அஜாதசத்ரு மன அமைதி கெட்டான். அவன் மன அமைதி

பெறுவதற்காகப் பலரிடமும் சென்றான். ஆனால் அவனது மனது சாந்தியடையவில்லை. கடைசியில் அவன் புத்தரிடம் வந்தான். அவருடைய உபதேசங்களைக் கேட்டுப் பௌத்தரானான்.

## புத்தரின் கடைசிக்காலம்

புத்தர் மன்னர் நாட்டிற்குச் சென்றார். அங்கே உபவர்த்தன வனத்தில் இரண்டு மரங்களுக்கிடையே படுத்தார். அங்கே அவருடைய பிரதம சீடர் ஆனந்த தேரர் வந்தார். புத்தர் பரிநிர்வாணம் அடைந்தபின் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளைப் பற்றிக் கேட்டறிந்தார். தான் பரிநிர்வணம் அடைய இருக்கும் விவரத்தைக் குசி நகரத்திலுள்ள மன்னர்களிடம் தெரிவிப்பதற்காகப் புத்தர் ஆனந்ததேரரை அனுப்பினார். அவர் மன்னர்களை அழைத்து வந்தார். புத்தர் அவர்களுக்கு உபதேசம் கொடுத்தார். இதற்கிடையே புத்தர் பரிநிர்வாணம் அடைய இருக்கும் விவரம் மக்களுக்குத் தெரிந்து அவர்களும் புத்தரிடம் வந்தனர். புத்தர் அவர்களுக்குக் உபதேசம் கொடுத்தார். பிறகு புத்தர் தியானத்தில் அமர்ந்து பரிநிர்வாணம் (மோக்ஷம்) அடைந்தார். அப்போது அவருக்கு வயது எண்பது. புத்தர் மோக்ஷமடைந்த செய்திகேட்டு ஏராளமான ஆண்களும் பெண்களும் வந்து புத்தருக்கு இறுதி மரியாதை செலுத்தினர். இவ்வாறு இறுதி மரியாதை ஏழு நாள்கள் நடைபெற்றது.

ஏழாம் நாள் எட்டு மன்னர்த் தலைவர்கள் புத்தருடைய உடலைத் தோளில் சுமந்துகொண்டு தகனம் செய்வதற்காக மகுடபந்தனம் என்னும் இடத்திற்குக் கொண்டு சென்றனர். அங்குத் தயார் செய்யப்பட்டிருந்த தகனமேடையில் வைத்தனர். நான்கு மன்னர்த் தலைவர்கள் தகனமேடை சென்று தீ வைத்தனர். ஆனால் அவர்கள் வைத்த தீ பற்றி எரியவில்லை. அதனால் வியப்படைந்த அவர்கள் அதன் காரணம் குறித்து அனிருத்தர் என்பவரிடம் கேட்டனர். அப்போது அவர், புத்தருடைய பரிநிர்வாணத்தைக் கேள்விப்பட்டு புத்தரின் முக்கியச் சீடர் ஆகிய காசிபமகாதேரர் (மகாகாசிபர்) பிக்குகளுடன் வந்துகொண்டிருக்கிறார் என்றும், அவர் வந்து சேரும் வரை தீ பற்றாது என்றும் கூறினார். அப்படியிருக்கும்போது அவர்களும் வந்துசேர்ந்தனர். அவர்கள் புத்தருடைய உடலை மூன்று முறை வலம் வந்து வணங்கினர். பிறகு தீ வைக்கப்பட்டு, நெருப்பு எரியத் தொடங்கியது. புத்தருடைய

உடல் எரிந்தது. எலும்புகள் மட்டும் எஞ்சின. அப்போது மழை பெய்து தீயை அணைத்தது. அதன்பின் புத்த தாதுவைப் பல நாட்டினரும் பெற்றுச் சென்று அவர்களது நாட்டில் குறிப்பிட்ட இடங்களில் புதைத்தார்கள். அதன்பின் அதனைச் சுற்றிச் சேதியங்கள் (ஸ்தூபிகள்) கட்டினார்கள். அவ்வாறு பத்துச் சேதியங்கள் கட்டப்பட்டன.

இத்துடன் புத்தரின் வாழ்க்கை வரலாறு நிறைவுபெறுகிறது.

**பௌத்த சரணங்கள்**

*புத்தம் சரணம் கச்சாமி*
*தம்மம் சரணம் கச்சாமி*
*சங்கம் சரணம் கச்சாமி*

*துதியம்பி*

*புத்தம் சரணம் கச்சாமி*
*தம்மம் சரணம் கச்சாமி*
*சங்கம் சரணம் கச்சாமி*

*தித்யம்பி*

*புத்தம் சரணம் கச்சாமி*
*தம்மம் சரணம் கச்சாமி*
*சங்கம் சரணம் கச்சாமி*

இதன்பொருள்:

புத்தரை அடைக்கலம் அடைகிறேன்
தருமத்தை அடைக்கலம் அடைகிறேன்
சங்கத்தை அடைக்கலம் அடைகிறேன்

இரண்டாம் முறை

புத்தரை அடைக்கலம் அடைகிறேன்
தருமத்தை அடைக்கலம் அடைகிறேன்
சங்கத்தை அடைக்கலம் அடைகிறேன்

மூன்றாம் முறை

புத்தரை அடைக்கலம் அடைகிறேன்
தருமத்தை அடைக்கலம் அடைகிறேன்
சங்கத்தை அடைக்கலம் அடைகிறேன்

## பௌத்த பிரிவுகள்

பௌத்தத்தில் முக்கியமாக இரண்டு பிரிவுகள் உள்ளன. அவை: தேரவாத பௌத்தத்தில் பெரும்பாலானோர் வேலை களுக்குச் செல்லாமலும், குடும்ப ஈடுபாடு இல்லாமலும், மதத்தில் ஈடுபாடு கொண்டு சன்னியாசியாகவும், சன்னியாசினியாகவும் இருக்கின்றனர். ஆனால் மகாயான பௌத்தர்கள் இதற்கு மாறுபட்டு வேலைகளுக்குச் சென்று குடும்ப வாழ்க்கை நடத்துபவர்களாக இருக்கின்றனர்.

## அசோக மன்னர் பௌத்த மதத்தைப் பரப்பியது

அசோக மன்னர் கி.மு. 273–232 வரையுள்ள காலத்தில் வாழ்ந்தவர். அவர் இந்தியாவிலுள்ள பெரும் பகுதியை ஆண்டு வந்தவர். அவர் பௌத்த மதத்தைத் தழுவினார். புத்தருடைய காலத்திற்குப் பின் அவரது கொள்கைகளையும் உபதேசங்களையும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பரவச் செய்தார். மக்கள் பௌத்த மதத்தில் சேருவதற்கும், அவர்கள் புத்தருடைய உபதேசங்களைப் படிப்பதற்கும் வசதிகளைச் செய்து கொடுத்தார். எல்லாவற்றிற்கும் மேலாகப் பௌத்த மதத்தைத் தமது "நாட்டினுடைய மதம்" ஆக்கினார். அதனால் பௌத்த மதம் (புத்த மதம்) நன்கு வளர்ந்தது. புத்தருடைய உபதேசங்களைக் கல்லிலும், பாறைகளிலும் பொறித்து வைத்தார். புத்தருடைய நினைவுச் சின்னங்களைப் பல இடங்களிலும் நிறுவினார். அவருடைய காலத்தில் மற்ற மதங்களிலிருந்து (இந்து மதம், சமண மதம்) பெரும்பாலானோர் பௌத்த மதத்திற்கு வந்தனர்.

தென்னிந்தியாவிலிருந்த சேர சோழ பாண்டிய நாடுகளிலும் பௌத்த மதத்தைப் பரப்ப அசோக மன்னர் பௌத்தத் துறவிகளை அனுப்பினார். அவர்கள் சேர சோழ பாண்டிய நாடுகளில் பௌத்த மதத்தைப் பரப்பினர். அப்போதைய சேர நாட்டின் தென்பகுதி யிலுள்ள (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம்) ஆரல்வாய்மொழி, தேரூர், கோட்டாறு, புத்தேரி, ஈசன்தங்கு ஆகிய இடங்களில் பௌத்த மதத் தாவளங்கள் இருந்திருக்கின்றன. அவைகளெல்லாம் பிற்காலத்தில் திருஞான சம்பந்தரும் ஆதிசங்கரரும் வளர்த்த பக்தி இயக்கங்களால் மறைந்து போயின. எப்படியாகினும் அசோக

மன்னரின் காலத்திற்குப் பின் பௌத்த மத வளர்ச்சியில் மிகுந்த பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

## புத்தர் மற்றும் தீர்த்தங்காரர்கள் திருவுருவங்களின் வித்தியாசம்

புத்தருடைய திருவுருவமும், சமண மதத்திலுள்ள வர்த்தமான மகாவீரர் மற்றும் தீர்த்தங்காரர்களின் திருவுருவங்களும் கிட்டத்தட்ட ஒன்றுபோல் தோன்றினாலும், அவற்றிற்கு வித்தியாசங்கள் உள்ளன. வர்த்தமான மகாவீரருடையவும் மற்ற தீர்த்தங்காரர்களுடையவும் சிற்பங்களில் ஆடை இடம்பெறுவதில்லை. ஆனால் புத்தர் சிற்பத்தில் சங்காதி எனும் ஆடை இடது தோள் வழியாகப் போடப்பட்டிருக்கும். தீர்த்தங்காரர்களின் சிற்பத்தில் தலைமுடி வட்டவடிவமாகக் காணப்படும். ஆனால் புத்தர் சிற்பத்தில் தலையின் நடுப்பகுதியில் ஞானத்தைக் குறிப்பதற்கெனக் சுவாலை போன்ற அமைப்பு (dome) காணப்படும். முக்குடை அமைப்பு தீர்த்தங்காரர்களின் சிற்பத்தில் தலைக்கு மேலே காணப்படும். ஆனால் புத்தர் சிலைக்கு அது இல்லை.

## பௌத்த மதத்தில் கடவுள் பற்றிய கருத்து

கடவுள் என்று ஒன்று இல்லை. இந்த உலகமானது யாராலும் தோற்றுவிக்கப்படவோ, இயக்கப்படவோ இல்லை; அதன்பாட்டிற்கு இயங்கிக் கொண்டிருக்கிறது.

## பௌத்தமதக் கொள்கை

ஆன்மா என்று ஒன்று இல்லை என்பது பௌத்த மதக் கொள்கை. உடல் ஆன்மாவற்றது. உடலில் ஆன்மா இருந்தால் அது நோய்க்கு உட்படாது. உடல் ஆன்மாவற்றதாக இருப்பதாலேயே அது நோய்க்குள்ளாகின்றது. உடல் அழியக்கூடியது. அழியக்கூடிய ஒன்றை இது என்னுடையது. இது நான், இது எனது ஆன்மா என்று கூறுவது தவறு என்கிறது பௌத்தம். பௌத்தத்தின் முக்கியக் கொள்கை அகிம்சை (உயிரினங்களுக்குத் துன்பம் செய்யாமலிருப்பது), எல்லோரும் பரஸ்பரம் அன்புடன் வாழ்ந்து மனிதநேயத்தை வளர்க்க வேண்டும் என்பவையாகும்.

# பௌத்த நூல்

பௌத்தர்களுடைய புனித நூலின் பெயர் 'தம்ம பதம்'. இது புத்தருடைய தர்ம போதனைகளைக் கொண்டது.

புத்தர் நிர்வாண மோட்சம் அடைந்த சில தினங்களுக்குப் பிறகு மகத நாட்டின் தலைநகரான இராசகிருத நகரத்துக்கு அருகிலுள்ள ஸத்தபணி என்னும் மலைக் குகையில் ஐந்நூறு தேரர்கள் (பௌத்த துறவிகள்) ஒன்றுகூடிப் பௌத்த மத வேதங்களைப் பற்றி ஆராய்ந்தார்கள். அந்தக் கூட்டத்திற்குப் புத்தரின் முக்கியச் சீடர் ஆகிய காசிப மகாதேரர் (மகா காசிபர்) தலைமை தாங்கினார். புத்தரின் பிரதம சீடரான ஆனந்த தேரர் புத்தர் அருளிசெய்த தர்மபோதனைகளை ஓதினார் (எடுத்துரைத்தார்). அதற்குத்தம்ம (தர்ம) பிடகம் என்று பெயரிட்டனர். அதனைத் தமிழில் 'தம்மபதம்' என்று கூறுவர்.

புத்தருடைய போதனைகள் மூன்று பிரிவாகத் தொகுக்கப் பட்டன. அவற்றைப் பாலி மொழியில் 'திபிடகம்' என்று கூறுவர். அவற்றின் பெயர் விவரம்:

1. தம்ம பிடகம் (அபிதம்ம பிடகம்)
2. விநய பிடகம்
3. சூத்திர பிடகம்

இவற்றில் தம்ம பிடகம் (அபிதம்ம பிடகம்) புத்தருடைய பிரதம சீடரான ஆனந்த தேரரால் ஓதப்பட்டது (எடுத்துரைக்கப்பட்டது). அது புத்தர் அருளிச்செய்த தர்மபோதனைகளைக் கொண்டது. விநய பிடகம் உபாலி என்னும் தேரரால் (பௌத்த துறவி) ஓதப்பட்டது. அது புத்தர் அருளிச்செய்த விநய (நற்பண்பு) போதனைகளைக் கொண்டது. பிற்காலத்தில் அபிதம்ம பிடகத்திலிருந்து சில பகுதிகளைத் தனியாகப் பிரித்து அதற்குச் சூத்திர பிடகம் என்று பெயரிடப்பட்டது.

**பௌத்தமத நூல்களிலுள்ள மிக முக்கியமான செய்தி**

**புத்தருடைய அறவழிக் கொள்கைகள், ஒழுங்கு விதிமுறைகள் முதலியவற்றைப் பௌத்தர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்பது பௌத்த மத நூல்கள் வழங்கும் மிக முக்கியச் செய்தியாகும்.**

# வழிபாட்டு நூல்

புத்த மதத்தில் இரு வகையான வழிபாட்டு முறைகள் இருக்கின்றன. அவை 1. உருவ வழிபாடு, 2. அருவ வழிபாடு.

## உருவ வழிபாடு

பௌத்தர்கள் இந்துக்களைப் போன்று கோவில் கட்டி அதனுள் புத்தருடைய உருவம் வைத்து, பூக்கள் ஊதுபத்தி முதலானவற்றைக் கொண்டு வழிபடுகின்றனர். அவர்களுடைய புனித நூலினையும் படிக்கின்றனர். மேலும் புத்த தாது வைக்கப்பட்டு அதனைச் சுற்றி எழுப்பட்டுள்ள சேதியங்களுக்குச் சென்றும் புத்தரை வழிபடுகின்றனர்.

பொதுவாகப் புத்தர் உருவத்தில் தலைமேல் ஒரு டோமும் (dome) நெற்றியில் பொட்டும், உடம்பின்மீது ஆடையும் இருக்கும். உருவங்கள் பெரும்பாலும் புத்தர் தியானத்தில் இருப்பது போன்றும், சில படுத்திருப்பது போன்றும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உருவங்களுக்கு இந்துக்கள் செய்வது போன்று அபிசேகமும் செய்யப்படுகின்றது.

வழிபாட்டிற்கென்று குறிப்பிட்ட நாள் எதுவும் கிடையாது. ஆனால் பௌர்ணமி நாள் அன்று புத்தரை வழிபடுவது சிறப்பாகப் பௌத்தர்கள் கருதுகின்றனர். ஏனென்றால் புத்தர் பரிநிர்வாணமடைந்தது ஒரு பௌர்ணமி தினத்தில்தான்.

## அருவ வழிபாடு

தியானத்தில் அமர்ந்து, புத்தரை மனத்தில் நினைத்து வழிபடுவது அருவ வழிபாடு. இந்த முறையை ஏராளமான பௌத்தர்கள் பின்பற்றி வருகின்றனர்.

# 4. கிறித்துவ மதம்

இந்த அத்தியாயத்தில் கிறித்துவ மதத்தினுடைய வரலாறு, புனித நூல் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியன இடம் பெறுகின்றன.

## வரலாறு

கி.பி. முதல் நூற்றாண்டில் இயேசு கிறித்துவின் போதனைகளிலிருந்து உருவான மதம் கிறித்துவ மதம்.

கிறித்துவ மதத்தினுடைய மூலமதம் (Parent religion) யூத மதமாகும். யூத மதம் உலகிலுள்ள மிகவும் பழமையான மதங்களில் ஒன்றாகும். கிறித்துவ மதம் ஜெரூசலேமில் தோன்றியது. இன்று இது உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் பரவியுள்ளது.

இயேசு கிறித்து கி.மு. 4ஆம் வருடம் பிறந்தார். இவர் 33 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்தார். 'கிறிஸ்து' என்பது இயேசு பெயரோடு சேர்ந்ததல்ல. 'கிறிஸ்து' என்றால் கடவுளால் தேர்ந்தெடுக்கப் பட்டவர் என்று பொருள். அதன் அடிப்படையில் இயேசு என்ற இயற்பெயரோடு 'கிறிஸ்து' என்பதையும் சேர்த்து 'இயேசு கிறிஸ்து' என்று அழைக்கப்பட்டு வருகிறது. இயேசு கிறித்துவை இயேசுநாதர் என்றும் கூறுவர். 'இயேசு' என்ற பெயருக்கு 'நம்மை இரட்சிக்கிறவர்' என்று பொருள். இயேசு கிறிஸ்து கடவுளினுடைய அவதார புருசனாகக் கருதப்படுகிறார். இவர் தனது 30வது வயது முதல் மக்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். சுமார் மூன்று வருடக் காலம் பல இடங்களுக்கும் சென்று மக்களுக்கு நல்லுபதேசங்களைக் கொடுத்தார். இவரது 33வது வயதில் இவர் சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்தார். உயிர் நீத்த மூன்றாவது நாள் உயிர்த் தெழுந்ததாகவும் வரலாறு கூறுகின்றது. கிறித்துவ மதத்தினுடைய வரலாற்றில் பெரும்பகுதி இயேசு கிறித்துவினுடைய வாழ்க்கை வரலாற்றினைக் கொண்டுள்ளது. எனவே அவரது வாழ்க்கை வரலாறு இங்கே சுருக்கமாகக் கொடுக்கப்படுகின்றது.

### இயேசு கிறித்துவின் வாழ்க்கை வரலாறு (4 B.C. – 30 C.E.)

இயேசு கிறித்து, கிறித்துவ வருடத் தொடக்கத்திற்கு முன்புள்ள (Before the Common era - the equivalent of B.C.) 4ஆம் வருடம் இறுதியிலிருந்து கிறித்துவ வருடம் (Common era - the equivalent of A.D.) 30 வரை 33 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்தார்.

## இயேசு கிறித்துவின் பிறப்பு

இயேசு கிறித்துவின் தாயார் மரியாவுக்கும் தந்தை யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார். அவர் கணவர் யோசேப்பு நேர்மையானவர். அவர் மரியாவை இகழ்ச்சிக்குள்ளாக விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி,

> யோசேபே, தாவீதின் மகனே, உன் மனைவி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவள் கருவுற்றிருப்பது தூய ஆவியைத்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்

என்றார். யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவனின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார். மரியா தம் மகனைப் பெற்றெடுத்தார். யோசேப்பு அம்மகனுக்கு இயேசு என்று பெயரிட்டார்.

## ஞானிகள் வருகை

இயேசு யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறந்தார். அப்போது ஏரோது என்பர் அங்கு அரசராகயிருந்தார். கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து அரசரைப் பார்த்து "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்" என்றார்கள். இதைக் கேட்டதும் ஏரோது அரசன் கலங்கினான். அவனோடு எருசலேம் முழுவதும் கலங்கியது. அவன் எல்லாத் தலைமைக் குருக்களையும், மக்களிடையே இருந்த மறைநூல் அறிஞர்களையும் ஒன்று கூட்டி, மெசியா (இயேசு) எங்கே பிறப்பார் என்று அவர்களிடம் விசாரித்தான். அவர்கள் அவனிடம் "யூதேயாவிலுள்ள பெத்லகேமில் அவர் பிறக்க வேண்டும்" என்றனர். பிறகு ஏரோது யாருக்கும் தெரியாமல் ஞானிகளை அழைத்துக் கொண்டு போய் விண்மீன் (நக்ஷத்திரம்) தோன்றிய காலத்தைப் பற்றி விசாரித்து உறுதிசெய்து கொண்டான். மேலும் அவர்களிடம் "நீங்கள் சென்று குழந்தையைக் குறித்துத் திட்டவட்டமாய்க் கேட்டு எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும் சென்று அக்குழந்தையை வணங்குவேன்" என்று கூறி அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பி

வைத்தான். அரசன் சொன்னதைக் கேட்டு அவர்கள் புறப்பட்டுப் போயினர்.

ஒரு விண்மீன் தோன்றி, அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டே அவர்கள் பின்தொடர்ந்தார்கள். அது இயேசு கிறித்து பிறந்திருக்கும் வீட்டிற்கு மேலே ஆகாயத்தில் நின்றது. அதைக்கண்டதும் அவர்கள் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் அந்த வீட்டிற்குள்ளே நுழைந்தனர். குழந்தையை அதன் தாயார் மரியா வைத்திருப்பதைக் கண்டனர். அவர்கள் குழந்தையை வணங்கினார்கள். தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். ஏரோது அரசனிடம் திரும்பிப் போக வேண்டாம் என்று கனவில் ஆண்டவரின் தூதரால் அவர்கள் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினர்.

## குழந்தையுடன் யோசேப்பு எகிப்துக்குத் தப்பியோடியது

ஞானிகள் திரும்பிச் சென்றபின் ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, "நீர் எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடிச் செல்லும். நான் உமக்குச் சொல்லும் வரை அங்கேயே இரும். ஏனெனில் குழந்தையை ஏரோது கொல்வதற்காகத் தேடப் போகிறான்" என்றார். யோசேப்பு எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஞானிகள் தன்னை ஏமாற்றியதைக் கண்டு ஏரோது மிகுந்த சீற்றங்கொண்டான். அவன் பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புற மெங்கும் படைவீரர்களை அனுப்பி இரண்டு வயதும் அதற்கு உட்பட்டதுமான எல்லா ஆண்குழந்தைகளையும் கொன்றான். அப்படியிருக்கும்போது, ஏரோது இறந்தான்.

## யோசேப்பு எகிப்திலிருந்து திரும்பி வந்தது

ஏரோது இறந்தபின்பு, ஆண்டவருடைய தூதர் எகிப்தில் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, "நீர் எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் நாட்டுக்குச் செல்லும். ஏனெனில் குழந்தையின் உயிரைப் பறிக்கத் தேடியவர்கள் இறந்து போனார்கள்" என்றார். யோசேப்பு எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் நாட்டுக்கு வந்து சேர்ந்தார். ஆனால் யூதேயாவில் அர்க்கெல்லர் தன் தந்தை ஏரோதுக்குப் பின்

அரசரானதைக் கேள்விப்பட்டு அஞ்சினார். கனவில் அவர் எச்சரிக்கப் பட்டதால் அங்கிருந்து கலிலேயப் பகுதிகளுக்குப் புறப்பட்டுச் சென்றார். பின்னர் அவர் நாசரேத் எனப்படும் ஊருக்குச் சென்று அங்குக் குடியிருந்தார்.

## இயேசு திருமுழுக்குப் பெறுதல்

இயேசு வளர்ந்தார். இயேசு யோவானிடம் திருமுழுக்குப் பெறக் கலிலேயாவிலிருந்து யோர்தானுக்கு வந்தார். யோவான் "நான்தான் உம்மிடம் திருமுழுக்குப் பெற வேண்டியவன், நீரா என்னிடம் வருகிறீர்?" என்று கூறித் தடுத்தார். இயேசு, "இப்பொழுது விட்டுவிடும். கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை" என்றார். அதற்கு யோவானும் இணங்கினார். இயேசு திருமுழுக்குப் பெற்றவுடனே தண்ணீரை விட்டு வெளியே வந்தார். உடனே வானம் பிளவு படுவதையும் தூய ஆவி புறா வடிவில் தம்மீது இறங்கி வருவதையும் அவர் கண்டார். அப்பொழுது, "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

## இயேசு அலகையினால் சோதிக்கப்படுதல்

இயேசு அலகையினால் (சாத்தான் அல்லது தீய ஆவி) சோதிக்கப்படுவதற்காகப் பாலை நிலத்திற்குத் தூய ஆவியால் அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார். அதன் பின் பசியுற்றார். சோதிக்கிறவன் அவரை அணுகி, "நீர் இறை மகன் என்றால் இந்தக் கற்கள் அப்பமாகும்படி கட்டளையிடும்" என்றான். அவர் மறுமொழியாக "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாகக் கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்" என மறைநூலில் எழுதியுள்ளதே என்றார்.

பின்னர் அலகை அவரை எருசலேம் திருநகரத்திற்குக் கூட்டிச் சென்றது. கோவிலின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி "நீர் இறைமகன் என்றால் கீழே குதியும், கடவுள் தம் தூதுவருக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார். உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள் என்று மறை நூலில் எழுதியுள்ளது" என்று அவரிடம் சொன்னது. இயேசு அதனிடம் –

> உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம்
> எனவும் எழுதியுள்ளதே

என்று சொன்னார். மறுபடியும் அலகை அவரை மிக உயர்ந்த ஒரு மலைக்குக் கூட்டிச் சென்று உலக அரசுகள் அனைத்தையும்,

அவற்றின் மேன்மையையும் அவருக்குக் காட்டி அவரிடம் "நீர் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து என்னை வணங்கினால் இவை அனைத்தையும் உமக்குத் தருவேன்" என்று சொல்லியது. அப்போது இயேசு அதனைப் பார்த்து,

> அகன்று போ சாத்தானே, உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்குப் பணி செய் என்றும் மறை நூலில் எழுதியுள்ளது

என்றார். பின்னர் அலகை அவரை விட்டு அகன்றது. உடனே வானத் தூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தனர்.

## இயேசு கலிலேயாவில்

இயேசு கலிலேயா கடலோரமாய் நடக்கும்போது சகோதரர்கள் இருவரைக் கண்டார். ஒருவர் பேதுரு எனப்படும் சீமோன், மற்றவர் அவர் சகோதரரான அந்திரேயா. மீனவர்களான அவ்விருவரும் கடலில் வலை வீசிக் கொண்டிருந்தனர். இயேசு அவர்களைப் பார்த்து "என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதர்களைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்தொடர்ந்தனர். அங்கிருந்து அப்பால் சென்றபோது வேறு இரு சகோதரர்களைக் கண்டார். அவர்கள் செபதேயுவின் மகன் யாக்கோபும் அவர் சகோதரரான யோவானும் ஆவர். அவர்கள் தங்கள் தந்தை செபதேயுவுடன் படகில் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தனர். இயேசு அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் தங்கள் படகையும் தந்தையையும் விட்டுவிட்டு அவரைப் பின்தொடர்ந்தனர்.

இயேசு கலிலேயப் பகுதி முழுவதும் சுற்றி வந்தார். விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார். மக்களிடையே இருந்த நோய் நொடிகளைக் குணமாக்கினர். அவரைப் பற்றிய பேச்சு சிரியா நாடு முழுவதும் பரவியது. பல்வேறு பிணிகளாலும், வாதைகளாலும் வருந்திய நோயாளிகள், பேய் பிடித்தோர், மதி மயங்கியோர், முடக்கு வாதமுற்றோர் ஆகிய அனைவரும் அழைத்து வரப்பட்டனர். அவர் அவர்களைக் குணமாக்கினார். ஆகவே கலிலேயா, தெக்கப்பொலி, எருசலேம், யூதேயா, யோர்தானுக்கு அக்கரைப் பகுதி ஆகிய இடங்களிலிருந்து வந்த மக்கள் பெருந்திரளாய் அவரைப் பின்தொடர்ந்தனர்.

## மலைப் பொழிவு

இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர்கள் அவரருகே வந்தனர். அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை:

1. ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர்,
ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.
2. துயருறுவோர் பேறு பெற்றோர்,
ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.
3. கனிவுடையோர் பேறு பெற்றோர்,
ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.
4. நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறு பெற்றோர்,
ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்.
5. இரக்கமுடையோர் பேறு பெற்றோர்,
ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.
6. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்,
ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.
7. அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர்,
ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.
8. நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்,
ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.

மேலும் பல உபதேசங்களைக் கொடுத்தார். அவை,

1. கொலை செய்யாதே,
2. விபசாரம் செய்யாதே,
3. பொய்யாமை இடாதீர்,
4. தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம்,
5. உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்
6. ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து உங்கள் அங்கியை எடுத்துக் கொள்ள விரும்பினால் உங்கள் மேலுடையையும் எடுத்துக்கொள்ள விட்டுவிடுங்கள்,
7. எவராவது உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப் படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள்.
8. உங்களிடம் கேட்கிறவருக்குக் கொடுங்கள்.
9. கடன்வாங்க விரும்புகிறவருக்கு முகம் கோணாதீர்கள்.
10. உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்புகூருங்கள்.

11. உங்கள் பகைவரிடமும் அன்புகூருங்கள்.

12. உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.

இப்படி செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள்.

மேலும் அவர் அறச்செயல்கள் பற்றியும் உபதேசித்தார். அவற்றின் விவரம்:

மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் அறச்செயல்களைச் செய்யாதீர்கள். நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப் பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். நீங்கள் தர்மம் செய்யும்போது உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாய் இருக்கும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். மற்ற மனிதர்கள் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதர்களை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்.

*கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்*

*தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்*

*தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்*

*பிறர் உங்களுக்குச் செய்யவேண்டும் என்று விரும்புகிற வற்றை எல்லாம், நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்*

*போலி இறை வாக்கினரைக் குறித்து எச்சரிகையாய் இருங்கள்*

*ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு உங்களிடம் வருகின்றனர். ஆனால், உள்ளேயோ அவர்கள் கொள்ளை யிட்டுத் தின்னும் ஓநாய்கள்*

இயேசுவின் போதனைகளைக் கேட்ட மக்கள் கூட்டத்தினர் வியப்பில் ஆழ்ந்தனர். இயேசு மலையிலிருந்து கீழே இறங்கினார்.

**விண்ணரசுப் பணி**

இயேசு மலையிலிருந்து இறங்கிய பின் பெருந்திரளான மக்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். அப்பொழுது தொழுநோயாளி ஒருவர்

வந்து அவரைப் பணிந்து, "அய்யா, நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என்றார். இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு "நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!" என்று சொன்னார். உடனே அவரது தொழுநோய் நீங்கியது. இயேசு கப்பர்நாகுமுக்குச் சென்றபோது நூற்றுவர் தலைவர் ஒருவர் அவரிடம் உதவி கேட்டு வந்தார். "ஐயா, என் பையன் முடக்குவாதத்தால் மிகுந்த வேதனையுடன் படுத்துக்கிடக்கிறான்" என்றார். இயேசு அவரிடம், "நான் வந்து அவனைக் குணமாக்குவேன்" என்றார். நூற்றுவர் தலைவர் மறுமொழியாக, "ஐயா, நீர் என் வீட்டிற்கு அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும்; என் பையன் நலமடைவான். இயேசு நூற்றுவர் தலைவனை நோக்கி, "நீர் போகலாம், நீர் நம்பிய வண்ணமே உமக்கு நிகழும்" என்றார். அந்நேரமே அவருடைய மகன் குணமடைந்தான்.

இயேசு பேதுருவின் விட்டிற்குச் சென்றபோது, பேதுருவின் மாமியார் காய்ச்சலாய்ப் படுத்திருப்பதைக் கண்டார். இயேசு அவரது கையைத் தொட்டதும் காய்ச்சல் அவரை விட்டு நீங்கியது. அவரும் எழுந்து இயேசுவுக்குப் பணிவிடை செய்தார். பேய்பிடித்த பலரை மாலைநேரத்தில் இயேசுவிடம் கொண்டு வந்தனர். அவர் ஒரு வார்த்தை சொல்ல அசுத்த ஆவிகள் ஓடிப்போயின. மேலும் அவர் எல்லா நோயாளிகளையும் குணமாக்கினார்.

தொழுகைக் கூடத் தலைவர் ஒருவர் அவரிடம் வந்து பணிந்து, "என் மகள் இப்பொழுதுதான் இறந்தாள். ஆயினும் நீர் வந்து, அவள் மீது உம் கையை வையும். அவள் உடனே உயிர் பெறுவாள்" என்றார். இயேசு எழுந்து அவர் பின்னே சென்றார். இயேசுவின் சீடர்களும் அவரைப் பின்தொடர்ந்தனர். அப்பொழுது பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய ஒரு பெண் அவருக்குப் பின்னால் வந்து அவரது மேலுடையின் ஓரத்தைத் தொட்டாள். ஏனெனில் அப்பெண், "நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும், நலம் பெறுவேன்" எனத் தனக்குள் நம்பியிருந்தாள். இயேசு அவளைத் திரும்பிப் பார்த்து, "மகளே, துணிவோடிரு, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று" என்றார். அந்நேரத்திலிருந்தே அப்பெண் நலம் அடைந்திருந்தாள். இயேசு தொழுகைக் கூடத் தலைவருடைய வீட்டிற்குச் சென்றார். அங்கே குழல் ஊதுவோரையும், கூட்டத்தினரின் அமளியையும் கண்டார். அவர், "விலகிப் போங்கள், சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்" என்றார். அவர்களோ அவரைப் பார்த்து நகைத்தனர். அக்கூட்டத்தினரை வெளியேற்றியபின் அவர் உள்ளே சென்று சிறுமியின் கையைப் பிடித்தார். அவளும் உயிர் பெற்று எழுந்தாள். இச்செய்தி அந்நாடெங்கும் பரவியது.

இயேசு அங்கிருந்து சென்றபோது பார்வையற்றோர் இருவர், "தாவீதின் மகனே, எங்களுக்கு இரங்கும்" என்று கத்திக் கொண்டே அவரைப் பின் தொடர்ந்தனர். அவர் வீடு வந்து சேர்ந்ததும் அந்தப் பார்வையற்றோரும் அவரிடம் வந்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, "நான் இதைச் செய்ய முடியும் என நம்புகிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஆம், ஐயா" என்றனர். பின்பு அவர் அவர்களின் கண்களைத் தொட்டு, "நீங்கள் நம்பிய படியே உங்களுக்கு நிகழட்டும்" என்றார். உடனே அவர்களின் கண்கள் திறந்தன. இயேசு அவர்களை நோக்கி, "யாரும் இதை அறியாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்" என்று மிகக் கண்டிப்பாகக் கூறினார். ஆனால் அவர்கள் வெளியே போய் நாடெங்கும் அவரைப் பற்றிய செய்தியைப் பரப்பினார்கள். அவர்கள் சென்ற பின் பேய் பிடித்துப் பேச்சிழந்த ஒருவரைச் சிலர் அவரிடம் கொண்டு வந்தனர். பேயை அவர் ஓட்டியதும் பேச இயலாத அவர் பேசினார். மக்கள் கூட்டத்தினர் வியப்புற்று, "இஸ்ரயேலில் இப்படி ஒரு போதும் கண்டதில்லை" என்றனர்.

**இயேசுவின் சீடர்கள்**

இயேசுவிற்குப் பன்னிரண்டு சீடர்கள் இருந்தார்கள். அவர்களின் பெயர் விவரம்:

1. பேதுரு என்னும் சீமோன்
2. சீமோனுடைய சகோதரர் அந்திரேயர்
3. செபதேயுவின் மகன் யாக்கோபு
4. யாக்கோபுவின் சகோதரர் யோவான்
5. பிலிப்பு
6. பர்த்தலமேயு
7. தோமா
8. வரி தண்டினவராகிய மத்தேயு
9. அல்பேயுவின் மகன் யாக்கோபு
10. ததேயு
11. தீவிரவாதியாய் இருந்த சீமோன்
12. இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு இஸ்காரியோத்து

இயேசு தம் சீடர்கள் பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்தார். தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளைக் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார். மேலும் அவர்களுக்குப் பல

அறிவுரைகளையும் கூறினார். தம் பன்னிரு சீடர்களுக்கும் அறிவுரை கொடுத்து முடித்ததும், பக்கத்து ஊர்களில் கற்பிக்கவும், நற்செய்தியை அறிவிக்கவும் அவ்விடம் விட்டு அகன்றார்.

## ஐந்து அப்பங்களைக் கொண்டு ஐந்தாயிரம் பேருக்கு உணவு அளித்தல்

இயேசு பாலை நிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார். அதைக் கேள்விப்பட்ட திரளான மக்கள் ஊர்களிலிருந்து கால்நடையாக அவரைப் பின் தொடர்ந்தனர். இயேசு அங்குச் சென்றபோது பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்கள்மீது பரிவு கொண்டார், அவர்களிடையே உடல் நலமற்றிருந்தோரைக் குணமாக்கினார். மாலையானபோது, சீடர்கள் அவரிடம் வந்து, "இவ்விடம் பாலை நிலம் ஆயிற்றே, நேரமும் ஆகிவிட்டது. ஊர்களுக்குச் சென்று அவரவர்களுக்குத் தேவையான உணவு வாங்கிக் கொள்ள மக்கள் கூட்டத்தை அனுப்பிவிடும்'' என்று கூறினார்கள். இயேசு அவர்களிடம், "அவர்கள் செல்ல வேண்டியதில்லை, நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்'' என்றார். அவர்கள் இயேசுவைப் பார்த்து "எங்களிடம் இங்கே ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் தவிர வேறு எதுவுமே இல்லை'' என்று கூறினர். இயேசு, "அவற்றை என்னிடம் இங்கே கொண்டு வாருங்கள்'' என்றார். மக்களைப் புல்தரையில் அமருமாறு ஆணையிட்டார். அவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்துக் கடவுளைப் போற்றி, அப்பங்களைப் பிட்டுச் சீடர்களிடம் கொடுத்தார். சீடர்கள் மக்களுக்குக் கொடுத்தார்கள். அனைவரும் வயிறார உண்டனர். உண்டவர்களின் எண்ணிக்கை ஆண்கள் மட்டும் சுமார் ஐந்தாயிரம் இருக்கும்.

## இயேசு கடல் மீது நடந்து சென்றது

இயேசு கூட்டத்தினரை அவ்விடத்திலிருந்து அனுப்பிக் கொண்டிருந்தார். அப்பொழுது சீடரையும் உடனே படகேறித் தமக்கு முன் அக்கரைக்குச் செல்லுமாறு அவர் கட்டாயப்படுத்தினார். மக்களை அனுப்பிவிட்டு, அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின்மேல் ஏறினார். பொழுது சாய்ந்த பிறகும் அங்கே அவர் தனியே இருந்தார். அதற்குள் படகு கரையிலிருந்து நெடுந்தொலைவு சென்றுவிட்டது. மேலும் எதிர்காற்று அடித்துக் கொண்டிருந்ததால் படகு அலைக்கழிக்கப்பட்டது. இயேசு அவர்களை நோக்கிக் கடல் மீது நடந்து வந்தார். அவர் கடல்மீது நடப்பதைக் கண்ட சீடர்கள் கலங்கி, "ஐயோ, பேய்'' என அச்சத்தினால் அலறினர். உடனே இயேசு அவர்களிடம் பேசினார்.

"துணிவோடிருங்கள், நான்தான், அஞ்சாதீர்கள்" என்றார். பேதுரு அவருக்கு மறுமொழியாக, "ஆண்டவரே நீர்தாம் என்றால் நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்" என்றார். அவர், "வா" என்றார். பேதுருவும் படகிலிருந்து இறங்கி இயேசுவை நோக்கிக் கடல் மீது நடந்து சென்றார். அப்பொழுது பெருங்காற்று வீசியதைக் கண்டு அஞ்சி அவர் மூழ்கும்போது, "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்" என்று கத்தினார். இயேசு உடனே தம் கையை நீட்டி அவரைப் பிடித்து, "நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?" என்று கேட்டார். அவர்கள் படகில் ஏறியதும் காற்று அடங்கியது. படகில் இருந்தோர் இயேசுவைப் பணிந்து, "உண்மையாகவே நீர் இறை மகன்" என்றனர்.

### கெனசரேத்தில் நலமளித்தல்

அவர்கள் மறுகரைக்குச் சென்று கெனசரேத்துப் பகுதியை அடைந்தனர். இயேசுவை யாரென்று அறிந்துணர்ந்த அவ்விடத்து மக்கள் சுற்றுப்புறமெங்கும் ஆள் அனுப்பி எல்லா நோயாளிகளையும் அவரிடம் கொண்டு வந்தனர். அவரது மேலுடையின் ஓரத்தையாவது அவர்கள் தொட அனுமதிக்குமாறு அவரை வேண்டினர். தொட்டவர் யாவரும் நலமடைந்தனர்.

### மூதாதையர் மரபு

அதன்பின் பரிசேயரும் மறைநூல் அறிஞரும் எருசலேமிலிருந்து இயேசுவிடம் வந்து, "உம் சீடர் மூதாதையரின் மரபை மீறுவதேன்? உணவு அருந்தும் முன் அவர்கள் தங்கள் கைகளைக் கழுவுவதில்லையே" என்றனர். அதற்கு இயேசு, வாய்க்குள் செல்வது மனிதரைத் தீட்டுப்படுத்தாது, மாறாக வாயிலிருந்து வெளிவருவதே மனிதரைத் தீட்டுப்படுத்தும் என்றார்.

வாயினுள் செல்வது அனைத்தும் வயிற்றினூடே சென்று கழிப்பிடத்தில் வெளியேற்றப்படும். வாயினின்று வெளிவருபவை உள்ளத்திலிருந்து வருகின்றன. அவையே மனிதரைத் தீட்டுப்படுத்து கின்றன. ஏனெனில் கொலை, விபச்சாரம், களவு, பொய்ச்சான்று, பழிப்புரை ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் உள்ளத்திலிருந்து வெளிவருகின்றன. இவையே மனிதரைத் தீட்டுப்படுத்துகின்றன. கை கழுவாமல் உண்ணுவது மனிதரைத் தீட்டுப்படுத்தாது, என்றார் இயேசு.

### கானானியப் பெண்ணின் நம்பிக்கை

இயேசு கெனசரேத்துப் பகுதியிலிருந்து தீர், சீதோன் பகுதிக்குள் சென்றார். இதை அறிந்த பெண் ஒருவர் அவரிடம் வந்து அவர்

காலில் விழுந்தாள். அவருடைய மகளைத் தீய ஆவி பிடித்திருப்ப தாகவும் அதனை ஓட்டிவிட வேண்டுமென்றும் அவரிடம் கேட்டாள். இயேசு அவளைப் பார்த்துப் "பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல" என்றார். அதற்கு அப்பெண் "ஆம் ஐயா, ஆனாலும் தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே" என்றாள். அப்போது இயேசு அவளிடம் "அம்மா உமது நம்பிக்கை பெரிது, நீ விரும்பியவாறே நிகழட்டும்" என்றார். அந்நேரம் அவர் மகளின் பிணி நீங்கியது.

## இயேசு பலவகை நோயாளிகளுக்குக் குணமளித்தல்

இயேசு கலிலேயக் கடற்கரை வழியாகச் சென்று அங்கே ஒரு மலையின்மீது ஏறி அமர்ந்தார். அப்பொழுது பெருந்திரளான மக்கள் அவரிடம் வந்தனர். அவர்கள் தங்களோடு கால் ஊனமுற்றோர், பார்வையற்றோர், உடல் ஊனமுற்றோர், பேச்சற்றோர் மற்றும் நோயாளிகள் பலரையும் அவர் காலடியில் கொண்டு வந்து சேர்த்தனர். அவர்களை அவர் குணமாக்கினார். பேச்சற்றோர் பேசுவதையும் உடல் ஊனமுற்றோர் நலமடைவதையும் பார்வையற்றோர் பார்ப்பதையும் கண்டு மக்கள் கூட்டத்தினர் வியந்து இயேசுவைப் போற்றிப் புகழ்ந்தனர்.

## இயேசுவின்மீது பொறாமை கொண்டவர்கள் அவரைக் கொல்ல நினைத்தது

இயேசு செய்த அற்புதங்களைக் கண்டு யூதர்களில் பலர் அவரை நம்பினர். ஆனால் யூதர்களில் சிலர் பரிசேயரிடம் "எவ்வளவு வியப்பான காரியங்களை இயேசு செய்து வருகிறார்" என்று கூறி விவரித்தனர். உடனே பரிசேயரும் தலைமைக் குருக்களும் தலைமைச் சங்கத்தைக் கூட்டினர். "இந்த இயேசு இப்படி அற்புதங்களையும் நூதனமான காரியங்களையும் செய்கிறானே, என்ன செய்யலாம்? இவனை இப்படியே விட்டுவிட்டால் அனைவரும் அவனையே நம்பி விடுவார்கள். நம்மை நம்பமாட்டார்கள். அப்பொழுது உரோமையர் (ரோம் நாட்டினர்) வந்து நமது தூய இடத்தையும், நம் இனத்தையும் அழித்துவிடுவார்களே?" என்று விவாதித்துக் கொண்டிருந்தனர். கயபா என்பவரே அப்போதைய தலைமைக் குரு. அவர் அவர்களைப் பார்த்து, "உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை, இனம் முழுவதும் அழிந்துபோவதை விட ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது என்று நீங்கள் உணரவில்லையா?" என்று கேட்டார். அன்றிலிருந்தே அவர்கள் இயேசுவைக் கொல்லத் திட்டம் தீட்டினர்.

## இயேசு தம் சாவை முன்னறிவித்தல்

இயேசு தாம் எருசலேமுக்குப் போய் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறை நூல் அறிஞர்கள் ஆகியோர் பலவாறு துன்பப்படவும், கொலை செய்யப்படவும் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்பதைத் தம் சீடருக்கு எடுத்துரைக்கத் தொடங்கினார். பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கடிந்துகொண்டு, “ஆண்டவரே, இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கவே கூடாது” என்றார். ஆனால் இயேசு பேதுருவைத் திரும்பப் பார்த்து, “என் கண்முன் நில்லாதே சாத்தானே, நீ எனக்குத் தடையாய் இருக்கிறாய்; ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்” என்றார். பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர். மாறாக என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார். மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்? மானிட மகன் தம் தந்தையின் மாட்சியோடு தம் வான் தூதர்களுடன் வரப்போகிறார்; அப்பொழுது ஒவ்வொருவருக்கும் அவரவர் செயலுக்கேற்பக் கைமாறு அளிப்பார். நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் – இங்கே இருப்பவருள் சிலர் மானிட மகனது ஆட்சி வருவதைக் காணபதற்கு முன் சாகமாட்டார்” என்றார்.

ஆறு நாள்களுக்குப் பின்பு இயேசு பேதுருவையும், யாக்கோபையும், அவர் சகோதரரான யோவானையும் ஓர் உயர்ந்த மலைக்குத் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்ந்தது. அவருடைய ஆடைகள் ஒளிபோன்று வெண்மையாயின. மோசேயும் எலியாவும் அவர்களுக்கு முன்தோன்றி இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்தனர். பேதுரு இயேசுவைப் பார்த்து, “ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும், மோசேவுக்கு ஒன்றும், எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைக்கட்டுமா? இது உமக்கு விருப்பமா?” என்று கேட்டார். அவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது ஒளிமயமான மேகம் ஒன்று அவர்கள் மேல் நிழலிட்டது. அந்த மேகத்தினின்று, “என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன். இவருக்குச் செவி சாயுங்கள்” என்று ஒரு குரல் ஒலித்தது. அதைக் கேட்டதும் சீடர்கள் மிகவும் அஞ்சி முகங்குப்புற விழுந்தனர். இயேசு அவர்களிடம் வந்து அவர்களைத் தொட்டு,

"எழுந்திருங்கள், அஞ்சாதீர்கள்" என்றார். அவர்கள் நிமிர்ந்து பார்த்தபோது இயேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. அவர்கள் மலையிலிருந்து இறங்கி வந்தபோது இயேசு, மானிட மகன் இறந்து உயிருடன் எழுப்பப்படும் வரை இக்காட்சியைப் பற்றி எவருக்கும் சொல்லக்கூடாது" என அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

கலிலேயாவில் சீடர்கள் ஒன்று திரண்டிருக்கும்போது இயேசு தம் சாவை இரண்டாம் முறை முன்னறிவித்தார். அவர் அவர்களிடம், "மானிட மகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்பட இருக்கிறார். அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்" என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் துயரடைந்தனர்.

இயேசு எருசலேமை நோக்கிச் செல்லும் வழியில் பன்னிரு சீடர்களையும் தனியே அழைத்து, "இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிட மகன் தலைமைக் குருக்களிடமும், மறை நூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவருக்கு மரண தண்டனை விதிப்பார்கள். அவர்கள் அவரை ஏளனம் செய்து, சாட்டையால் அடித்து, சிலுவையில் அறையும்படி பிற இனத்தவரிடம் ஒப்படைப்பார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்" என்று அவர்களிடம் கூறி, இயேசு தம் சாவை மூன்றாம் முறை முன்னறிவித்தார்.

## இயேசுவைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டப்பட்டது

இயேசு தம் சீடர்களிடம், "பாஸ்கா விழா இரண்டு நாள்களில் வரவிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அப்பொழுது மானிட மகன் சிலுவையில் அறையப்படுவதற்கெனக் காட்டிக் கொடுக்கப்படுவார்" என்றார். அதே நேரத்தில் தலைமைக் குருக்களும், மக்களின் மூப்பர்களும் கயபா என்னும் தலைமைக் குருவின் மாளிகை முற்றத்தில் ஒன்று கூடினர். இயேசுவைச் சூழ்ச்சியாய்ப்பிடித்துக் கொலை செய்ய அவர்கள் கலந்து ஆலோசித்தனர். ஆயினும் அது விழாவின்போது வேண்டாம்; மக்களிடையே கலகம் ஏற்படக்கூடும் என்று அவர்கள் பேசிக் கொண்டனர்.

இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவனாகிய யூதாசு இஸ்காரியோத்து தலைமைக் குருவிடம் வந்து, இயேசுவை உங்களுக்கு நான் காட்டிக் கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்? என்று கேட்டான். அவர்களும் முப்பது வெள்ளிக் காசுகளை எண்ணி அவனுக்குக் கொடுத்தனர். அது முதல் அவன் இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தான்.

## பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தல்

புளிப்பற்ற அப்ப விழாவின் முதல் நாளில் சீடர்கள் இயேசுவை அணுகி வந்து, "நீர் பாஸ்கா விருந்துண்ண நாங்கள் எங்கே ஏற்பாடு செய்யவேண்டும் என விரும்புகிறீர்கள்?" என்று கேட்டனர். இயேசு, அவர்களிடம் "நீங்கள் புறப்பட்டு நகருக்குள் செல்லுங்கள். மண் குடத்தில் தண்ணீர் சுமந்துகொண்டு ஓர் ஆள் உங்களுக்கு எதிரே வருவார். அவரிடம் சென்று 'எனது நேரம் நெருங்கி வந்துவிட்டது, என் சீடர்களோடு உம் வீட்டில் பாஸ்கா கொண்டாடப் போகிறேன்' எனப் போதகர் கூறுகிறார் என்று சொல்லுங்கள்" என்றார். இயேசு தங்களுக்குப் பணித்தபடியே சீடர்கள் செயல்பட்டுப் பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தனர்.

## யூதாசின் சூழ்ச்சி வெளிப்படுதல்

மாலை வேளையானதும் அவர் பன்னிருவரோடும் பந்தியில் அமர்ந்தார். அவர்கள் உண்டுகொண்டிருந்தபொழுது இயேசு, "உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் வருத்தமுற்றவர்களாய் "ஆண்டவரே, அது நானோ?" என ஒவ்வொருவரும் அவரிடம் கேட்கத் தொடங்கினார்கள். அதற்கு அவர், "என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான். மானிட மகன், தம்மைப் பற்றி மறை நூலில் எழுதியுள்ளபடியே போகிறார். ஆனால், ஐயோ! அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்குக் கேடு; அம்மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருந்திருக்கும்" என்றார். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசும் "ரபி, நானோ?" என்று அவரிடம் கேட்க இயேசு, "நீயே சொல்லிவிட்டாய்" என்றார்.

## ஆண்டவரின் திருவிருந்து

அவர்கள் உணவருந்திக் கொண்டிருந்தபொழுது, இயேசு அப்பத்தை எடுத்துக் கடவுளைப் போற்றி, அதைப்பிட்டுச் சீடர்களுக்குக் கொடுத்து, "இதைப் பெற்று உண்ணுங்கள். இது எனது உடல்" என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்து, "இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள், ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம், பலருடைய பாவமன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம். இனிமேல் என் தந்தையின் ஆட்சி வரும். அந்நாளில்தான் நான் உங்களோடு திராட்சைப் பழ இரசத்தைக் குடிப்பேன். அதுவரை குடிக்கமாட்டேன் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். அவர்கள் புகழ்ப் பாடல் பாடிவிட்டு ஒலிவ மலைக்குச் சென்றனர்.

## பேதுரு மறுதலிப்பார் என முன்னறிவித்தல்

அதன் பின்பு இயேசு அவர்களிடம், "இன்றிரவு நீங்கள் அனைவரும் என்னைவிட்டு ஓடிப் போவீர்கள். ஏனெனில் 'ஆயனை வெட்டுவேன், அப்போது மந்தையிலுள்ள ஆடுகள் சிதறடிக்கப்படும்' என்று மறைநூலில் எழுதப்பட்டுள்ளது. நான் உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு உங்களுக்கு முன்பே கலிலேயாவுக்குப் போவேன்" என்றார். அதற்குப் பேதுரு அவரிடம் "எல்லாரும் உம்மை விட்டு ஓடிப்போய் விட்டாலும் நான் ஒருபோதும் ஓடிப் போகமாட்டேன்" என்றார். இயேசு அவரிடம், "இன்றிரவில் சேவல் கூவும் முன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்" என்றார். பேதுரு அவரிடம், "நாம் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன்" என்றார். அவ்வாறே சீடர்கள் அனைவரும் கூறினர்.

பின்னர் இயேசு சீடர்களுடன் கெத்சமனி என்னும் இடத்திற்கு வந்தார். அவர், "நான் அங்கே போய் இறைவனிடம் வேண்டும் வரை இங்கே அமர்ந்திருங்கள்" என்று அவர்களிடம் கூறிப் பேதுருவையும் செபதேயுவின் மக்கள் இருவரையும் தம்முடன் கூட்டிச் சென்றார். அப்போது அவர் துயரமும் மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார். அவர், "எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது. நீங்கள் என்னோடு இங்கேயே தங்கி விழித்திருங்கள்" என்று அவர்களிடம் கூறினர். பிறகு அவர் சற்று அப்பால் சென்று முகங்குப்புற விழுந்து, "என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படி நிகழட்டும்" என்று கூறி இறைவனிடம் வேண்டினார். அதன் பின்பு அவர் சீடர்களிடம் வந்து அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு பேதுருவிடம், "ஒரு மணி நேரம்கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? உங்கள் மனம் ஆர்வமுடையதுதான், ஆனால் உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்" என்றார். மீண்டும் சென்று, "என் தந்தையே, நான் குடித்தாலன்றி இத்துன்பக்கிண்ணம் அகல முடியாதென்றால், உமது திருவுளப்படியே ஆகட்டும்" என்று இரண்டாம் முறையாக இறைவனிடம் வேண்டினார். அவர் திரும்பவும் வந்தபோது சீடர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர்களுடைய கண்கள் தூக்கக் கலக்கமாய் இருந்தன. அவர் அவர்களை விட்டு மீண்டும் மீண்டும் சென்று மறுபடியும் அதே வார்த்தைகளைச் சொல்லி மூன்றாம் முறையாக இறைவனிடம் வேண்டினார். பிறகு சீடர்களிடம் வந்து, "இன்னும் உறங்கி ஓய்வெடுக்கிறீர்களா? பாருங்கள், நேரம் நெருங்கி வந்துவிட்டது.

மானிட மகன் பாவிகளின் கையில் ஒப்புவிக்கப்படுகிறார். எழுந்திருங்கள், போவோம். இதோ! என்னைக் காட்டிக் கொடுப்பவன் நெருங்கி வந்துவிட்டான்'' என்று கூறினார்.

## இயேசுவைக் காட்டிக் கொடுத்தலும் கைது செய்தலும்

இயேசு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது பன்னிருவருள் ஒருவனாகிய யூதாசு அங்கு வந்தான். அவனோடு குருக்களும், மக்களின் மூப்பர்களும் அனுப்பிய பெருங்கூட்டம் வாள்களோடும், தடிகளோடும் வந்தது. அவரைக் காட்டிக் கொடுக்க இருந்தவன், "நான் ஒருவரை முத்தமிடுவேன், அவர்தான் இயேசு, அவரைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். அவன் நேராக இயேசுவிடம் சென்று, "ரபி வாழ்க'' எனக் கூறிக் கொண்டே அவரை முத்தமிட்டான். இயேசு அவனிடம், "தோழா, எதற்காக வந்தாய்?'' என்று கேட்டார். அதற்குள் வந்தவர்கள் இயேசுவைப் பற்றிப் பிடித்துக் கைது செய்தனர்.

உடனே இயேசுவோடு இருந்தவருள் ஒருவர் தமது வாளை யெடுத்துத் தலைமைக்குருவின் பணியாளரைத் தாக்கி அவனுடைய காதைத் துண்டித்தார். அப்பொழுது இயேசு அவரிடம் "உனது வாளை அதன் உறையில் திரும்பப் போடு. ஏனெனில் வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்துபோவர். நான் என் தந்தையின் துணையை வேண்டமுடியாதென்றா நினைத்தாய்? நான் வேண்டினால் அவர் பன்னிரு பெரும் படைப் பிரிவுகளுக்கு மேற்பட்ட வானதூதரை எனக்கு அனுப்பி வைப்பாரே. அப்படியானால் இவ்வாறு நிகழவேண்டும் என்ற மறை நூல் வாக்குகள் எவ்வாறு நிறைவேறும்?'' என்றார். அவ்வேளையில் இயேசு மக்கள் கூட்டத்தைப் பார்த்து, "கள்வனைப் பிடிக்க வருவது போல் வாள்களோடும், தடிகளோடும் என்னைக் கைது செய்ய வந்தது ஏன்? நான் நாள்தோறும் கோவிலில் அமர்ந்து கற்பித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் என்னப் பிடிக்கவில்லையே; இறை வாக்கினர் எழுதியவை நிறைவேறவே இவையனைத்தும் நிகழ்கின்றன'' என்றார். அப்பொழுது சீடர்கள் எல்லாரும் அவரை விட்டுவிட்டுத் தப்பியோடினர்.

## தலைமைச் சங்கத்தின் முன்னிலையில் இயேசு

இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைத் தலைமைக்குரு கயபாவிடம் கூட்டிச் சென்றனர். அங்கே மறைநூல் அறிஞரும் மூப்பர்களும் கூடி வந்தனர். பேதுரு தொலைவில் அவரைப் பின்தொடர்ந்து தலைமைக்குருவின் வீட்டு முற்றம் வரை வந்து வழக்கின் முடிவைப் பற்றித் தெரிந்துகொள்வதற்காக உள்ளே நுழைந்து காவலரோடு உட்கார்ந்திருந்தார்.

தலைமைக்குருக்களும், தலைமைச் சங்கத்தார் அனைவரும் இயேசுவுக்கு மரண தண்டனை விதிக்க அவருக்கு எதிராகப் பொய்ச் சாட்சி தேடினார்கள். பல பொய்சாட்சிகள் முன்வந்தும் ஏற்ற சாட்சி கிடைக்கவில்லை. இறுதியாக இருவர் வந்தனர். அவர்கள், "இவன் கடவுளுடைய திருக்கோவிலை இடித்து அதை மூன்று நாளில் கட்டியெழுப்ப என்னால் முடியும் என்றான்" என்று கூறினர். அப்பொழுது தலைமைக்குரு எழுந்து அவரிடம், "இவர்கள் உனக்கு எதிராகக் கூறும் சான்றுக்கு மறுமொழி கூறமாட்டாயா?" என்று கேட்டார். ஆனால் இயேசு பேசாதிருந்தார். மேலும் தலைமைக்குரு அவரிடம், "நீ கடவுளின் மகனாகிய மெசியாவா? வாழும் கடவுளின் பெயரால் ஆணையிட்டுச் சொல்லுமாறு உன்னிடம் கேட்கிறேன்" என்றார். அதற்கு இயேசு "நீரே சொல்லுகிறீர், மானிட மகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பதையும், வானமேகங்கள் மீது வருவதையும் இதுமுதல் நீங்கள் காண்பீர்கள் என உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். உடனே தலைமைக்குரு தன் மேலுடையைக் கிழித்துக்கொண்டு, "இவன் கடவுளைப் பழித்துரைத்தான். இன்னும் நமக்குச் சான்றுகள் தேவையா? இதோ, இப்பொழுது நீங்களே பழிப்புரையைக் கேட்டீர்களே. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "இவன் சாக வேண்டியவன்" எனப் பதிலளித்தனர். அதன்பின் இயேசுவின் முகத்தில் துப்பி அவரைக் கையால் குத்தினர். மேலும் சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து "இறைவாக்கினர் மெசியாவே, உன்னை அடித்தது யார்? சொல்" என்று கேட்டனர்.

பேதுரு வெளியே முற்றத்தில் உட்கார்ந்திருந்தார். பணிப்பெண் ஒருவர் அவரிடம் வந்து, "நீயும் கலிலேயனாகிய இயேசுவோடு இருந்தவன்தான்" என்றாள். அவரோ, "நீர் சொல்வது என்னவென்று எனக்குத் தெரியவில்லை" என்று அவர்கள் அனைவர் முன்னிலையிலும் மறுத்தார். அவர் வெளியே வாயிலருகே சென்றபோது வேறொரு பணிப்பெண் அவரைக் கண்டு, "இவன் நாசரேத்து இயேசுவோடு இருந்தவன்" என்று அங்கிருந்தோரிடம் சொன்னார். ஆனால் பேதுரு, "இம்மனிதனை எனக்குத் தெரியாது" என்று ஆணையிட்டு மீண்டும் மறுத்தார். சற்று நேரத்திற்குப்பின் அங்கே நின்றவர்கள் பேதுருவிடம் வந்து, "உண்மையாகவே நீயும் அவர்களைச் சேர்ந்தவனே; ஏனெனில் உன் பேச்சே உன்னை யாரென்று காட்டிக் கொடுக்கிறது," என்று கூறினர். அப்பொழுதும் அவர், "இந்த மனிதனை எனக்குத் தெரியாது" என்று சொல்லிச் சபிக்கவும், ஆணையிடவும் தொடங்கினர். உடனே சேவல் கூவியது. அப்பொழுது, "சேவல் கூவும் முன் நீ என்னை மும்முறை

மறுதலிப்பாய்" என்று இயேசு கூறியதைப் பேதுரு நினைவுகூர்ந்து வெளியே சென்று மனம் நொந்து அழுதார்.

பொழுது விடிந்ததும் தலைமைக் குருக்கள், மக்களின் மூப்பர்கள் யாவரும் இயேசுவைக் கொல்ல அவருக்கு எதிராக ஆலோசனை செய்தனர். அவரைக் கட்டி இழுத்துச் சென்று ஆளுநர் பிலாத்திடம் ஒப்படைத்தனர்.

## யூதாசின் தற்கொலை

அதன்பின் இயேசு தண்டனைத் தீர்ப்பு அடைந்ததைக் கண்டபோது அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசு மனம் வருந்தித் தலைமைக் குருக்களிடமும் மூப்பர்களிடமும் முப்பது வெள்ளிக் காசுகளையும் திருப்பிக் கொண்டுவந்து, "பழிபாவமில்லாதவரைக் காட்டிக் கொடுத்துப் பாவம் செய்தேன்" என்றான். அதற்கு அவர்கள், "அதைப் பற்றி எங்களுக்கென்ன? நீயே பார்த்துக் கொள்" என்றனர். அதன்பின் அவன் அந்த வெள்ளிக்காசுகளைக் கோவிலில் எறிந்துவிட்டு வெளியே சென்று தூக்குப்போட்டுக் கொண்டான். தலைமைக் குருக்கள் வெள்ளிக்காசுகளை எடுத்து, "இது இரத்தத்திற்கான விலையாதலால் இதைக் கோவில் காணிக்கைப் பெட்டியில் போடுவது முறை அல்ல" என்று சொல்லி, கலந்து ஆலோசித்து, அந்நியரை அடக்கம் செய்ய அவற்றைக் கொண்டு குயவன் நிலத்தை வாங்கினர். இதனால்தான் அந்நிலம் 'இரத்த நிலம்' என்று இன்றுவரை அழைக்கப்படுகிறது.

## இயேசுவை ஆளுநர் பிலாத்து விசாரணை செய்தல்

இயேசு, ஆளுநர் பிலாத்து முன்னிலையில் நின்று கொண்டிருந்தார். ஆளுநர் அவரை நோக்கி, "நீ யூதரின் அரசனா?" என்று கேட்டான். அதற்கு இயேசு, "அவ்வாறு நீர் சொல்கிறீர்" என்று கூறினார். மேலும் தலைமைக் குருக்களும் மூப்பர்களும் அவர்மீது குற்றம் சுமத்தியபோது அவர் மறுமொழி எதுவும் கூறவில்லை. பின்பு பிலாத்து அவரிடம் "உனக்கு எதிராக எத்தனையோ சான்றுகள் கூறுகிறார்களே, உனக்குக் கேட்க வில்லையா?" என்றான். அவரோ ஒரு சொல்கூட அவனுக்கு மறுமொழியாகக் கூறவில்லை. ஆகவே ஆளுநர் மிகவும் வியப்புற்றான்.

## இயேசுவுக்கு மரண தண்டனை விதித்தல்

மக்கள் விரும்பிக் கேட்கும் ஒரு கைதியை அவர்களுக்காக, பாஸ்கா விழாவின்போது ஆளுநர் விடுதலை செய்வது வழக்கம். அந்நாளில் பரபா என்னும் பேர்போன கைதி ஒருவன் இருந்தான்.

மக்கள் ஒன்று கூடி வந்திருந்தபோது பிலாத்து அவர்களிடம், "நான் யாரை விடுதலை செய்ய வேண்டும் என விரும்புகிறீர்கள்? பரபாவையா அல்லது மெசியா என்னும் இயேசுவையா?" என்று கேட்டான். ஏனெனில் அவர்கள் பொறாமையால்தான் இயேசுவைத் தன்னிடம் ஒப்புவித்திருந்தனர் என்பது அவனுக்குத் தெரியும். பிலாத்து நடுவர் இருக்கை மீது அமர்ந்திருந்தபொழுது அவனுடைய மனைவி அவனிடம் ஆளனுப்பி, "அந்த நேர்மையாளரின் வழக்கில் நீர் தலையிட வேண்டாம், ஏனெனில் அவர் பொருட்டு இன்று கனவில் மிகவும் துன்புற்றேன்" என்று கூறினார்.

தலைமைக் குருக்களும், மூப்பர்களும் பரபாவை விடுதலை செய்யக் கேட்கவும், இயேசுவைத் தீர்த்துக்கட்டவும் கூட்டத்தினரைத் தூண்டிவிட்டனர். ஆளுநர் அவர்களைப் பார்த்து, "இவ்விருவரில் யாரை விடுதலை செய்ய வேண்டும்? உங்கள் விருப்பம் என்ன?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் 'பரபாவை' என்றனர். பிலாத்து அவர்களிடம், "அப்படியானால் மெசியா என்னும் இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான். அனைவரும், "சிலுவையில் அறையும்" என்று பதிலளித்தனர். அதற்கு அவன், "இவன் செய்த குற்றம் என்ன?" என்று கேட்டான். அவர்களோ, "சிலுவையில் அறையும்" என்று இன்னும் உரக்கக் கத்தினர். பிலாத்து தன் முயற்சியால் பயனேதும் ஏற்படவில்லை, மாறாகக் கலகமே உருவாகிறது என்று கண்டு, கூட்டத்தினரின் முன்னிலையில் தண்ணீரை எடுத்து, "இவனது இரத்தப் பழியில் எனக்குப் பங்கில்லை, நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறித் தன் கைகளைக் கழுவினான். அதற்கு மக்கள் அனைவரும், "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் விழட்டும்" என்று பதில் கூறனர். அப்போது அவர் பரபாவை அவர்கள் விருப்பத்திற்கிணங்க விடுதலை செய்தான். இயேசுவைக் கசையால் அடித்துச் சிலுவையில் அறையுமாறு உத்தரவிட்டான்.

ஆளுநரின் படைவீரர் இயேசுவை ஆளுநர் மாளிகைக்குக் கூட்டிச் சென்று, அங்கிருந்த படைப்பிரிவினர் அனைவரையும் அவர்முன் ஒன்று கூட்டினர். இயேசுவின் ஆடைகளை உரிந்து, கருஞ்சிவப்பு நிறமுள்ள தளர் அங்கியை அவருக்கு அணிவித்தனர். அவர்கள் ஒரு முள்முடி பின்னி அவரது தலைமேல் வைத்து, அவருடைய வலக்கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன் முழந்தாள் படியிட்டு, "யூதரின் அரசரே, வாழ்க!" என்று சொல்லி ஏளனம் செய்தனர். அவர்மேல் துப்பி, அக்கோலை எடுத்து அவருடைய தலையில் அடித்தனர். அவரை ஏளனம் செய்தபின், அவர் மேல் இருந்த தளர் அங்கியைக் கழற்றிவிட்டு அவருடைய ஆடைகளை

அணிவித்து அவரைச் சிலுவையில் அறைவதற்காக இழுத்துச் சென்றனர்.

## இயேசுவைச் சிலுவையில் அறைதல்

அவர்கள் வெளியே சென்றபோது சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்ற பெயருடைய ஒருவரைக் கண்டனர். இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி அவரைக் கட்டாயப்படுத்தினர். 'மண்டையோட்டு இடம்' என்று பொருள்படும் 'கொல்கொதா'வுக்கு வந்தனர். இயேசுவுக்குக் கசப்பு கலந்த திராட்சை இரசத்தைக் குடிக்கக் கொடுத்தனர். அவர் அதைச் சுவை பார்த்தபின் குடிக்க விரும்பிவில்லை. அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்த பின்பு குலுக்கல் முறையில் அவருடைய ஆடைகளைப் பங்கிட்டுக் கொண்டனர். பின்பு அங்கே உட்கார்ந்து காவல் காத்தனர். அவரது தலைக்கு மேல் அவரது மரணதண்டனைக்கான காரணத்தை எழுதி வைத்தனர். அதில் "இவன் யூதரின் அரசனாகிய இயேசு" என்று எழுதப்பட்டிருந்தது. அதன்பின் அவருடைய வலப்புறம் ஒருவனும், இடப்புறம் ஒருவனுமாக இரு கள்வர்களை அவர்களுடைய சிலுவைகளில் அறைந்தனர். அவ்வழியே சென்றவர்கள் தங்கள் தலைகளை அசைத்து, "கோவிலை இடித்து மூன்று நாளில் கட்டி எழுப்புகிறவனே, உன்னையே விடுவித்துக்கொள். நீ இறைமகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கி வா" என்று அவரைப் பழித்துரைத்தனர். அவ்வாறே தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்களுடனும் மூப்பர்களுடனும் சேர்ந்து அவரை ஏளனம் செய்தனர். அவர்கள், "பிறரை விடுவித்தான், தன்னையே விடுவிக்க இயலவில்லை. இவன் இஸ்ரயேலுக்கு அரசனாம். இப்போழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும். அப்பொழுது நாங்கள் சிவனை நம்புவோம். கடவுளிடம் இவன் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தானாம். அவர் விரும்பினால் இப்பொழுது இவனை விடுவிக்கட்டும். 'நான் இறைமகன்' என்றானே", என்று கூறினர். அவ்வாறே, அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வர்களும் அவரை இகழ்ந்தனர். அப்போது தமக்கு எதிராகச் செயல்பட்ட யூதர்கள் மற்றும் படைவீரர் களுக்காக இறைத் தந்தையிடம் "தந்தையே இவர்களை மன்னியும்; ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" என்று வேண்டினார்.

## இயேசு உயிர் விடுதல்

நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று. மூன்று மணியளவில் இயேசு, "ஏலி, ஏலி லெமா சபக்தானி?" அதாவது, "என் இறைவா,

என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று உரத்தக் குரலில் கத்தினார். அங்கே நின்றுகொண்டிருந்தவர்களுள் சிலர் அதைக் கேட்டு, "இவன் எலியாவைக் கூப்பிடுகிறான்'' என்றனர். உடனே அவர்களுள் ஒருவர் ஓடிச் சென்று, கடற்பஞ்சை எடுத்து, புளித்த திராட்சை இரசத்தில் தோய்த்து அதைக் கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். மற்றவர்களோ, "பொறு, எலியா வந்து இவனை விடுவிப்பாரா என்று பார்ப்போம்'' என்றனர். இயேசு மீண்டும் உரத்த குரலில் கத்தி உயிர்விட்டார். அப்போது நிலம் நடுங்கியது. நூற்றுவர் தலைவரும் அவரோடு இயேசுவைக் காவல் காத்தவர்களும் நிலநடுக்கத்தைக் கண்டு மிகவும் அஞ்சி, "இவர் உண்மையாகவே இறை மகன்'' என்றனர். கலிலேயாவிலிருந்து இயேசுவைப் பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்துவந்த பல பெண்களும் அங்கிருந்தனர். அவர்கள் தொலைவில் நின்று உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். அவர்களிடையே மக்தலா மரியாவும், யாக்கோபு யோசேப்பு ஆகியோரின் தாய் மரியாவும், செபதேயுவின் மக்களுடைய தாயும் இருந்தனர்.

## இயேசுவின் அடக்கம்

மாலை வேளையானதும் அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்னும் பெயர் கொண்ட செல்வர் ஒருவர் அங்கே வந்தார். அவரும் இயேசுவுக்குச் சீடராய் இருந்தார். அவர் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார். பிலாத்தும் அதைக் கொடுத்துவிடக் கட்டளையிட்டான். யோசேப்பு அவ்வுடலைப் பெற்று, தூய்மையான மெல்லிய துணியால் சுற்றி, தமக்கெனப் பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் கொண்டுபோய் வைத்தார். அதன் வாயிலில் ஒரு பெருங்கல்லை உருட்டி வைத்துவிட்டுப் போனார். அப்பொழுது மக்தலா மரியாவும் வேறொரு மரியாவும் அங்கே கல்லறைக்கு எதிரே உட்கார்ந்திருந்தனர்.

## கல்லறைக்குக் காவல்

மறுநாள், அதாவது ஆயத்த நாளுக்கு அடுத்த நாள், தலைமைக் குருக்களும், பரிசேயர்களும் பிலாத்திடம் கூடிவந்தனர். அவர்கள் பிலாத்திடம், "ஐயா, அந்த எத்தன் உயிருடன் இருந்த பொழுது 'மூன்று நாள்களுக்குப் பின்பு நான் உயிருடன் எழுப்பப்படுவேன்' என்று சொன்னது எங்களுக்கு நினைவில் இருக்கிறது. ஆகையால் மூன்று நாள்கள் வரை கல்லறையைக் கருத்தாய்க் காவல் செய்யக் கட்டளையிடும். இல்லையெனில் அவருடைய சீடர்கள் ஒரு வேளை வந்து அவன் உடலைத் திருடிச் சென்றுவிட்டு, 'இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்' என்று மக்களிடம் சொல்ல நேரிடும்; அப்பொழுது முந்தின ஏமாற்றுவேலையை

விடப் பிந்தினது மிகுந்த கேடு விளைவிக்கும்" என்று கூறினர். அதற்குப் பிலாத்து அவர்களிடம் "உங்களிடம் காவல் வீரர்கள் இருக்கிறார்கள். நீங்களே போய் உங்களுக்குத் தெரிந்தபடி கருத்தாய்க் காவல் செய்யுங்கள்" என்றார். அவர்கள் போய்க் கல்லறையை மூடியிருந்த கல்லுக்கு முத்திரையிட்டு, காவல் வீரரைக் கொண்டு கருத்தாய்க் காவல் செய்ய ஏற்பாடு செய்தனர்.

## இயேசு உயிர் பெற்று எழுதல்

ஓய்வு நாளுக்குப் பின் வாரத்தின் முதல் நாள் விடியற் காலையில் மக்தல மரியாவும் வேறொரு மரியாவும் கல்லறையைப் பார்க்கச் சென்றனர். திடீரென ஒரு பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது. ஆண்டவரின் தூதர் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்து கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டி அதன்மேல் உட்கார்ந்தார். அவருடைய தோற்றம் மின்னல் போன்றும் அவருடைய ஆடை உறைபனி வெண்மை போன்றும் இருந்தன. அவரைக் கண்ட அச்சத்தால் காவல் வீரர் நடுக்கமுற்றுச் செத்தவர் போலாயினர். அப்பொழுது வானதூதர் அப்பெண்களைப் பார்த்து, "நீங்கள் அஞ்சாதீர்கள். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும். அவர் இங்கே இல்லை; அவர் கூறிய படியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். நீங்கள் விரைந்து சென்று, 'இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் எனச் சீடருக்குக் கூறுங்கள். உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறார். அங்கே நீங்கள் அவரைக் காண்பீர்கள். இப்பொழுதே நான் உங்களுக்குச் சொல்லி விட்டேன்" என்றார். அவர்களும் கல்லறையை விட்டு விரைவாகப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் அச்சமுற்றாலும் அதே வேளையில் பெருமகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீடர்களுக்கு அறிவிக்க ஓடினர். திடீரென்று இயேசு அவர்களை எதிர்கொண்டு வந்து வாழ்த்தினார். அவர்கள் அவரை அணுகி அவர் காலடிகளைப் பற்றிக் கொண்டு பணிந்து நின்றனர். அப்பொழுது இயேசு அவர்களிடம், "அஞ்சாதீர்கள்! என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" என்றார்.

அவர்கள் போய்க் கொண்டிருந்தபோது காவல் வீரருள் சிலர் நகரத்திற்குள் சென்று, நிகழ்ந்தவை யாவற்றையும் தலைமைக் குருக்களுக்கு அறிவித்தனர். அவர்கள் மூப்பர்களுடன் கூடிக் கலந்து ஆலோசித்து அப்படை வீரருக்கு மிகுதியாகப் பணம் கொடுத்து, "நாங்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது இயேசுவின் சீடர்கள் இரவில் வந்து அவரது உடலைத் திருடிச் சென்றுவிட்டனர், என்று

சொல்லுங்கள். ஆளுநர் இதைக் கேள்வியுற்றால் நாங்கள் அவரை நம்பச் செய்து, நீங்கள் தொல்லைக்குள்ளாகாதபடி பார்த்துக் கொள்வோம்'' என்று அவர்களிடம் கூறினர். அவர்களும் பணத்தைப் பெற்றுக்கொண்டு தங்களுக்கு அவர்கள் சொல்லிக் கொடுத்தவாறே செய்தனர்.

## இயேசு சீடர்களுக்குக் கட்டளை கொடுத்து அனுப்புதல்

பதினொரு சீடர்களும் இயேசு தங்களுக்குப் பணித்தபடியே கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்குச் சென்றனர். அங்கே அவரைக் கண்டு பணிந்தனர். சிலரோ ஐயமுற்றனர். இயேசு அவர்களை அணுகி ''விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளை யிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்'' என்று கூறினார்.

## இயேசு தோமாவுக்குத் தோன்றுதல்

இயேசு கிறித்துவினுடைய 12 சீடர்களில் ஒருவர் தோமா. இயேசு இறந்த பின் உயிர்பெற்று எழுந்த பின்பு சீடர்களுக்குக் காட்சி கொடுத்தார். அந்தக் காட்சியைக் காணத் தோமா அப்போது அவர்களோடு இல்லாமலிருந்தார். அவர் வந்த பின்பு மற்ற சீடர்கள் அவரிடம் ''நாங்கள் ஆண்டவரைக் கண்டோம்'' என்று கூறினர். தோமா, அவர்களிடம் ''இயேசுவின் கைகளில் ஆணிகளால் அறையப்பட்டபோது ஏற்பட்ட தழும்பையும் நான் பார்த்து என் கையை அவற்றினுள்ளே இட்டுப் பார்த்தாலன்றி நான் நம்பமாட்டேன்'' என்றார் எட்டு நாட்களுக்குப்பின் அவர்களுடைய சீடர்கள் மீண்டும் கூடினர். அன்று தோமாவும் அவர்களுடன் இருந்தார். அப்போது இயேசு முன்போல் அவர்கள் முன்தோன்றி ''உங்களுக்கு அமைதி உண்டாக வேண்டும்'' என்று வாழ்த்தினார். அதன்பின் அவர் தோமாவிடம், ''இதோ ஆணி அடிக்கப்பட்ட என் கைகள். அத்துளைகளில் உன் விரலை விட்டுப்பார். ஈட்டியால் குத்தப்பட்ட என் விலாவிலுள்ள துளையிலும் உன் விரலை விட்டுப்பார். சந்தேகம் தவிர்த்து நம்பிக்கை கொள்'' என்றார். தோமா அவ்வாறே செய்து அவரை நோக்கி, ''நீங்களே என் ஆண்டவர்! நீங்களே என் கடவுள்!'' என்றார். இயேசு ''நீ என்னைக் கண்டதால் நம்பினாய், காணாமலே நம்புவோர் பேறு பெற்றோர்'' என்றார்.

## இயேசு விண்ணுலகம் செல்லுதல்

பின்பு இயேசு பெத்தானியாவரை சீடர்களை அழைத்துச் சென்று தம் கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசி வழங்கினார். அவர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருக்கும்போதே அவர்களிடமிருந்து பிரிந்து விண்ணுலகம் சென்றார். சீடர்கள் இயேசுவை வணங்கிவிட்டுப் பெரும் மகிழ்ச்சியோடு ஜெருசலேம் திரும்பிச் சென்றனர். இத்துடன் இயேசு கிறித்துவின் வாழ்க்கை வரலாறு நிறைவு பெறுகிறது.

## புனித தோமாவின் பணி

இயேசு கிறித்துவினுடைய போதனைகளைப் பரப்பத் தோமா இந்தியாவிற்கு வந்தார். அவர் கேரளாவில் வெகுநாள்கள் தங்கி அறவழிகளை எடுத்துச் சொன்னார். அதன்பின் அங்கிருந்து தமிழகத்தின் தலைநகர் சென்னைக்கு வந்தார். பாமர மக்களுடன் நெருங்கிப் பழகினார். இயேது கிறித்துவின் போதனைகளை அவர்களுக்கு எடுத்துரைத்தார். சிலர் அவற்றை ஏற்றுக் கொண்டனர், மற்ற சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் அவரை வெறுத்தனர். அவர்களில் சிலர் தோமாவைக் கொன்றுவிட்டனர் என்றும், அவரைக் கொன்ற இடம்தான் சென்னையிலுள்ள புனித தோமையார் மலை (St. Thomas Mount) என்றும், அங்கிருந்து அவரது உடல் சென்னை மைலாப்பூருக்குக் கொண்டு வந்து அங்குள்ள ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

## கிறித்துவ மதத்தினுடைய வளர்ச்சி

இயேசு கிறித்துவும், அவருடைய சீடர்களும் யூதர்களாகத் தான் இருந்தனர். ஏனென்றால் அவர்கள் யூத மரபையுடையவர்கள். அவர்கள் புதிதாக ஒரு மதத்தை நிறுவ வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால் அப்போதிருந்த சூழ்நிலை அதற்கு வழி வகுத்தது.

அக்காலத்தில் யூதர்கள் என்றும் யூதர்கள் அல்லாதவர்கள் என்றும் இரண்டு பிரிவுகள் இருந்தன. யூதர்கள் யூதர்கள் அல்லாதவர்களிடம் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. யூதர்கள் யூதர்களல்லாதவர்களுடன் இருந்து உணவு அருந்துவது இல்லை. அவர்களின் வீடுகளுக்குச் செல்வதில்லை. அவர்களுடன் பேசுவதில்லை. சுருங்கக்கூறின் யூதர்கள் யூதர்களல்லாதவர்களை மட்டமாகக் கருதினர். அப்படிப்பட்ட சூழ்நிலையில் யூதர்கள் அல்லாதவர்கள் இயேசு கிறித்துவினுடைய போதனைகளைப் பின்பற்றினர். அவர்களில் பலரும் இயேசு கிறித்துவினுடைய சீடர்கள்

ஆயினர். இது ஒரு புதிய மதத்தின், அதாவது கிறித்துவ மதத்தினுடைய தொடக்கத்திற்குக் காரணமாகயிருந்தது.

'ஸாள்' என்று அழைக்கப்பட்டு வந்த ஒரு யூதர் கிறித்துவத்திற்கு எதிரானவராக இருந்தார். இயேசு கிறித்துவைக் கடவுளாக வழிபடுவது தவறானதென்று அவர் கூறிவந்தார். அவர் யூத மதத் தலைவர்களை சந்தித்தார். அவர்களிடம் அவர் தம்முடைய கருத்தினைத் தெரிவித்தார். அவர்களும் அவருடைய கருத்தினை ஒத்துக் கொண்டனர். அவர்கள் கிறித்துவர்களைக் கைது செய்ய ஸாளுக்கு அனுமதி கொடுத்தனர். கிறித்துவர்களைக் கைது செய்ய ஸாள் டெமாஸ்கஸ் என்னும் நகரம் வழி போய்க் கொண்டிருந்தார். அங்கே சில கிறித்தவர்கள் இருப்பதைக் கேள்விப்பட்டார். அங்குப் போகும் வழியில் அவருக்கு மனமாற்றம் ஏற்பட்டது. இயேசு கிறித்து அவரிடம் கிறித்தவர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று கூறியதாக அவருக்கு மனதில் தோன்றியது. அதன் பின் 'ஸாள்' ஒரு கிறித்தவனாக மாறினார். தனது பெயரையும் 'பாள்' என்று மாற்றினார். அதிலிருந்து 'பாள்' கிறித்துவினுடைய போதனைகளை மக்களிடையே பரப்பி, கிறித்துவ மத்திலுள்ள ஒரு சிறந்த போதகராக மாறினார். அவரைப் போன்று மேலும் பலர் கிறித்துவ மதத்தை வளர்க்கத் தொடங்கினர். அதனால் கிறித்துவ மதம் வளர்ந்துகொண்டே வந்தது.

### கிறித்துவ மதத்தில் பிரிவுகள்

கிறித்துவ மதத்தில் பல பிரிவுகள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை நான்கு. அவற்றின் விவரம்

:

1. உரோமன் கத்தோலிக்கர் (Roman Catholics)
2. வைதிகக் கிழக்கத்திய கிறித்தவர் (Eastern Orthodoxy)
3. புரோட்டஸ்டான்ட் கிறித்தவர் (Protestant Christians)
4. ஆங்கிளிக்கன் கிறித்தவர் (Anglican Christians)

உலகிலுள்ள மொத்த கிறித்தவர்களில் ஏறத்தாழப் பாதியளவிற்கு உரோமன் கத்தோலிக்கர் இருக்கின்றனர். கிறித்துவப் பிரிவில் மிகவும் பெரியது இதுதான். கத்தோலிக்கக் கிறித்தவர்கள் மிக முக்கியமானவராகக் கருதப்படுபவர் 'போப்'. இவரைப் போப் ஆண்டவர் என்றும் கூறுவர். உரோமன் கத்தோலிக்கர்களுடைய தலைவர் இவர்தாம். இவர் இருக்குமிடம் ரோம் (உரோமாபுரி).

வைதிகக் கிழக்கத்திய கிறித்தவர் மிகவும் பழமையான பிரிவினராகும். இவர்களில் பெரும் பகுதியினர் உருசியா, கிரேக்கம், பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருக்கின்றனர்.

உரோமன் கத்தோலிக்கர்களிடமிருந்து பிரிந்து வந்தவர்கள் புரோட்டஸ்டாண்டுகள். புரோட்டஸ்டாண்டுகள் இன்று உலகிலுள்ள பெரும்பாலான இடங்களிலெல்லாம் இருக்கின்றனர்.

ஆங்கிளிக்கன் கிறித்துவர்கள் பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கானடா முதலான நாடுகளில் இருக்கின்றனர்.

**கிறித்துவ மதத்தில் கடவுள் பற்றிய கருத்து**

கடவுள் ஒருவரே. அவர் மூன்று பேராக வெளிப்படுகிறார். தந்தை, மகன், தூய ஆவியானவர் என்ற மூன்று பேராக விளங்குகிறார். அவர் சர்வேசுவரன் என்று அழைக்கப்படுகிறார். எல்லாவற்றையும் படைத்துக் காப்பாற்றும் எல்லா நற்குணங்களும் நிறைந்த சுத்த அரூபியே சர்வேசுவரன். பிதா, சுதன், பரிசுத்த ஆவி – பெயர் மூன்றாகயிருந்தாலும் மூன்றும் ஒரே சர்வேசுவரன்தான். இம்மூன்று பேருக்கும் ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை, ஒரே தேவ சுபாவம். மேலும் இவர்களுக்குள்ளே வல்லபம், மகிமை முதலிய குணங்களிலும் வித்தியாசமில்லை. சரி சமனாக இருக்கிறார்கள். இப்படி ஏகவும் திரித்துவமுமாகிய (மூன்றாகயிருப்பது மாகிய) சர்வேசுவரனுக்கு முக்கியமாக ஆறு இலட்சணங்கள் உள்ளன. அவை:

1. சர்வேசுவரன் தாமாயிருக்கிறார்.
2. துவக்கமும் முடிவும் இல்லாமல் இருக்கிறார்.
3. சரீரமில்லாமலிருக்கிறார்.
4. அளவில்லாத சகல நன்மையின் சொரூபியாயிருக்கிறார்.
5. எங்கும் வியாபித்திருக்கிறார்.
6. எல்லாவற்றிற்கும் ஆதி காரணமாயிருக்கிறார்.

**கிறித்துவ மதக் கொள்கை**

கடவுளை முழு இதயத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும் அன்பு செய்யவேண்டும். மக்களிடையே அன்பு, சகோதரத்துவம், சமாதானம் வளர வேண்டும். ஒருவர் தன்னை நேசிப்பதுபோல் பிறரையும் நேசிக்க வேண்டும். எல்லோரும் பரஸ்பரம் அன்புடன் வாழ்ந்து மனிதநேயத்தை வளர்க்க வேண்டும்.

# புனித நூல்

கிறித்தவர்களுடைய புனித நூலின் பெயர் 'திரு விவிலியம்' (The Bible) இது பார்ப்பதற்கு ஒரே நூலாக இருந்தாலும், இது 66 நூல்களின் சேர்க்கையாகும. இது இரு பாகங்களைக் கொண்டது. முதல் பாகம் பழைய ஏற்பாடு (The Old Testament) என்றும், இரண்டாம் பாகம் புதிய ஏற்பாடு (The New Testament) என்றும் கூறப்படுகிறது. யூத மதம் (Judaism) உலகிலுள்ள பழமையான மதங்களில் ஒன்றாகும். பழைய ஏற்பாடு யூத மதத்தின் புனித நூலிலிருந்து வந்தது என்று கூறப்படுகிறது. பழைய ஏற்பாடு என்பது பலதரப்பட்ட நூல்களின் இணைப்பாகும். அது வரலாற்றுக் கதைகள் மற்றும் செய்யுள்களைக் கொண்டதாகும். யூதர்கள் கடவுளைப் பற்றித் தெரிந்து கொண்ட பல விவரங்கள் அதில் உள்ளன. பழைய ஏற்பாட்டைப் புதிய ஏற்பாடு நிறைவேற்றி வைப்பதாகக் கிறித்தவர்கள் நம்புகின்றனர். ஆனால் இதை யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள், பழைய ஏற்பாடு என்பது தானாகவே முடிவு பெற்ற நூல்தான் என்கின்றனர்.

புதிய ஏற்பாட்டிலுள்ள முதல் நான்கு நூல்களும் "நற்செய்திகள்" (Gospels) என்று கூறப்படுகின்றன. அவை:

1. மத்தேயு நற்செய்தி
2. மாற்கு நற்செய்தி
3. லூக்கா நற்செய்தி
4. யோவான் (அருளப்பர்) நற்செய்தி

இவற்றில் பெரும்பகுதி இயேசு கிறித்துவினுடைய வாழ்க்கை மற்றும் உலகிற்கு அளித்த நற்செய்தி ஆகியவற்றைக் கொண்டவையாகும். புதிய ஏற்பாட்டிலுள்ள மற்ற நூல்கள் முதல் கிறித்தவர்களுடைய வரலாற்று அனுபவங்களைக் கொண்டவையாகும்.

கிறித்துவர்கள் மிகவும் மதிப்பது பைபிளைத்தான். பைபிளிலுள்ள சில இறை வார்த்தைகள் ஆலயங்களில் கடவுள் ஆராதனையின்போது படிக்கப்படுகின்றன. கிறித்தவர்கள் அவர்களின் வீடுகளிலும் பைபிளிலுள்ள வசனங்களைப் படிக்கின்றனர்.

ஹிப்ரு பைபிள் (The Hebrew Bible) அல்லது பழைய ஏற்பாடு முதலில் ஹிப்ரு எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தது. பிறகு கிரேக்க (Greek) மொழியில் கி.மு. 300ஆம் ஆண்டு மொழிபெயர்க்கப் பட்டிருந்தது. புதிய ஏற்பாடு முதலில் கிரேக்க மொழியில்

இயற்றப்பட்டிருக்கிறது. அதன்பின் கிரேக்க மொழியிலிருந்து பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடுகளைக் கொண்ட பைபிள் (The Christian Bible) இலத்தீன் மொழியில் கி.பி. 382இல் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. அதன்பின் பைபிள் இலத்தீன் மொழியிலிருந்து மற்ற பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

## பைபிளிலுள்ள மிக முக்கியச் செய்தி

பைபிளிலுள்ள மிக முக்கியமான செய்தி "பத்துக் கட்டளைகளாகும்".

சனாய் மலையில் கடவுள் தம் மக்களுக்குக் கட்டளைகளை அருளினார். அவற்றை மோசே இரு கற்பலகைகளில் பொறித்தார்.

கடவுள் அருளிய வார்த்தைகள் இவையே:

*நான் உன் கடவுளாகிய ஆண்டவர்; அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியில் நீர்த் திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவற்றை வழிபடவோ, அவற்றிற்குப் பணிவிடை செய்யவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக் கொள்ளமாட்டேன். என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் தண்டித்துத் தீர்ப்பேன். மாறாக, என்மீது அன்பு கூர்ந்து என் விதிமுறைகளைக் கடைப்பிடிப்போருக்கு ஆயிரந்தலை முறைக்கும் பேரன்பு காட்டுவேன். உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே; ஏனெனில், தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் தண்டியாது விடார். ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு. ஆறுநாள் நீ உழைத்து உன் அனைத்து வேலையையும் செய்வாய். ஏழாம் நாளோ, உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள். எனவே அன்று நீயும், உன் மகனும், மகளும், உன் அடிமையும்,*

*அடிமைப் பெண்ணும், உன் கால்நடைகளும், உன் நகர்களுக்குள் இருக்கும் அந்நியனும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். ஏனெனில், ஆண்டவர் ஆறு நாள்களில் விண்ணுலகையும் மண்ணுலகையும் கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறு ஆண்டவர் ஓய்வு நாளுக்கு ஆசி வழங்கி அதனைப் புனிதப்படுத்தினார். உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும்படி, உன் தந்தையையும், உன் தாயையும் மதித்து நட. கொலை செய்யாதே, விபச்சாரம் செய்யாதே, களவு செய்யாதே. பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே. பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே. பிறர் மனைவி, அடிமை, அடிமைப் பெண், மாடு, கழுதை அல்லது பிறருக்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே.*

இவற்றைச் சுருக்கமாகப் பத்துக் கட்டளைகள் (Ten Commandments) என்று கீழ்க்கண்டவாறு காணலாம்.

1. *நானே உன் கடவுளாகிய ஆண்டவர் என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது.*
2. *ஆராதனை செய்வதற்காக யாதொன்றின் சிலையையும் நீ உருவாக்க வேண்டாம்.*
3. *ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.*
4. *ஓய்வுநாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு.*
5. *உன் தாய்தந்தையரை மதித்து நடக்க வேண்டும்.*
6. *நீ கொலை செய்யாதே.*
7. *நீ விபச்சாரம் செய்யாதே.*
8. *நீ களவு செய்யாதே.*
9. *பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே.*
10. *மற்றவர்கள் மீது பொறாமைப்படாதே.*

# வழிபாட்டு முறை

கிறித்துவர்களிடையே பல பிரிவுகள் இருக்கின்றன. சில பிரிவினர் உருவ வழிபாடு செய்கின்றனர். மற்ற சில பிரிவினர் அருவ வழிபாடு செய்கின்றனர்.

உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் உருவ வழிபாடு செய்கின்றனர். இயேசு கிறித்துவின் தாயார், தந்தை, சீடர்கள் மற்றும் புனிதர்கள் பெயரால் ஆலயங்கள் கட்டி அவற்றில் அவர்களது உருவங்கள் வைத்து மெழுகுவர்த்தி ஏற்றி வழிபடுகின்றனர். இராப்போஜனத்தில் இயேசு கிறித்து செய்ததுபோல் ஆலயங்களில் குருவானவர் (பாதிரியார்) செய்து, திருச்சபையினருக்கு வழங்குகிறார். உரோமன் கத்தோலிக்கர்களின் வழிபாட்டில் வார்த்தை வழிபாடும் நற்கருணை வழிபாடும் மிகவும் முக்கியமானவை.

இராப்போஜனம் என்பது இயேசுவைப் பகைவர்களுக்கு யூதாஸ் காட்டிக்கொடுப்பதற்கு முன்பு பன்னிரண்டு சீடர்களுடன் இயேசு உணவருந்தும் நிகழச்சி.

திருச்சபை என்பது – இயேசு கிறித்துவை வெளிப்படையாக ஏற்று அவரது உபதேசங்களைப் பின்பற்றி வாழ்கின்ற மக்களின் கூட்டம் திருச்சபை.

வார்த்தை வழிபாடு என்பது – பைபிளிலுள்ள இறை வார்த்தைகளைப் படித்துக்காட்டி அவற்றிற்கு விளக்கம் அளித்து அவற்றைப் பின்பற்றி வாழ உபதேசிப்பது வார்த்தை வழிபாடு.

நற்கருணை வழிபாடு என்பது – அப்பத்தை இயேசு கிறித்துவின் உடலாகவும், முந்திரிப்பழ இரசத்தை அவரது இரத்த மாகவும் கருதி, அவற்றை இயேசுவின் நாமத்தில் ஜபித்து, திருச்சபை உறுப்பினர்களுக்குக் குருவானவர் (பாதிரியார்) வழங்கும் நிகழ்ச்சி.

உரோமன் கத்தோலிக்கர்களுக்கு அடுத்தாற்போல், வைதிகக் கிறித்தவர்கள் (Orthodox Christians) அவர்களுடைய ஆலயங்களின் உள்ளே சுவற்றில் இயேசு கிறித்துவினுடையவோ, அவரது தாயார் மரியாவினுடையவோ, அல்லது புனிதர்களுடையவோ படம் வரையப்பட்டு (Icons) அதன்முன் மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து வழிபடுகின்றனர்.

மறுநெறியான கிறித்தவர்களும் (Protestant Christians) அவர்களைத் தொடர்ந்து வந்த சி.எஸ்.ஐ. கிறித்தவர்களும் உருவ வழிபாடோ, இக்கான் வழிபாடோ செய்வதில்லை. கடவுள் உருவமற்றவர் அவரை உள்ளத்தில் வழிபட வேண்டுமென்பது அவர்களது நம்பிக்கை.

பெரும்பாலான கிறித்தவர்கள் கூட்டாகச் சேர்ந்து கடவுளைப் பிரார்த்தனை செய்து வழிபடுகின்றர். கூட்டுப் பிரார்த்தனைக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். கூட்டுப் பிரார்த்தனையைச் சேவை (Service) என்று கூறுகின்றனர். இது பொதுவாக ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறுகின்றது. இயேசு கிறித்து உயிர்த்தெழுந்த தினம் ஞாயிறு ஆனதால் இந்தத் தினத்திற்குக் கிறித்தவர்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். எல்லா ஆலயங்களிலும் நடைபெறுகின்ற பிரார்த்தனைகள் (Service) ஒன்று போலிருப்பதில்லை. வெவ்வேறு ரீதிகளில் நடக்கின்றன. பெரும்பாலான கூட்டுப் பிரார்த்தனைகளில் இசைகளுடன் கடவுள் துதிப் பாடல்கள் பாடப்படுகின்றன. கடவுள் துதிப்பாடல்களைப் பாடிப் கடவுளைப் பிரார்த்தனை செய்வது கடவுள் வழிபாடுகளில் ஒன்றாகக் கிறித்தவர்கள் நம்புகின்றனர்.

கிறித்தவர்களில் மேலும் பல பிரிவுகள் இருக்கின்றன. அவர்கள் வித்தியாசமான முறைகளில் கடவுள் வழிபாடு நடத்துகின்றனர்.

# 5. இசுலாமிய மதம்

இசுலாமிய மதத்தினுடைய வரலாறு, இசுலாமியச் சமய நூல்கள், வழிபாட்டு முறைகள் ஆகியன இத்தலைப்பின்கீழ் இடம்பெறுகின்றன.

## வரலாறு

கி.பி. 7ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அரேபியாவில் முகம்மது (நபிகள் நாயகம்) இசுலாமிய மதத்தை மக்களிடையே பரப்பினார். இது உலகிலுள்ள முக்கியமான மதங்களுள் ஒன்று. அரபுச் சொல்லான இசுலாம் என்பதன் பொருள் சரணடைதல் என்பதாகும். இசுலாம் கடவுள் ஒருவரே என்று உறுதியாக நம்புகிற மார்க்கமாகும். இதைப் பின்பற்றுபவர்கள் முசுலீம்கள் என அழைக்கப்படுகின்றனர். ஆதாம், இப்ரகீம், மூஸர், ஈசா மற்றும் பலர் உள்ளிட்ட இறைத் தூதர்கள் வரிசையில் முகம்மது நபி, இறுதித் தூதரும் மிக உயர்ந்தவரும் ஆவார் என்பதே முசுலீம்களின் கருத்தாகும். முகம்மது நபி(ஸல்) அவர்களுக்கு இறைவன் வெளிப்படுத்திய செய்திகள் இசுலாமின் புனித நூலாகிய குர்ஆனில் கூறப்பட்டுள்ளன.

இசுலாமிய மதத்தின் வரலாற்றின் பெரும்பகுதி முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றினை உள்ளடக்கியது. அவர்களுடைய வாழ்க்கை வரலாறு இங்கே சுருக்கமாகக் கொடுக்கப் படுகின்றது.

### முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாறு (கி.பி. 570–632)

முகம்மது (ஸல்) அவர்கள் கி.பி. 570 முததல் 632 வரையுள்ள 63 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார்கள்.

#### பிறப்பு

முகம்மது (ஸல்) அரேபிய நாட்டிலுள்ள மக்கா நகரில் கி.பி. 570ஆம் ஆண்டு பிறந்தார். அவரது தாயார் பெயர் ஆமினா. தந்தையார் பெயர் அப்துல்லா. நபிகள் நாயகம் அவர்கள் தாயின் வயிற்றில் ஆறுமாதக் குழந்தையாக இருக்கும்போது, தந்தையார் இறந்துவிட்டார். அதன்பின் ஆமினா மிகவும் துயரமுற்றிருந்தார். மூன்று மாதங்கள் கழித்து ஆமினா ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தார். குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டுப் பாட்டனார்

அப்துல் முத்தலிப் மிகவும் மகிழ்ச்சியுற்றார். அவர் குழந்தைக்கு முகம்மது என்று பெயர் சூட்டினார்.

தாயார் ஆமினாவிடம் முகம்மது (ஸல்) ஏழு நாள்கள் மட்டுமே தாய்ப்பால் அருந்தினார். கணவரின் மரணத்தால் துயரமுற்றிருந்த தாயார் ஆமினா, தம் குழந்தைக்குப் பாலூட்டும் திறனற்றவராய் இருந்தார். எனவே முகம்மது (ஸல்) அவர்களைப் பாலூட்டி வளர்க்க, ஹலீமா என்ற செவிலித்தாயிடம் ஒப்படைத்தார்கள். ஐந்து வயது வரை முகம்மது (ஸல்) ஹலீமாவின் வீட்டில் வளர்ந்தார். பிறகு அவர் தாயார் ஆமினாவிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரது ஆறாவது வயதில் தாயார் ஆமினா நோய்வாய்ப்பட்டு இறந்தார். பிறகு பாட்டனார் அப்துல் முத்தலிப் தம் பேரனை அன்புடன் வளர்த்து வந்தார். அப்படியிருக்கும்போது பாட்டனாரும் இறந்தார். அதன் பின் முகம்மதை (ஸல்) அவரது பெரிய தந்தை அபூதாலிப் வளர்த்தார். அபூதாலிப் முகம்மதை (ஸல்) பாசத்துடன் வளர்த்தார். ஆனால் ஏழையாய் இருந்ததால் முகம்மது (ஸல்) அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிப் படிக்க வைக்க முடியவில்லை. எனவே கல்வி கற்கும் வாய்ப்பு முகம்மது (ஸல்) அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே அவர்களுக்கு எழுத, படிக்கத் தெரியாது.

## இளமைப் பருவம்

முகம்மது (ஸல்) அவர்தம் பெரிய தந்தையுடன் வளர்ந்து வந்தார். அவருக்குப் பன்னிரண்டு வயதாகயிருந்த பொழுது அவரது பெரியப்பா சிரியா நாட்டில் வியாபாரம் செய்வதற்காக ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். அப்போது பெரியப்பாவுடன் சென்று அவருக்கு உதவி செய்ய முகம்மது (ஸல்) விரும்பினார். தமது விருப்பத்தைப் பெரியப்பாவிடம் கூறினார். பெரியப்பாவும் அதற்கு ஒத்துக் கொண்டார். இருவரும் சிரியா நாட்டிற்குச் சென்றனர். அங்கு வியாபாரம் செய்தார்கள். சிரியாவில் புஸ்ரா என்னும் இடத்தை அவர்கள் அடைந்தபோது, அங்கே புனஹ்ரா என்று பெயருள்ள ஒரு பாதிரியாரைச் சந்தித்தனர். அவர் கிறித்தவப் புனித நூலாகிய இஞ்சீலில் கூறப்பட்டிருந்த வருங்காலத் தீர்க்கதரிசியைப் பற்றிய சிந்தனையில் இருந்து கொண்டிருந்தார். அவர் அபூதாலியையும் முகம்மது (ஸல்) அவர்களையும் பார்த்தார். பிறகு முகம்மதுவை (ஸல்) உற்றுப்பார்த்தார். முகம்மதுவிடத்து (ஸல்) காணப்பட்ட சிறப்பு அம்சங்களைக் கவனித்தார். அவர்தான் 'வருங்காலத் தீர்க்கதரிசி' என்பதை அந்தப் பாதிரியார் தமக்குள் உறுதிப்படுத்திக் கொண்டார்.

பாதிரியார் சிறிது நேரத்திற்குப் பிறகு அபூதாலிப்பைப் பார்த்து, 'இந்தப் பையன் யார்' என்று கேட்டார். அபூதாலிப்பு 'என்னுடைய மகன்', என்று பதில் சொன்னார். அவர் சொன்னதைப் பாதிரியார் ஏற்றுக் கொள்ளவில்லை. பாதிரியார் 'இந்தப் பையனுடைய தந்தை இப்பொழுது உயிருடன் இருக்கமாட்டாரே' என்று கேட்டார். இதைக் கேட்ட அபூதாலிப், 'நீங்கள் கூறுவது உண்மைதான், இது என்னுடைய தம்பி மகன். இவன் பிறப்பதற்கு முன்பே தம்பி இறந்து விட்டார்' என்று சொன்னார். அப்போது அந்தப் பாதிரியர் 'ஐயா, இந்தப் பையனுக்கு மிகச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது. இவரைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் இருவரும் உடனே இங்கிருந்து புறப்பட்டு உங்கள் நாட்டுக்குச் செல்லுங்கள் என்று கூறினார். இதைக் கேட்ட அபூதாலிப் முகம்மது (ஸல்)வுடன் நாடு திரும்பினார்.

இந்த முறை நடத்திய வியாபாரத்தில் அபூதாலிப்புக்கு நிறைய இலாபம் கிடைத்தது. அபூதாலிப் முகம்மதை (ஸல்) மிகவும் நேசித்தார். அதேபோல, முகம்மதுவும் (ஸல்) தம்முடைய பெரிய தந்தையைப் பெரிதும் நேசித்தார். தம்மால் இயன்ற எல்லா உதவிகளையும் தம்முடைய பெரிய தந்தைக்குச் செய்து கொண்டிருந்தார். பெரிய தந்தையுடைய (பெரியப்பாவினுடைய) ஆடுகளை மக்காவுக்கு அருகிலுள்ள கராரீத் என்றும் மைதானத்தில் கொண்டு சென்று மேய்த்து வந்தார். ஆடுகளை மேய விட்டுவிட்டு முகம்மது (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையில் இருப்பார்.

முகம்மது (ஸல்) அவர்கள் சிறு வயதிலிருந்தே சத்தியம், நேர்மை ஆகியவற்றைக் கடைப்பிடித்து வந்தார். அதனால் அவரை 'அல் அமீன்', 'அல் அமீன்' என்று மக்கள் பாராட்டினார்கள். அல் அமீன் என்னும் அரபுச் சொல்லுக்கு 'நேர்மையாளன்' என்று பொருள். சத்தியம், நேர்மை ஆகிய நெறிகளைக் கடைபிடித்து வாழ்ந்து வந்ததால் முகம்மது (ஸல்) அவர்களுடைய பெயர் மக்கா நகரம் முழுவதும் பரவியது.

**திருமணம்**

மக்கா நகரில் கதீஜா என்ற ஒரு பெண்மணி வாழ்ந்து வந்தார். அவர் மக்கா நகரிலேயே பெரிய பணக்காரி. மேலும் அவர் ஒழுக்கத்திலும் பண்பிலும் மேம்பட்டவராகவும் விளங்கினார். அவர் இரண்டு தடவை திருமணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தியவர். அவருடைய கணவன்மார்கள் இறந்து போனார்கள். எனவே அவர் மீண்டும் திருமணம் செய்து கொள்ளாமல் விதவையாக இருந்து

வாழ்க்கை நடத்திவந்தார். தம்முடைய செல்வத்தையும், வியாபாரத்தையும் தாமே திறமையாக நிர்வகித்து வந்தார். அவர்கள் முகம்மது (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தையும், நேர்மையையும் பற்றி கேள்விப்பட்டார்கள். தன்னுடைய வியாபாரப் பொறுப்புகளைக் கவனிக்க முகம்மது (ஸல்) அவர்கள் மிகவும் பொருத்தமானவர் என்று கதீஜா எண்ணினார்கள். எனவே அவரை அழைத்து, தமது வணிகப் பிரதிநிதியாகயிருக்கச் சம்மதம் கேட்டார்கள். முகம்மது (ஸல்)அவர்களும், தனது பெரியப்பாவிடம் அனுமதி பெற்று, அதற்கு சம்மதித்தார்கள். எனவே கதீஜா முகம்மது நபி அவர்களைச் சிரியா நாட்டுக்கு வியாபாரம் செய்ய அனுப்பி வைத்தார்கள்.

முகம்மது (ஸல்) அவர்கள் நல்ல முறையில் வியாபாரம் செய்து நிறைய இலாபத்துடன் திரும்பி வந்தார்கள். அவரது திறமையும், நற்பண்புகளும் கதீஜாவைப் பெரிதும் கவர்ந்தன. எனவே முகம்மது (ஸல்) அவர்களைத் திருமணம் செய்ய விரும்பினார்கள். தமது விருப்பத்தைத் தன் உறவினர் ஒருவர் மூலமாக அவரிடம் தெரிவித்தார்கள். முகம்மது நபி அவர்கள் இந்த விசயத்தை தம்முடைய பெரியப்பாவிடம் கூறினார்கள். பெரியப்பாவும் ஒத்துக் கொண்டார். எனவே முகம்மது (ஸல்) அவர்களுக்கும் கதீஜாவுக்கும் திருமணம் நடந்தது. அப்போது முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு வயது இருபத்தைந்து. மனைவி கதீஜாவுக்கு வயது நாற்பது.

## இறைவனின் திருவருள் கிடைத்தது

கதீஜாவோடு இல்லற வாழ்க்கை நடத்தி வரவே, முகம்மது (ஸல்) அவர்கள் மக்காவுக்கு அருகிலுள்ள ஹிரா என்னும் மலைக் குகைக்கு அடிக்கடி சென்று இறைத் தியானத்தில் ஆழ்ந்திருப்பது வழக்கம். இப்படி பல வருடங்கள் கடந்தன. முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு வயது நாற்பது ஆகியது. அப்போது ஒரு நாள் ஹிரா மலைக் குகையில் அவர்கள் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். தியானத்திலிருந்து விழிக்கும்போது நேரம் இருட்டி விட்டது. இரவாகயிருந்ததால் முகம்மது நபி (ஸல்) அங்கேயே தங்கிவிட்டார். அப்போது ஜிப்ரீல் (அலை) என்னும் வானவர் தலைவர் முகம்மது நபி (ஸல்) அவர்களிடம் 'ஓதுவீராக' என்று சொன்னார். 'எனக்கு ஓதத் தெரியாது' என்று முகம்மது நபி (ஸல்) பதல் கூறினார். உடனே ஜிப்ரீல் முகம்மது நபி (ஸல்) அவர்களைக் கட்டித் தழுவிக்கொண்டு திரும்பவும் 'ஓதுவீராக' என்று சொன்னார். அப்போதும் முகம்மது நபி (ஸல்) அவர்கள் 'எனக்கு ஓதத் தெரியாது' என்று பதில் சொன்னார். இவ்வாறு மூன்று முறை நடந்தன பிறகு வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) ஓதினார்.

*எல்லாப் படைப்புகளையும் படைத்து அருளிய*
*ஆண்டவன் பெயரால் ஓதுவீராக!*
*அவனே மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான்!*
*ஓதுவீராக! உம்முடைய இறைவன் மேன்மையுடையவன்!*
*அவனே எழுதுகோல் மூலம் கற்பித்தான்!*
*மனிதன் அறியாதவற்றை யெல்லாம் மனிதனுக்குக் கற்றுக்*
*கொடுத்தான்!*

மேற்கண்ட வாக்கியங்களை ஜிப்ரீல் (அலை) சொன்னபடி முகம்மது நபி (ஸல்) ஓதி முடித்தார்கள். அவர் ஓதி முடித்த பின்னர் ஜிப்ரீல் போய்விட்டார். அதன்பின் முகம்மது தமது பழைய நிலையை அடைந்து எழுந்தார். மேலே குறிப்பிட்ட வாக்கியங்கள் முகம்மது நபி அவர்களின் உள்ளத்தில் ஆழப்பதிந்திருந்தன. ஒளிமயமான அந்த உருவம் (ஜிப்ரீல்) மறைந்ததும், முகம்மது நபி (ஸல்) அவர்களின் உள்ளத்தில் பீதியும் கவலையும் ஏற்பட்டன. சக்தி தம் முன்னே இப்படி தோற்றம் அளித்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் ஹிராக் குகையை விட்டு முகம்மது நபி (ஸல்) அவர்கள் வெளியே வந்தார். அது முதல் முகம்மது நபி (ஸல்) அவர்கள் 'இறைத்தூதர்' ஆகிவிட்டார்கள். அதன் பின் அவர் 'முகம்மது நபி' என்ற பெயரில் அறியப்பட்டார். மதிப்பாக 'நபிகள் நாயகம் முஹம்மது அவர்கள்' என்று அழைக்கப்படுகிறார்.

'ஜிப்ரீல்' என்பவரை ஜிப்ராயீல் (Angel Gibrayil) என்றும் கூறுவர். இவர் இறைவனிடமிருந்து, இறைத் தூதராக்கப்படுகின்ற முகம்மது (ஸல்) அவர்களுக்கு, செய்தி கொண்டு வந்த வானவர். வானவர்கள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள். இவர்கள் ஆண், பெண் எனும் பாலினப் பாகுபாடு அற்றவர்கள். இறைவனின் உத்தரவுகளைச் செய்து முடிப்பதும் இறைவனை வணங்குவதும் துதிப்பதுமே இவர்களின்பணி. இவர்களுக்கு ஊண், உறக்கம், உறவு, திருமணம், ஆசாபாசம், சந்ததி ஆகியவை கிடையா. 'ஓதுவது' என்பதற்கு வேதமோதுவது (வேதத்தைச் சொல்வது) என்று பொருள். 'நபி' என்றால் இறைத்தூதர் (Prophet) என்று பொருள்.

நபிகள்நாயகம் முகம்மது (ஸல்) வேகமாக அவரது வீட்டிற்குச் சென்றார். நடந்தவற்றையெல்லாம் தனது மனைவி கதீஜாவிடம் கூறினார். கதீஜா தம் கணவர் அவர்களுக்கு ஆறுதல் கூறித் தேற்றித் தைரியமூட்டினார்.

## நற்செய்திகளை மக்களுக்கு அறிவித்தல்

நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் தாம் உணர்ந்த நற்செய்திகளை மக்களுக்கு,

*இறைவன் ஒருவனே! அவன் உருவமற்றவன்,*
*அவனையே வணங்குங்கள்! முஹம்மது அல்லாஹுன்*
*தூதராவார், உலக மக்கள் அனைவரும் சகோதரர்களே!*
*சமத்துவமாக எல்லோரும் வாழ வேண்டும்*

என்று போதித்தார்கள்.

அவர்களின் போதனைகளை ஏற்று அவரது மனைவி கதீஜா தமது கணவர் நபிகள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்களுடைய புனித மார்க்கமான இசுலாத்தை முதன் முதலாகத் தழுவினார். அவரையடுத்துப் பலரும் இசுலாத்தைத் தழுவினார்கள். இவ்வாறு புனிதமார்க்கம் ஒன்று புனிதமான திட்டங்களுடனுடம் புதிய கொள்கைகளுடனும் அரபு நாட்டு மக்களிடையே பரவியது. பிறகு இது இசுலாமிய மார்க்கமாயிற்று. இதனை அன்று பலரும் வரவேற்றார்கள். அதேநேரத்தில் பலரும் எதிர்க்கவும் செய்தார்கள்.

## பகைவர்களின் எதிர்ப்பு

இசுலாத்தின் எழுச்சியைக் கண்டு மக்காவிலுள்ள குறைஷி இனத்து மக்கள் கோபம் கொண்டனர். நபிகள்நாயகம் (ஸல்) அவர்களும் குறைஷி இனத்தைச் சேர்ந்தவர். நபிகள்நாயகம் (ஸல்) அவர்களுடைய புதிய மார்க்கம் குறைஷிகளுடைய சுகபோக வாழ்க்கைக்கு இடைஞ்சலாகயிருந்ததால் அவர்கள் அவரைக் கொடுமைப்படுத்தினார்கள். மேலும் அவர்கள் பலரையும் தூண்டியும் விட்டார்கள். அத்தகைய மக்களுள் ஒரு கிழவியும் இருந்தாள். அவள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கல்லை எறிந்து வந்தாள். சில நேரங்களில் குப்பைகளையும், மண்ணையும் அவர் மீது வீசுவாள். அவர் நடந்துபோகும் இடங்களில் முள்ளைப் போட்டு வைப்பாள். ஆனால் நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு பொறுமையுடன் போய்க்கொண்டிருந்தார். சிறிது நாள்களுக்குப்பின் அந்தக் கிழவி உடல்நலமில்லாமல் படுத்து விட்டாள். பல நாள்களாக அந்தக் கிழவியைக் காணாததால் நபிகள் நாயகம் (ஸல்) அவளைப்பற்றி விசாரித்தார். கிழவி நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் விவரத்தை அறிந்தார். உடனே அந்தக் கிழவியைப் பார்க்க அவளது வீட்டிற்குச் சென்றார். அங்கே அந்தக் கிழவி நினைவிழந்து கிடப்பதைக் கண்டார். அவள் அருகில் சென்று அமர்ந்து, பாசத்துடன் அவளது தலையைத் தடவினார். கிழவி கண் விழித்துப் பார்த்தாள்.

கிழவிக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறினார். மேலும் அவள் குணமடையும் வரை அவளை அடிக்கடி சென்று பார்த்து அவளுக்கு உதவிகளையும் செய்து வந்தார். கிழவி மிகவும் வருந்திக் கண்ணீர் விட்டு உங்களுக்கா நான் தீங்கு செய்து வந்தேன் என்று கூறி அழுதாள்.

நபிகள்நாயகம் முகம்மது (ஸல்) அவர்கள் தொழுகை செய்யும் போது பகைவர்கள் அவர்கள் மீது ஒட்டகத்தின் குடலைப் போட்டார்கள். அவர்கள் செல்லும் வழிகளில் கல்லையும் முள்ளையும் பரப்பி வைத்தார்கள். தலையில் குப்பையைக் கொட்டினார்கள். இக்கொடுமைகளையெல்லாம் நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் பொறுமையோடு சகித்துக்கொண்டு தனது புனித மார்க்கமான இசுலாத்தைப் பரப்பப் பிரசாரம் செய்துகொண்டேயிருந்தார்கள். அப்படி யிருக்கும்போது ஒரு நாள் குறைஷிகுல பிரமுகர்கள். நபிகள்நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களைத் தங்களிடம் அழைத்து வர ஓர் ஆளை அனுப்பினார்கள். அந்த ஆள் நபிகள்நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களிடம் வந்து விவரத்தைக் கூறினார். விவரத்தைக் கேட்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியுற்றார்கள். தாம் பிரச்சாரம் செய்து வரும் புனித மார்க்கத்தைக் குறைஷி பிரமுகர்கள் அங்கீகரிக்கப் போகிறார்கள் என்று நினைத்தார்கள். எனவே அவர்கள் குறைஷி பிரமுகர்களிடம் சென்றார்கள். நிலைமை விபரீதமாகயிருந்தது. நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) மீது அவர்கள் பல பொய்க் குற்றச் சாட்டுகளைச் சுமத்தினார்கள். தன்னுடைய புனித மார்க்கமான இஸ்லாத்தை விட்டுவிட வேண்டுமென்று கூறினார்கள். அதற்காகத் தேவைக்கும் அதிகமான செல்வங்கள் தருவதாகவும், அரசர் ஆக்குவதாகவும் கூறினார்கள்.

நபிகள்நாயகம் முகம்மது (ஸல்) அவர்கள், செல்வம், அரசர் பதவி தமக்குத் தேவையில்லையென்றும், ஆண்டவன் தம்மை ஒரு தீர்க்கதரிசி (இறைத்தூதர்) ஆக்கியிருப்பதால் அவனுடைய கட்டளைப்படி நடப்பதுதான் தமது கடமை. என்றும் கூறினார். மேலும் அவர் ஆண்டவனுடைய கட்டளைகளை உங்களிடம் எடுத்துக்கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்றும் கூறினார்.

நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியது கூட்டத்தில் இருந்தவர்களுக்குப் பிடிக்காமல் அவரிடம் குதர்க்க வாதம் செய்தார்கள். அவர்கள் நபிகள் நாயகம் அவர்களைப் பார்த்து 'நீர் ஒரு தீர்க்கத்தரிசி என்றால் நீர்வளமில்லாத நமது நாட்டின் நீர்வளத்தைப் பெருக்க ஆண்டவனிடம் கேட்டு இந்த நாட்டில் ஆறுகளைப் பாயச் செய்யும். அப்போது நமது நாடு வளம் பெறும்.

மேலும் இந்த நாட்டில் குறுக்கே இருக்கும் மலைகளையெல்லாம் சமப்படுத்திப் போக்கு வரத்துக்கு வசதி செய்து தாரும். இவற்றைச் செய்து தந்தால் நாங்கள் உம்மை ஆண்டவருடைய தீர்க்க தரிசி என்று நம்புவோம். இல்லாவிட்டால் உம்மை நாங்கள் நம்பவே மாட்டோம்' என்று சொன்னார்கள். அதற்கு 'ஆண்டவன் தமக்கு அனுப்பி இருக்கும் செய்தியை மட்டும் அறிவிக்கத்தான் தமக்கு அதிகாரம் உண்டு. அந்தச் செய்தியை ஏற்று அதன்படி நீங்கள் நடந்தால் உங்களுக்கு நன்மை கிடைக்கும்', என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதில் கூறினார். உடனே குறைஷி தலைவர்கள் 'நீர் கூறுவதையெல்லாம் தெய்வவாக்கு என்று நாங்கள் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். இனி நீர் எங்களை அழிக்கும் வரையிலோ, அல்லது உம்மை நாங்கள் அழிக்கும் வரையிலோ போராட்டம் நடந்தே தீரும். நீர் கூறுவதை நம்பி இனி நாங்கள் மோசம் போகமாட்டோம்' என்று உறுதிபடக் கூறினார்கள். இப்படி அவர்கள் கூறியதும், மேலும் பேச விருப்பமில்லாமல், கூட்டத்தை விட்டு எழுந்து நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

குறைஷிகளில் அபூஜஹில், அபூலஹம், உத்பா போன்ற கொடியவர்கள் இசுலாத்தைப் பின்பற்றி வந்த இசுலாமியர்களைக் கொடுமைப்படுத்தி வந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறைஷிகளின் கூற்றுக்கு இணங்காததால் அபூஜஹில் அளவற்ற சீற்றம் கொண்டான். நபிகள் நாயகம் அவர்கள் கஅபாவுக்கு (ஆலயத்திற்கு) வரும்போது அவரைக் கல்லால் அடிக்க வேண்டுமென்று தீர்மானித்தான். அதை அவன் மற்றவர்களிடமும் தெரிவித்தான். மற்றவர்களும் அவனை ஊக்குவித்தார்கள்.

மறுதினம் ஒரு பெரிய கல்லைக் கையில் எடுத்துக் கொண்டு கஅபாவுக்குச் சென்று அபூஜஹில் காத்திருந்தான். நபிகள் நாயகம் வழக்கம்போல் தொழுகைக்காக கஅபாவுக்கு வந்து, குனிந்து ஆண்டவனைத் தொழுதார். குறைஷிகள் அபூஜஹில் என்ன செய்யப்போகிறான் என்பதைப் பார்க்க ஆவலுடன் கூடியிருந்தார்கள். அபூஜஹில் கல்லுடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நெருங்கினான். நெருங்கியவன் திடீரென்று பின்வாங்கினான். கையிலிருந்த கல்லைக்கீழே போட்டுவிட்டு அவன் நடுக்கத்துடன் குறைஷிகளிடம் ஓடிவந்தான். குறைஷிகள் பதட்டத்துடன் அவனிடம் 'ஏன்' என்று கேட்டார்கள். அவன், 'கல்லை எடுத்துக் கொண்டு நான் போனேன். மிகப்பெரிய ஆண் ஒட்டகம் ஒன்று வழியில் இடைமறித்து என்னைக் கடிக்க வந்தது. அதனுடைய தலையும், கழுத்தும், தோள்பட்டையும் பார்க்கப் பயங்கரமாய் இருந்தன.

இத்தகைய ஓர் ஆண் ஒட்டகத்தை நான் என்னுடைய வாழ்நாளில் இதுவரை பார்த்ததே இல்லை' என்று நடுக்கத்துடன் சொன்னான். குறைஷிகள் எதுவும் கூறாமல் நின்று விட்டனர். இருப்பினும் அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், இசுலாத்தைத் தழுவிய முசுலீம்களுக்கும் தொடர்ந்து பல இன்னல்களைக் கொடுத்துக் கொண்டேயிருந்தார்கள்.

## முசுலீம்கள் மக்காவிலிருந்து அபிசீனியா நாட்டுக்குச் சென்று தஞ்சமடைதல்

நபிகள்நாயகம் முகம்மது (ஸல்) அவர்களுடைய இசுலாத்தைத் தழுவிய மக்காவிலுள்ள முசுலீம்களுக்குக் குறைஷிகள் பல இன்னல்களைக் கொடுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்த நபிகள் நாயகம் பெரிதும் வருந்தினார். எனவே அவர்களை மக்காவிலிருந்து வெளியே பாதுகாப்பான ஒரு நாட்டிற்கு அனுப்பிவிட்டுத் தமது பிரச்சாரத்தைத் தொடரலாம் என்று நினைத்தார்கள். அப்போது அபிசீனிய நாட்டு அரசர் நீதியுடனும், நேர்மையுடனும் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார். எனவே மக்காவிலுள்ள முசுலீம்களை அபிசீனியா நாட்டிற்கு அனுப்பி வைப்பதுதான் நல்லதென்று நபிகள் நாயகம் அவர்கள் தீர்மானித்தார். அவர் மக்காவிலுள்ள முசுலீம்களை அழைத்து 'மக்காவில் நிலைமை சரிபட்டு வரும்வரை நீங்கள் அபிசீனியாவில் குடியேறி வாருங்கள்' என்று சொன்னார். இதற்கு முசுலீம்கள் சம்மதித்தார்கள். அவர்கள் கப்பலேறி அபிசீனியா நாடு போய்ச் சேர்ந்தார்கள். அந்த நாட்டு மன்னர் நஜ்ஜாஷி என்பவர் மக்காவிலிருந்து தமது நாட்டிற்கு வந்த முசுலீம்களிடம் கருணை காட்டி அவர்களைத் தமது நாட்டில் தங்க அனுமதித்தார். மூன்று மாதங்கள் வரை அவர்கள் அபிசீனியா நாட்டில் தங்கி இருந்தார்கள். பிறகு, மக்காவில் நிலைமை சீர்பட்டிருக்கும் என்று எண்ணி, அவர்கள் அபிசீனியாவிலிருந்து திரும்பி மக்காவுக்கு வந்தார்கள். ஆனால் மக்காவில் நிலைமை மாறவில்லை. முன்பு இருந்தது போலவேதான் இருந்தது. எனவே அவர்களிடம் மீண்டும் அபிசீனியாவுக்குத் திரும்பும்படி நபிகள் நாயகம் (ஸல்) சொன்னார். அதன்படி அவர்கள் மீண்டும் அபிசீனியாவில் குடியேறினார்கள்.

இதை அறிந்த குறைஷி பிரமுகர்கள் இரு தூதர்களை அபிசீனியா மன்னரைச் சந்திக்க அனுப்பினார்கள். அவர்கள் விலைமதிப்புள்ள அன்பளிப்புப் பொருள்களுடன் மன்னரைச் சந்திக்க அரண்மனைக்குச் சென்றார்கள். அவர்கள் முதலில் மன்னரின் தளபதிகளைச் சந்தித்துச் சில அன்பளிப்புப் பொருள்களை

அவர்களுக்கு வழங்கினார்கள். அவர்களும் அவற்றை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களிடம் தூதுவர்கள் 'எங்கள் நாட்டிலிருந்து சில மூடர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த மதத்தைப் பழித்துப் பேசிப் புறக்கணித்துவிட்டு, உங்கள் நட்டுக்கு வந்திருக்கிறார்கள். உங்கள் மதத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கமாட்டார்கள். நமக்கும் உங்களுக்கும் புரியாத ஒரு மதத்தை அதாவது 'இசுலாமிய மதம்' என்ற ஒரு புதிய மதத்தை அவர்கள் பின்பற்றி வருகிறார்கள். அதனால் என்ன நடக்குமோ என்று தெரியவில்லை. எனவே அவர்களை எங்களிடம் ஒப்படைக்க நீங்கள் மன்னருக்கு ஆலோசனை வழங்க வேண்டும்', என்று சொன்னார்கள்.

அதன் பின் தளபதிகள் தூதுவர்களை மன்னரிடம் அழைத்துச் சென்றார்கள். கொண்டு சென்றிருந்த வெகுமதிப் பொருள்களைத் தூதுவர்கள் மன்னர் முன் வைத்தார்கள். தூதுவர்கள் மன்னரிடம், 'எங்கள் நாட்டிலிருந்து இந்நாட்டிற்கு வந்து இசுலாத்தைப் பரப்பிவரும் முசுலீம்களை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று கேட்டார்கள். உடனே, ஏற்கெனவே உறுதியளித்திருந்தபடி தளபதிகளும் தூதுவர்களுக்குச் சாதகமாக மன்னரிடம் பேசினார்கள்.

குறைஷி தூதர்களும், தளபதிகளும் கூறியவற்றைக் கேட்ட மன்னருக்கு ஆத்திரம் வந்தது. மன்னர் சொன்னார், 'என்னை நம்பித் தஞ்சம் என வந்து என் நாட்டில் குடியேறி வசிப்பவர்களை நான் வெறியேற்ற விரும்பவில்லை. மற்ற நாடுகளுக்குச் செல்ல விரும்பாமல், அவர்கள் என் நாட்டுக்கு வந்திருப்பது, என் மீது அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது. எனவே அவர்களிடம் விசாரித்து விட்டு, அவர்களை மக்காவிற்குத் திருப்பி அனுப்பலாமா என்பது பற்றி யோசிக்கலாம்' என்றார்.

## அபிசீனிய மன்னர் மக்காவிலிருந்து வந்த முசுலீம்களிடம் விசாரணை நடத்தியது

அதன் பின், தம் நாட்டுக்கு வந்திருக்கும் முசுலீம்களைத் தம் அரச சபைக்கு அழைத்து வர மன்னர் உத்தரவிட்டார். அதன்படி முசுலீம்கள் அரசரிடம் வந்தார்கள். அரச சபையில் அரசரும் பாதிரிமார்களும் இருந்தார்கள். அரசர் (மன்னர்) முசுலீம்களைப் பார்த்து, 'நீங்கள் உங்கள் நாட்டைவிட்டு இந்த நாட்டிற்கு வரக்காரணம் என்ன என்பதை விளக்கமாகக் கூறுங்கள்', என்றார். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பெரியப்பா அபூதாலிப் அவர்களின் புதல்வன் ஜஹபர் முசுலீம்களின் சார்பாக

அரசரிடம் நிலைமைகளை விவரமாக எடுத்துரைத்தார். மேலும் அவர், நபிகள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்கள் ஓர் இறைத்தூதர் என்றும், அவரால் ஓதப்பட்ட இறை வசனங்களைப் பின்பற்றி வாழ எங்களை மக்காவிலுள்ள குறைஷிகள் அனுமதிக்கவில்லை யென்றும், எனவே நாங்கள் மக்காவிற்குப் போக விரும்பவில்லையென்றும் கூறினார். இவற்றைக்கேட்ட அரசர், இறைவனிடமிருந்து இறங்கிய இறைவசனங்களை நான் கேட்க விரும்புகிறேன், எனவே உங்களுக்குத் தெரிந்த வசனங்களை ஓதிக்காட்டுங்கள் என்றார். உடனே ஜஹபர் (குர்ஆனிலுள்ள) இறை வசனங்களில் சிலவற்றை ஓதத் தொடங்கினார். அவற்றை மன்னரும், பாதிரிமார்களும் செவிகொடுத்துக் கேட்டார்கள். அவர்களது உள்ளம் நெகிழ்ந்தது.

பிறகு மன்னர் குறைஷிகளிடமிருந்து வந்துள்ள இரு தூதர்களையும் பார்த்து, 'என்னை நம்பி என் நாட்டுக்கு வந்திருக்கும் இந்த முசுலீம்களை நான் உங்களிடம் ஒப்படைக்கமாட்டேன். நீங்கள் உங்கள் நாட்டுக்குத் திரும்பலாம்', என்றார். தூதர்கள் இருவரும் மக்காவுக்குத் திரும்பினர்.

### மக்காவில் குறைஷி தலைவர்களுடன் தூதுவர்கள் சந்திப்பு

அபிசீனிய மன்னரைச் சந்தித்துவிட்டுத் திரும்பிய இரு குறைஷி தூதுவர்களும் மக்காவில் குறைஷி தலைவர்களைச் சந்தித்தார்கள். அபிசீனிய 'மன்னர் சபையில்' நடந்த உரையாடல் விவரங்களைத் தூதுவர்கள் குறைஷி தலைவர்களிடம் விரிவாக எடுத்துரைத்தார்கள். குறைஷி தலைவர்கள் மிகவும் கோபம் கொண்டனர். அவர்கள் மக்காவிலுள்ள முசுலீம்களுக்கும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் மேலும் பல தொந்தரவுகளைக் கொடுத்தார்கள்.

### நபிகள்நாயகம் முகம்மதும் (ஸல்) முசுலீம்களும் அர்க்கம் என்பவருடைய வீட்டிற்குச் சென்றது

குறைஷிகளுடைய தொந்தரவு தாங்கமுடியாமலிருந்ததால் முகம்மது நபிகள்நாயகமும் அவருடன் உள்ள முசுலீம்களும் அவர்கள் வசித்து வந்த வீடுகளை விட்டுவிட்டுத் தற்காலிமாக வேறு இடத்திற்குச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே அவர்கள் வசித்து வந்த இடத்தை விட்டுவிட்டு அர்க்கம் என்பவருடைய வீட்டிற்குச் சென்றார்கள். அர்க்கம் என்பவர் மிகவும் கண்ணியமான பெரும் பணக்காரர். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மக்காவில் நல்ல மதிப்பும் செல்வாக்கும் உண்டு. அவர் ஆரம்பத்திலேயே இசுலாத்தைத் தழுவி நபிகள்நாயகம்

அவர்களுடன் கூடவே இருந்து வந்தவர். அவருக்கு மக்காவை விட்டுச் சிறிது தூரத்தில் உள்ள சபாக்குன்று மீது ஒரு மாளிகை இருந்தது. அந்த மாளிகையில் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களையும், அவர்களுடன் சென்ற முசுலீம்களையும் தங்க வைத்து அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்தார். இந்த மாளிகையில் தங்கி நபிகள் அவர்களும் மற்ற முசுலீம்களும் இறைவனைத் தொழுது வந்தார்கள். இந்த மாளிகையை 'இசுலாமிய மாளிகை' என்று இசுலாமியர்கள் கூறினார்கள். மக்கா செல்லும் யாத்ரீகர்கள் இந்த இசுலாமிய மாளிகையைத் தரிசித்து 'நபிகள்நாயகம் வாழ்ந்த மாளிகை' என்று கூறிப் போற்றி வருகிறார்கள்.

## உமர் இசுலாம் மார்க்கத்தைத் தழுவியது

நபிகள்நாயகம் முகம்மது (ஸல்) அவர்களைத் தீவிரமாக எதிர்த்தவர்களில் உமரும் ஒருவர். இவரது தங்கை பாத்திமாவும் அவரது கணவரும் இரகசியமாக இசுலாம் மார்க்கத்தைப் பின்பற்றி வந்தனர். இதை அறிந்த உமர் மிகவும் ஆத்திரமடைந்தார். அவர் தங்கை பாத்திமாவின் வீட்டிற்குச் சென்றார். அங்கே 'கப்பாப்' என்னும் இசுலாமியர் ஒருவர் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார். அவர் ஓதுவதைப் பாத்திமா எழுதிக் கொண்டிருந்தாள். அவள் கணவர் செயித் அதைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார். வீட்டிற்கு வெளியே உமர் வந்து கொண்டிருப்பதைக் கண்ட உடனே திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தவர் அதை நிறுத்திவிட்டு ஒரு சிறு அறைக்குள் சென்று ஒளிந்து கொண்டார். குர்ஆன் வசனங்கள் எழுதிக் கொண்டிருந்த ஏடுகளைப் பாத்திமா மடியில்வைத்து மறைத்துக் கொண்டாள். இவற்றையெல்லாம் கண்டுகொண்டே உமர் வீட்டினுள் நுழைந்தார். உமர் வீட்டினுள் நுழைந்ததும் தன் தங்கையையும், அவள் கணவரையும் பார்த்து 'நீங்கள் இருவரும் முகம்மதின் புதிய மார்க்கத்தில் சேர்ந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் பதில் சொல்லாமல் அரண்டு போய் நின்றனர். உடனே உமர் தம் தங்கையின் கணவர் மீது பாய்ந்தார். தன் கணவரைக் காப்பாற்றுவதற்காக பாத்திமா குறுக்கே பாய்ந்தாள். அப்போது உமரின் கத்தி பாத்திமாவின் முகத்தில் பட்டு முகத்திலிருந்து இரத்தம் கொட்டத் தொடங்கியது. பாத்திமாவுக்கும், அவரது கணவருக்கும் ஆத்திரத்தின் கூடிய தைரியம் வந்தது. அவர்கள் 'நாங்கள் முசுலீம்கள்தாம், ஆண்டவனையும், அவனுடைய திருத்தூதர் நபிகள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்களையும் நம்புகிறோம். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். எதற்கும் நாங்கள் அஞ்சமாட்டோம்', என்று துணிச்சலுடன் கூறினார்கள்.

தம் தங்கையின் முகத்தில் இரத்தம் கொட்டுவதைக் கண்ட உமருடைய மனம் மாறியது. கோபம் போய்க் கனிவும் பரிவும் வந்தன. அவர் பாத்திமாவைப் பார்த்து 'உன் மடியில் வைத்திருக்கும் ஏடுகளை என்னிடம் காட்டு, முகம்மது என்னதான் சொல்லியிருக்கிறார் என்பதை நானும் தெரிந்து கொள்கிறேன்' என்றார். 'உம்மை நம்பி நான் அதை உம்மிடம் தர மாட்டேன்' என்று சொன்னாள் பாத்திமா. 'நீ பயப்படாதே, நான் அதைப் படித்துவிட்டு, உன்னிடமே திரும்பித் தருகிறேன்' என்றார் உமர். இப்போது பாத்திமாவின் மனமும் மாறியது. அவள் ஏடுகளை மடியிலிருந்து எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு உமரிடம் 'பல தெய்வ வணக்கம் என்ற மாசு உங்களிடம் படிந்திருக்கிறது. அந்த மாசைப் போக்கிக் கொண்டு வாருங்கள், பிறகு தருகிறேன்', என்றாள். உமர் வெளியே சென்று கை, கால், முகம் முதலியவற்றைக் கழுவிக் கொண்டு திரும்பி வந்தார். பாத்திமா குர்ஆன் ஏடுகளை உமரிடம் கொடுத்தாள். உமர் அதை எடுத்து ஓதிப்பார்த்தார் (படித்துப்பார்த்தார்). அதிலிருந்த அழகான சொற்களையும், உயர்ந்த கருத்துக்களையும் கண்டு வியந்தார். இவற்றையெல்லாம் பக்கத்து அறையில் மறைவாக இருந்து கவனித்துக் கொண்டிருந்த கப்பாப் இனிப் பயமில்லையென்று தெரிந்து அறையை விட்டு வெளியே வந்தார். அப்போது உமர் அங்கிருந்தவர்களிடம் தான் இசுலாத்தைத் தழுவ விரும்புவதாகத் தெரிவித்து விட்டு வெளியே கிளம்பினார்.

உமர் நேராக முகம்மது நபி (ஸல்) அவர்களின் வீட்டிற்குச் சென்றார். அவர்கள் உமரை வரவேற்றார்கள். உமர், முகம்மது நபி (ஸல்) அவர்களைப் பார்த்து 'ஆண்டவருடைய திருத்தூதர் அவர்களே, ஆண்டவன் ஒருவனே என்பதையும், தாங்கள் அவனுடைய தூதர் என்பதையும் நான் நம்புகிறேன். ஒப்புக் கொள்கிறேன்', என்று சொன்னார்கள். இப்படி உமர் சொன்னதும் முகம்மது நபி (ஸல்) அவர்கள் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தார்கள். உமர் இசுலாம் மார்க்கத்தைத் தழுவினார். உமர் இசுலாம் மார்க்கத்தைத் தழுவியதும் மற்ற முசுலீம்கள் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்கள் 'அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்' என்று கூறி ஆண்டவனுக்குத் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

## அபூதாலிப் மற்றும் கதீஜா ஆகியோரின் மறைவு

நபிகள்நாயகம் (ஸல்) அவரகளுடைய ஐம்பதாவது வயதில் அவரது பெரியப்பா அபூதாலிப் காலமானார். அவர் காலமான மூன்றாவது நாள் நபிகள்நாயகத்தின் துணைவியார் கதீஜாவும் காலமானார். அவர்களின் மறைவு நபிகள்நாயகம் முகம்மது (ஸல்) அவர்களுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது.

கதீஜா—நபிகள் நாயகம் அவர்களுக்கு இரண்டு ஆண் மக்களும் நான்கு பெண்மக்களும் பிறந்ததில் இரண்டு ஆண் மக்களும் சிறுவயதிலேயே இறந்துபோனார்கள். நான்கு பெண் மக்களையும் கவனிப்பதற்காக, கதீஜா இறந்து இரண்டு மாதங்களுக்குப் பின் சௌதா என்பவரை முகம்மது நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்தார்கள்.

பல பிரச்சினைகளுக்கிடையிலும் முகம்மது நபி (ஸல்) அவர்கள் சலியாமல் தனது இசுலாமிய மார்க்கப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து கொண்டேயிருந்தார்கள். குறைஷிகள் மிகவும் சினம் கொண்டனர். அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொலை செய்யத் திட்டமிட்டு அதற்கான சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

## யஸ்ரிப்பில் இசுலாத்தைப் பரப்பத் தீர்மானித்தது

மதீனாவின் பழைய பெயர் யஸ்ரிப்பு. முகம்மது நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதுவர் ஆன பத்தாவது ஆண்டில் யஸ்ரிப்பைச் சேர்ந்த சிலர் மக்காவுக்கு வந்து இஸ்லாத்தைத் தழுவினர். அவர்கள் யஸ்ரிப்புக்குத் திரும்பியதும் நபித்துவத்தின் பெருமையையும், நபிகள் நாயகம் அவர்களின் பெருமையையும் அங்கே பரப்பினர். நபித்துவத்தின் பதினோராம் ஆண்டிலும் (நபிகள் நாயகம் அவர்கள் இறைத்தூதர் ஆன பதினோராவது ஆண்டு) யஸ்ரிப்புவைச் சேர்ந்த சிலர் இசுலாத்தில் சேர்ந்தனர். அவர்கள் எல்லோரும் முகம்மது நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து யஸ்ரிப்பில் இசுலாத்தைப் பரப்பத் தகுதியுடைய ஒருவரைத் தங்களோடு யஸ்ரிப்புக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். முகம்மது நபி (ஸல்) அவர்கள் தமக்கு நம்பிக்கைக்குரிய 'முஸ்அப்' என்பவரை அனுப்பி வைத்தார். முஸ்அப்பின் முயற்சியால் யஸ்ரிப்பில் இசுலாம் மார்க்கம் பரவியது. அதன்பின் யஸ்ரிப்பிலுள்ள முசுலிம்களுடன் முஸ்அப் மக்காவுக்கு வந்து நபிகள்நாயகம் அவர்களைச் சந்தித்தார். அப்போது யஸ்ரிப்பு முசுலிம்கள் முகம்மது நபி (ஸல்) அவர்களைத் தங்கள் நகருக்கு வந்து தங்களுடன் வசிக்குமாறு கேட்டார்கள். அவர்களின் விருப்பத்திற்கு இணங்கி நபிகள் நாயகம் அவர்கள் யஸ்ரிப்புக்குச் செல்லத் தீர்மானித்தார்.

## குறைஷிகளின் முற்றுகை

நபிகள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து யஸ்ரிப்புக்குச் செல்லயிருப்பதை அறிந்த குறைஷிகள் அவரை எப்படியாவது கொன்றுவிட வேண்டுமென்று முடிவு செய்தார்கள். ஒருநாள் இரவு நபிகள்நாயகம் அவர்களின் வீட்டைக் குறைஷிகள்

முற்றுகையிட்டார்கள். குறைஷிகளின் முற்றுகையை அறிந்த முகம்மது (ஸல்) அவர்கள் இரகசியமாக வீட்டை விட்டு வெளியேறித் தமது தோழர் அபூபக்கர் வீட்டிற்குச் சென்றார். இருவருமாக மக்காவின் தென்பக்கமுள்ள தௌர் என்னும் குகைக்குச் செல்லப் புறப்பட்டார்கள். அப்போது அபூபக்கர் தம்வசம் இருந்த சுமார் ஆறாயிரம் திர்ஹம்களையும் எடுத்துச் சென்றிருந்தார். திர்ஹம் என்பது அக்கால வெள்ளி நாணயம். இருவரும் மிகவும் சிரமப்பட்டுத் துன்பம் நிறைந்த வழிகளையெல்லாம் இருட்டு நேரத்தில் கடந்து தௌர் குகைக்கு வந்து சேர்ந்தார். அவர்கள் அந்தக் குகைக்கு வந்து உள்ளே தங்கினார். இவர்கள் அந்தக் குகையில் தங்கியிருக்கும் விவரம் அபூபக்கர் புதல்வர் அப்துல்லா, அவருடைய பணியாளர் அமீர், புதல்வி அஸ்மா ஆகிய மூவருக்கு மட்டும் தான் தெரியும். இந்தக் குகையில் மூன்று தினங்கள் வரை நபிகள் நாயகம் அவர்களும் அபூபக்கரும் தங்கியிருந்தார்கள். அபூபக்கரின் மகன் அப்துல்லா நாள்தோறும் வந்து மக்கா நிலைமைகளை அவர்களுக்குக் கூறுவார். தம் சகோதரி அஸ்மா சமைத்துத்தரும் உணவை எடுத்து வந்து இருவருக்கும் கொடுத்துவிட்டுத் திரும்புவார். அபூபக்கருடைய பணியாளர் ஆமீர் மாலை நேரத்தில் பிறருக்குத் தெரியாமல் ஆடுகளை ஓட்டி வந்து இருவருக்கும் போதிய அளவு பால் கறந்து கொடுப்பார். பிறகு ஒருவருக்கும் தெரியாமல் அங்கிருந்து திரும்புவார்.

முகம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்ய வந்தவர்கள் அவரது வீட்டின் உள்ளே நுழைந்து தேடினார்கள். அப்போது நபிகள் நாயகம் அவர்கள் பதிவாகப் படுத்திருக்கும் இடத்தில், பச்சை நிறப் போர்வை ஒன்றைப் போர்த்திக் கொண்டு ஒருவர் படுத்திருப்பதை அவர்கள் கண்டார்கள். அவர்கள் வெளியே வந்தார்கள். பிறகு, 'முகம்மது படுத்திருக்கிறார், காலையில் காரியத்தை முடித்து விடலாம்' என்று மாறி மாறிப் பேசிக் கொண்டார்கள். நேரம் விடிந்தது. நபிகள் நாயகம் அவர்களை வெட்டிக் கொலை செய்ய வீட்டினுள்ளே நுழைந்தார்கள். அப்போது பச்சைநிறப் போர்வையை நீக்கிக் கொண்டு அலி (ரலி) எழுந்து உட்கார்ந்தார். அலியைப் பார்த்ததும் கொலை செய்ய வந்தவர்கள் குழப்பமடைந்து திடுக்கிட்டார்கள். சிறுது நேரம் மலைத்து நின்றார்கள். பிறகு 'முகம்மது தப்பி விட்டார்! தப்பி விட்டார்!' என்று அலறினார்கள். அதன் பின் அவர்கள் அபூபக்கர் வீட்டிற்கு ஓடினார்கள். அங்கேயும் முகம்மது நபி (ஸல்) அவர்களைக் காணவில்லை. அபூபக்கரைத் தேடினார்கள். அவரையும் காணவில்லை. குறைஷிகள் மிகவும் ஆத்திரம் அடைந்தார்கள். முகம்மது நபி (ஸல்) அவர்களையும், அபூபக்கரையும் காணாததால் குறைஷிகள் ஒட்டகங்களிலும், குதிரைகளிலும் ஏறி அவர்களைப் பல இடங்களிலும் தேடினார்கள்.

ஒரு பிரிவினர், நபிகள் நாயகம் அவர்களும் அபூபக்கரும் தங்கியிருந்த தௌர் குகைக்கு வந்தார்கள். அவர்கள் தௌர் குகையின் முகவாயிலுக்கு வந்தார்கள். அங்கே பெரிய சிலந்தி வலை இருந்தது. மேலும் சிலந்திகள் வலை கட்டிக் கொண்டு மிருப்பதையும் பார்த்தார்கள். குகைக்கு உள்ளே ஆள் போயிருந்தால் சிலந்தி வலைகள் அற்றுப் போயிருக்கும், எனவே குகைக்குள் யாரும் இல்லையென்ற முடிவுக்கு வந்தார்கள். அவர்கள் அங்கிருந்து திரும்பிப் போனார்கள்.

பல இடங்களில் தேடியும் நபிகள்நாயகம் முகமது (ஸல்) அவர்களைக் குறைஷிகளால் கண்டு பிடிக்க முடியவில்லை. எனவே அவர்கள் ஒரு விளம்பரத்தை வெளியிட்டார்கள். 'முகம்மதுவைக் கண்டுபிடித்து மக்காவுக்குக் கொண்டு வந்து சேர்ப்பவர்களுக்கு நூறு பெண் ஒட்டகங்கள் பரிசாக வழங்கப்படும்'. இதுதான் அந்த விளம்பரம். அப்படி விளம்பரம் செய்யப்பட்டும் முகம்மது நபி (ஸல்) அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

## முகம்மது நபி (ஸல்) அவர்களும் அபூபக்கரும் யஸ்ரிப்புக்கு பயணம் செய்தல்

தௌர் குகையில் நபிகள்நாயகம் அவர்களும், அபூபக்கரும் தங்கியிருந்த மூன்று நாள்களுக்குப்பின் மக்காவில் நிலைமை ஓரளவு சீரடைந்தது. குறைஷிகள் நபிகள்நாயகம் அவர்களைத் தேடுவதை நிறுத்தி விட்டு, அவரவர் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார்கள். இந்த விவரங்களை அபூபக்கரின் மகன் அப்துல்லா மூலம் நபிகள் நாயகமும் அபூபக்கரும் தெரிந்து கொண்டார்கள். அவர்கள், இனி யஸ்ரிப்புக்குக் கிளம்பலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். எனவே, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அப்துல்லாவிடம் நபிகள்நாயகம் அவர்கள் சொன்னார்கள். அவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். மாலை நேரமானதும் 'கஸ்வா' என்னும் ஒட்டகத்தின் மீது நபிகள் நாயகம் அவர்களும், வழிகாட்டியும் ஏறினார்கள். மற்றொரு ஒட்டகத்தில் அபூபக்கரும் அவருடைய பணியாளர் ஆமீரும் ஏறினார்கள். மலையைவிட்டு ஒட்டகங்கள் கீழே இறங்கின. பதிவாகப் பிரயாணம் செய்யும் பாதையை விட்டுவிட்டு வேறொரு பாதை வழியாக யஸ்ரிப்புக்குப் புறப்பட்டார்கள். மறுநாள் காலையில் பனூகோஸா என்னும் கூட்டத்தார் வசிக்கும் இடத்தை அடைந்தார்கள். பிறகு அங்கிருந்து புறப்பட்டுக் கைபர் என்னும் இடத்தை அடைந்தார்கள். இனிக் குறைஷிகளால் ஆபத்து வராது என்று நினைத்து இயல்பான பாதைக்கு வந்து பிரயாணம் செய்தார்கள்.

முகம்மது நபி (ஸல்) அவர்கள் எங்குச் சென்றிருப்பார் என்பதை அறியமுடியாமல் மக்கா குறைஷிகள் குழம்பினார்கள்.

'முகம்மதுவைப் பிடித்துத் தருபவர்களுக்கு நூறு பெண் ஒட்டகங்களைப் பரிசாக வழங்கப்படும்' என்று விளம்பரம் செய்தார்கள். ஒரு சில குறைஷிகள், ஓர் இடத்தில் இருந்து கொண்டு, முகம்மது எங்குப் போயிருப்பார், என்று மாறி மாறிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு யாத்ரிகர் அங்கு வந்தார். அவர் குறைஷிகள் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தார். அவர், அவர்களிடம் 'நீங்கள் இப்போது யாரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்களோ, அவரும் வேறு இருவருமாக யஸ்ரிப்பை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதை நான் பார்த்தேன்' என்று சொன்னார். அதைக் கேட்ட குறைஷிகள் வியப்புடன் எங்கே என்று கேட்டார்கள். அதற்குள் குறைஷிகளில் ஒருவரான 'சுரகா' என்பவர் குறுக்கிட்டு 'அவர்கள் வேறு ஆடகளாக யிருக்கலாம். அவர்கள் தங்களுடைய காணாமல் போன ஒட்டகத்தைத் தேடிக் கண்டுபிடிக்கப் போனவர்களாகயிருக்கலாம்' என்று கூறி அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்பினார். யாத்ரீகர் சொன்ன செய்தியைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, தான் முகம்மதுவைப் பிடித்துக் குறைஷிகளிடம் ஒப்படைத்து நூறு பெண் ஒட்டகங்களையும் பரிசாகப் பெற்றுவிடலாமென்று, சுரகா தனக்குள் மனக்கோட்டை கட்டினான். அவன் உடனே எழுந்து நேராக அவனுடைய வீட்டிற்குச் சென்றான்.

சுரகா தம் குதிரை மீது ஏறி யாத்ரீகர் சொன்ன இடத்திற்கு கடலோரம் வழியாக தம் குதிரையை விரைந்து ஓட்டினார். முகம்மது நபி (ஸல்) அவர்களையும், அவர் உடன் சென்ற அபூபக்கரையும் மற்றும் இருவரையும் சுரகா தம் குதிரை மீதிருந்து பார்த்தார். அப்போது அவருடைய குதிரை கால் தடுமாறிக் கீழே விழுந்தது. சுரகா கீழேயிருந்து மெதுவாக எழுந்தார். தனித்து நின்று அந்த நான்கு பேரையும் சமாளிக்கத் தன்னால் இயலாது என்பதைக் சுரகா உணர்ந்தார். அப்போது அபூபக்கர் அவரை அடையாளம் கண்டு அவர் அருகேவந்தார். அவர் அபூபக்கரிடம் என்னை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுங்கள், நான் உங்களைப் பார்த்த விவரம் எதுவுமே மக்கா குறைஷிகளிடம் கூறமாட்டேன் என்று உறுதிபடச் சொன்னார். அதன் பின் அபூபக்கர் அவரை மக்காவுக்குத் திரும்பிச் செல்ல அனுமதித்தனர். சுரகாவும் வந்த வழியே மக்காவுக்குத் திரும்பிச் சென்றார்.

அதன்பின் முகம்மது நபி (ஸல்) அவர்களும், அவருடன் சென்றவர்களும் யஸ்ரிப்புக்குத் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். மூன்றாவது நாள் காலையில் அவர்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது ஒரு வியாபாரக் கூட்டம் அவர்களுக்கு எதிரே வந்து கொண்டிருந்தது. அவர்களைப் பார்த்ததும் முகம்மது நபி (ஸல்) அவர்களும், அபூபக்கரும் சற்றுத் தயக்கம் கொண்டார்கள்

ஆனால் பிறகு அபூபக்கர் மகிழ்ச்சியடைந்தார்கள். தன்னுடைய உறவினர் தல்ஹா என்பவர் சிரியாவில் வியாபாரம் செய்து விட்டுத் திரும்பி அந்த வியாபாரக் கூட்டத்தினருடன் வருவதைப் பார்த்தார்கள். தல்ஹாவும் அபூபக்கரைப் பார்த்தார். இருவரும் கட்டிப்பிடித்து உரையாடினார்கள். பிறகு, தல்ஹா தமது சரக்கு மூட்டையை அவிழ்த்தார். சிரியாவிலிருந்து தாம் வாங்கி வந்திருக்கும் வெள்ளை உடைகள் இரண்டை எடுத்து ஒன்றை முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கும், மற்றொன்றை அபூபக்கருக்கும் கொடுத்தார். அவற்றைக் கொண்டு அவர்கள் அழுக்கேறியிருந்த உடைகளை மாற்றிக் கொண்டார்கள். அப்போது தல்ஹா, 'உங்கள் வரவை யஸ்ரிப்பு மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்' என்ற ஒரு நல்ல செய்தியையும் அவர்களிடம் தெரிவித்தார். முகம்மது (ஸல்) அவர்களும் அபூபக்கரும் இந்தச்செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த தல்ஹா மக்காவுக்குப் புறப்பட்டார். முகம்மது நபி (ஸல்) அவர்களும், அவருடன் சென்றவர்களும் யஸ்ரிப்புக்குப் புறப்பட்டனர். யஸ்ரிப்பை அடைய இன்னும் இரண்டு நாள்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது.

இந்த நிலையில் நபிகள் நாயகம் அவர்கள் ஏறி வந்த ஒட்டகம் அல்–அர்ஜ் என்னும் இடத்தில் களைப்புற்றுப்படுத்துவிட்டது. இதைக் கண்ட அரபு ஒருவர், இப்னூர்ரிதா என்னும் தமது ஒட்டகத்தை நபிகள்நாயகம் அவர்களுக்குக் கொடுத்தார். மேலும், வழிகாட்டி ஒருவனையும் துணைக்கு அனுப்பி உதவினார்.

## ஹிஜ்ரி ஆண்டு தொடக்கம்

முகம்மது (ஸல்) அவர்களும், அபூபக்கரும், அவர்களுடன் பிரயாணம் செய்தவர்களும் யஸ்ரிப்பு அருகே வந்துவிட்டார்கள். யஸ்ரிப்புக்குத் தொட்டு வெளியே இருக்கும் குபா என்னும் தோட்டத்துக்குத் தங்களை அழைத்துப் போகும்படி வழிகாட்டியிடம் முகம்மது (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அதன்படி அவர்களை வழிகாட்டி குபா தோட்டத்துக்கு அழைத்துக் கொண்டு போனான்.

நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் வந்து விட்டார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தி நகர் முழுவதும் வெகு விரைவில் பரவி விட்டது. நபிகள்நாயகம் (ஸல்) அவர்களைத் தரிசிக்கும் பொருட்டு மக்கள் திரள் திரளாகக் குபா தோட்டத்திற்கு வந்தார்கள். வந்தவர்கள் அனைவரையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்முகத்துடன் வரவேற்றார்.

அதன்பின் அவர்கள் யஸ்ரிப்புக்குச் சென்றார்கள். நபிகள் நாயகம் (ஸல்) யஸ்ரிப்பு நகருக்கு (மதினாவுக்கு)ச் சென்ற நாளை வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளாக முசுலீம்கள் கருதினர். எனவே

அந்த நாளை அடிப்படையாகக்கொண்டு முசுலீம் ஆண்டான 'ஹிஜ்ரி' தொடங்கப்பட்டது. கிறித்தவ வருடக் கணக்குப்படி கி.பி. 622 ஜுலை 16ஆம் நாள் ஹிஜ்ரி வருடம் தொடங்கப்பட்டிருக்கிறது.

## யஸ்ரிப்பு நகருக்கு மதீனா என்ற பெயர் வந்தது

நபிகள்நாயகம் (ஸல்) யஸ்ரிப்பு நகருக்குச் சென்ற நாள் முதல் யஸ்ரிப்பு நகரம் 'மதீனத்துன்னபி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது. 'மதீனத்துன்னபி' என்றால் 'திரு நபியின் நகரம்' என்று பொருள். நபிகள்நாயகம் (ஸல்) யஸ்ரிப்பு நகருக்குச் சென்ற நாள் முதல், அந்நகரம் 'மதீனா நகரம்' என்று அழைக்கப்பட்டு வருகிறது.

## முகம்மது (ஸல்) அவர்களுடைய மதீனா வாழ்க்கை

மதீனாவிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அணுகித் தங்கள் இல்லங்களுக்கு வருமாறு அழைத்தார்கள். அப்போது அவர்களைப் பார்த்து 'நான் யார் இல்லத்தில் தங்க வேண்டுமென்பது ஆண்டவனின் திருவுளத்தைப் பொறுத்தது. நான் ஏறி வரும் ஒட்டகத்தை நான் அதன் போக்கில் விட்டு விடுகிறேன். அது எந்த இடத்தில் போய் நிற்கிறதோ, அந்த இடத்தில் நான் தங்குவதையே ஆண்டவன் விரும்புகிறான் என்று கருதி, அந்த இடத்தில் நான் தங்குவேன்' என்று கூறினார். அவர் கூறியது போல் ஒட்டகம் அதன் போக்கில் போய், பெரிய தளமும் ஈச்ச மரங்கள் சிலவற்றைக் கொண்டதுமான இடத்தில் சென்று படுத்தது. அந்த இடத்தின் பக்கத்தல் அபூ ஐயூப் என்பவருடைய வீடு இருந்தது. அந்த வீட்டிலிருந்து வந்த அபூ ஐயூப்பும், அந்த ஊரைச் சேர்ந்தவர்களும் மகிழ்ச்சியோடு வந்து முகம்மது (ஸல்) அவர்களை வரவேற்று உபசரித்தார்கள்.

தமது ஒட்டகம் தன்னிச்சையாகப் படுத்த இடத்தில் ஒரு பள்ளிவாசல் கட்ட முகம்மது (ஸல்) அவர்கள் தீர்மானித்தார்கள். அதன்படி அதே இடத்தில் அங்கிருந்த மக்களின் உதவியுடன் ஒரு பள்ளிவாசல் கட்டும் பணி தொடங்கப்பட்டது. பள்ளிவாசல் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஜைத், அபூராபிஃ என்னும் இருவரையும் இரண்டு ஒட்டகங்களில் மக்காவுக்கு அனுப்பி வைத்துத் தம் மனைவி மக்களையும், அபூபக்கரின் மனைவி மக்களையும் மதீனாவுக்கு அழைத்துவர நபிகள்நாயகம் (ஸல்) ஏற்பாடு செய்தார். அதன்படி அவர்கள் மக்காவுக்குச் சென்று எவ்வித இடையூறுகளும் ஏற்படாமல் அவர்களை மதீனா நகருக்கு அழைத்து வந்தார்கள். அவர்களும் அபூ ஐயூப்பின் வீட்டில் தற்காலிகமாகத் தங்கினார்கள்.

பள்ளிவாசலின் கீழ்ப் பகுதியில், முகம்மது நபி (ஸல்) அவர்களுடையவும், அபூபக்கர் அவர்களுடையவும் குடும்பத்தினர்

வசிப்பதற்கென இரண்டு குடிசைகளும் கட்டப்பட்டன. அவை கட்டி முடிக்கப்பட்ட பின்பு, இரு குடும்பத்தினரும் அவ்விரு குடிசைகளிலும் வந்து வசித்தார்கள்.

பள்ளிவாசலும் கட்டி முடிக்கப்பட்டது. அந்தப் பள்ளி வாசலினுடைய அமைப்பையும் தோற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டுதான் பிற்காலத்தில் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன என்று கூறப்படுகிறது.

## மதீனாவில் சகோதரத்துவம்

மதீனாவில் பள்ளிவாசல் கட்டி முடித்ததும் மக்காவிலிருந்து பெரும்பாலான முசுலீம் குடும்பத்தினர் மதீனாவுக்கு வந்து விட்டனர். மதீனாவிலிருந்த அன்சாரிகள் மக்காவிலிருந்து வந்த முசுலீம் களுக்குப் பெரும் ஆதரவு கொடுத்தார்கள். நாளடைவில் மதீனாவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

பொருளாதார நெருக்கடி காரணமாக, மக்காவிலிருந்து வந்த முசுலீம்களிடையேயும், அன்சாரிகளிடையேயும் எந்தவிதப் பிரச்சினைகளும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று முகம்மது நபி (ஸல்) அவர்கள் உறுதி பூண்டார்கள். எனவே அவர்கள் அன்சாரிகளையும் முசுலீம்களையும் ஒன்று கூட்டி ஒரு திட்டத்தை அவர்களிடம் கூறினார்கள். அதாவது ஒவ்வொரு அன்சாரியும் ஒவ்வொரு முசுலீமையும் தன் உடன்பிறந்த சகோதரனாகக் கருத வேண்டும். அதைப்போல் ஒவ்வொரு முசுலீமும் ஒவ்வொரு அன்சாரியையும் தன் சொந்த சகோதரனாகக் கருதவேண்டும். அன்சாரிகளும் முசுலீம் களும் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்'. அதன்படி முதலில் கீழ்க்கண்டவர்கள் தங்களை சகோதரர்களாகப் பிணைத்துக் கொண்டார்கள்.

1. முகம்மது நபி (ஸல்) அவர்களும் அலீயும்
2. ஹம்சாவும் ஜைதும்
3. அபூபக்கரும் காரிஜா என்னும் அன்சாரியும்
4. உமறும் இத்பான் என்னும் அன்சாரியும்
5. உத்மானும் அவுஸ் என்னும் அன்சாரியும்

உத்தேசம் ஐம்பது அன்சாரிகளும் முஸ்லீம்களும் சகோதரத்துவத்தால் தம்மை இப்படி பிணைத்துக் கொண்டார்கள்.

## மதீனாவிலுள்ள யூதர்களுடன் உடன்படிக்கை

மதினாவில் அன்சாரிகளைத் தவிர யூதர்களும் இருந்தார்கள். அவர்கள் தங்களது யூதமதக் கோட்பாடுகளுக்கு

உட்பட்டு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். மதீனாவிலுள்ள முசுலீம்கள் இசுலாமிய மதத்தைத் தழுவி வாழ்ந்து கொண்டிருந்தார்கள். யூதர்களுக்கும் முசுலீம்களுக்குமிடையே இருந்து வந்த மத நல்லிணக்கத்திற்கு எவ்விதத் தீங்கும் ஏற்படாமல் அது தொடர வேண்டுமென்று முகம்மது நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். யூதர்களுக்கும் முசுலீம் களுக்குமிடையே மதரீதியான சில ஒற்றுமைகளும் இருந்தன. அவை

1. யூதர்களின் ஆலய அமைப்பும் முசுலீம்களின் பள்ளி வாசல் அமைப்பும் கிட்டத்தட்ட ஒன்று போலிருந்தன.

2. தொழுகைக்கு முன் கை, கால், முகம் முதலியவற்றைச் சுத்தம் செய்யும் பழக்கம் யூதர்களிடையே உண்டு. அதே போன்ற பழக்கம் முசுலீம்களிடையேயும் உண்டு.

3. யூதர்களிடையே கூட்டுப் பிரார்த்தனைப் பழக்கம் உண்டு. அதே போன்று முசுலீம்களிடையேயும் கூட்டுத் தொழுகைப் பழக்கம் உண்டு.

4. யூதர்கள் நோன்பு இருக்கும் பழக்கமுடையவர்கள். முசுலீம்களும் நோன்பு இருக்கும் பழக்கமுடையவர்கள்.

யூதர்களுக்கும் முசுலீம்களுக்கும் இருந்து வந்த மத நல்லிணக்கம் தொடர முகம்மது நபி (ஸல்) உடன்படிக்கையைச் செய்தார். அதன்படி யூதர்கள் அவர்களுடைய யூத மதத்தைப் பின்பற்றுவது என்றும், முஸ்லீம்கள் அவர்களுடைய இசுலாமிய மதத்தை பின்பற்றுவது என்றும் உறுதி செய்யப்பட்டது. மேலும் மாறி மாறிச் சச்சரவுகளுக்கு இடம்கொடுக்காமல் வாழ்வது என்றும், ஒருவருடைய காரியத்தில் மற்றவர் வலிந்து வந்து தலையிடக் கூடாது என்றும், பிற கூட்டத்தினர் முசுலீம்களைத் தாக்கினால் யூதர்கள் முசுலீம்களுக்கு உதவுவது என்றும், யூதர்கள் தாக்கப்பட்டால் யூதர்களுக்கு முசுலீம்கள் உதவுவது எனவும், மதீனா நகரம் தாக்கப்பட்டால் இருவரும் சேர்ந்து அதைக் காப்பது என்றும் உள்ள நிபந்தனைகளை யூதர்களும் முசுலீம்களும் ஏற்றுக் கொண்டனர்.

## முகம்மது நபி (ஸல்) மதீனாவின் மன்னர் ஆனது

முகம்மது நபி (ஸல்) மதீனாவுக்கு வந்து பல மாதங்கள் ஆகி விட்டன. அவரது செல்வாக்கு நாளுக்கு நாள் கூடிக் கொண்டேயிருந்தது.

முகம்மது நபி (ஸல்) மதீனாவுக்குப் போனது குறித்துத் தொடக்கத்தில் மக்கா குறைஷிகள் சிறிது பரபரப்பு அடைந்தார்கள்.

ஆனால் அவர்களது வேகம் வர வரக் குறைந்து அவர்கள் அவர்களது வியாபாரத்தில் கவனம் செலுத்தினார்கள்.

நாளடைவில் மக்கா நகரத்திலுள்ள முசுலீம்கள் எல்லாம் மதீனாவில் வந்து குடியேறினார்கள். அபிசீனியாவிற்குச் சென்றிருந்த முசுலீம்களும் மதீனாவுக்கு வந்தார்கள். மக்காவிலிந்து வந்தவர்களுக்கும், அபிசீனியாவிலிருந்து வந்தவர்களுக்கும் மதீனா மக்கள் உதவிகள் செய்தார்கள். முகம்மது நபி (ஸல்) எல்லோரையும் அரவணைத்து, அவர்களிடம் அன்புடன் பழகினார். அதனால் அவர்களுடைய மதிப்பு, மரியாதை, செல்வாக்கு முதலியன மதீனாவில் அதிகரித்தன. அங்குள்ள மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு மனதாக முகம்மது நபி (ஸல்) அவர்களை மதீனாவின் உயர்ந்த அந்தஸ்துள்ள 'தலைவராக' ஆக்கினார்கள். அவரது ஆட்சிக் காலத்தில் மக்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தினர் போல் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். நபிகள்நாயகம் (ஸல்) தமது தோழர்களை மதீனாவுக்கு வெளியே பல நாடுகளுக்கும் அனுப்பி இசுலாம் மதத்தைப் பரவச் செய்தார்கள். அது மேலும் மேலும் வளர்ந்து கொண்டேயிருந்தது.

### குறைஷிகள் முசுலீம் இடையே நடந்த போர்

இசுலாம் மதத்தினுடைய வளர்ச்சியை மக்கா நகரத்துக் குறைஷிகளால் பார்த்து பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் மதீனாவில் வாழும் முசுலீம்களை எப்படியாவது தீர்த்துக்கட்ட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். எனவே அவர்கள் மதீனா மீது அடிக்கடி தாக்குதல்களை நடத்தினார்கள். மதீனா மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தற்காப்புப் போர் புரிய வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது. எனவே கருணைக் கடலாக விளங்கிய முகம்மது நபி (ஸல்) அவர்களும், முசுலீம்களைப் பாதுகாப்பதற்காகப் போரில் கலந்து கொண்டார்கள். இந்தப் போர் கி.பி. 624 பத்ரு என்னும் பள்ளத்தாக்கில் நடந்தது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட குறைஷிகள் இத்தாக்குதலில் ஈடுபட்டார்கள். ஆனால் அவர்களை எதிர்கொண்ட முசுலீம்கள் 313 பேர் மட்டுமே இவர்கள் மன உறுதியிடனும், ஒற்றுமையுடனும் இறைபக்தியுடனும் போராடிப் 'பத்ரு போரில்' வெற்றி பெற்றார்கள்.

பத்ரு போரில் தோல்வியுற்ற குறைஷிகள் மிகவும் ஆத்திரமடைந்தார்கள். அவர்கள் மறு ஆண்டிலும் போர் தொடுத்தார்கள். அந்தப் போர் உஹத் என்னும் மலை அடிவாரத்தில் நடைபெற்றது. அப்போருக்கு 'உஹத் போர்' என்று பெயர். இப்போரிலும் முசுலீம்கள் வெற்றி பெற்றார்கள்.

இரு போர்களிலும் தோல்வியைக் கண்ட குறைஷிகள், இருபத்து நான்காயிரம் வீரர்களுடன் மதீனாவுக்குத் திரண்டு வந்தார்கள். அப்போது, குறைஷிகள் மதீனாவிற்கு உள்ளே வராதபடி மதீனாவைச் சுற்றி முஸ்லீம்கள் அகழி தோண்டினார்கள், குறைஷிகள் அகழிக்கு வெளியே முற்றுகையிட்டனர். மூவாயிரம் முசுலீம் வீரர்கள் குறைஷிகளை எதிர்த்தார்கள். குறைஷிகளின் முற்றுகை சில வாரங்கள் மட்டுமே நீடித்தது. உணவுப் பஞ்சத்தாலும், கடும் குளிராலும் குறைஷிகளின் படைகள் சிதறின. இறுதியில் அவர்கள் அனைவரும் முற்றுகையைக் கைவிட்டுப் பின்வாங்கிச் சென்றனர்.

இவ்வாறு மூன்று போர்களிலும் முசுலீம்களே வெற்றி பெற்றார்கள்.

## முகம்மது நபி (ஸல்) மதீனாவிலிருந்து மக்காவிலுள்ள கஅபாவைத் தரிசிக்கப் புறப்பட்டது

நபிகள்நாயகம் முகம்மது (ஸல்) மதீனாவில் குடியேறி ஆறு ஆண்டுகள் ஆனபோது மக்காவிலுள்ள புனித ஆலயமான 'கஅபா'வைத் தரிசிக்க விரும்பினார்கள். அதற்காக அவர்கள் ஆயிரத்து நூறு முசுலீம்களுடன் மதீனாவிலிருந்து மக்காவிற்குப் புறப்பட்டார்கள். அவர்கள் போருக்கு வருவதாக நினைத்துக் குறைஷிகள் அவரை 'ஹுதைபிய்யா' என்னும் இடத்தில் தடுத்து நிறுத்தினார்கள். அப்போது முகம்மதுநபி (ஸல்) 'நாங்கள் 'கஅபா'வைத் தரிசிப்பதற்காக மட்டுமே வருகின்றோம், போருக்காக அல்ல' என்று அவர்களிடம் கூறினார். அதன்பின் இரு தரப்பினருக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சுவார்த்தையின் முடிவில் இரு தரப்பினரும் சேர்ந்து ஓர் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள ஒத்துக் கொண்டார்கள். அதன்படி சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது. உடன்படிக்கையின்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அவர்களுடன் வந்த முசுலீம்களும் இந்த ஆண்டு திரும்பிவிட வேண்டுமென்றும் அடுத்த ஆண்டு 'கபா'வைத் தரிசிப்பது என்றும், இரு தரப்பினரும் பத்து ஆண்டுகள் போர் செய்யக் கூடாது என்றும் முடிவெடுக்கப்பட்டது. இந்த உடன்படிக்கைக்கு 'ஹுதைபிய்யா உடன்படிக்கை' என்று பெயர். முகம்மது நபி (ஸல்) அவர்களும், அவர்களுடன் சென்றவர்களும் மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள்.

ஹுதைபிய்யா உடன்படிக்கையின்படி மக்காவிலுள்ள குறைஷிகள் நடந்து கொள்ளவில்லை. அவர்கள் முசுலீம்களைப் புனித கஅபா–விலேயே கொலை செய்ய ஆரம்பித்தார்கள். முஸ்லீம்களுக்கு ஆதரவாக இருந்த 'குஸாஃ' என்னும் கூட்டத்தினரை

நசுக்கினார்கள். குஸாஃ கூட்டத்தினர் மதீனாவுக்கு வந்து முகம்மது நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டனர். அவர்கள் அவர்களைச் சமாதானப்படுத்தினார்கள். குறைஷிகள் ஹுதைபிய்யா உடன் படிக்கையை மீறிச் செயல்படுவதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டுமென்று முகம்மது (ஸல்) அவர்கள் மனதில் உறுதிகொண்டார். அதற்காகக் குறைஷிகளிடம் போர் தொடுத்து முசுலீம்களைக் காப்பாற்ற வேண்டுமென்று முடிவெடுத்தார்கள். அதன்படி முகம்மது நபி (ஸல்) அவர்கள் பத்தாயிரம் முஸ்லீம்களுடன் மக்கா நகருக்குள் நுழைந்தார். அவர்களது வருகையைக் கண்ட குறைஷிகள் பயந்து ஓடினர். முகம்மது நபி (ஸல்) அவர்களும், அவர்களுடன் சென்ற முஸ்லீம்களும் மக்காவிற்குள் வந்தார்கள். கடும் துன்பங்களைக் கொடுத்த பகைவர்கள் அனைவருக்கும் முகம்மது நபி (ஸல்) அவர்கள் 'பொது மன்னிப்பு' வழங்கினார். மேலும், அவர்களின் நல்வாழ்வுக்காக இறைவனிடம் வேண்டினார்.

மக்காவில் 'கஅபா' ஆலயத்திலிருந்த சிலைகளை முகம்மது நபி (ஸல்) அவர்கள் அகற்றினார்கள். அவர்கள் 'ஏக இறை வணக்கத்தை'த் தொடங்கினார்கள். மக்காவும் கஅபா–வும் முஸ்லீம்களுடைய ஆதிக்கத்தில் வந்தன.

மக்கா நகரம் முசுலீம்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்த பின்னர்ப் பெரும்பாலான குறைஷிகள் முகம்மது நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து இசுலாம் மதத்தில் சேர்ந்தார்கள். மக்கா வெற்றிக்குப்பின் முகம்மது நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து திரும்பவும் மதீனாவுக்குச் சென்றார்கள்.

### ஹஜ் யாத்திரை

'ஹஜ்' என்பது மக்காவிலுள்ள புனித 'கஅபா' ஆலயத்தைத் தரிசித்து நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு வழிபாடு ஆகும். இது இசுலாத்தின் அடிப்படை ஐந்து கடமைகளில் ஒன்றாகும். அதாவது, தம் வாழ்நாளில் ஒரு முறை மக்காவுக்கு ஹஜ் பயணம் (புனித யாத்திரை) சென்று வரவேண்டும் என்பதாகும்.

அரபு நாட்டு மக்கள் மக்கா வந்து கஅபாவிலுள்ள விக்கிரங்களை வழிபட்டுவிட்டு ஊர் திரும்புவது வழக்கமாக இருந்து வந்தது.

இசுலாத்துக்குப் புறம்பாகக் கஅபா–வில் நடக்கும் சடங்குகளை நீக்க வேண்டுமென்று முகம்மது நபி (ஸல்) அவர்கள் தீர்மானித்தார். அதற்காக அவர் அபூபக்கர் அவர்களை மதீனாவிலிருந்து மக்காவுக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்களுடன் சுமார் முந்நூறு முசுலீம்கள்

ஹஜ் யாத்திரை செய்தார்கள். அவர்கள் மக்காவை அடைந்து கஅபாவிலிருந்த விக்கிரகங்களை அகற்றிவிட்டு ஏகதெய்வ நம்பிக்கையுடன் அல்லாஹுவை வணங்கி ஹஜ் யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பினர். அப்போது சூரா பறாஅத் என்னும் இறை அத்தியாயம் இறங்கியது. அதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அலீ (சலி) அவர்கள் மூலம் மக்களுக்கு அறிவித்தார்கள்.

ஓர் ஆண்டு கடந்து முகம்மது நபி (ஸல்) மதீனாவிலிருந்து மக்காவுக்கு ஹஜ் பயணம் செய்தார்கள். அவருடன் ஏராளமான முசுலீம்களும் சென்றார்கள். மதீனாவிலிருந்து புறப்பட்ட ஒன்பதாவது நாள் மக்காவை அடைந்தார்கள். பிறகு முறைப்படி செய்து முடிக்க வேண்டிய சடங்குகளை எல்லாம் செய்து ஹஜ்ஜை முடித்தார்கள். அதன்பின் மக்காவைவிட்டு மதீனாவுக்குப் புறப்பட்டார்கள்.

## நபிகள்நாயகத்தின் அபராத் சொற்பொழிவு

ஹஜ் பயணத்தை முடித்து விட்டு மக்காவிலிருந்து மதீனா வரும் வழியில் அபராத் என்னும் மைதானத்தில் முகம்மது (ஸல்) அவர்கள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அங்கு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் திரண்டிருந்தனர். அவர்களைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் 'அடுத்து வரும் ஆண்டில் இதே இடத்தில் உங்களை நான் மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்குமென்று தோன்றவில்லை' என்று கூறினார். மேலும், அவர் அங்குக் கூடியிருந்தவர்களுக்குப் பல உபதேசங்களையும் கொடுத்தார். அவற்றில் சில:

> *இன்று உங்கள் பொருளும் உயிரும் பாதுகாப்புடன் இருப்பதைப் போலவே, உங்கள் வாழ்நாள் முழுவதும் இருக்க ஆண்டவன் அருள் புரியட்டும். நீங்கள் ஆண்டவனைச் சந்திக்க நேரும்போது, நீங்கள் செய்தவற்றைப்பற்றி ஆண்டவன் உங்களை விசாரிப்பான். யாராவது அடுத்தவர் பொருளை எடுத்திருந்தால் அதை உரியவரிடம் சேர்த்து விடுங்கள். வட்டி வாங்குவது கூடாது. பழிக்குப்பழி வாங்கும் வழக்கத்தை விட்டுவிடுங்கள். நீங்கள் தவறு செய்யாமலிருந்தால் பிறரும் உங்களுக்குத் தவறு செய்யமாட்டார்கள். ஆண்டவன் கட்டளையிட்டிருப்பவற்றையெல்லாம் நீங்கள் தவறாமல் செய்யுங்கள். அவன் புறக்கணித்திருப்பதை நீங்களும் புறக்கணித்துவிடுங்கள்.*
>
> *உங்கள் மனைவிமார்களிடம் உங்களுக்கு உரிமையுண்டு. அதேபோல் உங்கள் மனைவியர்களுக்கும்*

*உங்கள் மீது உரிமையுண்டு. கற்பொழுக்கம் குன்றாது நடக்கும் மனைவியைக் காப்பாற்றக் கணவன் கடமைப்பட்டவன். மனைவிக்கு உணவு, உடை முதலியவற்றைக் கொடுத்து அவர்களிடம் அன்புடன் இருந்து அவர்களைக் காப்பாற்றுங்கள்.*

*ஆண்டவனுடைய திருகுர்ஆனும், அவனுடைய தூதரின் ஒழுக்கமும் உங்களுக்கு இனி வழிகாட்டியாக இருக்கும். ஒவ்வொரு முசுலீமும் இன்னொரு முசுலீமைத் தன் சொந்த சகோதரன் போல் நேசிக்க வேண்டும். சகோதரன் மனமுவந்து விரும்பித் தருவதை மட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.*

பிறகு முகம்மது (ஸல்) அவர்கள் அங்கிருந்து மதீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

**முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய கடைசிக்காலம்**

முகம்மது நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனா வந்து சேர்ந்தார்.

ஒரு நாள் இரவு தம் பணியாளர் ஒருவரை அழைத்துக் கொண்டு முசுலீம்களை அடக்கம் செய்திருக்கும் இடமான கம்ருஸ்தானுக்குப் போனார். அங்கு இறந்தவர்களுக்காகப் பிரார்த்தனை செய்தார். பிரார்த்தனை செய்துவிட்டு வீடு திரும்பினார். மறுநாள் பள்ளிவாசலுக்குச் சென்றார். ஒரு மேடை மீது அமர்ந்து உஹத் போரில் வீர மரணமடைந்த முசுலீம்களுக்காகப் பிரார்த்தனை செய்தார். அதன்பின் அங்குக் கூடியிருந்த மக்களுக்குப் பல உபதேசங்களைக் கொடுத்தார். பிறகு வீட்டிற்குச் சென்றார்.

மறுநாள் தொழுகை நேரம் வந்தது. முகம்மது நபிக்கு (ஸல்) உடல்நலமில்லாதிருந்ததால் அவரால் தொழுகைக்குப் போக முடியவில்லை. எனவே அபூபக்கர் ரலியைக் கூப்பிட்டுத் தமக்குப் பதிலாக இமாமாய் இருந்து தொழுகையை நடத்தும்படி சொன்னார். அதன்படி அபூபக்கர் ரலி தொழுகையை முன்னின்று நடத்தினார்.

முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய உடல்நலம் மிகவும் மோசமாகிக் கொண்டேயிருந்தது. இச்செய்தி மதீனா முழுவதும் பரவியது. மக்கள் பள்ளிவாசலுக்குத் திரள்திரளாக வந்தனர். அங்கே நபிகள்நாயகமும் வந்தார். மக்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். தொழுகை முடிந்ததும் அவர்கள் அங்குக் கூடியிருந்த மக்களிடம் உரையாடினார். அதன்பின் வீட்டிற்கு வந்தார். வீட்டிற்கு வந்த பின்பு அங்கு இருந்தவர்களிடம் 'தொழுகையை ஒழுங்காக நடத்த வேண்டும், அடிமைகளை அன்போடு நடத்த வேண்டும், அல்லாஹ்

எனும் மேலான தோழனிடம், அல்லாஹ் எனும் மேலான தோழனிடம், அல்லாஹ் எனும் மேலான தோழனிடம்' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவர்களிடமிருந்து ஆவி பிரிந்தது. அப்போது அவர்களுக்கு வயது 63.

முகம்மது நபி (ஸல்) அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி மதீனா முழுவதும் பரவியது. மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள். பெரியவர்களும் குடும்பத்தினர்களும் சேர்ந்து நபிகள் நாயகம் அவர்களின் உடலை அடக்கம் செய்வது பற்றிப் பேசிக் கொண்டார்கள். சிலர், பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் ஓர் இடத்தில் அடக்கம் செய்யலாம் என்று சொன்னார்கள். சிலர், மற்ற முசுலீம்களை அடக்கம் செய்திருக்கும் இடத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இப்படி ஒவ்வொருவரும் தத்தம் கருத்தைச் சொன்னபின், அபூபக்கர் எழுந்து 'மரணமடைந்த இடத்திலேயே நபிமார்களை அடக்கம் செய்வது அவசியம் என்று நாயகம் அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன், ஆகையால் நாயகம் அவர்களை மரணமடைந்த இடத்திலேயே நல்லடக்கம் செய்ய வேண்டும்'. என்று கூறினார்கள். எல்லோரும் அதற்குச் சம்மதித்தார்கள். அதன்படி மதச்சடங்குகளுக்குப் பின் முகம்மது நபிகள் நாயகம் அவர்களுடைய உடல் அவர்கள் மரணமடைந்த இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

இத்துடன் முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாறு நிறைவு பெறுகிறது.

### இசுலாமியப் பிரிவுகள்

இசுலாமியர்களில் முக்கியமாக இரண்டுப் பிரிவினர் இருக்கின்றனர்.

1. சுன்னி முசுலீம்
2. சியா முசுலீம்

இசுலாமில் பழமைவாதிகள் 'சுன்னா' என்று அழைக்கப் படுகின்றனர். புதுமையை ஏற்பவர் 'பித்அத்' எனப்படுகின்றனர். சுன்னி முசுலீம்கள் சுன்னாவழி மீது நம்பிக்கை கொண்டவர்கள். சியா முசுலீம்கள் புதுமையை ஏற்பவர்கள் (பித் அத்).

### இசுலாமிய மதத்தில் கடவுள் பற்றிய கருத்து

இசுலாமிய மதம் கடவுளை 'அல்லாஹ்' என்று கூறுகிறது. அவர் நிறைவான இரக்கம் உடையவர். அருள் உடையவர். இறைவன் (கடவுள்) ஒருவரே. அவர் ஒருவராகவே இருக்கிறார். அவர் உண்மையானவர், ஈடு இணையற்றவர், வடிவமற்றவர்.

**இசுலாமிய மதக் கொள்கை**

மனிதன் மனம் திருந்தி நல்வழியில் வாழவேண்டும். மனம் திருந்தி நல்வழி செல்லும் மனிதர்களை இறைவன் மன்னித்து அருளுகிறான். மனிதர்களை நல்வழியில் நடத்துவதற்காக அவ்வப் போது நபிமார்களைப் பூவுலகிற்கு அனுப்பி அவர்கள் மூலம் தமது கருத்துக்களைப் போதிக்கிறான். இறைவன் அனுப்பிய நபிமார்களுள் முகம்மது நபிகள் நாயகம் அவர்களே இறுதியானவர். அவருக்குப்பின் இறைவன் வேறு எந்த நபியையும் அனுப்பப்போவதில்லை. அல்லாஹ் அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன். அவருடைய விருப்பத்திற்கிணங்கி நாம் எல்லோரும் பரஸ்ரம் அன்புடன் வாழவேண்டும். அதன்மூலம் மனிதநேயம் வளர வேண்டும்.

## புனித நூல்

இசுலாமியர்களுடைய புனித நூலின் பெயர் 'திருகுர்ஆன்'. ஆண்டவனுடைய அருள்வாக்கு முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அவ்வப்போது கிடைத்துக் கொண்டிருந்தது. அருள் வாக்குகளெல்லாம் நற்செய்திகளாகயிருந்தன. அவற்றை உலக மக்களுக்குக் கூற வேண்டுமென்ற உத்தரவு முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது. எனவே ஆண்டவனுடைய அருள்வாக்கு மூலம் அவ்வப்போது கிடைத்த உண்மைகளை (நற்செய்திகளை) முகம்மது நபி (ஸல்) மக்களுக்கு அறிவித்து வந்தார். அவ் வுண்மைகளின் தொகுப்பே முசுலீம்களின் புனித நூலாகிய 'திருகுர்ஆன்'. இது முதலில் அரபு மொழியில் இயற்றப்பட்டது. காலப்போக்கில் இது உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

'திரு குர் ஆன்' முழுவதும் ஒரே நேரத்தில் ஆண்டவனால் அருளப்படவில்லை. 23 ஆண்டுகளாக அருளப்பட்டவைகளாகும். முகம்மது நபி (ஸல்) அவர்கள் மக்காவில் வாழ்ந்த 13 ஆண்டுகளில் 81 அத்தியாயங்களும், மதீனாவில் வாழ்ந்த 10 ஆண்டுகளில் 30 அத்தியாயங்களும், பயணங்களில் இருந்தபோது 3ம் இறைவனால் (கடவுளால்) இறக்கி அருளப்பட்டன. மக்காவில் இறங்கிய திருவசனங்கள் 'மக்கீ' என்றும், மதீனாவில் இறங்கிய திருவசனங்கள் 'மதனீ'என்றும் கூறப்படுகின்றன.

'திரு குர் ஆன்' 30 பாகங்களைக் கொண்டது. 30 பாகங்களிலுமாக 114 அத்தியாயங்கள் உள்ளன. இவற்றில் சில அத்தியாயங்கள் சிறியவை, சில அத்தியாயங்கள் பெரியவை. 110வது அத்தியாயம் மிகச்சிறியது. இதில் 3 வசனங்கள் மட்டுமே உள்ளன. ஆனால் 2வது அத்தியாயம் மிகப்பெரியது. இதில் 286 வசனங்கள் உள்ளன. சிறிய அத்தியாயங்களிலும், பெரிய அத்தியாயங்களிலுமாகத்

திரு குர் ஆனில் மொத்தம் 6666 வசனங்கள் உள்ளன. அத்தியாயம் என்பதற்கு அரபு மொழியில் உள்ள வார்த்தை 'சூரா'. ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் பெயர்கள் உள்ளன. முதல் அத்தியாயத்தின் பெயர் 'அல்ஃபாத்திஹா'. அல்ஃபாத்திஹா என்றால் 'தோற்றுவாய்' என்று பொருள். கடைசி அத்தியாயத்தின் பெயர் 'அந்நாஸ்'. அந்நாஸ் என்றால் 'மனிதர்கள்' என்று பொருள்.

## 'திரு குர் ஆன்' கூறும் மிக முக்கியமான செய்திகள்

இறைவனை வழிபடுதல், இறைத்தூதர் முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய வழியைப் பின்பற்றுதல் ஆகிய இரண்டுந்தாம் திரு குர் ஆன் கூறும் மிக முக்கியமான செய்திகளாகும். அவற்றின் விவரம் சுருக்கமாக இங்கே கொடுக்கப்படுகின்றது.

1. மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான தொடர்பு உறுதியாக இருக்க வேண்டும்.
2. தாய் தந்தையருடன் அன்புடனும் ஆதரவுடனும் நடந்து கொள்ள வேண்டும்.
3. உறவினர்கள், அண்டை வீட்டார்கள், அனாதைகள், ஏழைகள் ஆகியோர் உதவி கேட்டு வரும்போது முடிந்த அளவு உதவ வேண்டும்.
4. மக்களிடம் இனிமையாகவும், நற்பண்புகளுடனும் பழக வேண்டும்.
5. தனது உயிர், உடைமை, மானம், மரியாதையைப் பாதுகாப்பது போன்று, மற்றவர்களுடைய உயிர், உடைமை, மானம், மரியாதையைப் பாதுகாக்க வேண்டும்.
6. யாரையும் ஏமாற்றவோ மோசடி செய்யவோ கூடாது.
7. நீதி, நேர்மை, நாணயம் ஆகிய நற்குணங்களில் மனிதன் எந்நேரமும் நிலைத்து நிற்க வேண்டும்.
8. மனித வாழ்வு மனித சமுதாயத்துக்குத் தொல்லையையும் துன்பத்தையும் கொடுப்பதாக இருக்கக் கூடாது. மாற்றாக மனித வாழ்வு மனித சமுதாயத்துக்கு நிம்மதியையும், அமைதியையும் கொடுப்பதாக இருக்க வேண்டும்.
9. மனிதனால் அனைவருக்கும் பயன் கிடைக்க வேண்டுமே தவிர யாருக்கும் தீங்கு நேர்ந்திடக் கூடாது.
10. உரிமைகளை மதித்து அவற்றிற்கேற்பத் தம் கடமைகளை ஆற்ற வேண்டும்.

# வழிபாட்டு முறைகள்

இசுலாமியர்கள் கடவுளை 'அல்லாஹ்' என்று அழைக்கின்றனர். அவர்கள் அல்லாஹ் ஒருவன் மட்டுமே கடவுள் (இறைவன்) என்ற நம்பிக்கை கொண்டவர்கள். இறைவன் 'அல்லாஹ்' வடிவமற்றவன், ஒளிமயமானவன் என்பது அவர்களின் நம்பிக்கை. எனவே அவர்கள் உருவ வழிபாடு செய்வதில்லை.

இசுலாமியர்களுடைய வழிபாட்டுத் தலம் பள்ளிவாசல் (Mosque). இவர்கள் பள்ளி வாசல்களுக்குச் சென்று தொழுகை செய்து கடவுளை வழிபடுகின்றனர். பள்ளிவாசல்களில் தொழுகை நேரம் வரும்போது தொழுகை அறிவிப்பு செய்யப்படுகிறது. இதனைப் 'பாங்கு' என்பார்கள். பெர்ஷியன் மொழியில் `பாங்க்' என்றால் 'ஒலி' என்று பொருள். இதையொட்டியே தொழுகை அறிவிப்புக்குப் 'பாங்கொலி' என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது.

பள்ளிவாசல்களுக்குள் முசுலீம்கள் (இசுலாமியர்கள்) மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். உள்ளே செல்வதற்கு முன் 'ஒலு' செய்ய வேண்டும். ஒலு என்பது கை, கால், முகம், வாய், நாசி ஆகியவற்றைத் தண்ணீரினால் கழுவிச் சுத்தம் செய்வதாகும். உள்ளே சென்ற பின்பு தொழுகை நடைபெறும். நிற்பது, குனிவது மற்றும் சஜ்தா செய்தல் (தரையில் நெற்றி பதித்து வழிபாடு) ஆகியன இதில் அடங்கும். பள்ளிவாசல்களில் தொழுகையை முன்நின்று நடத்தி வைப்பவரை 'இமாம்' என்பார்கள்.

தொழுகை இருப்பில் ஓதப்படும் ஒரு வகைப் பிரார்த்தனைக்கு 'அத்தஹிய்யாத்' என்று பெயர். தொழுகையின் இரண்டாவது மற்றும் இறுதி அமர்வில் 'அத்தஹியாத்து லில்லாஹி' (எல்லாக் காணிக்கைகளும் அல்லாவுக்கே உரியன) என்று தொடங்குகின்ற பிரார்த்தனை நடைபெறுகிறது. இப் பிரார்த்தனையில் இறைத்துதி, ஏகத்துவம், நபித்துவம் ஆகியவை குறித்த உறுதி மொழிகள் இடம் பெறுகின்றன. மேலும் முகம்மது நபி (ஸல்) அவர்களுக்காகவும், நன்மக்கள் யாவருக்காகவும் செய்யும் வேண்டுதல்களும் இதில் இடம் பெறுகின்றன. இதனை 'தஷஹ் ஹுத்' (உறுதி மொழி கூறல்) என்று கூறுகின்றனர்.

வெள்ளிக்கிழமை நாளில் முசுலீம்கள் சூரியன் உச்சி சாயும்போது பள்ளி வாசலில் ஒன்று கூடி 'ஜும் ஆ' எனும் சிறப்புத் தொழுகையை நடத்துகின்றனர். 'ஜுஆ' என்றால் ஒன்று கூடுதல் என்று பொருள்.

# 6. சீக்கிய மதம்

சீக்கிய மதத்தினுடைய வரலாறு, சீக்கிய சமய நூல்கள், வழிபாட்டு முறைகள் ஆகியன இத்தலைப்பின்கீழ் இடம்பெறுகின்றன.

## வரலாறு

சீக்கிய மதம் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் பஞ்சாபில் தோன்றிய மதம். இந்தியாவில் இந்துக்களுக்கும் முசுலீம்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தைத் தடுத்து நிறுத்தக் குருநானக் தூதுவராகச் செயல்பட்டார். அவர் இரு மதத்தினரையும் சமாதானப்படுத்த 'சீக்கியம்' என்ற ஒரு புதிய பக்தி நெறியைப் போதித்தார். சீக்கியம் நாளடைவில் சீக்கிய மதமாக மாறியது. இவ்வாறு சீக்கிய மதம் குருநானக் அவர்களால் தோற்றுவிக்கப் பட்டது. இனி, குருநானக்குடைய வாழ்க்கை வரலாற்றினைப் பார்ப்போம்.

## குருநானக் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு (கி.பி. 1469–1539)

குருநானக் கி.பி. 1469ஆம் வருடம் பஞ்சாப் மாநிலத்திலுள்ள லாகூர் மாவட்டத்தில் தால்வண்டு என்னும் ஊரில் பிறந்தார். இவரது தந்தை மன்னர் பரம்பரையிலுள்ள க்ஷத்திரியகுல ஜமீன்தார் கலுசந்த். தாயார் பெயர் திரிப்தா. இவர் ஓர் சிறந்த கடவுள் பக்தை. இவர்கள் எல்லோரும் இந்து மதத்தைப் பின்பற்றி வந்தனர்.

## இளமைப் பருவம்

குருநானக் அவர்களுடைய இயற்பெயர் 'நானக்'. 'குரு' என்பது பிறகு சேர்க்கப்பட்டதாகும். குரு என்பது சீக்கிய மதத்திலுள்ள முதல் பத்துத் தலைவர்களின் பட்டம். நானக் சிறுவயதிலேயே கடவுள் பக்தி மிகுந்தவர். அவர் அவரது ஐந்தாவது வயதில் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். கல்வியில் சிறந்து விளங்கினார். அவர் சமஸ்கிருதம், பாரசீகம், அரபி மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றார். ஐந்தாவது வயதிலேயே நல்ல கருத்துள்ள பாடல்களைப் பெர்சிய மொழியில் பாடும் திறமை பெற்றிருந்தார். அவர் கடவுள் பக்தியில் திளைத்துப் பக்திப் பாடல்களை இயற்றுவதிலும், தியானம் செய்வதிலும் அக்கறை கொண்டிருந்தார். அவர் இந்துமத அறிஞர்களிடமும், இசுலாம் மத அறிஞர்களிடமும் நெருங்கிப் பழகி அவர்களிடமிருந்து மதக் கருத்துக்களைக் கற்றுத் தேர்ந்தார்.

## திருமண வாழ்க்கை

நானக் அவர்களுக்குப் பதினைந்து வயதானபோது பெற்றோர் அவருக்குத் திருமணம் செய்துவைத்தனர். அவரது மனைவி பெயர் சுல்க்னி. அவர் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டார். அவருக்கு ஸ்ரீசந்த், இலக்ஷ்மிதாஸ் என்ற பெயர் கொண்ட இரண்டு புதல்வர்கள்.

## நானக் அவர்களுடைய கருணை உள்ளம்

ஒரு நாள் விலை மதிப்புள்ள பொருள்களை வாங்கி வரும்படி நானக் அவர்களுடைய தந்தை நானக் அவர்களிடம் பணம் கொடுத்தனுப்பினார். பொருள்களை வாங்கச் செல்லும்போது வழியில் பசித்திருந்த சாதுக்களைக் கண்டார். தன்னிடமிருந்த பணத்தைக் கொண்டு உணவுப் பொருள்களை வாங்கி அச்சாதுக்களுக்குக் கொடுத்தார். அதன்பின் வெறும் கைகளுடன் நானக் வீட்டிற்குத் திரும்பினார். அவருடைய தந்தை அவரிடம் "வாங்கி வரச்சொன்ன விலை மதிப்புள்ள பொருட்கள் எங்கே?" என்று கேட்டார். தந்தையிடம் நடந்தவற்றையெல்லாம் கூறினார்.

## நானக் 'குருநானக் தேவர்' ஆனது

நானக் வேளாண்மை, வணிகம் ஆகிய தொழில்களைச் செய்து வந்தார். அதன் பின் நவாப் தௌலத்கானின் அரசாங்கக் கருவூலத்தில் பண்டாரியாகப் பணிபுரிந்தார். இத்தொழில்கள் எதுவுமே அவருக்கு மனதிருப்தியைக் கொடுக்கவில்லை. அவர் எல்லாத் தொழில்களையும் உதறித் தள்ளிவிட்டு, கடவுள் பற்றிய ஆழ்ந்த சிந்தனையிலும், பக்திப் பாடல்களைப் பாடிப்பாடிப் பரவசம் அடைவதிலும் பேரின்பம் கண்டார்.

ஒரு நாள் பெயின் ஆற்றில் நீராடிக் கொண்டிருக்கும்போது திடீரென மறைந்தார். உறவினர்களும், நண்பர்களும் அவரை ஆற்றில் தேடினர். அவர் கிடைக்கவில்லை. எலலோரும் ஆழ்ந்த வருத்தத்தில் இருந்தனர். அப்படியிருக்குபோது மூன்றாவது நாள் ஆற்றிலிருந்து வெளியேறி வந்தார். நானக் மக்களின் கண் பார்வையிலிருந்து மறைந்திருந்த மூன்று நாள்களும் கடவுள் அவருக்குக் குருவாக அமர்ந்திருந்து, மூலமந்திரமாகிய ஜப்ஜியையும் வீடுபேற்றின் நெறிகளையும் போதித்து, "இன்றிலிருந்து நீயே உலக மக்களுக்குக் குரு" எனக் கூறினார் என்றும், அன்றிலிருந்து நானக் அவர்கள், குருநானக் என்றும் குருநானக் தேவர் என்றும் போற்றப்படுகிறார் என்றும் கூறப்படுகிறது. இந்நிகழ்ச்சியின் மூலம்

குருநானக் தேவர் கடவுளோடு இரண்டறக் கலந்துவிட்டார் என்று சீக்கிய அறிஞர்கள் நம்புகின்றனர்.

## குருநானக் அவர்களுடைய 12 ஆண்டுகள் பயணம்

கடவுள் அருளைப் பெற்ற குருநானக் அவர்கள், கடவுளுடைய அருளைப் புகழ்ந்து பாடியவாறும் தியானித்தவாறும் பன்னிரண்டு ஆண்டுக் காலம் பல இடங்களுக்கும் புனிதப்பயணம் மேற்கொண்டார். அவர் தெற்கே இலங்கையிலிருந்து வடக்கே நேபாளம் வரையும், கிழக்கே வங்காளத்திலிருந்து மேற்கே மெக்கா வரையிலும் நீண்ட பயணம் செய்தார். அவரோடு அவருடைய நெருங்கிய சீடர்களாகிய இசுலாமியத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மர்தானா என்பவரும், பாய்பாலா என்னும் இந்துவும் பயணம் செய்தனர். குருநானக் அவர்கள் தமது பயணத்தின்போது வெவ்வேறு சமயக் கொள்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் அறிந்தார். அவை அவருக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. பெரும்பாலான முசுலீம்கள் இசுலாத்தை உண்மை யாகப் பின்பற்றுகின்ற முசுலீம்களாகவோ, அதேபோல் பெரும்பாலான இந்துக்கள் இந்துமதத்தைப் பின்பற்றுகின்ற இந்துக்களாகவோ வாழ்க்கையை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கவில்லை என்பது குருநானக் அவர்களுடைய கணிப்பாகயிருந்தது. அவர் பயணங்கள் முடித்துவிட்டுச் சொந்த ஊருக்குத் திரும்பி வந்தார்

## இந்து முசுலீம் பகை

குருநானக் தம்முடைய புனிதப் பயணங்களை முடித்துக் கொண்டு சொந்த ஊருக்கு வந்தபோது அவர் கண்ட காட்சிகள் அவரை வியப்படையச் செய்தன. அவரது ஊர் பாபரின் படை வீரர்களால் கொள்ளையடிக்கப்பட்டு, மக்கள் அவமானங்களுக்கு ஆட்பட்டுக்கொண்டிருந்தனர் (இது நடந்தது கி.பி. 1521ஆம் வருடம்). இந்துக் கோவில்களின் சொத்துக்களையும் மக்களின் செல்வங்களையும் படை வீரர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். கொள்ளை யடிக்கப்பட்ட பொருள்களை ஆண்களின் தலையில் ஏற்றி, இராணுவ முகாம்களுக்குச் சுமந்து செல்லுமாறு துன்புறுத்தினர். சுமக்க இயலாது தள்ளாடியபோது, அடித்துத் துன்புறுத்தினர். குருநானக்கும் அவரது சீடர்களும் கூட இக்கொடுமையை அனுபவித்தனர்.

இந்துக்கள் பலவாறு அவமானப்படுத்தப்பட்டனர். அவர்கள் விலை உயர்ந்த ஆடை அணிகலன்கள் அணியக்கூடாது, உயர்தர தானியங்கள் உண்ணக்கூடாது, குதிரை, வண்டி, பல்லக்குகளில்

பயணம் செய்யக்கூடாது போன்ற தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. இந்துக்கள் மீது 'ஜசியா' என்னும் சமய வரி விதிக்கப்பட்டு, பொருளாதாரம் சுரண்டப்பட்டது. இவற்றால் இந்து, முசுலீம் மக்களிடையே கசப்புணர்வு தோன்றிப் பகைமை வளர்ந்தது.

## இந்து முசுலீம் ஒருங்கிணைப்பு

இந்துக்களுக்கும் முசுலீம்களுக்கும் இடையே ஏற்பட்ட பகைமையை நீக்கி, சகோதரத்துவத்தைக் கொண்டுவந்து, இரு மதத்தினரையும் ஒருங்கிணைக்க, இருமதத்திலிருந்தும் நல்லுள்ளம் கொண்ட பலரும் முன் வந்தனர். வட இந்தியாவில் இராமானந்த கபீர், நாம்தேவ், வல்லபாச்சார்யா, சைதன்ய மகாபிரபு, மீராபாய், துளசீ தாசர் போன்ற பக்தர்களின் பக்தி இயக்கப் பிரச்சாரம் வலுவாக நடைபெற்றது. இப்பக்தர்கள் மக்களிடையே இறைவன் அடிப்படையிலான சகோதரத்துவத்தை வலியுறுத்தினர். இப்பக்த பெரு மக்களோடு இசுலாமியச் சூஃபி பெருமக்களும் ஒருங்கிணைந்தனர். இவர்கள் யாவரும் இந்துக்களையும் முசுலீம்களையும் ஒருங்கிணைக் கின்ற பாலமாகத் திகழ்ந்தனர். விஷ்ணு, சிவன், அல்லாஹ் என்பன யாவும் இறைவனின் வெவ்வேறு பெயர்களே, தூய பக்தியும் அன்பும் மட்டுமே மனித வாழ்வினை மேம்படுத்த வல்லவை என்று அவர்கள் போதித்தனர். இந்து முசுலீம் ஒருங்கிணைப்புப் பணியில் ஈடுபட்டவர்களில் குருநானக் அவர்கள் மிக முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குருநானக் அவர்களின் சீக்கியம்

குருநானக் அவர்கள் இந்துக்களையும் முசுலீம்களையும் ஒருங்கிணைக்கும் வகையில் 'சீக்கியம்' என்ற புதிய பக்தி நெறியைப் போதித்தார். அது நாளடையில் 'சீக்கியமதம்' என்ற புதிய மதம் ஆனது.

## குருநானக் அவர்களுடைய போதனைகள்

குருநானக் அவர்கள், அனைத்து மக்களுக்கும் பொதுவானதும் பொருத்தமானதும் கடைப்பிடிப்பதற்கு எளிதானதுமான சீக்கிய நெறியை மக்களிடையே போதித்தார்.

## போதனைகளில் சில

எல்லோரும் எப்போதும் கடவுளை நினைக்க வேண்டும்; நேர்மையோடு பொருள் ஈட்ட வேண்டும்; ஈட்டிய பொருளை மற்றவர்களோடு பகிர்ந்து மகிழ்ச்சியடைய வேண்டும்; அமைதி,

ஒற்றுமை, அன்பு, மனித சகோதரத்துவம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்; அனைத்து உயிர்களுக்கும் கடவுளே தந்தை என்பதை உணர வேண்டும்; சடங்கு, சாத்திரம், சாதி, குலம், வெளிவேடம், மரபு, கட்டுப்பாடு ஆகியவற்றிலிருந்து விலகி, தூய்மையான அறவாழ்வும், முழுமையான சுதந்திர வாழ்வும் வாழ வேண்டும்; பக்திப் பாடல்களைப் பாடவேண்டும்; ஏழைகளுக்கு உதவ வேண்டும்; உடலைத் தூய்மையாகப் பேண வேண்டும்; கடவுள் பெயரை உரு போட வேண்டும்; மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்ற வேண்டும்; எவருக்கும் தீங்கு நேர்தல் வேண்டும் என்று நினைக்காதே; எவருடைய பணிக்கும் இடையூறு விளைவிக்காதே; எவரேனும் உன்னைப்பற்றிக் குறைவாகப் பேசினால் அவரை மன்னித்துவிடு; உடலாலும் உள்ளத்தாலும் ஆன்மாவினாலும் பொறுத்துக்கொள்கிற பாங்கினைப் பயில்க; உடலால் உள்ளத்தால் நேருகின்ற துன்பங்களைப் பொறுத்துக் கொள்; உனது வாழ்வு கெடுமானாலும் கவலை கொள்ளாமல், பிறர் துன்பத்தைக் களைக.

## குருநானக் அவர்களுடைய மாதிரி சமுதாயம்

குருநானக் இரவி நதிக்கரையில் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கினார். சாதாரணக் குடிமக்கள் நடத்தும் சமுதாயமாக அது இருந்தது. காலையில் எழுந்து முதலில் குளித்துவிட்டுப் பூசை செய்தனர். குருவும் சீடர்களும் உணவு உண்ட பின், தங்கள் வேலைகளுக்குச் சென்று வேலைகளைச் செய்து பொருள் ஈட்டி வருவர். மாலையில் அனைவரும் ஒரு பொது இடத்தில் கூடி இறைவனை வழிபட்டுத் தங்கள் பொருளையும் உணவையும் பகிர்ந்து கொண்டு வாழ்ந்தனர். இதுவே சீக்கியரின் மாதிரிச் சமுதாயமாகக் கருதப்படுகிறது.

## குருநானக்குடைய கடைசிக் காலம்

குருநானக் தமது இறுதிக் கட்டத்தில் கர்த்தர்பூரில் குடும்பத்தோடு வேளாண்மைத் தொழில் செய்து வந்தார். வேளாண்மை செய்துகொண்டே சீக்கியக் குருவாகவுமிருந்து வழிகாட்டினார். அவர் சீக்கியக் கொள்கைகளில் உறுதியும் உண்மையும் கொண்டிருந்த லஹீனா என்பவரைத் தனது காலத்திற்குப் பிறகு குருவாக இருக்க ஏற்பாடு செய்தார். லஹீனாவுக்கு (லேஹனா) 'அங்கத்' என்ற பெயரையும் சூட்டினார். அங்கத் என்றால் உடம்பிலுள்ள ஒரு பாகம் என்று பொருள். குருநானக்குடைய உடம்பிலுள்ள ஒரு பாகம்தான் லேஹ்னா எனும் பொருளில் இப்பெயரைச் சூட்டினார். அங்கத்தைக் குருவாக

அமர்த்திவிட்டுக் கி.பி. 1539ஆம் வருடம் குருநானக் அவர்கள் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார். இத்துடன் குருநானக் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு நிறைவு பெறுகிறது.

**குருநானக்கிற்குப் பிறகு வந்த குருக்கள் பற்றிய விவரங்கள்**

குருநானக்கிற்குப் பிறகு வந்த இரண்டாவது குரு 'அங்கத்'. அவர் கி.பி. 1539 முதல் 1552 வரை குருவாகயிருந்தார். இவர் குருநானக்கினுடைய பாடல்களைப் பஞ்சாப் மொழியில் குர்முகி என்னும் எழுத்துக்களால் எழுதினார்.

குரு அங்கத்திற்குப் பிறகு வந்த குரு அமர்தாஸ். கி.பி. 1552 முதல் 1574 வரை மூன்றாவது குருவாகயிருந்தார். இவர் குரு அங்கத் காலமாவதற்கு முன்பு அவரால் தேர்வு செய்யப்பட்டவர். இவர் குரு நானக்கினுடைய போதனைகளை மக்களிடம் பரப்புவதற்காக ஆண்களும் பெண்களும் கொண்ட ஒரு சேவை அமைப்பை ஏற்படுத்தினார்.

குரு அமர்தாஸுக்குப் பிறகு வந்த குரு இராம்தாஸ் கி.பி. 1574 முதல் 1581 வரை நான்காவது குருவாகயிருந்தார். இவர் குரு அமர்தாஸ் காலமாவதற்கு முன்பு அவரால் தேர்வு செய்யப்பட்டவர். இவர் சீக்கியர்களுக்கென ஒரு நகரத்தை உருவாக்கத் திட்டமிட்டார். அதன்படி அவர் பஞ்சாபிலுள்ள அமிர்தசரஸில் ஒரு நகரத்தை உருவாக்கத் தொடங்கினார். மேலும், சீக்கியர்களின் திருமண நிகழ்ச்சியில் பாடுவதற்கெனப் பல பாடல்களையும் எழுதினார்.

குரு இராம்தாசுக்கு பிறகு வந்த குரு அர்ஜுன் கி.பி. 1581 முதல் 1606 வரை ஐந்தாவது குருவாகயிருந்தார். இவர் குரு இராம்தாசின் மகன். அமிர்தசரஸில் தம் தந்தை தொடங்கி வைத்த பணியைத் தொடர்ந்தார். அங்குள்ள ஒரு ஏரியின் நடுவே ஒரு குருத்துவாரா (கோவில்) கட்டினார். இதுதான் தற்பொழுதுள்ள பொற்கோவில் (Golden Temple). சீக்கியர்களுடைய மிக முக்கியமான கோவில் இதுதான்.

குரு அர்ஜுனுக்குப் பிறகு வந்த குரு ஹர்கோவிந்த் கி.பி. 1606 முதல் 1644 வரை ஆறாவது குருவாகயிருந்தார். இவர் குரு அர்ஜுனுடைய மகன். இவர் சீக்கியர்களுடைய கோரிக்கைகளை அப்போதிருந்த ஆட்சியரிடமிருந்து போராடிப் பெறவேண்டுமென்று எண்ணினார். எனவே அவர் சிறையில் அடைக்கப்பட்டார். பிறகு அவரை விடுதலை செய்யத்

தீர்மானித்தபோது தம்முடன் சிறையில் இருந்த 52 இந்துக்களையும் சேர்த்து விடுதலை செய்யக் கேட்டார். அவரது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குரு ஹர்கோவிந்திற்குப் பிறகுவந்த குரு ஹர்ராய் கி.பி. 1644 முதல் 1661 வரை ஏழாவது குருவாகயிருந்தார். இவர் குரு ஹர்கோவிந்தின் மகனுடைய மகன். இவர் மருத்துவ மனைகளைத் திறந்து எல்லோருக்கும் இலவச சிகிச்சை அளித்தார்.

குரு ஹர்ராயிக்குப் பிறகு வந்த 'குருஹர்கிரிஷான்' கி.பி. 1661 முதல் 1664 வரை எட்டாவது குருவாகயிருந்தார். இவர் குருஹர்ராயின் மகன். இவர் மிகவும் இளமையானவராக யிருந்தாலும் மற்றவர்களுக்குச் சேவை செய்வதில் மிகுந்த அக்கறை கொண்டவராகயிருந்தார். அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களை இவர் கவனித்துக் கொண்டிருக்கும்போது தன்னுடைய எட்டாவது வயதில் காலமானார்.

குரு ஹர் கிரிஷானுக்குப் பிறகு வந்த குரு தேஜ் பகதூர் கி.பி. 1664 முதல் 1675 வரை ஒன்பதாவது குருவாயிருந்தார். இவர் குரு ஹர் கோவிந்தினுடைய மகன். இவருடைய காலத்தில் இந்தியாவை ஆண்டுவந்தவர்கள், இந்துக்களையும் சீக்கியர்களையும் தம்முடைய மதத்தில் சேரும்படி வற்புறுத்தினர். அப்போது இந்துக்களில் முக்கியமானவர்களில் சிலர் குரு தேஜ் பகதூரைச் சந்தித்தனர். அவர் இந்துக்களுடன் உரையாடினார். அப்போது அவர் "ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் விருப்பமான வழியில் கடவுளை வணங்க உரிமையுண்டு என்றும் இது குறித்து ஆட்சியாளரைச் சந்தித்துப் பேசலாமென்றும் கூறினார். அதன்படி அவர் அப்போதைய ஆட்சியாளரைவ் சந்தித்தார். ஆட்சியாளர் குரு தேஜ் பகதூரிடம் மதம் மாறச் சொன்னார். மதம் மாறினால் தேவையான அனைத்துப் பொருள்களையும் தருவதாகவும் கூறினார். ஆனால் குருதேஜ் பகதூர் அதற்குச் சம்மதிக்கவில்லை. எனவே அவரது தலை துண்டிக்கப் பட்டது. அவர் கொலை செய்யப்பட்ட இடமான டெல்லியில் சீக்கியர்களின் ஒரு குருத்துவாரா (கோவில்) உள்ளது. சீக்கியர்கள் அங்குச் சென்று வழிபட்டு வருகின்றனர்.

குருதேஜ் பகதூருக்குப் பிறகு வந்த குரு கோவிந்த்சிங் கி.பி. 1675 முதல் 1708 வரை பத்தாவது குருவாகயிருந்தார். 1708இல் அவர் பதவியை விட்டு விலகி அதிகாரத்தைச் சீக்கியர்களின் புனித நூலாக ஆதிகிரந்தத்துக்குக் கொடுத்து விட்டார். அப்போது அவர் கூறினார் – இனிமேல் குரு தேர்வ

செய்யப்படமாட்டார், சீக்கியர் களுடைய புனித நூல் (குரு கிரந்த சாகிப்)தான் குரு.

குருகோவிந்தசிங் 'கல்ஸா' என்ற ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்தினார். 'கல்ஸா' என்றால் 'சுத்தமான ஒன்று' என்று பொருள். சீக்கிய மதத்திலுள்ள எல்லா உறுப்பினர்களையும் கொண்ட ஓர் அமைப்பாகும் 'கல்ஸா'. 1699இல் கல்ஸா தொடங்கப்பட்டது. கல்ஸாவில் உறுப்பினராகயிருக்க விரும்புபவர்கள் முக்கியமாக இரண்டு காரியங்களைச் செய்யவேண்டும். முதலில், ஒரே பாத்திரத்தில் 'அமிர்த' அருந்த வேண்டும். 'அமிர்த' என்றால் சர்க்கரை நீர். இது சீக்கியர்களுடைய ஒற்றுமையைப் பலப்படுத்து வதற்காக ஏற்படுத்தப்பட்டது. அந்தக் காலத்தில் ஒரு பாத்திரத்தில் பல பேர் சேர்ந்து நீர் அருந்தும் பழக்கம் இல்லை. இரண்டாவதாக, எல்லா ஆண்களும் 'சிங்' என்ற வார்த்தையைத் தங்களுடைய பெயருடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். சிங் எனறால் சிங்கம் என்று பொருள். எல்லாப் பெண்களும் 'கவுர்' என்ற வார்த்தையைத் தங்களுடைய பெயருடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். 'கவுர்' என்றால் அரசகுமாரி என்று பொருள். அந்த நாள் முதல் சீக்கியர்கள் இவ்வார்த்தைகளைத் தங்களின் பெயர்களுடன் சேர்த்துக் கொண்டனர். 'கல்ஸா' அமைப்பை நன்கு நடத்திச் செல்ல ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவை அவர் அமைத்தார். குருகோவிந்த சிங் கி.பி. 1708இல் காலமானார்.

**சீக்கியர்கள் மதமாற்றத்திற்கு வற்புறுத்தப்பட்டது**

குரு கோவிந்த சிங் காலமான பின்பு சீக்கியர்களுக்குப் பல. சோதனைகளும் ஏற்பட்டன. அப்போது இந்தியாவை ஆண்டவர்கள் தங்களுடைய மதத்தில் எல்லோரும் சேர வேண்டுமென்று வற்புறுத்தினர். இதற்கு ஒத்துக் கொள்ளாத சீக்கியர்கள் பலரும் தண்டனைக்கு ஆளானார்கள், பலரும் கொல்லப்பட்டனர். பலரும் மறைவாக வாழ்க்கை நடத்தினர்.

மறைவாக வாழ்க்கை நடத்தியவர்கள் ஆட்சியாளரிடம் போரிட இரகசியமாகப் படைகளைச் சேர்த்தனர். இந்தப் படையில் இரஞ்சித்சிங் என்ற ஒரு இளைஞன் தலைமைப் பொறுப்பேற்றான். அவனும் அவனுடைய படை வீரர்களும் சேர்ந்து ஆட்சியாளர்களிடம் போரிட்டு வெற்றி பெற்றனர். முதலில் அவர்களுடைய சொந்த இடங்களையும், அதன்பின் வட இந்தியாவிலுள்ள பல இடங்களையும் பிடித்தனர். பஞ்சாப் உட்பட வட இந்தியாவிலுள்ள பல இடங்களையும் சேர்த்து இரஞ்சித்சிங் ஆட்சி நடத்தினார்.

அவர் 40 வருடங்கள் ஆட்சியாளராகயிருந்தார். அவர் கி.பி. 1839ஆம் வருடம் காலமானார்.

1849ஆம் வருடம் ஆங்கிலேயர் இந்தியாவில் ஆட்சி பொறுப் பேற்றது முதல் அவர்கள் சீக்கியர்களுக்குப் பல துன்பங் களையும் கொடுத்தனர். சீக்கியர்களுடைய குருத்துவாராக்களை நடத்த அவர்களை அனுமதிக்கவில்லை. ஆனால் அவர்கள் தொடர்ந்து அனுமதி கேட்டுக் கொண்டேயிருந்தனர். அதன் பயனாகக் குருத்துவாராக்களில் வைத்துத் திருமணங்கள் நடத்த சீக்கியர்களுக்கு அனுமதி கிடைத்தது. அதன்பின் சீக்கியர்கள் தங்கள் மதவழிபாடுகளைக் குருத்துவாராக்களில் நடத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதனால் சீக்கியர்கள் நிம்மதியடைந்தனர்.

**சீக்கியர் என்பதற்கான ஐந்து அடையாளங்கள்**

பத்தாவது குருவான குரு கோவிந்த்சிங் சீக்கியர்களுக்கான ஐந்து அடையாளங்களைக் கற்பித்தார்.

1. அரைக்கால் சட்டை (Kachera) அணிய வேண்டும். இது குறுகிய கால் சட்டை (Short trouser). நீண்ட கால்சட்டை அணியாத நேரங்களில் சீக்கியர்கள் இந்த அரைக்கால் சட்டையை அணிகின்றனர்.

2. ஒரு எவர்சில்வர் காப்பு (Kara) அணிய வேண்டும். சீக்கியர்கள் தங்களது வலது கை மணிக்கட்டில் ஒரு எவர்சில்வர் காப்பு அணிய வேண்டும். அது கடவுள் ஞாபகத்திற்காகக் கட்டப்படுகிறது. கடவுள் ஆதியும் அந்தமும் இல்லாததுபோல் காப்பும் ஆதியும் அந்தமும் இல்லாதது.

3. தலைமுடி (Kesh) வெட்டப்படாமலிருக்க வேண்டும். தலைமுடி வெட்டக் கூடாது. ஆண்கள் முகச்சவரமும் செய்யக்கூடாது.

4. ஒரு சிறு சீப்பு (Kangha) வைத்துக்கொள்ள வேண்டும். சீக்கியர்கள் தங்கள் உடம்மை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையுடையவர்கள். எனவே அவர்கள் தங்கள் தலையிலும் முகத்திலுமுள்ள முடிகளை அடிக்கடி சீவிச் சுத்தப்படுத்திக் கொள்கின்றனர்.

5. ஒரு கத்தி (Kirpan) வைத்துக் கொள்ள வேண்டும். கிர்பான் என்ற ஒரு வகை சிறிய கத்தி சீக்கியர்கள் உறைக்குள் போட்டு வைத்திருப்பர். இது ஒருபோதும் மற்றவர்களைப் பயப்படுத்துவதற்குள்ள தல்ல. சீக்கியர்கள் நியாயத்திற்காக

வாதாடுபவர்கள் என்பதைக் காட்டுவதற்காக இந்தக் கத்தி வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

**சீக்கிய மத மறுமலர்ச்சி இயக்கங்கள்**

சீக்கிய மதத்தில் நிரங்காரி, நாம்தாரி, அகாலி ஆகிய மறுமலர்ச்சி இயக்கங்கள் தோன்றின. அவை பற்றிய விவரங்கள் இங்கே சுருக்கமாகக் கொடுக்கப்படுகின்றன.

பஞ்சாப் மாநிலத்தை இரஞ்சித் மகாராஜா ஆண்டபோது நிரங்காரி இயக்கம் தோன்றியது. சீக்கிய மதத்தை அழிக்க நினைக்கின்ற சக்திகளை எதிர்த்துப் போராடவே இந்த இயக்கம் தோன்றியது.

பகத் ஜவஹர்மால், பாபா பாலக் சிங் இவர்களால் நாம்தாரி இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. சாதிமுறை, குழந்தைத் திருமணம், சிசுக்கொலை, பெண் குழந்தைகளை விற்பது போன்ற சமூகத் தீமைகளை இவர்கள் எதிர்க்கின்றனர்.

குருகோவிந்த் சிங் அகாலி இயக்கத்தைத் தோற்றுவித்தார். 1920 ஆம் ஆண்டு 'அகாலி இயக்கம்' சீக்கியரின் பாதுகாப்புப் படையாகக் கருதப்பட்டு வெள்ளையர்களை எதிர்த்துப் போராடியது. நாடு சுதந்திரம் பெற்ற பின் தாங்கள் அதிகம் வாழும் மாநிலத்தைப் பிரித்துத் தர அகாலிகள் போராட்டம் நடத்தினர். அதன்படி 1966ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலம் உருவாக்கப்பட்டது.

**சீக்கிய மதத்தில் கடவுள் பற்றிய கருத்து**

கடவுள் ஒருவரே. அவர் நம்மைப் படைத்தவர். அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை. இந்த உலகம் கடவுளின் இல்லம். கடவுள் பகைமை அற்றவர். அவர் அன்பும், அருளும், இரக்கமும் உடையவர். அவர் இறப்பற்றவர், பிறப்பற்றவர். கடவுள் எங்கும் எல்லாவற்றிற்கும் உள்ளும் புறமும் சுதந்திரமாக நிறைந்து விளங்குகிறார். அவர் தாமே செயல்படுகிறார். தாமே ஒளிர்கிறார். அவருக்கு மேலாகயிருந்து ஆட்டுபவரோ, ஆணையிடுபவரோ யாரும் எதுவும் கிடையாது.

**சீக்கிய மதக் கொள்கை**

கடவுள் நாமத்தின் வழியாக அன்பர்களுக்கு வெளிப்படுகிறார். நாமமே அவரை உண்மையாக உணர்த்த வல்லது. அவர் நாமமாகவே விளங்குகிறார். எனவே அவரது நாமத்தை உருப்போட்டு அந்த நாமமாகவே – கடவுள் இயல்பாகவே மாறுகின்ற ஆற்றலைப் பெற்று – கடவுளோடு இரண்டறக்

கலந்துவிட வேண்டும். கடவுள் அன்பும், அருளும், இரக்கமும் உடையவர். அவரது விருப்பத்திற்கும் இணங்கி, மக்கள் பரஸ்பரம் அன்புடன் வாழவேண்டும். அதன்மூலம் மனிதநேயம் வளர வேண்டும்.

## புனித நூல்

சீக்கியர்களுடைய புனித நூலின் பெயர் 'குருகிரந்த சாகிப்'. இதில் 'குரு' என்பது சீக்கிய மதத்தின் முதல் பத்துத் தலைவர்களின் பட்டம். 'கிரந்த' (கிரந்தம்) என்றால் பெரிய நூல் என்று பொருள். 'சாகிப்' என்ற வார்த்தைக்கு மதிப்பு என்று பொருள். 'குரு கிரந்த சாகிப்' என்றால் 'மதிப்பிற்குரிய புனித நூல்' என்று பொருள். இதனை 'ஆதிகிரந்தம்' என்றுகூடக் கூறுவர். இது பஞ்சாபி மொழியிலுள்ள 'குர்முகி' என்னும் எழுத்துகளால் ஆனது. சீக்கியர்களுடைய முக்கியமான வழிபாட்டுத் தலங்களிலெல்லாம் இந்த நூல் வைக்கப்பட்டிருக்கும்.

குருகிரந்த சாகிப் பக்திப் பாடல்களைக் கொண்டது. இதில் முதல் குருவான குருநானக் 974 பாடல்களும், குரு அங்கத் 62 பாடல்களும், குரு அமர்தாஸ் 907 பாடல்களும், குரு ராமதாஸ் 679 பாடல்களும், குரு அர்ஜுன் 2218 பாடல்களும், இவற்றைத் தவிர இந்துக்கள் மற்றும் இசுலாமியர்களுடைய சில பக்தி பாடல்களும் இடம்பெற்றுள்ளன. இதில் கிட்டத்தட்ட 6000 பாடல்கள் உள்ளன. எல்லா மதங்களையும் சமமாகக் கருதும் நோக்கு இந்நூலில் உள்ளது. எனவே இந்நூல் சமயப் பொதுமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

சீக்கியர்கள் 'குட்கா' (Gutkas) என்ற சிறிய கைப் புத்தகத்தையும் புனித நூலாக வைத்திருக்கின்றனர். இதில் குரு கிரந்த சாகிப் புனித நூலிலுள்ள பாடல்களும், பிரார்த்தனைப் பாடல்களும் உள்ளன.

சீக்கியர்கள், குரு கிரந்த சாகிப் நூலை, மற்ற நூல்களுடன் சேர்த்து வைப்பதில்லை. ஒரு சிலர் இதனைத் தனி அறையில் வைத்து வணங்குவதும் உண்டு. அந்த அறையையும் அவர்கள் குருத்துவாராவாகக் கருதுகின்றனர். குருத்துவாரா பெரியதாக யிருந்தால் சீக்கியர்கள் குரு கிரந்த சாகிப் புனித நூலை இரவு நேரங்களில் ஒரு தனி அறையில் மிகுந்த மரியாதையுடன் படுக்க வைக்கின்றனர்.

இப்புனித நூல் கடவுளினுடைய வார்த்தைகளைக் கொண்டது என்று சீக்கியர்கள் கருதுகின்றனர்.

**குரு கிரந்த சாகிப் கூறும் மிக முக்கியமான செய்திகள்**

1. எல்லாப் பிராணிகளுடனும் அன்புடனிருந்து அவற்றிற்கு நல்லதையே செய்ய வேண்டும்.

2. ஒருவர் தம்முடைய வேலையை நேர்வழியில் செய்து பொருள் ஈட்டி மற்றவர்களுடன் பகிர்ந்து நல்லொழுக்கத்துடன் வாழ வேண்டும்.

3. நல்ல மனிதர்களுடைய நட்புதான் சொர்க்கம்.

4. கடவுளை நினைக்க வேண்டும், கடினமாக உழைக்க வேண்டும், மற்றவர்களுக்கு உதவ வேண்டும்.

5. கடவுள் முன் எல்லா ஆண்களும் எல்லாப் பெண்களும் சமமானவர்கள்.

6. மக்களிடம் அன்புடன் இருப்பவர்களுக்கு மட்டும்தான் கடவுளினுடைய அன்பு கிடைக்கும்.

7. ஒருவனுடைய நன்னடத்தையினாலேயே அவனுக்கு மீட்பு கிடைக்கின்றது.

## வழிபாட்டு முறைகள்

சீக்கியர்கள் தங்களது கடவுளுக்கு வாஹேகுரு (Waheguru) என்றும், சத்னம் (Satnam) என்றும் பெயர் வைத்திருக்கிறார்கள். சத்னம் என்பதற்கு ஆதியும் அந்தமும் இல்லாதது (Eternal reality) என்று பொருள்.

கடவுள் ஆணோ பெண்ணோ அல்ல, அது ஒரு சக்தி என்கின்றது சீக்கிய மதம். எனவே அவர்கள் உருவவழிபாடு செய்வதில்லை.

சீக்கியர்களுடைய கோவிலுக்குக் குருத்துவாரா என்று பெயர். உலகத்தில் சீக்கியர்கள் வசிக்கின்ற இடங்களிலெல்லாம் குருத் துவாராக்களும் உள்ளன. குருத்துவாராவிற்குச் செல்லக் குறிப்பிட்ட நாள் எதுவும் கிடையாது. எல்லா நாள்களிலும் செல்லலாம். எல்லா மதத்தினரும் செல்லலாம். ஆனால் எல்லோரும் காலணிகளைக் கழற்றி வெளியே வைத்துவிட்டு, தலையில் தலைப்பாகையுடன் உள்ளே செல்லவேண்டும். குருத்துவாராவில் மையப்பகுதியில் புனித நூலான குரு கிரந்த சாகிப் (Guru Granth Sahib) வைக்கப்பட்டிருக்கும். உள்ளே சென்றவர்கள் அப்புனித

நூலுக்குத் தலைகுனிந்து வணக்கம் தெரிவித்து, காணிக்கை செலுத்திப் பிரசாதம் பெறுவர். பீடத்திற்கு எதிரே ஆண்களும் பெண்களும் அமர்ந்திருந்து குரு கிரந்த சாகிப் புனித நூலிலுள்ள பாடல்களைப் பாடிக்கொண்டிருப்பர். இப்பாடல் பூசை சுமார் ஐந்து மணி நேரம் வரை நீடிக்கும். பாடல்களுக்கு விளக்க உரையும் கொடுப்பர். உள்ளே சென்றவர்கள் அவர்களது விருப்பப்படி சிறிது நேரமோ அல்லது கூடுதல் நேரமோ பூசையில் கலந்துகொண்டு வெளியே வரலாம். பாடல் பூசைக்குப் பிறகு ஆர்தாஸ் நடைபெறும். ஆர்தாஸ் என்றால் பிரார்த்தனை (ஜெபம்). அதில் எல்லாச் சீக்கியர்களுடையவும், உலகத்திலுள்ள மற்ற எல்லா மக்களுடைய நலனுக்காகவும் கடவுளிடம் வேண்டிக்கொள்வர். அதன்பின் எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்படும். பிரசாதம் பூ, சர்க்கரை மற்றும் வெண்ணெய் கலந்த சுவைப் பொருளாகயிருக்கும். பிரசாதம் வழங்கிய பின் எல்லோரும் ஒரே நேரத்தில் சேர்ந்து சாப்பிடுவர். இதனால் அவர்களுடைய ஒற்றுமை பலப்படும் என்று நம்புகின்றனர்.

சீக்கியர்களுடைய மிக முக்கியமான குருத்துவாரா (கோவில்) இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரசில் இருக்கின்றது. இது சீக்கியர்களுடைய முக்கியமான புண்ணியதலமாகும். அமிர்தசரஸ் நகரத்தைச் சீக்கியர்களுடைய நான்காவது குரு இராமதாஸ் தோற்றுவித்தார். அவர் இவ்விடத்தில் ஒரு பெரிய ஏரியை அமைத்து அதற்கு அமிர்தக்கடல் என்று பெயரிட்டார். அது அமிர்தசரஸ் என்றும் அழைக்கப்பட்டுவருகிறது. குருஇராமதாசின் மகன் குரு அர்ஜுன் சீக்கியர்களுடைய ஐந்தாவது குரு. அவர் அந்த ஏரியின் நடுவில் செப்புத்தகடு வேய்ந்து அதில் தங்கமெருகூட்ட ஆலயமொன்றைக் கட்டினார். இதற்குக் குரு தர்பார் அல்லது குருத்துவாரா என்று பெயர். ஆலயம் மூன்று அடுக்குகள் கொண்டது. மேல் பகுதி பொன் தகடுகளால் வேயப்பட்டுள்ளது. ஆலயத்தின் கீழ்ப் பகுதியில் சீக்கியர் களுடைய புனித நூலான குரு கிரந்த சாகிப் வைக்கப்பட்டிருக்கும். அங்கே பாடல் பூசை நடைபெறுகிறது. இந்த ஆலயக் கட்டத்திலுள்ள அளவு பொன் வேறு எந்த ஆலயத்திலும் இல்லையென்று கூறப்படுகிறது. இதனைப் பொற்கோயில் என்று மக்கள் கூறுகின்றனர்.

## 7. மதங்களில் மனிதநேயம்

எல்லா மதங்களுமே மனிதன் மனிதநேயத்துடன் வாழ வேண்டுமென்றுதான் கூறுகின்றன. மனிதநேயத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றன. மதங்களிலுள்ள மனிதநேயப் பொன் மொழிகளில் சில இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

### இந்து மதத்திலுள்ள மனிதநேயப் பொன்மொழிகளில் சில

*மனிதகுல மக்களே, நீங்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் இருங்கள். நீங்கள் உங்களுடைய கருத்துகளைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளுங்கள். உங்களுடைய எண்ணங்கள் ஒன்று போலிருக்கட்டும். உங்களுடைய இதயங்களும் ஒன்று போலிருக்கட்டும். உங்களுடைய மனதும் ஒன்று போலிருக்கட்டும். இப்படி உங்களுடைய புனிதமான தோழமை எப்போதும் ஒளிர்ந்துகொண்டேயிருக்கட்டும்.*

— ரிக் வேதம்

*நண்பனே, நீ எல்லோரிடமும் இனிமையாகப் பேசு. உன்னைப் பகைப்பவன் எவனும் கூடாது. அனைவருக்கும் நன்மை தேடு.* — அதர்வண வேதம்

*பெருந்தன்மையுடையவர்கள், மிக்க புகழ் படைத்தவர்கள், தர்மத்தில் பற்றுடையவர்கள், நல்லோருடன் சேர்ந்திருப்பவர்கள் ஆகியோர் உலகில் பூஜிக்கத்தக்கவர்கள்.* — இராமாயணம்

*கபடமின்மை, தவம் இயற்றுதல், மனதையும் இந்திரியங்களையும் கட்டுதல், உண்மையே பேசுதல், தன்னிடம் இருப்பதை இல்லாதவர்களுக்குத் தானம் அளித்தல் என்ற இக்குணங்களில் ஒவ்வொன்றும் பெரிய பெரிய வேள்விகளுக்குச் சமமாகும்.*

— மகாபாரதம்

*மற்றவர்களது முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்கின்ற அளவுக்குத்தான் ஒருவன் தானே முன்னேற்ற மடைகிறான்.* — பகவத் கீதை

*அன்பு இருக்கும் இடம் சொர்க்கம். அன்பு மறைந்த இடம் நரகம். ஆகவே எவரிடமும் எப்போதும் அன்போடு இருங்கள்.* — திருமூலர்

*நீ ஒரு மனிதனுக்குக் கைகொடுத்து மட்டும் உதவினால் கடவுள் தன் உடம்பையே உனக்குத் தருவார்.* — இராமகிருஷ்ண பரமஹம்சர்

*நாம் மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை பிறருக்கு உதவி புரிவதும், உலகிற்கு நன்மை செய்வதும்தான்.* — சுவாமி விவேகானந்தர்

*ஒருவர் செய்யும் கருமம் மற்றவர் நன்மையை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.*

— நாராயண குரு

*கங்கை நீர் சிறந்தது, அதனினும் சிறந்தது அபிஷேக நீர். ஏழைகளுக்காக உழைக்கும் ஓர் உத்தமனின் முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர் அதனினும் சிறந்தது.* — வாரியார் சுவாமிகள்

**சமண மதத்திலுள்ள மனிதநேயப் பொன்மொழிகளில் சில**

*எந்த உயிரிடமும் அன்பாக இரு. அன்பே உயிரின் இயல்பு. எல்லாரிடமும் அன்புடன் பழகு. நீயும் வாழ், பிறரையும் வாழவிடு. இதுவே அகிம்சையின் தத்துவம்.* — மகாவீரர்

*நீ உன் ஆன்மாவை நேசிப்பது போலவே எல்லா உயிர்களையும் நேசி.* — மகாவீரர்

*பிறரைத் துன்புறுத்துவது, வதைப்பது மகாபாவம், தீராத தீமை கொடுமைகளுக்கு உன்னை இரையாக்கி விடும். கொல்லாமை, தீங்கு செய்யாமைதான் நன்னெறிகளுக்கு வழிகாட்டி, எல்லாச் சுக சௌபாக்கியங்களும் அளிக்கவல்லது.*

— மகாவீரர்

*கொடுக்கின்ற பழக்கம் வேண்டும். அத்துடன் கொடுக்கின்ற மனம் உடையவர்களைத் தடுக்கின்ற மனம் நம்மிடையே வரக்கூடாது.* — மகாவீரர்

*அன்பில்லாதவர்கள் பால்சோறே இட்டாலும் அது இனிக்காது, சுவைக்காது; அன்புடையார் வீட்டில் உண்பது கூழாக இருந்தாலும் அது அமுதம்போல் இனிக்கும்.* — மகாவீரர்

*எப்பொழுதும் ஒன்றுபட்டுப் பிறர் நன்மைக்காக வாழத் தங்கள் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.* — மகாவீரர்

*வாழைக்காய் வேப்பிலைக்குள்ளிருந்து பழுத்தாலும் தனது இனிய சுவையிலேயிருந்து சிறிதும் மாறுபடாது. அதுபோல் நல்ல அறிவும் குணமும் உடையவர்களுடன் சேர்ந்திருக்கும் கூட்டம், கெட்டதனாலும் அந்தக் கெட்டவர்களின் நட்பால் அந்த நல்லவர்களின் மனம் தீமைகளின் பக்கத்திலே சேர்வதில்லை.* — மகாவீரர்

*மிகுந்த பொருள் உள்ளவர் பிறருக்குக் கொடையளித்து, அதாவது உதவிகள் செய்து, வாழ்க்கை நடத்துதல் வேண்டும்.* — மகாவீரர்

*தீமை எதுவும் எப்போதும் செய்வதில்லை, என்று உறுதிகொண்டு, நல்வழியில் நடத்தல் வேண்டும்.*
— மகாவீரர்

*பிறருடைய துன்பத்திற்கு எந்த விதத்திலும் ஒருவன் காரணமாக இருக்கக்கூடாது.* — மகாவீரர்

**பௌத்த மதத்திலுள்ள மனிதநேயப் பொன்மொழிகளில் சில**

*தனக்கும் நன்மை செய்து கொள்வார், பிறருக்கும் நன்மை செய்வார். பசுவிடமிருந்து பாலும், பாலிலிருந்து மோரும், மோரிலிருந்து வெண்ணெய்யும், வெண்ணெய்யிலிருந்து நெய்யும் கிடைத்ததாலும் நெய்யே சிறந்தது என்று கூறுவதுபோல தானும் வாழ்ந்து பிறர் நலனையும் போற்றுபவனே சிறந்தவன்.*
— புத்தர்

*நீ துன்புறும் காரணம் எதுவாக இருந்தாலும் பிறருக்குத் துன்பம் விளைவிக்காதே.* — புத்தர்

*அன்புதான் இன்ப ஊற்று,*
*அன்புதான் இன்ப ஜோதி,*
*அன்புதான் உலக மகாசக்தி.* — புத்தர்

*எந்தக் காலத்திலும் பகைமை என்பது பகைமை யினால் நீங்கி விடுவதில்லை. அன்பு ஒன்றினாலேயே பகைமை நீங்கும். இதுதான் உலக நியதி ஆகும்.*
— புத்தர்

*அமைதியைவிட மேலான மகிழ்ச்சி வேறு எதுவும் இல்லை.* — புத்தர்

*நாம் எண்ணும் எண்ணங்கள் யாவும் பிறருக்கு எந்த வகையிலும் துன்பம் தருவதாக இருக்கக்கூடாது. பிறருக்கு நன்மையும், ஆறுதலையும் தருவதாக இருக்க வேண்டும்.* — புத்தர்

*இரக்கமும், உதவும் சிந்தனையும் உள்ளோர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பவர்கள் ஆவார்கள்.*
— புத்தர்

*அன்பும் அடக்கமும் கொண்டவன் துன்பத்தைக் கடந்து இன்பம் மிகுந்தவனாகின்றான்.* — புத்தர்

*உலக வாழ்க்கையின் நோக்கம் பிறருக்கு உதவி புரிதலேயாகும்.* — புத்தர்

*கலகம் செய்பவர்கள் தங்களுக்கும் முடிவுகாலம் உண்டு என்பதனை அறிவது இல்லை. இதனை அறிந்துவிட்டால் அவர்கள் கலகம் செய்வதனை நிறுத்திவிடுவார்கள்.* — புத்தர்

**கிறித்துவ மதத்திலுள்ள மனிதநேயப் பொன்மொழிகளில் சில**

*உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக.* — பைபிள்

*பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.* — பைபிள்

*நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப் பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.* — பைபிள்

*தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம், மாறாக, உங்கள் வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்.* — பைபிள்

*ஏழைகளின் உரிமைகளைக் காப்பதில் நேர்மையாளர் அக்கறை கொள்வர்; இவ்வாறு அக்கறை கொள்வது பொல்லாருக்குப் புரியாது.* – பைபிள்

*ஒருவர் ஏழையாய் இருக்கிறார் என்று அவரை வஞ்சிக்காதே. ஒருவர் ஆதரவின்றி இருக்கிறார் என்று அவரை நீதிமன்றத்தில் சிறுமைப்படுத்தாதே. ஏனெனில், ஆண்டவர் அவர்களுக்காக வாதாடுவார். அவர்களது உயிரை வாங்கப் பார்க்கிறவர்களின் உயிரை அவர் பறித்துக் கொள்வார்.* – பைபிள்

*செல்வராகும் பொருட்டு ஏழைகளை ஒடுக்கு கிறவனும், செல்வருக்குப் பொருள் கொடுக்கிறவனும் ஏழையாவார்கள்* – பைபிள்

*கருணை நிறைந்தவர் தம் உணவை ஏழைகளோடு பகிர்ந்து உண்பார்; அவரே ஆசி பெற்றவர்* – பைபிள்

*ஏழைக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்; அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்துவிடுவார்.* – பைபிள்

*ஈகைக் குணமுள்ளோர் வளம்பட வாழ்வர்; குடிநீர் கொடுப்போர் குடிநீர் பெறுவர்.* – பைபிள்

**இசுலாமிய மதத்திலுள்ள மனிதநேயப் பொன்மொழிகளில் சில**

*பிறருக்கு நன்மை செய்யுங்கள். பிறருக்கு நன்மை செய்கிறவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கின்றான்.* – குர்ஆன்

*நீங்கள் சம்பாதித்தவற்றிலிருந்தும், உங்களுக்குப் பூமியிலிருந்து நாம் வெளிப்படுத்தியவற்றிலிருந்தும் நல்லவைகளைத் தர்மமாகச் செலவு செய்யுங்கள். இன்னும், அதில் கெட்டதைச் செலவு செய்ய நீங்கள் நாடாதீர்கள்.* – குர்ஆன்

*தர்மங்களை நீங்கள் வெளிப்படையாகச் செய்தால் அதுவும் நல்லதே. மேலும், அதனை நீங்கள் மறைத்து ஏழைகளுக்குக் கொடுத்தால் அது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். மேலும், அது உங்களுடைய பாவச் செயல்களின் விளைவுகளை உங்களை விட்டுப் போக்கிவிடும்.* – குர்ஆன்

அல்லாஹ் வட்டியை அழித்து விடுவான். மேலும் தர்மங்களை வளரச் செய்கின்றான். – குர்ஆன்

கடன்பட்டவர் அதனைக் குறிப்பிட்ட நேரத்தில் திருப்பித் தர முடியாதவாறு கஷ்டத்தையுடைய வராகயிருந்தால் கடனைத் தீர்க்கும் வசதி ஏற்படும் வரையில் எதிர்பார்த்திருத்தல் வேண்டும். மேலும், அதன் நன்மை பற்றி நீங்கள் அறிகிறவர்களாக யிருப்பின் அதைக் கடன்பட்டவருக்கே தர்மம் செய்துவிடுவது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்.
– குர்ஆன்

அநாதைகளின் பொருள்களை அநியாயமாகத் தின்கின்றார்களே, அத்தகையோர், அவர்கள் தங்கள் வயிறுகளில் நிரப்பித் தின்னுவதெல்லாம் நெருப்பையேதான். இன்னும், அவர்கள் மறுமையில் கொழுந்து விட்டெரியும் நெருப்பினுள் நுழைவார்கள்.
– குர்ஆன்

பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள். அவ்வாறே உறவினருக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், உறவினரான அண்டை வீட்டினருக்கும், அந்நியரான அண்டை வீட்டினருக்கும், உங்களுடன் இருக்கக் கூடிய நண்பர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள். கர்வம் கொண்டவனாக, பெருமையாளனாக இருப்பவரை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்க மாட்டான். – குர்ஆன்

மனிதர்களே, நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை வழங்குகிறோம். நிச்சயமாக, அவர்களைக் கொலை செய்வது பெருங்குற்றமாக இருக்கிறது – குர்ஆன்

பூமியில் கர்வம் கொண்டு நீர் நடக்க வேண்டாம். அவ்வாறு நீர் நடப்பதால், நிச்சயமாக, நீர் பூமியைப் பிளந்துவிடவே மாட்டீர். இன்னும் உயரத்தால் மலைகளை அடைந்துவிடவே மாட்டீர். – குர்ஆன்

தர்மம் கேட்பவரை விரட்டாதீர். – குர்ஆன்

## சீக்கிய மதத்திலுள்ள மனிதநேயப் பொன்மொழிகளில் சில

*மரம் தனக்காகப் பழுப்பதில்லை, ஆறு தனக்காக ஓடுவதில்லை, சான்றோர் தமக்காக வாழ்வதில்லை.*
– குருநானக்

*ஒருவர் தம்முடைய வேலையை நேர்வழியில் செய்து, பொருள் ஈட்டி, மற்றவர்களுடன் பகிர்ந்து, நல்லொழுக்கத்துடன் வாழவேண்டும்.* – குருநானக்

*எல்லாப் பிராணிகளுடனும் அன்புடனிருந்து அவைகளுக்கு நல்லதைச் செய்ய வேண்டும்.*
– குருநானக்

*பொறுமையைவிடச் சிறந்த தவமில்லை.*
*திருப்தியைவிட உயர்ந்த இன்பம் இல்லை.*
*ஆசையைவிடப் பெரிய தீமை இல்லை.*
*கருணையை விடப் பெரிய அறமில்லை.*
*மன்னிப்பதைவிட ஆற்றல்மிக்க ஆயுதமில்லை.*
– குருநானக்

*தீமை செய்தால் தீமை செய்வதுதான் உலக வழக்கம். ஆனால், தீமை செய்தால் நன்மை செய்வது உத்தமர் வழக்கம்.* – குருநானக்

*ஒருவனுடைய நன்னடத்தையினாலேயே அவனுக்கு மீட்பு கிடைக்கின்றது.* – குருநானக்

*கடவுளின் முன்பு எல்லா ஆண்களும், எல்லாப் பெண்களும் சமமானவர்கள்* – குருநானக்

*மனிதர்களிடமும் கால்நடைகளிடமும் பறவை களிடமும் எல்லோரும் அன்பாக இருக்க வேண்டும்.*
– குருநானக்

*மக்களிடம் அன்புடன் இருப்பவர்களுக்கு மட்டும்தான் கடவுளினுடைய அன்பு கிடைக்கும்.*
– குருநானக்

*கடவுளை நினைக்க வேண்டும், கடினமாக உழைக்க வேண்டும், மற்றவர்களுக்கு உதவ வேண்டும்.*
– குருநானக்

# 8. மத நல்லிணக்கம்

முந்தைய அத்தியாயங்களில் இந்தியாவிலுள்ள 6 மதங்களைப் பற்றிப் பார்த்தோம். எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் அம்மதத்தினரிடையே கருத்து ஒற்றுமை இல்லை. எனவே ஒவ்வொரு மதத்தினரிடையேயும் பல பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்து மதத்தில் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம், சைவம், வைணவம், அய்யாவழி ஆகிய பிரிவுகள் இருக்கின்றன. சமண மதத்தில் திகம்பரம், சுவேதாம்பரம் ஆகிய பிரிவுகள் இருக்கின்றன. பௌத்த மதத்தில் தேரவாத பௌத்தம், மகாயன பௌத்தம் ஆகிய பிரிவுகள் இருக்கின்றன. கிறித்துவ மதத்தில் உரோமன் கத்தோலிக்கர், புரோட்டஸ்டாண்ட் கிறித்தவர், ஆங்கிளிக்கன் கிறித்துவர் ஆகிய பிரிவுகள் இருக்கின்றன. இசுலாமிய மதத்தில் சுன்னி முசுலீம், சியா முசுலீம் ஆகிய பிரிவுகள் இருக்கின்றன. சீக்கிய மதத்தில் நிரங்காரி, நாம்காரி, அகாலி ஆகிய பிரிவுகள் இருக்கின்றன.

சமண மதமும் பௌத்த மதமும் கடவுள் என்ற ஒன்று இல்லையென்று கூறுகின்றன. இந்த உலகமானது யாராலும் படைக்கப்படவில்லையென்றும், இது தானாகவே இயங்கிக் கொண்டிருக்கிறது என்றும் அந்த மதங்கள் கூறுகின்றன. ஆனால் மற்ற மதங்களோ இந்த உலகமானது கடவுளால் படைக்கப்பட்டது என்றும், இது கடவுளால் இயக்கப்படுகிறது என்றும் கூறுகின்றன. இப்படி மதக் கொள்கைகளிலும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

இப்படி மதங்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், ஒரு விசயத்தில் எல்லா மதத்தினருக்கும் இடையே கருத்து ஒற்றுமை இருக்கிறது. அதாவது "மனிதன் பரஸ்பரம் அன்புடன் வாழவேண்டும். அதன்மூலம் மனிதநேயம் வளர வேண்டும்" என்பதுதான் எல்லா மதங்களினுடையவும் அடிப்படைக் கொள்கை. இந்த மிக முக்கியமான அடிப்படைக் கொள்கை இன்று ஒரு சிலரால் சிதறடிக்கப்படுவதால் மதங்களின் பெயரால் வன்முறைகள் ஏற்படுகின்றன. ஒரு மதத்தினரை இன்னொரு மதத்திற்கு மாற வற்புறுத்துதல், மத வெறியர்களின் தகாத செயல்பாடுகள் முதலியன மதங்களின் பெயரால் வன்முறைகள் ஏற்படக் காரணங்களாக இருக்கின்றன. இனி இவற்றைப் பற்றிப் பார்ப்போம்.

**மதம் மாற வற்புறுத்துதல்**

ஒவ்வொரு மதத்தினருக்கும் அவரவர்கள் மதம் சிறப்புடையது தான். இதனைப் பொருட்படுத்தாமல் ஒரு சில மதவாதிகள் தங்கள் மதம்தான் உயர்ந்தது என்றும், அந்த மதத்தில் கூறப்பட்டிருக்கின்ற மார்க்கத்தைக் கடைப்பிடித்தால் மட்டும்தான் கடவுளை அடைய முடியுமென்றும் கூறி, மற்ற மதத்தினரைத் தங்கள் மதத்தில் சேரும்படி கேட்டு மதம் மாறக் கூறுகின்றனர். அவர்கள் அதற்கு உடன்படாவிட்டால் அவர்களை மீண்டும் மீண்டும் சந்தித்து, தங்கள் மதத்தில் சேர வற்புறுத்துகின்றனர். இதனால் அங்கு மோதல் எழுகின்றது. மோதல் என்று வரும்போது இரு தரப்பிலும் அவரவர்களுக்கு வேண்டப்பட்டவர்கள் சேர்ந்து விடுகின்றனர். அவர்களால் மோதல் பெரிதாகி அது சில நேரங்களில் வன்முறையில் கொண்டுபோய் விடுகிறது.

இந்த மதவாதிகளின் நோக்கம், தங்களுடைய மதத்தில் பிற மதத்தினரைச் சேர்த்துத் தங்கள் மதத்தினருடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்பதுதான். அதற்காகத் தங்கள் மதத்தில் கூறப்பட்டிருக்கின்ற மார்க்கத்தைக் கடைப்பிடித்தால் மட்டும்தான் கடவுளை அடையமுடியுமென்று கூறி மற்ற மதத்தினரைத் தங்கள் மதத்திற்கு ஈர்க்க முயற்சிக்கின்றனர். இப்போது நாம் ஒன்றைச் சிந்திக்க வேண்டியதிருக்கிறது. கடவுளை அடைவதற்கான மார்க்கம் ஒரு குறிப்பிட்ட மதத்தில் மட்டும்தான் இருக்கிறது என்றால், அந்த மதம் தோன்றுவதற்கு முன்பு வாழ்ந்த மக்கள் எந்த மார்க்கமாகச் சென்று கடவுளை அடைந்தார்கள். மற்ற மதங்களைப் பின்பற்றி வாழ்ந்தவர்களில் எவருமே இதுவரை கடவுளை அடையவில்லையா? தனது மதம்மட்டும்தான் மெய்யானது, மற்ற மதங்களெல்லாம் பொய்யானவை என்று ஒருவர் பிற மதத்தினரிடம் கூறி அடம்பிடித்தால் அதனால் பரஸ்பரம் மோதல்கள் வந்து மனிதநேயத்திற்கு ஆபத்துதான் ஏற்படும்.

**மதவெறியர்களின் தகாத செயல்பாடுகள்**

ஒருவருக்கு மத நம்பிக்கை இருக்கலாம். மதப் பற்றுதல் இருக்கலாம். ஆனால் மதவெறி இருக்கக் கூடாது. அது நாட்டையே அழித்துவிடும்.

பல வீடுகளிலும் நாய்கள் வளர்க்கப்படுகின்றன. நாய் வீட்டிலுள்ளவர்களிடம் மிகுந்த பாசத்துடனும், நம்பிக்கையுடனும் இருக்கிறது. "நன்றியில் பெரியது நாய்" என்பர். நாய் அந்த அளவிற்கு நன்றியுள்ளது. வீட்டிலுள்ளவர்கள் எத்தனை தடவை

அதை விரட்டி அடித்தாலும் அது திரும்பவும் அதே வீட்டிற்குத்தான் வரும். அது வீட்டிலுள்ளவர்களிடம் மிகுந்த பாசம் கொண்டது. வீட்டிலுள்ளவர்களும் அதன்மீது பாசத்துடன் இருப்பர். அப்படிப்பட்ட ஒரு நாய்க்கு வெறி பிடித்துவிட்டால் அதன் நிலைமை என்ன ஆகும்? என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டிலுள்ளவர்களையே அது கடித்துவிடும். வெளியே சென்றால் அது பலரையும் கடித்துவிடும். கடி கொண்டவர்கள் உடனே தக்க சிகிச்சை எடுக்காவிட்டால் அவர்களின் உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறது. அதுபோல் ஒரு மனிதனுக்கு மதவெறி பிடித்துவிட்டால், அவனும் மனிதனாக இருக்கமாட்டான். எனவே யாருக்கும் மதவெறி வரக்கூடாது. ஒரு மனிதன் தன்னுடைய மதத்துடன் மற்ற மதங்களைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். எல்லா மதங்களைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். எல்லா மதங்களும் கூறுகின்ற உண்மை என்ன என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டால் அவன் நல்ல மனிதனாகவே இருப்பான். எல்லா மதங்களும் கூறுகின்ற உண்மை என்ன? "மனிதன் பரஸ்பரம் அன்புடன் வாழவேண்டும். அதன்மூலம் மனிதநேயம் வளரவேண்டும்" என்பதுதான். இந்த உண்மையை ஒருவன் தெரிந்துகொண்டால் அவனுக்கு எல்லா மதங்கள் மீதும் மதிப்பும், மரியாதையும் இருக்கும். அவனுக்கு மற்ற மதங்கள் மீது வெறுப்புணர்வு வராது. எனவே மதவெறி என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விடும்.

மதங்களின் பெயரால் வன்முறைகள் ஏற்படாமலிருக்க மக்களிடையே மத நல்லிணக்கம் தேவை.

தான் சார்ந்திருக்கும் மதத்தை மதிப்பதுபோல் மற்ற மதங்களையும் மதித்து, எல்லா மதித்தினரிடமும் இணக்கமாகயிருப்பது "மத நல்லிணக்கம்".

உலகில் பல நாடுகள் இருக்கின்றன. பல மதங்களும் இருக்கின்றன. சில நாடுகளில் ஒரேயொரு மதம் மட்டும்தான் இருக்கின்றது. அங்கு மதநல்லிணக்கம் பற்றிய பேச்சுக்கு இடமில்லை. ஆனால் இந்தியா போன்று ஒன்றிற்கு மேற்பட்ட மதங்கள் இருக்கின்ற நாடுகளின் நலனுக்காக மதநல்லிணக்கம் தேவை. மககளிடையே மதநல்லிணக்கம் ஏற்படுவதற்கான சில வழிமுறைகளைப் பற்றிப் பார்ப்போம்.

மக்களிடையே மத நல்லிணக்கம் ஏற்பட எல்லா மதத்தினரும் எல்லா மதங்களினுடையவும் அடிப்படைக் கொள்கை ஒன்று என்பது பற்றி முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

அடுத்ததாக ஒவ்வொரு மதத்தினரும் மற்ற மதங்களையும் மதிக்க வேண்டும்.

## எல்லா மதங்களினுடையவும் அடிப்படைக் கொள்கை என்ன என்பது பற்றித் தெரிந்து கொள்ளுதல்

சமண மதமும் பௌத்த மதமும் தவிர மற்ற எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களும் வழிபடுகின்ற கடவுள் ஒருவரே. சமண மதமும் பௌத்த மதமும் கடவுள் என்று ஒன்று இல்லையென்று கூறுகின்றன. ஒரே கடவுளுக்குப் பல பெயர்கள் இருக்கின்றன. இந்துக்கள் பரமாத்மா, பரம்பொருள், பரபிரம்ம, சிவம் முதலான பெயர்களை வைத்திருக்கின்றனர். இசுலாமிய மக்கள் அல்லாஹ் என்ற பெயரை வைத்திருக்கின்றனர். கிறித்துவர்கள் கர்த்தர், பரம பிதா, விண்ணகத்தந்தை முதலிய பெயர்களை வைத்திருக்கின்றனர். சீக்கியர்கள் வாஹேகுரு, சத்னம் முதலான பெயர்களை வைத்திருக்கின்றனர். இதுபோன்று உலகிலுள்ள மற்ற மதத்தினரும் கடவுளுக்குப் பல பெயர்களை வைத்திருக்கின்றனர். இந்த எல்லாப் பெயர்களுக்குமுரியவர் ஒருவரே. அவர் எல்லா மதத்தினருக்கும் பொதுவானவர்.

எல்லா மதங்களுமே அன்பு வளரவேண்டும், மனிதநேயம் வளர வேண்டும் என்றுதான் கூறுகின்றனவே தவிர, ஒரு மதம் கூட இதற்கு எதிரானதாக இல்லை. இதனைச் சமணம், பௌத்தம் உட்பட உள்ள அனைத்து மதங்களின் புனித நூல்களும் தெளிவுபடுத்துகின்றன.

"மனிதன் பரஸ்பரம் அன்புடன் வாழவேண்டும், அதன்மூலம் மனிதநேயம் வளர வேண்டும்" என்பதுதான் எல்லா மதங்களி னுடையவும் அடிப்படைக் கொள்கை.

எப்போதும், எல்லோருக்கும், நன்மையே செய்ய வேண்டும். தீமை ஒருபோதும் செய்யக்கூடாது என்றுதான் எல்லா மதங்களுமே கூறுகின்றன.

இந்த உண்மைகளை ஒவ்வொரு மதத்தினரும் மனதில் கொண்டால் மதநல்லிணக்கம் ஏற்படும்.

## ஒவ்வொரு மதத்தினரும் மற்ற மதங்களையும் மதிப்பது

நாம் மற்றவர்களை மதிக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் நம்மையும் மதிப்பார்கள். இது உலக நியதி. இதுபோல் ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் மற்ற மதங்களையும் மதிக்கக் கடமைப்பட்டவராவர். உலகிலுள்ள அனைத்து மதங்களும் அன்பையே அடித்தளமாகக் கொண்டிருக்கின்றன. அன்பை அடித்தளமாகக்

கொண்டு வாழும் அனைவரும் ஒருவரை ஒருவர் மதித்து வாழ்வதுதான் நியதி. ஆறுகள் எல்லாம் கடலில் போய்ச் சேருவது போல் எந்த மதத்தினர் எந்தப் பெயரில் கடவுளை வழிபட்டாலும், அந்த வழிபாடுகள் எல்லாம் ஒரே கடவுளிடமே போய்ச்சேருகின்றன என்ற உண்மையைப் பரந்த மனப்பான்மையோடு மனதில் பதியச் செய்தால், தன் மதத்தை மதிப்பது போன்று மற்ற மதங்களையும் மதிக்கக்கூடிய மனநிலை உருவாகும்.

நம்முடைய தேசபிதா மகாத்மா காந்தி அவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர். ஆனால் அவர் மற்ற மதங்களையும் மதித்து நடந்தவர். இந்துக்களிடையேயும் இசுலாமியர்களிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்தப் பாடுபட்டவர்.

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி. ஜே. அப்துல்கலாம் அவர்கள் இசுலாமிய மதத்தைச் சார்ந்தவர். ஆனால் அவரும் மற்ற மதங்களையும் மதித்து நடப்பவர். இந்து மதத்திலுள்ள வேதங்கள், உபநிஷத்துக்கள், மகாபாரதம், மனுஸ்மிருதி போன்றவற்றிலும் ஈடுபாடு கொண்டவர்.

ஜி.யூ. போப் (ஜார் உக்லோ போப்) அவர்கள் கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஒரு ஆங்கிலேயப் பாதிரியார். அவர் இந்தியாவிற்கு வந்த பின்பு பல மொழிகளையும் கற்றார். அவர் இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரு, தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளைக் கற்றவர். தமிழ்மீது அளவற்ற பற்றுதல் கொண்டவர். தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சிக்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர். திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவர் சைவம், வைணவம், பௌத்தம், சமணம், யூதம், இசுலாம் ஆகியவற்றை ஆய்ந்து தெளிந்தவர்.

"எம்மதமும் நம் மதமே" என்ற கோட்பாடுடன் இசுலாமிய மதத்தைச் சார்ந்த இராமநாதபுரத்திலுள்ள பேராசிரியர் அப்துல் கலாம் 25 ஆண்டுகளாக இந்துக் கோவில்களில் பகவத்கீதை, இராமாயணம் ஆகியவற்றைப் பற்றியும் கிறித்துவ ஆலயங்களில் இயேசு கிறித்துவைப் பற்றியும், இசுலாமிய விழாக்களில் நபிகள்நாயகம் பற்றியும் சொற்பொழிவு நடத்தி வருகிறார்.

கேரளாவில் ஆலப்புழை மாவட்டம், இட்ட நாடு தாலுகாவிலுள்ள பிரசித்திபெற்ற எடத்துவா புனித ஜார்ஜ் தேவாலயத் திருவிழாவில் பெருமளவு இந்துக்களும் கலந்து கொள்கின்றனர்.

கேரளாவிலுள்ள பிரசித்தி பெற்ற இந்துக் கோவில்களில் ஒன்று 'சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் கோவில்'. இக்கோவிலுக்குச் செல்கின்ற ஐயப்ப பக்தர்கள் கேரளாவில் எருமேலி என்னும் இடத்தில்

இருக்கின்ற பாபா மசூதிக்குச் சென்று பாபர் சுவாமியை வணங்கிவிட்டுச் செல்கின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகாவிலுள்ள திருவிடைக்கோடு மகாதேவர் கோவில் பிரசித்திபெற்ற 12 சிவாலயங்களில் ஒன்று. இங்குள்ள மகாதேவருக்கு அணிவிக்க ஒவ்வொரு வருடமும் சிவராத்திரி விழாவின்போது, கன்னியாகுமரி மாவட்டம் ஆளூரைச் சேர்ந்த 'பாவா' என்னும் இசுலாமியக் குடும்பத்தினர் பரிவட்டம் (பட்டு வேட்டி) தயார் செய்து கொடுத்து வருகின்றனர்.

பிரசித்தி பெற்ற 'கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில்' வைகாசி விசாகத் திருவிழா ஒவ்வொரு வருடமும் 10 நாள்கள் நடைபெற்று வருகிறது. இத்திருவிழாத் தொடக்கத்தின் முந்தைய நாள் மாலையில், கொடியேற்றுவதற்கான கொடிமரக் கயிறு வழங்கும் நிகழ்ச்சி நடக்கிறது. இந்தக் கயிற்றினை வழங்குவது தேவசம் போர்டு நிர்வாகமோ அல்லது இந்துக் குடும்பமோ அல்ல. கன்னியாகுமரிக்கு அருகாமையிலுள்ள வாவத்துறை மீனவக் கிராமத்தைச் சேர்ந்த கிறித்துவக் குடும்பமாகும். கொடியேற்றுவதற்கான இந்தக் கொடிமரக் கயிறு வாவத்துறையிலுள்ள 'கைலியார் குடும்பத்தை'ச் சேர்ந்த கிறித்தவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. திருவிழாத் தொடக்கத்தின் முந்தைய நாள் மாலை தீபாராதனை முடிந்தபின் கோவில் நிர்வாகத்தின் பக்தர்களும் மேளதாளங்களுடன் தீவட்டியுடனும் கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலிலிருந்து வாவத்துறைக்குச் செல்கின்றனர். அங்கிருந்து அவர்களுடன் கைலியார் குடும்பத்தினர் கொடிமரக் கயிற்றினைக் கோவிலுக்குக் கொண்டு வந்து கோவில் நிர்வாகத்தினரிடம் கொடுக்கின்றனர். அதன் பின் அவர்கள் பகவதி அம்மனை வழிபட்டுவிட்டுச் செல்கின்றனர்.

இவை ஒவ்வொரு மதத்தினரும் தங்களது மதத்தை மதிப்பதுபோல் மற்ற மதங்களையும் மதிக்க வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன.

மக்களிடையே மதநல்லிணக்கம் ஏற்பட்ட பின்பு அதனைத் தொடர்ந்து கட்டிக் காத்து வரவேண்டும்.

**மத நல்லிணக்கத்தைக் கட்டிக்காத்தல்**

நாம் அனைவரும் கடவுளினுடைய பிள்ளைகள் என்பதை உணர்ந்து பிறருக்குத் தீங்கு எதுவும் செய்யாமல் ஒருவருக்கொருவர் அன்புடனும் மனிதநேயத்துடனும் வாழ்ந்து வரவேண்டும்.

நல்ல எண்ணங்களும் செயல்களும் கெட்ட விளைவுகளை ஏற்படுத்துவதில்லை. கெட்ட எண்ணங்களும் செயல்களும் ஒரு நாளும் நல்ல பலன்களைத் தருவதில்லை. இது சான்றோர் கூற்று.

எனவே நற்சிந்தனைகளுடன் அனைத்து மதத்தினரும் பரஸ்பரம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு ஊர்களிலும் ஊர்ப் பிரமுகர்களையும், மதப் பிரமுகர்களையும் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். ஊருக்குள் ஏதாவது சிறு பிரச்சினைகள் ஏற்படுமாயின் இந்தக் குழு அவற்றை உடனுக்குடன் முடித்து அமைதி ஏற்படுத்த வேண்டும்.

வளரும் இளம் உள்ளங்களில் மத நல்லிணக்க உணர்வு ஏற்பட, மத நல்லிணக்கப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு, பள்ளிக் கல்லூரிகளுக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

மத நல்லிணக்கம் நிலைத்திருந்தால் மக்கள் பரஸ்பரம் அன்புடன் வாழ்வார்கள். இதனால் மனிதநேயம் வளரும். மனிதநேயமானது மிகவும் மகத்துவமுடையது.

## மனிதநேய மகத்துவம்

சாதி, மத வேறுமைகள் இன்றி நாம் மனித சமுதாயத்தின்மீது காட்டுகின்ற அன்பு மட்டும்தான் எல்லாவற்றையும்விட மேலோங்கி நிற்கும். அன்பே சிவம். அன்புதான் கடவுள். அன்பு செலுத்தினால் மனிதநேயம் வளரும். மனிதநேயம் வளர்ந்தால் உலக அமைதியும் சகோதரத்துவமும் உண்டாகும். எனவே மனிதன் மனிதநேயத்தை வளர்த்து, பகைமையை மறந்து, வேற்றுமை பார்க்காமல், ஒற்றுமையுடன் வாழவேண்டும்.

மனிதநேயமானது மிகவும் உயர்ந்தது. புனிதமானது. சக்தி வாய்ந்தது. இதற்கு ஈடு இணையாக வேறு எதுவுமே இல்லை. இன்று உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற அணுகுண்டுகளை அழிக்கவும் உலக சமாதானத்தைக் காக்கவும் மனிதநேயத்தால் மட்டும்தான் முடியும். அப்படிப்பட்ட புனிதமான மனிதநேயத்தை வளர்ப்போம், அதன் மாண்பைக் காப்போம்.

# துணை நூல்கள்

## இந்து மதம்


1. ஸ்ரீமத் பகவத் கீதை, சுவாமி சித்பவானந்தர்.
2. ஸ்ரீமத் பகவத் கீதா, தத்துவ விவேசனீ, ஸ்ரீஆயதயால் கோயந்தகா.
3. கீதைப் பேருரைகள், ஆச்சாரியா வினோபா பாவே.
4. உலகத்திற்குத் தெரியாத உண்மையான இந்து மதம், ஸ்ரீராமகிருஷ்ண செயந்தர்.
5. இராமாயணம், இராஜாஜி.
6. வழிபாடும் சமயமும், எச். வைத்தியநாதன்.
7. இந்துமத வேதங்களுக்கு எளிமை விளக்கங்கள், மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
8. உபநிஷத்துக்கள், ஆயில்யன்.
9. வேதங்களும் உபநிஷத்துக்களும், என். சிவராமன்.
10. இந்திய வரலாற்றில் சமயங்கள், தஞ்சை நா. எத்திராஜ்.
11. சைவ வைணவக் கருத்துக் கோவை, புதுவை வயி. நாராயணசாமி.
12. பன்னிரு திருமுறைகள், எம். நாராயண வேலுப்பிள்ளை.
13. அரங்கன் மகிமையும் ஆழ்வார்கள் பெருமையும், ஜெ. விஜயலெக்ஷ்மி.
14. இந்தியத் தத்துவ ஞானம், கி. லக்ஷ்மணன்.
15. சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ சொற்பொழிவுகள், இராமகிருஷ்ண மடம், சென்னை.
16. இராஜா ராம் மோகன்ராய், உமாமணி.
17. வள்ளலார் வழங்கிய உலகப்பொதுநெறி, நா. முத்துக்குமாரசாமி.
18. வாழ்விக்க வந்த வள்ளலார், மா.ப. குருசாமி.
19. நல்வழி காட்டும் நாராயண குருவின் வாழ்க்கை, எம்.பி. பொய் சொல்லான்.
20. அய்யர் வைகுண்டர் புனித வரலாறு, என். அமலன்.
21. இந்து தர்மங்கள், ஜெயேந்திர சுவாமிகள்.
22. வேத தர்ஷனம், சிகாபுதீன் ஆராம்பறம்,
23. பாரதீய ஸம்ஸ்காரத்தின்றே அடியொழுக்குகள், டி.முகம்மது (மலையாளம்)
24. ஹிந்து மதத்தின்றே ராஜமார்க்கம், டாக்டர் சி.கெ.சந்திரசேகரன் நாயர்
25. Introducing Religions - Hinduism, Sue Penney.
26. 1000 Great People, Plantagenet Somerset Fry.
27. Reference classics/World Religions, Michael D. Coogan.

## சமண மதம்

1. மகாவீரர் வாழ்வும் தொண்டும், ஜெகதா.
2. மகாவீரரும் வள்ளலாரும், ஊரன் அடிகளார்.
3. சமண அறநெறிகள், அனந்தபுரம் கோ. கிருட்டினமூர்த்தி.
4. நடுநாட்டுச் சமணக் கோயில்கள், த. ரமேஷ்.
5. எண்பெருங்குன்றம், முனைவர் வெ. வேதாசலம்.
6. வரவேண்டும் கணிதம், என்.ஏ. வேலாயுதம்.
7. ஆய்வுக்களஞ்சியம் (பெப்ரவரி 1999), டாக்டர் எஸ். பத்மநாபன்.

## பௌத்த மதம்

1. போதி மாதவன், ப. இராமசாமி.
2. அறிஞர் பார்வையில் பௌத்தம், தி. இராசகோபாலன்.
3. புத்தரின் வரலாறு, மயிலை சீனி வேங்கடசாமி.
4. சித்தார்த்த கௌதம புத்தர் பொன்மொழிகள், எஸ். இரகுநாதன்.
5. Introducing Religions - Buddhism. Sue Penney.
6. ஆய்வுக் களஞ்சியம் (ஏப்ரல் 2007), டாக்டர் எஸ். பத்மநாபன்.

## கிறித்துவ மதம்

1. திரு. விவிலியம், பொது மொழிபெயர்ப்பு, TNBCLC.
2. ஞானோபதேசங்கள், எம். ஆரோக்கியசாமி.
3. வாழ்வுக்கு வழி காட்டும் இயேசு வரலாறு, அ. இயேசு மரியசூசை.
4. மதங்களும் மனித ஒற்றுமையும், பேரா. சூ.அ. செல்வநாதன்.
5. Introducing Religious - Judaism, Christianity Sue Penney

## இசுலாமிய மதம்

1. சங்கைமிக்க குர் ஆன், மொழிபெயர்ப்பு, சவுதி அரேபிய அரசின் இஸ்லாமிய கலாச்சார வக்ஃபு.
2. நபிகள் நாயகம் வாழ்க்கை வரலாறு, அ.லெ. நடராஜன்.
3. நபிகள் நாயகம் வாழ்வும் வாக்கும், பேரா.து. சாயபு மரைக்காயர்.
4. ஒன்றே குலம் ஒருவனே தேவன், பாகம்–I, டாக்டர் இராமானுஜம்.
5. திருக்குர் ஆன் மணிகள், முனைவர் நா. முகம்மது செரீபு.
6. மக்கள் சேவை, மௌலானா சையத் ஜலாலுத்தின் உமரி.
7. நபிகளாரின் பொன்மொழிகள் பாகம் . லஹீஹ முஸ்லிம்.

## சீக்கிய மதம்

1. குருநானக் ஒரு சகாப்தம், ஏ.கெ.வி. நமச்சிவாயம்.
2. இந்தியாவில் சமயங்கள், முனைவர் வெ. சுயம்பு.
3. Introducing Religious - Sikhism. Sue Penney
4. The Glory of Sikhism, J.B. Sharma and S.P. Sharma.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| படைப்பு நெறிமுறைகள் | 150.00 |
| Comparative Studies in Literary Cultures | 100.00 |
| Sangam Classics:New Perspecties | 105.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள் | 100.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | 170.00 |
| கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை | 45.00 |
| தமிழ் நாடக வகையும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு.என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1 | 85,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2 | 140,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2 | 75,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல்-1 | 125,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல்-2 | 160,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல் | 160,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல் | 95,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல் | 190,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல்-1 | 140,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல் | 90,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல் | 55,00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல்.நன்னூல் | 120,00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.) | 65.00 |
| வல்லம் புராணம் | 200.00 |
| இதழியல் உலகம் | 120.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 60.00 |
| படைப்பிலக்கியம்-விளிம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு | 100.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணக்கூறுகளும் | 85.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 115.00 |
| பெயரியல் | 55.00 |
| தமிழ்இசுலாம் உருவாக்கமும் திருக்குர்ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை | 45.00 |
| தலித் அறம் | 45.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | 115.00 |
| தமிழில் இதழியல் | 270.00 |

**723 மதங்களும் மனிதநேயமும்** **90.00**